

என் யாத்திரை அனுபவங்கள்

இந்திரா சௌந்தர்ராஜன்

முதற் பதிப்பு: டிசம்பர், 2009

உரிமை: ஆசிரியருக்கு ©

ENN YATHIRAI ANUBAVANGAL

By: **Indra Soundarrajan**

First Edition: **Dec, 2009**

No. of Pages: 208

Paper used: 11.6 N.S. Book Print

விலை ரூ. 72/-

THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696
thirumagalnilyam@yahoo.com

Laser Typeset at: Sivaa Graphics, Chennai-94. Ph: 9884712091

Printed at: *Udayam Offsets: 2845 4808, 2845 1906.*

பொருளடக்கம்

1. முருகன் ஏற்படுத்திய சர்ப்பக் காவடி அனுபவம்! 5
2. முருகா, உன் காலைப் புடிச்சுக்கிட்டேன்! 12
3. இராமானுஜரை பதினெட்டு முறை நடக்க வைத்த திருக்கோஷ்டியூர் நம்பி 21
4. எழுத்துலக வாழ்க்கைக்கு அருளிய திருச்செந்தூர்! 27
5. ஐயப்பன் எனக்கு திருப்பி அளித்த ராசிமாலை! 34
6. பிரார்த்தனையைப் பலிதமாக்கும் மஹானின் தரிசனம்! 41
7. காசி... எப்படி? 49
8. யோகியின் பார்வையில் காசி! 57
9. உண்ணாவிரதப் போராட்டம் எனக்கு அளித்த சிவப்பிரசாதம்! 63
10. "என்னப்பா சௌந்தர்ராஜா எப்படி இருக்கே...?" 70
11. பஞ்சபூதங்கள் பலமாக உள்ள பரசுராம ஷேத்திரம் எனப்படும் கேரளம்! 77
12. திருமலையானுக்கு முடிகாணிக்கை மூடப் பழக்கமா? 85
13. ஒன்றுக்கு நான்கு! 91

14. ஏ பெருமாளே... நீ ஒரு கல்! 97
15. நீ கேட்டதை அளித்துவிட்டேன்; நான் அளித்தது உனக்கு தெரியவில்லை! 104
16. என்னையே எனக்குக் கொடு! 111
17. அமர்நாத் உருக வைக்கும் பனிலிங்கம்! 119

சிறுகதைகள்

18. அஞ்சனா நந்தனன் 128
19. மந்த்ரோபதேசம் 137
20. மதுரையம்பதிக்கு இன்று நீ மன்னன்! 151

கட்டுரைகள்

21. வரமுனி எனும் சித்தன் 162
22. பதினெட்டு சித்தர்கள் ஒரு பார்வை! 169
23. வரம் தரும் வள்ளல்! 184
24. 'மீனாட்சி கல்யாண வைபோகமே' 188
25. மதுரை அரசி 194
26. கண்ணன் எங்கள் காதலன்! 202

1. முருகன் ஏற்படுத்திய சர்ப்பக் காவடி அனுபவம்!

யாத்திரை என்றவுடன் எல்லோருக்கும் கல்யாணத்தில் நடக்கும் காசி யாத்திரைதான் ஞாபகம் வரும். அந்த காலத்தில் தேசாடனம், யாத்திரை போன்ற வார்த்தைகளுக்கு இருந்த மதிப்பே தனி.

இன்று கிட்டத்தட்ட யாத்திரை என்ற சொல்லே மதிப்பை இழந்து விட்டது. காரணம் பயணம் என்பது இன்று ஒரு விஷயமே இல்லை. அதேபோல் 500 கி.மீ., 1000 கி.மீ. எல்லாம் ஒரு தூரமும் இல்லை.

ரயில் பயணம் என்பது வீட்டில் உட்கார்ந்த இடத்தில் முடிவு செய்யக்கூடிய ஒரு விஷயமாகிவிட்டது.

லாலுபிரசாத் யாதவ் புண்ணியத்தில் இன்டர் நெட்டிலேயே ரிசர்வ் செய்து கொள்ள முடிகிறது. கிட்டத்தட்ட விமானப் பயணமும் இதே போலாகி விட்டது.

இப்படி இருக்க நான் எதை யாத்திரை என்று கூறப்போகிறேன் என்று பலரும் நினைக்கலாம்.

எனது யாத்திரை என்பது பாதயாத்திரையை குறிப்பதாகும். இன்று நடப்பது என்பதும் ஒரு அபூர்வ விஷயமாகி விட்டது.

எனவேதான் நடப்பு காலத்தில் பாத யாத்திரை அனுபவம் என்பது எல்லோருக்குமே ஒரு வித்தியாசமான

விஷயமாக உள்ளது. இம்மட்டில் தென் தமிழ்நாட்டில் தைமாதத்தில் மதுரையில் இருந்து பழனிக்கு நடைபெறும் பாத யாத்திரை ஒரு பெரும் வைபவமாகும்.

லட்சக்கணக்கில் தான் இப்போது யாத்திரை போகிறார்கள். வருடம் முழுக்க வேலைப் பளுவினாலும் பல்வேறு சிக்கல்களுக்கு நடுவிலும் ஓடு ஓடு என்று ஓடிய ஒரு மனிதனுக்கு இந்தப் பாதயாத்திரை ஒரு மிகப்பெரிய ரிலீஃப் ஆக அமைகிறது.

உடம்பு, மனசு இரண்டும் லேசான நிலையில் விஸ்ராந்தியாக ஒரு நாலு நாளைக்கு அக்கடா என்று நடப்பதை பலரும் விரும்புகின்றனர்.

இடுப்பில் ஒரு வேட்டி-தோளில் ஒரு துண்டு. அவ்வளவுதான்... கிட்டத்தட்ட சாமியார் கோலத்தில் அரட்டை அடித்தபடியே நடக்கும் போது ஏதோ ஒரு பெரிய சாதனை செய்ய புறப்பட்டு விட்ட பாவனையும் மனதில் தோன்றி விடுகிறது. உண்மைதான்... இன்று நடப்பது என்பதே ஒரு பெரும் சாதனைதானே?

தெருமுக்கில் உள்ள பெட்டிக்கடைக்கு கூட டுர்ர்ர்... என்று பைக்கில் போனால்தான் பிடிக்கிறது. கால்கள் என்பது வீட்டிற்குள் நடமாட மட்டும் தானே தேவை... அடுத்து யாரும் நொண்டி என்று சொல்லிவிடக் கூடாதே...? அதற்காகவும்தானே கால்கள்!

அப்படிப்பட்ட சொகுசுக் கால்களை ஆன்மிகத்தின் பொருட்டு நடக்கவிட்டு அதுவும் பல நூறு கிலோ மீட்டர்களுக்கு நடக்கச் செய்து ஒரு யாத்திரை புரிவது என்பதும் சாதனைதானே?

இப்படி ஒரு பாத யாத்திரையை நானும் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக புரிந்து வருகிறேன். முதலில் மதுரையில் இருந்து பழனி... பிறகு மதுரையில் இருந்து திருச்செந்தூர்...

அதற்குப் பிறகு கடந்த 12 ஆண்டுகளாக சென்னையில் இருந்து திருப்பதி என்று எனது பாத யாத்திரை நிகழ்ந்து வருகிறது.

நண்பர்கள் புடைசூழ நிகழும் இந்த பாதயாத்திரையில் எவ்வளவோ மறக்க முடியாத அனுபவங்கள்!

அவைகளைக் கொஞ்சம் ஞாபகப்படுத்தி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு அனுபவமுமே, சிலிர்ப்பூட்டும் அனுபவம் என்றால் மிகையில்லை.

முதல் தடவையாக பழனி நோக்கிச் சென்ற அந்த அனுபவத்தை என்னால் மறக்கவே முடியாது. சரியாக மாலை 5 மணிக்கு மீனாட்சி அம்மன் கோவிலில் சுவாமி தரிசனம் முடிந்த நிலையில் எங்கள் யாத்திரை மீனாட்சி அம்மன் கோவிலின் தெற்குக் கோபுர வாசலில் இருந்து தொடங்கியது.

முதல் யாத்திரை...!

இளைய பருவம் எனவே உற்சாகமாகவே நடந்தோம். வாடிப்பட்டி என்னும் ஊர் வரும் வரை எங்கள் நடை தளரவே இல்லை. அதற்குப் பின் தான் பாத யாத்திரையும் தனது வேலையைக் காட்ட ஆரம்பித்தது.

வாழ்நாளில் ஒருமுறைகூட அவ்வளவு தூரம் ஒரே ஸ்ட்ரெச்சில் நான் நடந்ததில்லை. (35 கி.மீ) எனவே உடம்பு அப்படியே உலுக்கப்பட்டது போல் ஆகி, கை, கால்கள் எல்லாம் துவண்டு விட்டன. குறிப்பாக பாதத்தில் உஷ்ணக் கொப்பளங்கள் கிளம்ப ஆரம்பித்து விட்டன. எனக்கு பயமாகி விட்டது. கூடவே நீர்க்கடுப்பும் சேர்ந்து கொண்டது. ஆர்வக் கோளாறு!

பொதுவாக பாதயாத்திரை புரிபவர்கள் ஒரு சீரான வேகத்தில் 5 கி.மீக்கு ஒருமுறை பதினைந்து நிமிட காலம் ஓய்வெடுத்துக் கொண்டு பிறகுதான் நடக்க வேண்டும். தப்பித்தவறி கூட வெய்யிலில் மட்டும் நடந்துவிடக்கூடாது.

வெய்யிலில் தாங்க முடிந்த இளம் வெயில் தாள முடியாத கடும்வெயில் என்றெல்லாம் கிடையாது. எல்லாம் ஒன்றுதான் நிறைய தண்ணீர் அருந்த வேண்டும். பிறகு ஓரமாக ஒதுங்கிப் படுத்துவிட வேண்டும்.

இரவில் கூடிய வரை தூக்கத்தை புறம் தள்ளி நடந்து விடுவது புத்திசாலித்தனம். பகலில் ஒன்பது மணி வரை நடக்கலாம். அதன்பின் மாலை ஐந்து மணிக்கு மேல்தான் நடக்கவேண்டும்.

நடப்பதற்கும் உடம்புத் தெம்புக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. அது வேறு... நடப்பதால் ஏற்படும் வலிவேதனை வேறு! இதெல்லாம் எதையும் பிரித்துப் பார்க்கத் தெரியாத அந்த முதல் யாத்திரையில் காலிரண்டும் கெஞ்சிட அப்படியே ஒரு மரத்தடியில் நானும் என் நண்பர்களும் அமர்ந்து விட்டோம்.

உட்கார்ந்த மாத்திரத்தில் காலை நீட்டிக்கொண்டு சிறிது நேரம்... பிறகு அப்படியே உடம்பைச் சரித்து உறங்க ஆரம்பித்து விட்டோம்.

அப்படி ஒரு இடத்தை சாதாரணமாக பார்க்கும்போது அங்கே நிற்பதற்கே அஞ்சுவோம்! ஆனால் உடம்பு கெஞ்சும்போது அதெல்லாம் தோன்றாமல் போவதுதான் வேடிக்கை.

20 வருட பாத யாத்திரையில் நான் புரிந்து கொண்டதெல்லாம் ஒன்றுதான். நம் உடம்பை நாம் தெள்ளத் தெளிவாக புரிந்து கொள்ள பாத யாத்திரை என்பதை ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டும்.

உடம்பின் ஒவ்வொரு செல்லும் நம்மோடு பேசிடும் ஒரு அதிசய அனுபவத்துக்கு நாம் ஆட்படலாம். வலிகளில் உள்ள அத்தனை மிதமான வலிகளும் நமக்கு அர்த்தமாகும். அந்த வலியே நாம் அமரும் போது இன்பமாக மாறி நம்மை பரவசப்படவும் வைக்கும்.

அப்படி ஒரு பரவசம் அந்த மரத்தடியில் எங்கள் அவ்வளவு பேருக்கும் கூட கிட்டியது. அப்படியே கண்ணயர்ந்த நிலையில் அதிகாலை ஐந்து மணிபோல விழிப்பு ஏற்பட்டது. ஒரு அரைமணி நேரம் படுத்தால் போதும் என்று நினைத்த நாங்கள் எங்களை மீறி கிட்டத்தட்ட மூன்று மணிநேரத்துக்கு மேல் உறங்கி விட்டோம்.

அதன்பின் வாரிச் சுருட்டிக்கொண்டு புறப்பட்டோம். பொழுதும் விடிந்தது! அற்புதமான காலைப்பொழுது... ஓய்வெடுத்து விட்டு நடப்பதால் உடம்பிலும் தனித்தெம்பு!

பழையபடி அரட்டை ஆரம்பமாகிவிட்டது. எங்களோடு வந்தவர்களில் ஒரு நண்பர் கடுமையான விரதம் இருந்து வருபவர். நாங்கள் வழியில் வெள்ளரிக்காய், பிஸ்கட் என்று வாங்கிச் சாப்பிட்டபோதும் வெறும் வயிற்றுடன் வந்தார். ஸ்வாமி தரிசனம் முடியும் வரையில் பால், பழம் தவிர எதையும் சாப்பிடுவதாகவும் இல்லை என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

எனக்கு அவரைப் பார்க்க குற்ற உணர்ச்சி ஏற்பட்டது. யாத்திரை போகையில் இவரைப் போலல்லவா போக வேண்டும் என்கிற எண்ணமும் ஏற்பட்டது. தோளில் ஒரு ஜோல்னா பையுடன் அவர் நடக்கும் நடையழகும் தனிதான். நாங்கள் வழித் தடத்தில் மரக்கிளைகளை ஒடித்து எடுத்துக் கொண்டெல்லாம் அதை ஊன்றிக் கொண்டு நடந்தோம். ஊர்க் கதைகள் பேசினோம்.

ரஜினியின் சினிமா, கமலின் மார்க்கெட் நிலவரம், ஜெயலலிதாவின் ஆட்சி முறை, நரசிம்மராவ் என்ன செய்தால் சிரிப்பார்... என்று பலதரப்பட்ட பேச்சுகள் எங்களிடம்!

அவர் மட்டும் அமைதியாகவே வந்தார்.

ஒரு கட்டத்தில் தான் காவடி எடுத்து வருவதாக வேண்டிக் கொண்டிருப்பதை கூறினார். 'அதற்கென்ன... எடுக்க வேண்டியது தானே?' என்று நான் கேட்கவும் 'அது சர்ப்பக் காவடி!' என்றார் எனக்கு பகீர் என்றது.

முருகனுக்கு எவ்வளவோ நேர்த்திமுறைகள், அதில் பால் காவடி, பழக்காவடி, புஷ்பக்காவடி,பன்னீர் காவடி வரிசையில் சர்ப்பக் காவடியும் அடக்கம். அதாவது சர்ப்பத்தையே காவடியில் கட்டி சுமந்து வருவதுதான் சர்பக் காவடி!

நாம் முருகன் நினைப்பாகவே அந்தக் காவடியை தூக்கி வரும் வரை அது நம்மை எதுவும் செய்யாதாம்! நம் எண்ணத்தில் பழுது இருந்தால் ஒரே போடு போட்டுவிடும் என்பார்கள்!

இதெல்லாமே மனிதன் தன் எண்ணத்தை சீர்படுத்திக் கொள்ளும் பொருட்டு செய்து கொள்கின்ற மனவியல் ரீதியான நுட்பமான விஷயங்கள் என்பது என் கருத்து. தன்னை செதுக்கிக் கொள்ள சீர்படுத்திக் கொள்ள அவனுக்கு ஒரு காரணம் தேவைப்படுகிறது. அது ஊர் உலகத்துக்கு பொதுவான கடவுளாக இருக்கும்போது அவனுக்கு அது சுலபமாகி விடுகிறது. ஆனால் இன்று நடைமுறையில் பெரிதாக யாரும் சர்ப்பக் காவடி எடுத்து வருவதில்லை.

அதெல்லாம் ஒரு காலம்!

அந்த நண்பரும் சர்ப்பக் காவடி என்றவுடன் "என்ன இப்படிப் போய் வேண்டிக்கொண்டுள்ளீர்கள். பாம்புக்கு எங்கே போக... அதை எப்படி தைரியமாக சுமக்க...?" என்று ஆளுக்கு ஆள் கேட்கவும் அவரும் வெலவெலத்து விட்டார். இருந்தும் சமாளித்தார்.

"விஷக் காய்ச்சல்ல எங்கம்மா சாக இருந்தப்போ வேண்டிக்கிட்டேன். இந்த விஷத்தை நீக்கு. பதிலுக்கு ஒரு விஷமுள்ள நாகத்தையே சுமந்து வரேன்னு அப்ப இருந்த மனநிலையில் வேண்டிக்கிட்டேன்" என்றார். அதில் ஏதோ ஒரு லாஜிக் இருப்பதாக எனக்கும் தோன்றியது.

சரி சரி... இப்ப காலம் இருக்கிற இருப்புல சர்ப்பக்காவடி எல்லாம் சாத்தியமில்லைன்னு முருகனுக்கு தெரியாதா என்ன... நடக்கிற இந்த ஒரு மெய் வருத்தம் போதும் என்றேன் நான்!

அதைத் தொடர்ந்து மூன்று நாட்கள் நடந்து, இடும்பன் குளத்தில் குளித்து விட்டு மலைப்படி ஏறி மேலே முருகனையும் தரிசித்து முடித்தோம். ஒரு பெரிய சாதனை செய்த நிறைவு!

அப்படியே வெளியே சுற்றி வந்த நிலையில் ஒரு இடத்தில் உட்கார்ந்தோம். சுமந்து வந்தவையும் அவரவர் அருகில்...! சர்ப்பக் காவடி எடுக்க விரும்பிய நபர் தானும் அமர்ந்த நிலையில் பையில் இருந்து பேனா ஒன்றை எடுத்து எல்லோர் முகவரியையும் குறித்துக் கொள்ளத் தயாரானார்.

கையை விட்டு துழாவிய அவருக்கு பேனா அவ்வளவு சுலபமாக கிடைக்கவில்லை. மெல்ல உள்ளே இருந்து வேட்டி, சட்டை, துண்டு, கிட்பேக் என்று ஒவ்வொன்றையும் வெளியே எடுத்தவர் இறுதியாக மடித்து வைத்திருந்த ஒரு சால்வையை எடுத்தபோது அவர் கைகளில் ஒருவித வழ வழப்பை உணர்ந்து ஒரு உதறு உதறினார். சால்வைக்குள்

இருந்து ஓர் அடி நீள நல்ல பாம்புக்குட்டி ஒன்று பொத்தென்று வெளியில் விழுந்து ஒரே ஓட்டமாய் ஓடி அருகாமை மதில் சுவர் இடைவெளியில் புகுந்து மறைந்து விட்டது.

நாங்கள் அத்தனை பேரும் உறைந்து போனோம். திரும்பும் போது நாங்கள் படுத்திருந்த மரத்தடியில் சற்று தள்ளி ஒரு பாம்புப் புற்றை பார்க்கவும் தான் புரிந்தது. நாங்கள் அங்கே படுத்த போது அது உள் ஏறிக்கொண்டு விட்ட நிஜம்!

அவர் தனக்கே தெரியாமல் சர்ப்பக் காவடியை சுமந்தாரா... இல்லை அந்த முருகன்தான் அவரது பிரார்த்தனை தெரிந்து அப்படி ஒரு அனுபவத்தை அவருக்கு அளித்தானா என்பது இன்று வரை மில்லியன் டாலர் கேள்வியாகவே எங்களுக்குள் உள்ளது.

திருச்செந்தூர் முருகன் எங்கள் தலையைக் காத்த அனுபவத்தைச் சொல்கிறேன்.

2. முருகா, உன் காலைப் புடிச்சுக்கிட்டேன்!

பழனி பாத யாத்திரையில் சர்ப்பக்காவடி அனுபவம் என்றால் திருச்செந்தூர் யாத்திரையில் அதற்கு நிகரான வேறுவிதமான அனுபவம் எனக்கு ஏற்பட்டது!

திருச்செந்தூர் யாத்திரை என்பது பெரும்பாலும் மாசி மாதம் வரும் மகம் நட்சத்திர தினத்தை ஒட்டியே நடைபெறும்.

மாசிமகம் திருச்செந்தூரில் ஒரு திருநாள்!

அன்று தேரோட்டம் வேறு... எனவே நாற்புறங்களில் இருந்தும் கூட்டம் அலை மோதும்...!

மதுரைவாசிகள் பெரும்பாலும் திருச்செந்தூர் யாத்திரையை இப்படி மாசிமகத்தை ஒட்டியே அமைத்துக் கொண்டுள்ளனர். இந்த வழக்கம் எப்போது, யாரால், எப்படி துவக்கப்பட்டது என்று தெரியவில்லை.

ஆனால் இன்றுவரை அதில் மாற்றமில்லை!

மதுரைவாசிகள் திருச்செந்தூர் நோக்கி நடக்கும் வழியில் காரியாபட்டி, அருப்புக்கோட்டை, பந்தல்குடி, சிந்தலக்கரை, எட்டயபுரம் தூத்துக்குடி, ஆத்தூர், ஆறுமுகனேரி என்கிற வழித்தடங்களின் வழியாகத்தான் நடந்தாக வேண்டும்.

இதில் பந்தல்குடி வரை ஒரு மாதிரி நடந்து விடலாம். அதற்குப் பிறகு தூத்துக்குடி வரையில் சாலையின் இரு மருங்கிலும் பெரும்பாலும் வறண்ட கருவேல மரக் கூட்டம்தான் கண்ணில் படும். இந்தப் பகுதி நிலம் அவ்வளவும் வானம் பார்த்த பூமி! எனவே உஷ்ணமும் மிக அதிகம். எனவே இந்தப் பகுதியை மட்டும் இரவு நேரத்தில் கடக்கவே எல்லோரும் விரும்புவார்கள்.

அப்படி ஒருநாள் நடக்கையில் பந்தல்குடிக்கும், எட்டயபுரத்துக்கும் நடுவில் ஓர் இடத்தில் ஒரு சாரைப் பாம்பு ஒன்று அடிபட்டு உயிருக்குப் போராடியபடி சாலை ஓரமாகக் கிடந்தது. அதன் வால்பகுதியில் லாரியோ, பஸ்ஸோ ஏறிவிட்டது. எனவே அந்தப் பாகம் நசிந்த நிலையில் அது புரண்டு நெளிந்த படியே இருந்தது.

நான் அதை டார்ச் வெளிச்சத்துக்கு நடுவில் பார்த்துவிட்டு மிகவும் மனம் கசிந்து போனேன். என்னதான் மிரட்டும் பாம்பு இனம் என்ற போதிலும் அந்த உயிர் வேதனை என்னை சஞ்சலப்படுத்தியது.

என்னோடு வந்த சகாக்கள் நின்றால் நடை தேங்கி விடும் என்பதால் விறுவிறுவென்று நடந்து என்னையும்

கடந்து சென்று விட்டனர். எங்காவது ஒரு மரத்தடியில் அவர்கள் உட்காரும் போது நான் அவர்களைப் பிடித்து விடுவதும், அதேபோல அவர்கள் என்னைப் பிடிப்பதும் நடந்து கொண்டிருந்தது.

எனவே நான் மட்டும் நின்ற அந்த இடத்தில் அப்போது வயதான ஒருவர் வந்து பாம்பு துடிப்பதை அவரும் பார்த்து விட்டு என்னைப் போலவே வருந்தினார்.

சட்டென்று தன் யாத்திரை பையை என்னிடம் தந்து விட்டு டார்ச் லைட்டை வாங்கிச் சென்று அந்த இடத்திலும் எப்படியோ தும்பைமேனிச் செடியை பறித்து வந்து கசக்கி காயம் பட்ட வால் பக்கமாக விட்டவர் அப்படியே மிக நைந்த வால் பாகத்தை துணிவோடு கையாலேயே பிய்த்தும் போட்டு விட்டார். அந்த சர்ப்பம் சற்று சீறிப் பார்த்தது. ஆனால் அவர் அதற்கெல்லாம் அஞ்சவில்லை. அப்படியே அதை சற்றுத் தள்ளி ஓர் இடத்தில் விட்டு விட்டு என்னோடு பேசியபடியே நடக்கத் தொடங்கினார். நான் அவரிடம் "அந்தப் பாம்பு பிழைத்துக்கொள்ளுமா?" என்று கேட்டேன். "சந்தேகமே வேண்டாம். அது பிழைத்துக் கொள்ளும். இல்லாவிட்டால் இந்த நள்ளிரவில் முதலில் உங்கள் பார்வையிலும், பிறகு என் பார்வையிலும் அது ஏன் படவேண்டும்?"

"அதற்கு உயிர் போகும் விதி இருந்திருந்தால் லாரியோ, பஸ்ஸோ தலை மேலேயே ஏறியிருக்கலாமே! அப்படி நிகழவில்லையே! எனவே அதற்கு வலியை அனுபவிக்க வேண்டிய விதி அமைப்பும், பின் சற்று ஊனப்பட்டு திரிய வேண்டும் என்கிற விதி அமைப்பும் இருக்க வேண்டும். அதுதான் தப்பித்துக் கொண்டது" என்றார்.

அவர் இதை வெகு சாதாரணமாக சற்றும் யோசிக்காமல் கூறியது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அதே சமயம் அதில்

ஒரு லாஜிக்கலான நியாயம் இருப்பது போலவும் எனக்குத் தோன்றியது.

நம்மைச் சுற்றியும் தினம் தினம் இப்படித்தான் எவ்வளவோ சம்பவங்கள் நடக்கின்றன. எல்லாவற்றுக்கும் பின்னாலும் இப்படி ஒரு கணக்கு இருக்கக்கூடும் என்று அப்போதே எனக்குள்ளும் ஓர் எண்ணம்.

நள்ளிரவு நேரம்.

எனது நண்பர்கள் வெகுவேகமாக முன்னாலே சென்றுவிட்டனர். எனவே அந்த வயதான பெரியவரையே நான் துணைக்குக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பேச்சு கொடுத்தபடி நடக்கத் தொடங்கினேன்.

எப்பொழுதும் யாத்திரையில் வழித்துணை மிக அவசியம்... தனிமையில் நாம் நடக்கும்போது ஒரு இனம் புரியாத பயமும், வெறுப்பும் ஏற்படும்.

யாத்திரையில் இறைநாமாவை உச்சரித்தபடி தான் நடக்க வேண்டும் என்பதே விதி... ஆனால் அது அவ்வளவு சுலபமில்லை. ஐந்து நிமிஷம் கூட இறைநாமாவை நம்மால் சொல்ல முடியாது. (விதி விலக்குகளாக சிலர் இருந்து யாத்திரை முழுக்க ஒருவருடன் கூட பேசாமல் வருவார்கள்) யாத்திரையில்தான் அதிக வாய் அரட்டையும், ஊர் வம்பும் இருக்கும். ஏனென்றால் நடக்க நடக்க தூரம் குறையாமல் வளர்வது போலவே ஓர் உணர்வு தோன்றும். எனவே இந்த மாதிரி அரட்டைகள் தான் அப்போது நமக்கு கைகொடுக்கும். இப்படி அரட்டை அடித்தபடி நடப்பதெல்லாம் சரியா என்றால் சந்தேகமே இல்லை. அது தவறுதான்... ஆனால் இந்த சிறு தவறைப் புரிந்தால்தான் யாத்திரை என்னும் பெரிய தவத்தை ஈடேற்ற முடியும்.

எனவேதான் நானும் அந்தப் பெரியவரைப் பிடித்துக் கொண்டு பேச்சுக் கொடுத்தபடியே நடக்க ஆரம்பித்தேன்.

அவரோ அசாத்ய வேகத்தோடு நடந்தார். நிச்சயம் 70 வயதுக்கு மேல் இருக்கும். அந்த வயதில் அந்தத் தெம்பு அசாத்யம் என்று எனக்குத் தோன்றியது. ஆனால் அப்போது எனக்கு 32தான் வயது. ஆனால் அந்த இளம் வயதில் என்னால் அவரோடு போட்டி போட்டு நடக்க முடியவில்லை. இருந்தும் நடந்தபடி பேசினேன். அவரும் பல விஷயங்களைப் பேசினார். அவைகளில்தான் எவ்வளவு அர்த்தம்! எவ்வளவு ஆச்சரியங்கள்!

"ஐயா மட்டும் தனியா வந்த மாதிரி தெரியுதே?"

"ஆமாம்... நான் எப்பவும் யாத்திரைல யாரையும் துணைக்கு சேர்த்துக்கிறதில்லை..."

"ஏன் அப்படி?"

"அது அப்படித்தான்... தொடக்கத்துல இருந்தே நான் தனி ஆள்தான்... பிறந்தப்பவும் சரி... போறப்பவும் சரி... தனியாதானே போகப்போறோம்?"

"அது சரி, அதுக்காக வாழற நாள்ல நாலுபேரோட பழகக்கூடாதுன்னு இருக்குதா என்ன?"

"எனக்குப் பழக்க ராசி இல்ல... நான் யார்கூட பழகினாலும் அவங்க எனக்கு விரோதியாகிடுறாங்க..."

"அதுக்கு என்ன காரணம்னு யோசிச்சு திருத்திக்கிட்டா சரியாயிடாதா?"

"கடன் கொடுத்தா கேட்கக் கூடாது... தப்பு செஞ்சா கண்டுக்க கூடாது... துரோகம் பண்ணா தாங்கிக்கணும்னா அது எப்படி முடியும்?"

"ஒருத்தர் ரெண்டுபேர் அப்படி இருக்கலாம்... எல்லாருமா அப்படி?"

"என் ராசிக்கு எல்லாரும் அப்படித்தான்..." அவர் குரலில் விரக்தி தொனித்தது.

"எனக்கு ஒரே ஒரு சினேகிதன்தான்... அது அந்த செந்தூர் குமரன்தான்..."

"ஆமாம்... இதான் உங்களுக்கு முதல் பாதயாத்திரையா?"

"முதலா... சரிதான். இது எனக்கு 24வது பாதயாத்திரை..."

அவர் சொல்லவும் எனக்கு மயக்கம் வராத குறை... இப்பொழுது அவர் என்னிடம் கேட்கத் தொடங்கினார்.

"உங்களுக்கு?"

"எனக்கு இது மூணாவது வருஷம்."

"எங்க இருந்து வர்றீங்க?"

"மதுரைல இருந்து... ஆனா நடக்கத் தொடங்கினது அருப்புக் கோட்டையில இருந்துதான்..."

"வீட்டு பூசை அறையில விளக்கேத்தி வச்சுட்டு அப்படியே வெறும் காலோட நடக்க ஆரம்பிச்சு கோயில் சன்னதியில போய் முடிக்கிறதுக்குப் பேர்தான் பாதயாத்திரை... தெரியும்ல?"

"தெரியும்ங்க... ஆபீஸ்ல லீவு கிடைக்கல... அதுக்குத் தகுந்த மாதிரி திட்டம் போட்டு வர்றோம்..."

"அதுக்கு வராம இருந்துடலாமே... முருகனா உங்களைக் கட்டாயம் நடந்து வரச்சொன்னான்?"

"அவன் சொல்லலைதான்... நம்மால எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்வோம்கிறது என் எண்ணம். அதான்..."

"அதுவும் சரிதான்... யாத்திரைக்குத் தகுந்த திருவருள்..." அவர் அப்படிச் சொன்னதில் ஏதோ ஆழமான உட்பொருள் இருப்பது போல எனக்குத் தோன்றியது.

"அப்ப நடைக்கு தகுந்த மாதிரிதான் பலன் கிடைக்குங்களா... சாமிகூட ஆளுக்குத் தகுந்த மாதிரி, விஷயத்துக்கு தகுந்த மாதிரிதான், கேட்டதைக் கொடுக்குமா?"

"சாமிங்கறது எதையும் கொடுக்காது. இல்லேன்னும் சொல்லாது. அது சமுத்திரம் மாதிரி... நாமதான் நம்ம பக்தியால அதைக் கொண்டு செய்யற முயற்சியால நம்ம தேவைக்குத் தகுந்த மாதிரி அந்த சமுத்திரத்திலே இருந்து எடுத்துக்கறோம். நம்ம பக்தியும், தேவையும் தான் ஒரு பாத்திரமா இங்க மாறுது. அது பெருசா இருந்தா அதுக்குத் தகுந்த அளவு. சிறுசா இருந்தா அதுக்கு தகுந்த அளவு.... அதைத்தான் நான் அப்படிச் சொன்னேன்..." இந்தக் கருத்தும் எனக்கு லாஜிக்கலாக, மிக பொருத்தமாகப் பட்டது.

"சரிங்க... இப்படி நடக்கற நம்மைப் பார்த்து சிலர் சிரிச்சு கேலி பண்றாங்களே... அதை பத்தி என்ன நினைக்கிறீங்க?"

"சிரிச்சா சிரிச்சுட்டுப் போறாங்க... அவுக வரையில இது வேண்டாத வேலை... பைத்தியக்காரத்தனம்! இருந்துட்டுப் போவட்டுமே... பக்தி இல்லாதவனுங்கற வேலை மட்டும் பாக்கற இவங்க என்னத்தைக் கிழிச்சுட போறாங்க? நாம கிழிக்காம போக... பைத்தியக்காரத்தனம்னு சொல்றவங்க எது புத்திசாலித்தனம்னு சொல்லணும்... பஸ்ல ஏறினா அது கொண்டு போய் உட்டுடும்தான்... அது தெரியாதா என்ன? இருந்தாலும் அதை தள்ளிட்டு கால்கடுக்க நடக்கறதுல ஒரு மெய்வருத்தம் இருக்குல்ல? அரிசி பருப்பு வாங்க இப்படி நடப்போமா? உயர்வான ஒரு விஷயத்துக்கு மட்டும்தானே நடப்போம்? நடக்கணும்... நடந்தா தான் நடையோட அருமை தெரியும். நம்ம உடம்போட ஆரோக்யம்....

அதோட தாங்கற சக்தி, சகிப்புத்தன்மைன்னு எல்லாத்தையும் நாம ரத்தசுத்தமா புரிஞ்சுக்க முடியும்..."

"எப்படிங்க 24வருஷமா தனியாவே விடாம நடக்கறீங்க... அலுப்பாவோ, சலிப்பாவோ இல்லை?"

"எனக்கு அலுத்துப் போனா நான் செத்துப் போயிடுவேன்... நான் இப்ப வாழற வாழ்க்கை முருகனோட அருளால.... இது அவன் போட்ட பிச்சை... இந்த நடை அதுக்கு காட்ற நன்றி மட்டுமில்லே, இந்த மெய்வருத்தம்தான் அசல் காணிக்கை..."

"அப்படி என்ன அந்த முருகன் உங்களுக்கு செய்துட்டான்?"

"என்ன செய்தானா... அடேங்கப்பா..." அவர் தன் வாழ்வில் நிகழ்ந்த முருகனின் திருவருள் தொடர்பான சம்பவம் ஒன்றை கூறத் தொடங்கி விட்டார்.

"எனக்கும், என் பங்காளி ஒருவருக்கும் ரொம்ப நாளா மனவருத்தம் இருந்தது. நடுவுல சொத்துப் பிரச்சினை வேற சேர்ந்துகிச்சு. அவர் என்னை ஒழிச்சு கட்டுனாதான் தனக்கு நிம்மதிங்கற அளவுக்குப் போய்ட்டார். ஒருநாள் கத்தியை எடுத்துகிட்டு குத்தவே வந்துட்டார். நான் தடுத்து நிறுத்தி தப்பிக்க முயற்சி செய்தேன். அந்தப் போராட்டத்துல தடுமாறி விழுந்த அவர் தன் கத்தியால் எங்க சண்டையை விலக்க வந்த ஒருத்தரை குத்தும்படி ஆயிடுச்சு. ஆனா அப்படியே பழியை என்மேல தூக்கிப் போட்டுட்டார். சண்டையை விலக்க வந்து குத்துப்பட்ட நபரும் அவர்கூட சேர்ந்துகிட்டார். அதான் பெரிய கொடுமை. என்னையும் போலீஸ் பிடிச்சுகிட்டுப் போய் உள்ளே போட்டுட்டாங்க. நான் ஜாமீன்ல வந்து கோர்ட்ல வழக்கை சந்திச்சேன். நான்தான் குத்துனேங்கிறதுக்கு ஒரு பொய்சாட்சியையும்

ஏற்பாடு பண்ணிட்டாங்க. இறுதியாக தீர்ப்பு சொல்லப் போற நாள் வந்தது. அந்தப் பொய் சாட்சிக்காரன் கால்ல போய் என் பொண்டாட்டி விழுந்து கதறிப் பார்த்தா, அவன் கண்டுக்கலை... நான் எதுவுமே பேசலை... செந்தூர் முருகன்தான் அசுரனை அழிச்சு அவதாரம் எடுத்தவன். ஆகையால அவனை மனசுக்குள் நினைச்சு வேண்டிக்கிட்டேன். 'முருகா நான் ஒரு தப்பும் பண்ணலை. பொய்சாட்சி சொல்றவன் மட்டும் சாட்சி சொல்லிட்டா நான் உள்ளே இருக்கணும். என் எதிர்காலமும் இருண்டு போயிடும். நான் உன் காலைப் பிடிச்சுட்டேன். இந்த இக்கட்டான நேரத்துல நீ என்ன செய்வாயோ தெரியாது. நிரபராதியான நான் தண்டிக்கப்படக் கூடாதுன்னு' வேண்டிக்கொண்டேன்.

மறுநாள் கோர்ட்டில் நீதிபதி வந்து வழக்கு விசாரணை தொடங்கியது. ஆனால் அந்தப் பொய்சாட்சிக்காரன் வரவில்லை. எனது பங்காளி பதைத்துப் போனார். அப்போதுதான் அந்த உண்மை தெரியவந்தது. முதல்நாள் பெய்த பெருமழையில் வீட்டுச் சுவர் இடிந்து அந்தப் பொய்சாட்சியின் மேல் விழுந்த விஷயம்... குற்றுயிரும் குலை உயிருமாய் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கிறார்கள். அங்கே டாக்டரிடம் அவன், "ஐயா! நான் பொழைக்க மாட்டேன். இது முருகன் எனக்கு கொடுத்த தண்டனை. நான் நாளைக்கு பொய்சாட்சி சொல்ல இருந்தேன். அதுக்கு முந்தி முருகன் தண்டிச்சிட்டான். தயவுசெய்து நான் சொன்ன இந்த விஷயத்தை கோர்ட்டுக்குப் போய் சொல்லிடுங்க" ன்னு சொல்லிட்டு செத்துட்டான்.

டாக்டரும் கோர்ட்டுக்கு வந்து பொய்சாட்சி சொல்லச் சொன்ன தகவலை சொன்னப்போ கோர்ட்டே உறைஞ்சுப் போச்சு. அந்த டாக்டர் பேர் என்ன தெரியுங்களா?"

அந்தப் பெரியவர் கேட்டார். நானும் அடக்க மாட்டாத ஆர்வத்தோடு கேட்டேன்.

"என்னங்க?"

"செந்தில்குமரன்!"

அவரது பதிலால் எனக்குள் திகைப்பு!

3. இராமானுஜரை பதினெட்டு முறை நடக்க வைத்த திருக்கோஷ்டியூர் நம்பி

கோர்ட்டுக்கு வந்து பொய்சாட்சி சொல்ல வேண்டியவர் இறந்துவிட, அவர் சொன்னது அப்படியே கோர்ட்டுக்கு வந்து சொன்னவர் பேர் செந்தில்குமரன் என்று தெரியவரவும் நான் அப்படியே சிலிர்த்துப் போனேன்...

எனது பக்திக்கு அந்த முருகன் அளித்த பெரிய பரிசுதான் எனக்கான அந்த சாட்சி... செந்தில்குமரன் என்பவரின் வடிவத்தில் வந்தவன் அவன்தானே? என்னோடு நடந்து வந்த படியே இருக்கும் அந்தப் பெரியவரின் கேள்விக்கு நான் என்ன பதிலைக் கூற...

"ஐயா! உங்க விஷயம் ஒரு சினிமாவோட திரைக்கதை மாதிரியே இருக்கு... சினிமாலதான் கடவுளோட பக்திச் சிறப்பை உணர்த்த இப்படி காட்சி அமைப்பாங்க. ஆனா நீங்க நிஜத்துலேயே அதுக்கு ஒரு சாட்சியா நிக்கறீங்க' என்றேன் நான்!

'சினிமா என்ன சினிமா... வாழ்கையில நடக்காத ஒண்ணை யாராலயும் யோசிக்க முடியாது தம்பி! சினிமாங்கறது குறுகின காலத்துல ஒரு பெரிய விஷயத்தை சொல்ல வேண்டிய களம். ஆகையால அங்க எதையும்

கொஞ்சம் மிகையா சொன்னாத்தான் புரியும். மத்தபடி நான் வாழ்க்கைக்கும், சினிமாக்கும் பெரிய வித்தியாசத்தை பார்க்கலேன்னார்...'

அவரோடு பேசியதாலோ என்னவோ எனக்குள் அந்த பாதயாத்திரை மேல் பெரிய அளவில் ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. எனது முருக பக்தியிலும் ஒரு முறுக்கேறியது.

ஏனென்றால் பாத யாத்திரையில் நடக்கும்போது மனம் பலவிதமாக மாறும்... குறிப்பாக ஒரு அளவுக்கு மேல் நடக்க முடியாதபடி திணறல் ஏற்படும் போது போகிற வருகிற பஸ்ஸும், காரும் நம் கண்களுக்கு சொர்க்க ரதமாக தெரியும். அதில் அமர்ந்து கொண்டு போகிறவர்களின் பார்வை நம்மைப் பரிதாபமாகவும், கேலியாகவும் பார்ப்பது போல் எல்லாம் நம் மனம் எண்ணும்.

சிலர் இடக்காக, 'எதுக்குங்க இப்படி இந்த காலத்திலயும் கஷ்டப்படறீங்க...கால் புண்ணாக நடந்து வந்தாதான் நான் சந்தோஷப்படுவேன்னு அந்த சாமி சொன்னிச்சா என்ன?' என்று கேட்கவும் செய்வார்கள்.

'பக்திங்கறது மனசுல இருந்தா போதாதா...? இப்படியா முரட்டுத்தனமாக நடந்து போவீங்க... இது முட்டாள்தனமா தெரியலை உங்களுக்கு...?'

'உங்களைப் பார்த்தா கார்ல கோயிலுக்குப் போறவங்கள்லாம் சொகுசுப் பேர்வழி... பக்தியே இல்லாதவன்கிற மாதிரியில்லே ஆகுது...'

இப்படி வழிநெடுக பல கேள்விகளை எதிர் கொள்ள வேண்டியும் வரும். அப்பொழுதெல்லாம் நமது மனமும் அதன் பக்தியும் ஒரு ஆட்டம் ஆடும்.

எனக்குத் தெரிந்து பலர் பாதி வழியில் பஸ் ஏறியுள்ளனர்.

'போதுங்க... நான் எப்படின்னு சாமிக்குத் தெரியும். எப்ப முடியுதோ அப்ப நடந்து போய்க்கறேன்...' என்று தங்கள் செய்கைக்கு நியாயமும் கற்பிக்கப் பார்ப்பார்கள். சிலர் ஓரமாக மரத்தடியில் அமர்ந்து அழுவார்கள். திரும்பிப் போக மனம் இடம் தராது. தொடர்ந்து நடக்க கால் கொப்பளங்கள் அனுமதிக்காது. மனமோ கடவுள் தங்களை வரவேண்டாம் என்று தடுத்துவிட்டதாக கற்பனை வேறு செய்து கொள்ளும். இந்த மாதிரி சூழலில் அழுகை வராமல் என்ன செய்யும்?

பாதயாத்திரையின் இடையில் இப்படி நிறைய ரசமான அனுபவங்கள் கிட்டும்.

வெகுசிலர்தான் புறப்பட்டதில் இருந்து போய்ச் சேருவது வரை ஒரே சீராக நடந்து வருவார்கள். யாருடனும் பெரிதாக பேசமாட்டார்கள். சாப்பாட்டில் சுத்தமாக வெங்காயம் சேராதபடி வேறு பார்த்துக் கொள்வார்கள். பாதயாத்திரை புரிபவர்களுக்கு விரதமும், உணவுக் கட்டுப்பாடும் மிக அவசியம்.

பக்கத்துத் தெருவில் உள்ள நண்பர் வீட்டுக்குப் போய் வருவது போன்றதல்ல பாதயாத்திரை! நம் உடம்பின் ஒவ்வொரு செல்லையும் நமக்குக் காட்டி புரிய வைக்கும் ஒரு வலி மிகுந்த அனுபவம் அது.

கட்டை - குட்டையாக இருப்பவர்கள், பருத்த தொடை உடையவர்கள், மிகவும் பருமனானவர்கள், ஆகிய மூவரும் பாதயாத்திரைக்கு தகுதியில்லாதவர்கள்.

இவர்களால் மிக அதிகம் 15 கி.மீ. கூட நடக்க முடியாது. 16 வது கி.மீ என்பது இவர்களுக்கு நரகத்தோடுதான் காட்சி தரும். தொடை இடுக்கில் புண் ஏற்பட்டு ரத்தம் சொட்டுச் சொட்டாய் ரோட்டில் சிந்தத் தொடங்கிவிடும்.

அப்படி ஒருவருக்கு நடந்து நான் பார்த்திருக்கிறேன்.

பாதயாத்திரையில் உள்ளாடை, அணிந்து நடப்பது மிகக் கொடுமையானது. தொடை இடுக்கில் தீக்குச்சியை வைத்தால் அப்படியே தீச்சுடர் பற்றிக்கொண்டு விடும். அப்படி ஒரு உஷ்ணம் அங்கு இருக்கும்.

எனவே இப்படிப்பட்டவர்கள் யாராவது என்னோடு நடந்து வருகிறேன் என்றால் நான் தடுத்து விடுவேன். தயவுசெய்து யாத்திரை முயற்சி செய்யாதீர்கள்... உங்களை வருத்திக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால் வேறு விதமாக வருத்திக் கொள்ளுங்கள்! நல்ல விருந்து சாப்பிடக் கிடைக்கும் போது அந்த இலையில் இருந்து எழுந்து சென்று விடுங்கள். அந்தத் தவிர்ப்புதான் மன உறுதி... அதுதான் பக்தியாக மாறி இறைவனைச் சென்று சேர்கிறது.

அல்லது புதிய துணி வாங்கி வந்து யார் என்றே தெரியாத ஒருவருக்குத் தந்து அவரை அணிந்து கொள்ளச் சொல்லி அழகு பாருங்கள்!

இல்லாவிட்டால் ஏதாவது ஒரு கோயிலுக்குப் போய் முடிந்த அளவு உழவாரப் பணி செய்யுங்கள். இதெல்லாம் கூட பாதயாத்திரைக்கு இணையானது தான்.

ரயிலும் விமானமும் சீரழியும் இந்த நாட்டில் நடப்பது என்பது ஓர் அதிசயமாகிவிட்டது. உண்மையில் நடப்பது என்பதே மனிதனின் பெரிய அனுபவம்.

கால்களை இறைவன் கொடுத்திருப்பதே அதற்காகத்தானே? அந்த நாளில் ராமானுஜர் நடந்த நடையை விடவா ஒருவர் நடந்துவிடமுடியும்?

காஞ்சீபுரத்தில் இருந்து திருமலைக்கு... திருவரங்கத்தில் இருந்து திருக்கோஷ்டியூருக்கு... அப்படியே திருமலையில் இருந்து மைசூர் பக்கமாய் மேலக்கோட்டைக்கு... அங்கேயிருந்து டெல்லிக்கு... என்று ராமானுஜர் நடந்த நடை இருக்கிறதே அது அசாதாரணமானது. அதிலும் காஞ்சீபுரத்தில் இருந்து திருக்கோஷ்டியூர் நோக்கி அங்கு வாழ்ந்து வந்த வைணவப் பெரியாரான நம்பியிடம் சீடராகச் சேரவும், மந்திரோபதேசம் பெறவும் அவர் ஒருமுறை அல்ல 18 முறை நடந்திருக்கிறார்.

ஒவ்வொருமுறை வரும்போதும் நம்பி 'வந்திருப்பது யார்?' என்று கேட்பார்.

'நான் ராமானுஜன் வந்திருக்கிறேன். அதுவும் காஞ்சீயில் இருந்து...' என்பார். உடனேயே 'என்ன விஷயம்?' என்று கேட்பார் நம்பி.

'என்னை உங்கள் சீடனாக ஏற்று திவ்ய மந்திரோபதேசம் எனக்குச் செய்விக்க வேண்டும்...' என்பார் ராமானுஜர்.

'இப்போது இடமில்லை. இன்னொருமுறை பார்க்கலாம்' என்பார் நம்பி.

ராமானுஜர் அப்படியே மனம் சோர்ந்தவராக திரும்பி நடப்பார். திருக்கோஷ்டியூரில் இருந்து திருப்பத்தூர் பின் அங்கிருந்து புதுக்கோட்டை... அதற்குப்பின் அங்கே இருந்து தஞ்சாவூர் பின் கும்பகோணம், மாயவரம், சிதம்பரம் என்று நடந்தே காஞ்சீபுரம் சென்றடைய வேண்டும்.

அந்த நாளில் அரசர்கள்தான் பல்லக்குகளிலும், குதிரைகள் பூட்டிய ரதங்களிலும் பயணம் செய்தனர். ராமானுஜர் போன்ற சன்யாசிகளுக்கு கால்கள் இரண்டும் தான் சக்கரங்கள் பூட்டிய வாகனம்.

அந்தக் கால்களை ஒரு மந்திரோபதேசம் பெறும் பொருட்டு 18 தடவைகளுக்கு மேல் நடக்க வைத்தார் என்பதை ராமானுஜர் வாழ்க்கையை பார்க்கும்போது அறிகின்றோம்.

இறுதியாக 18வது தடவை அவர் நம்பியை சந்தித்தபோதும் அதே கேள்வி...

'வந்திருப்பது யார்?'

'அடியேன் ராமானுஜன் வந்திருக்கிறேன்' என்றாராம் ராமானுஜன்.

அதாவது நான் ராமானுஜன் என்பது அடியேன் ராமானுஜன் என்கிற பணிவிற்கு அவரை மாற்றி விட்டது. அடுத்த நொடியே 'உள்ளே வா... இந்த வினாடி முதல் நீ எனது சிஷ்யன்' என்று நம்பியும் ஏற்றுக்கொண்டு அவருக்கு மந்திரோபதேசம் செய்தார் என்பது ராமானுஜ சரிதத்தை வாசிக்கும் போது நமக்குத் தெரியவருகிறது.

நடப்பது என்கிற விஷயத்தை தொட்டு யோசிக்கும்போது இப்படி எல்லாம் நடந்தவர்கள் பற்றிய எண்ணங்களும் மனதுக்குள் சேர்ந்தே எழுகின்றன.

பாதயாத்திரையில் நடக்கும்போது இது போன்ற எண்ணங்கள் மட்டுமல்ல... இன்னும் பலப்பல விஷயங்களை பேசிக்கொண்டு செல்வோம்.

சிலர் ஒன்றுமில்லாத விஷயத்திற்காக பகையை வளர்த்துக் கொண்டு பரம விரோதம் பாராட்டிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் இதுபோன்ற நெடிய பாதயாத்திரையில் வரும்போது மனம் விட்டுப் பேசி சரியாகி விடுவார்கள் என்பது என் நம்பிக்கை.

அவ்வளவு எதற்கு?

பாகிஸ்தானிய அதிபரும், நமது ஜனாதிபதி, பிரதமர் முதலானோரும் ஒரு நீண்ட யாத்திரை மேற்கொள்வதாக வைத்துக் கொள்வோம்.

அவர்களை தனியே நடக்கவிட்டுவிட்டால் போதும். இந்திய காஷ்மீரச் சிக்கல் காணாமல் போய் விடும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.

ஏனென்றால் ஒரு நெடிய நடை நடக்கும்போது அதிக நேரம் மனதளவில் விஷயங்களை தேக்கி வைத்துக் கொண்டிருக்க முடியாது. அது வெளிப்பட்டே தீரும். அதேபோல நம்மைக் கட்டிப் போட்டிருக்கும் பல தடைகள் அறுந்து விடும்.

சரி, பாதயாத்திரையை திரும்பத் தொடர்வோமா? அந்தப் பெரியவருடன் தூத்துக்குடி வரை நடந்த நான் அதன்பின் சக்திவேல் என்கிற நண்பருடன் எனது யாத்திரையை தொடர்ந்தேன்.

எங்களது யாத்திரையில் ஸ்பிக் பகுதியை கடந்து நாங்கள் ஆத்தூர் நோக்கி நடக்கும்போது ஒரு வளைவு. அந்த வளைவின் முக்கில் ஒரு பெரிய பனைமரம். அதில் ஒரு பனங்குலை அறுந்து விழுந்து விடுவதுபோல அல்லாடிக் கொண்டிருந்தது. அதை நாங்கள் கவனிக்காமல் அந்த மரத்தை கடக்க காலெடுக்கும்போது அதுவும் அறுந்து விழ ஆரம்பித்தது.

4. எழுத்துலக வாழ்க்கைக்கு அருளிய திருச்செந்தூர்!

மிகச் சரியாக அந்தப் பனங்குலை என் நண்பர் சக்திவேல் அவர்களின் பின்முதுகை லேசாக உரசியபடி தரையில் விழுந்து சிதறியது. அரை வினாடி அவகாசத்தில் அவர் தப்பித்தார்... அவரோடு நானும் தப்பித்தேன்.

அதுமட்டும் தலைமேல் விழுந்திருந்தால் நிச்சயம் சக்திவேல் பிழைத்திருப்பாரா? என்பதே பெரிய சந்தேகம்தான்..! இந்தச் சம்பவம் நடந்தபிறகு இரு வருக்குமே சகஜமாக பேசிக்கொள்ள நெடுநேரம் தேவைப்பட்டது.

சக்திவேல் 'தனக்கு வர இருந்த ஒரு கண்டத்தை அந்த முருகன் திசை திருப்பி தன்னை காப்பாற்றி விட்டார்' என்றுதான் கருதினார். நானும் அப்படித்தான் எண்ணினேன்.

இதைப்போல் ஒவ்வொரு நாளும் உலகெங்கிலும் மயிரிழையில் உயிர் பிழைப்பவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களெல்லாம் இப்படியா நினைக்கிறார்கள் என்று கேட்கலாம்.

நினைக்க வேண்டும்... அப்போதுதான் வாழ்வில் இறைவனின் கருணையோடு எப்பொழுதும் எது வேண்டுமானாலும் நடக்கும்! என்பதும் நமக்கு நிதர்சனமாய் புரியும்.

ஒருவர் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் சரி அவர் கைவீசி நடக்கிறார். கண்ணாரப் பார்க்கிறார், காதாரக் கேட்கிறார் என்றாலே இறைவன் கருணையால்தான்!

இவைகளின் அருமை, இறைவனின் கருணையற்றுப் போய் விபத்துக்குள்ளாகி ஊனமுற்றுக் கிடப்பவர்களுக்குத் தான் தெரியும்.

இறைவன் முருகன் எங்களை காத்து ரட்சித்த அந்த பரவச உணர்ச்சியோடு நாங்கள் செந்தூரையும் அடைந்தோம். கடலிலும் மூழ்கி எழுந்தோம். நடந்து வந்த களைப்பெல்லாம் பறந்து போய்விட்டது. சன்னதிக்குப் போய் முருகனைத் தரிசனம் செய்யும் போது மீதமிருந்த களைப்பெல்லாம் போய்விட்டது. அப்படியே வெளிப் பிரகாரத்தை வலம் வந்து கடற்கரை மணல்வெளியில் அமர்ந்தோம். மாசி மகம் என்பதால் சரியான கூட்டம்!

நாங்கள் செந்தூர் அடையும் முன்பே தேரில் முருகன் ஒரு ஓட்டம் ஓடி முடித்திருந்தான். எனவே தேர் இழுக்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. கரையில் அமர்ந்திருக்கும் போது, ஒரு குச்சி ஜோசியக்காரி எங்களை நோக்கி வந்தாள். இவர்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். திருச்செந்தூர் கடலோரம் திரிந்தபடி ஜோதிடம் கூறுவது இவர்கள் தொழில். இவர்களில் ஏய்த்துப் பிழைப்பவர்களும் உள்ளனர். நமது அதிர்ஷ்டமும் கால நேரமும் நன்றாயிருந்தால் இவர்களில் உண்மையானவர்களை நாம் சந்திக்கலாம்.

அன்று நாங்கள் சந்தித்ததும் அப்படி ஒரு பெண்மணிதான். 60 வயது இருக்கும். 'ராசா... உன் மனசுல ஒரு குறை இருக்கு. ஆத்தா நான் சொல்றபடி கேட்டா அம்பிட்டும் விலகும். கோபுரமா சுகம் பெருகி நிற்கும்...' என்று ஒரு பாட்டாக பாடிக்கொண்டு எதிரில் அமர்ந்து விட்டாள்.

சக்திவேல் அவளை பொருட்படுத்தாமல் பிரசாரம் வாங்கி வருகிறேன் என்று கிளம்பிவிட, நான் மட்டும் அவளிடம் மாட்டிக் கொண்டேன்.

அன்று எனக்கு ஒரே லட்சியம்தான் இருந்தது. 'விகடன்' போல் ஒரு இதழில் பெரிய அளவில் தொடர்கதை எழுத வேண்டும் என்பதுதான் அது. டிவிஎஸ் நிறுவனத்தின் சுந்தரம் பாஸனர்ஸில் நான் நல்ல பணியில் இருந்தபோதிலும் எனக்கு அது நிறைவைத் தரவில்லை. பெரிய எழுத்தாளன் ஆக வேண்டும்... அதுதான் என் கனவாக, லட்சியமாக இருந்தது.

அதை அந்தப் பெண்மணி அப்படியே கூறினாள். இதை சில பகுத்தறிவுவாதிகளிடம் கூறினால், இதற்கு பேர்

'ஃபேஸ் ரீடிங்' (Face Reading) என்பார்கள். 60 வயதுக்கு மேலான ஒரு கிராமத்துப் பெண்ணுக்கு அது எந்தளவு சாத்தியம் என்பதெல்லாம் மில்லியன் டாலர் கேள்வியாகும்.

அந்தப் பெண்மணியோ 'எண்ணி எட்டு நாள்ல நல்ல சேதி வரும். நீ எழுதப்போற எழுத்தால மலை உச்சியை மவராசன் நீ தொடுவே...' என்றாள். நான் அவ்வளவு சுலபத்தில் அதை ஒப்புக்கொள்ளவில்லை. 'நடக்காட்டா என்ன பண்ணட்டும்?' என்று திருப்பி கேட்டேன்.

'நீ ஒண்ணும் இப்ப எனக்கு காசு தராதே... நடந்துட்டா நான் உன்னைப் பாத்து கேட்பேன். நீயும் தருவே! மதுரைக்காரன் உன்னை மதுரை தெருவுலேயே பாத்து வாங்கிக்கறேன். நீ கிளம்பு. உனக்கு எழுத வாய்ப்பு தரப்போறவனும் அதோ அந்த முருகன்தான்...' என்றாள்.

அதை நான் பாதி எடுத்துக் கொண்டேன்.

பாதி பொருட்படுத்தவில்லை. சக்திவேல் திரும்பி வந்து 'என்ன சௌந்தர்? என்ன புளுகினிச்சி...?' என்று கேட்டபோது 'அது ஒரு விஷயம் சொல்லியிருக்கு. நடக்குதா பார்ப்போம். அதுவும் எட்டு நாளைக்குள்ள' என்றேன்.

அம்மட்டில் அந்த வருட திருச்செந்தூர் பாதயாத்திரை முடிந்து வீடு திரும்பிய நான், அந்த ஜோசியக்காரி சொன்னதை எல்லாம் மறந்தே போனேன்.

ஒரு வாரமும் ஓடிவிட்டது.

எட்டாவது நாள்... 'ஆனந்த விகடன்' ஆசிரியர் திரு.பாலசுப்ரமணியனிடம் இருந்து எனக்கு கடிதம் ஒன்று வந்தது. நான் ஒரு கதைச் சுருக்கத்தை விகடனுக்கு

அனுப்பியிருந்தேன். வெகுநாள் ஆனதால் அதை நான் மறந்து விட்டேன். அதற்குத்தான் பதில் எழுதியிருந்தார்.

அந்தச் சுருக்கம் பிடித்திருப்பதாகவும் மேலும் சில விஷயங்களை அத்துடன் சேர்த்து தொடரை வெளியிட விரும்புவதால் கதை விவாதம் புரிய நேரில் வரச் சொல்லியிருந்தார். எனக்கு ஜிவ்வென்று வானில் ஏறியதுபோல் இருந்தது.

அந்த குச்சி ஜோசியக்காரி கூறியது பலித்து விட்டதே!

நான் தாமதம் செய்யாமல் அன்று இரவே திருவள்ளுவர் பேருந்தில் நூற்றி பதினெட்டு ரூபாய் டிக்கெட்டில் சென்னை பயணமானேன். பஸ்ஸில் இரவெல்லாம் தூக்கமே வரவில்லை. 'ஆனந்த விகடன்' என் வரையில் ஒரு பிரமிப்பூட்டும் வாரஇதழ்!

அதில் ஒரு கடிதம் பிரசுரமானால் அதையே பலர் ஜென்ம சாபல்யமாக எண்ணியதைப் பார்த்திருக்கிறேன்.

அப்படி ஓர் இதழில் தொடர் எழுதும் வாய்ப்பு.

'ஆசிரியர் எப்படி இருப்பார்...? எப்படிப் பழகுவார்...? பெரிய எழுத்தாளர்களை மதிப்பது போல மதிப்பாரா?' இப்படி பலவித கேள்விகளுடன் காலை 10 மணிக்கு அவர் அலுவலகத்தில் இருந்தேன்.

அப்போது நம்பியார் என்று ஒருவர் இருந்தார். என் முகத்தை பார்த்த உடனேயே ''நீங்கள்தானே இந்திரா சௌந்தர்ராஜன்?'' என்று கேட்டு ஆசிரியரிடம் அழைத்துச் சென்றார்.

ஆசிரியர் அவர்கள் நல்ல சிகப்பு. வெற்றிலைப் போட்டு சிவந்த இதழ்கள். நெற்றி மையத்தில் ஒரு சிறு பொட்டு. என்னை அன்புடன் விசாரித்தார். பின் கதைக்கு வந்தார். அருமையான சில கருத்துக்களை கூறினார். கெட்டியாகப்

பிடித்துக்கொண்டேன். 'ஊருக்குப் போய் முதல் சில அத்தியாயங்களை எழுதி அனுப்புங்கள். நான் படித்துவிட்டு பிறகு முடிவு செய்கிறேன்' என்றார்.

'நான் ஊருக்கு எதற்கு... இன்று இங்கேயே எழுதித் தந்துவிடுகிறேன்' என்று துடித்தேன்.

'அவசரம் வேண்டாம். போய் ஆறஅமர எழுதி அனுப்புங்கள்' என்றார்.

ஆனாலும் என் துடிப்பை அடக்க முடியாமல், மறுநாள் காலை மதுரை வந்து, அன்று இரவே மூன்று அத்தியாயங்களையும் எழுதி அவருக்கு அனுப்பி விட்டேன். ஒரு வாரத்தில் அவரிடம் இருந்து தொடர் தேர்வு செய்யப்பட்டு விட்ட தகவலும், அதைத் தொடர்ந்து வந்த வாரத்தில் விகடனில் விளம்பரமும் வந்துவிட்டது.

நான் நிஜமாலுமே வானில் மிதந்தேன். 1990 ம் வருடம் சித்திரை வருடப் பிறப்பில் வெளியான 'விகடன்' இதழில் தொடங்கிய அந்தத் தொடர்தான் 'கோட்டை புரத்து வீடு'.

என் எழுத்துலக வாழ்க்கைக்கே அஸ்திவாரமாக அமைந்தது. எனது கனவும் ஈடேறியது. 'விகடன்' ஆசிரியர் அவர்கள் அந்தத் தொடரை அவ்வளவு, அருமையாக வெளியிட்டார். கதைப்போக்கில் எனக்கு நிரம்பவே சுதந்திரம் அளித்த அவர் முக்கியமான கட்டங்களில் நிறைய ஆலோசனைகளையும் வழங்கினார்.

எப்படியோ திருச்செந்தூர் பாதயாத்திரையின் பயனாக, அந்த குச்சி ஜோசியக்காரி கூறியதுபோலவே, நான் விரும்பியபடியே பெரிய எழுத்தாளன் ஆகிவிட்டேன்.

அந்த தொடர் வந்து கொண்டிருந்த ஒரு வாரத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குப் போய்விட்டு வீதி வழியாக வரும்போது எதிரில் அதே பெண்மணி!

ஒரு ஆச்சரியம் என்னவென்றால் என்னை அந்தப் பெண்மணிக்கு நினைவில்லை. நான்தான் ஞாபகப்படுத்தினேன். அப்போது அந்த ஜோசியக்காரியும் ஒரு உண்மையைச் சொன்னாள், 'நான் ஜோசியம் சொல்லும்போது, நான் எங்கே தம்பி பேசறேன்? அந்த ஜக்கம்மால்ல பேசறா... அதான் எனக்கு உன்னை அடையாளம் தெரியலை. அப்படியே அவ வாக்கு உன் வரையில் பலிச்சிச்சுதானே?' என்று கேட்க, 'ஆஹா... உனக்கும் என் நன்றி' என்ற நான், அப்போதைக்கு பாக்கெட்டில் கிடந்த ஒரு ஐம்பது ரூபாயை எடுத்து நீட்டினேன்.

'நல்லா இரு மவராசா... இன்னிக்கு மதுரை வந்த இடத்துல யாருமே எனக்கு ஜோசியம் பாக்க கிடைக்கல. பொழப்புக்கு குந்தகம் வந்துடுச்சே... ஆத்தா மீனாட்சி உன் ரூபத்ல நான் பட்டினி கிடக்கவா' ன்னு இப்பதான் கோபுரத்தைப் பார்த்து கேட்டேன். நீ எதிர்ல வந்து காசைக் கொடுத்துட்டே இந்த மண்ணுல ஒழுக்கமா இருக்கற யாரும் கஷ்டப்பட மாட்டாங்கய்யா... தப்புப் பண்ணாலும் வெளங்க மாட்டாங்க. காப்பாத்த மீனாட்சின்னா, அழிக்கறதுக்கு என் தாய் கண்ணகி இருக்காளே...' என்றாள்.

அவள் சாதாரணமாகத்தான் கூறினாள். ஆனால் அதில் அற்புதமான உட்பொருள்! இந்த அனுபவம் என்னை பலவாறு சிந்திக்க வைத்தது. 'வாழ்க்கை என்றால் என்ன?' என்று ஒரு சீடன் தன் குருவிடம் கேட்டானாம். 'நம்மை மீறி பிறக்கிறோம். பிறந்து விட்டதாலேயே வளர்கிறோம். வளர்வதில் ஒரு எல்லை இருக்கிறது. அந்த எல்லையைத் தொடும்போது முடிந்து விடுகிறது. இந்த விஷயங்கள் ஒரு வட்டம் போன்றவை. இந்த வட்டம்தான் வாழ்க்கை' என்றாராம் குரு.

'திட்டமிடாத பிறப்பு-அது போகிற போக்கில் போக்கு-எப்பொழுது முடியும் என்பது தெரியாத இறப்பு-இதில் என்ன அர்த்தம் இருக்கிறது' என்று சீடன் அடுத்த கேள்வி கேட்டானாம். 'அதைத் தெரிந்து கொள்ள முயல்வதில்தான் வாழ்க்கையின் அர்த்தம் இருக்கிறது' என்று ஒரு பதிலை குரு சொன்னபோது அதற்கு பிறகு அவன் கேள்வி கேட்கவில்லை.

எனது யாத்திரை அனுபவங்களும் தெரிந்து கொள்ள முயலும் ஒன்றுதான்... அதில் எனக்குக் கிடைத்த விடை என்பது 'நம்முடைய வாழ்க்கை ஏற்கனவே திட்டமிட்ட ஒன்று... தண்டவாளத்தின் மீது செல்லும் ரயில் எப்படி விலகி ஓட முடியாதோ... அப்படி ஒவ்வொருவர் வாழ்வும் அவரவர் விதி எனும் தண்டவாளத்தின் மீது விலகாமல் ஓடியபடி உள்ளது. அப்படி இல்லாவிட்டால் எப்படி முன்கூட்டியே நாளைய தினம் இப்படி எல்லாம் நடக்கும் என்று துல்லியமாக கூற முடியும்?

செந்தூர் யாத்திரை அனுபவம் இப்படியென்றால் எனது சபரிமலை யாத்திரை அனுபவம் மிக மிக விசேஷமானது.

இப்பொழுது நினைத்தாலும் புல்லரிக்கும் அனுபவம் அது...

5. ஐயப்பன் எனக்கு திருப்பி அளித்த ராசிமாலை!

பாதயாத்திரை அனுபவங்களில் சபரிமலை அனுபவம் எனக்கு மிகுந்த சிலிர்ப்பைத் தரும் ஒரு அனுபவமாகும். ஆனால் பலகாலமாக நான் சபரிமலை விஷயத்தில் ஒருவித வெறுப்புடன் இருந்தேன்! என்றால் அது ஆச்சரியமாக இருக்கும்.

எனது வெறுப்புக்கான காரணங்களைச் சொன்னால்தான் எல்லோருக்கும் அதற்கான காரணம் புரியும்.

நான் பள்ளி மாணவனாக இருந்த போதெல்லாம் இன்று இருப்பது போல சபரிமலைக்குச் செல்ல மாலை போடுவது, இருமுடி கட்டுவது என்பது எல்லாம் கிடையாது.

அதாவது 1965-70ம் வருடங்களைச் சொல்கிறேன்.

அப்போது சபரிமலைக்கு ஊருக்கு ஒருவர் மாலை போட்டு போய் வந்தால் அதுவே மிகப்பெரிய விஷயமாகும். ஏனென்றால் அது அவ்வளவு அடர்வான மலை... ''சிங்கம், புலி, யானைகள்'' என்று மிருக நடமாட்டம் மிக அதிகம். விரதத்திலும், பக்தியிலும் சிறு குறை இருந்தாலும் உயிரோடு போய்விட்டு திரும்பி வர முடியாது... இப்படி சபரிமலை குறித்து ஒருவித பயமும் பிரமிப்பும்தான் எங்களிடம் இருந்தது.

இதெல்லாம் 1975களில் மெல்லத் தளர்ந்து, 1980களில் இருந்து கூட்டம், கூட்டமாக சபரிமலை செல்வது என்பது ஒரு வழக்கமாகிவிட்டது.

அத்துடன் சபரிமலைக்கு, மாலை போட்ட உடனேயே ஒரு குப்பை கூட்டுபவன் கூட 'சாமி' என அழைக்கப்படுவதால் அந்த மதிப்பு ருசி ஒருபுறம்... மேலும் அவர்களைப் பார்த்து மரியாதையோடு ஒதுங்கி கும்பிடுவது, வழிவிடுவது போன்ற விஷயங்கள் எல்லாம் மிகவும் சராசரிகளாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு அதெல்லாமே பெரிய விஷயமாக தோன்றியது ஒரு காரணம். அப்புறம் குடும்பமே சேர்ந்து வழி அனுப்பும் அந்த குதூகலம்... மலை ஏறிவிட்டு திரும்பி வரும்போது ஒரு பெருமிதம் வேறு... இப்படி பல காரணங்கள்! ஒரு கோணத்தில் இது ஒரு மிகச்சிறந்த விஷயம்... அதே சமயம் பல போலிகள் பக்தி என்றால் என்னவென்றே

தெரியாதவர்கள்-ஊரை ஏமாற்றப் போடும் ஒரு வேஷமாகவும் இது இருந்ததையும் நான் கவனித்தேன்.

எப்பொழுதும் குடி, கூத்து, களவு என்று இருக்கும் ஒருவன் மாலை போட்ட நொடி யோக்யனாகி விட்டான் என்பதை என்னால் ஏற்க முடியவில்லை... அவனை ஐயப்பன் பொருட்டு சாமி என்று அழைக்கவும் மனமில்லை எனக்கு.

இதனால் மாலை அணிந்தவர்களை பார்த்தாலே ஒரு மெல்லிய கோபம்... அவர்கள் முறையாக விரதம் இருக்கின்றார்களா? என்கிற கவலை இப்படி நான் ஒரு பாதிப்புக்கு உள்ளாகி இவர்களின் பொருட்டு அந்த ஐயப்பனையும் தூர வைத்தேன்.

அனைத்துக்கும் மேலாக நான் பத்திரிகை வாயிலாக அறிய நேர்ந்த சில செய்திகள் மேலும் என் தீவிரத்தைக் கூட்டின. குறிப்பாக லட்சக்கணக்கில் சபரிமலைக்குச் செல்பவர்களால் அந்த வனமே பாழாகி வருவதாகவும், புனிதமான பம்பை ஆற்றில் ஒரு அவுன்ஸ் தண்ணீரில் ஏராளமான மலத்துணுக்குகள் இருந்தது ஓர் ஆய்வில் தெரிய வந்ததாகவும் நான் செய்திகளை வாசித்தபோது எனது கோபம்தான் அதிகரித்தது.

ஒரு காடே பாழாகிறதே... இந்த மனிதன் இன்னும் எதையெதை எல்லாம் தன் சுயநலத்தின் பொருட்டு அழிக்கப் போகின்றானோ? என்றெல்லாம் என்னுள் கேள்விகள்...

ஏனென்றால் நான் இயற்கையை மிக விரும்பும் ஒருவன். ஒரு விவசாயியாக கடவுள் என்னைப் படைக்காமல் போய்விட்டானே என வருந்தும் ஒருவன். இன்றும் நூற்றுக்கணக்கான செடி, கொடிகளுக்கு நடுவில்தான் நான் வாழ்ந்து வருகிறேன்.

இப்படி மாறுபட்ட கருத்துக்கள் சபரிமலை விஷயத்தில் என்னுள் இருந்தது. இதெல்லாம் ஒருவித நல்ல நோக்கம் கருதி ஏற்பட்ட கோபமாகும்.

ஆனால் இதில் பெரிய அளவில் அர்த்தமில்லை என்பதை நான் ஒரு முதிய சபரிமலை யாத்திரைக்காரர் ஒருவர் மூலம் உணர்ந்தேன்.

அவர் 60 தடவைக்கு மேல் சபரிமலைக்குப் போய் வந்தவர். முறையாக விரதம் இருந்து போய் வந்தவர் என்பது மிக முக்கியம்.

புதர் போல தாடி மீசை, கறுப்பு வேட்டி, சட்டை, வெறுந்தரையில்தான் படுக்கை, செருப்பை அவர் மலைக்குப் போகும்போது மட்டுமல்ல, எப்பொழுதுமே போடுவதில்லை. தினமும் மூன்று முறை குளித்து 108 முறை தவறாமல் சரணம் சொல்லி ஒருவேளை நல்ல சாப்பாடு (இதில் வெங்காயம், பூண்டுக்கு இடமில்லை) ஒரு வேளைக் கஞ்சி மட்டுமே என்று 48 நாட்கள் விரதமிருந்து 60 முறை சபரிமலைக்குப் போய் வந்தவர். எனவே இவரை நான் மிக மதித்தேன். இவரிடம் 'உங்களுக்கு சரியாக நேற்று மாலை போட்டவர்கள் எல்லாம் வருவது எனக்கு மிகவும் சங்கடமாக உள்ளது' என்றேன்.

'அப்படிச் சொல்லாதீர்கள். காலம் நிறைய மாறி வருகிறது. அப்படி அது மாறும் போது சில நல்ல விஷயங்களும் மாறத்தான் செய்யும். ஆன்மீகத்தைப் பொருத்தவரை போலியாக அதில் ஈடுபட்டாலும் அதற்கென்று ஒரு நன்மை கிடைக்கவே செய்யும். இன்று அசிரத்தையாக ஐயப்ப விரதம் மேற்கொள்பவர்கள் காலப்போக்கில் நிச்சயம் மாறி விடுவார்கள். அந்த ஐயப்பனே அவர்களுக்கு அந்த புத்தியை தருவான். அடுத்த வருடம் முழுக்க தவறு செய்யும் ஒருவன் குறைந்தபட்சம்

இந்த மாலை போட்ட காலத்திலாவது கணிசமாக தன் தவறுகளைக் குறைத்து கொள்வது நல்ல விஷயம்தானே? இன்றுள்ள விஞ்ஞானச் சூழலில் இப்படி ஒரு அமைப்பு முறை இல்லாவிட்டால் இவர்கள் எல்லாம் என்னாவார்கள்? எனவே சபரிமலை விஷயத்தில் தவறு நடப்பதாக நீங்கள் அநாவசியமாக கவலைப்படாதீர்கள். ஐயப்பனை மீறி ஒருவர் அங்கே தவறு செய்ய முடியாது. சின்னச் சின்ன விரதக் கோளாறுகளை ஐயப்பன் மன்னித்து விடுகின்றான் என்பதே உண்மை.

அதே சமயம் ஒரு வரம்புக்கு மேல் போய் தவறு செய்கின்றவர்களை அவன் விடுவதும் இல்லை. அதெல்லாம் வெளியே தெரியாது. என் அனுபவத்தில் பக்திக்கு தகுந்த வரம் அவனிடம் கிட்டுகிறது.

இந்த 60 வருட யாத்திரை அனுபவத்தில் நான் மிகவே மனப்பக்குவம் அடைந்துள்ளேன். எந்த ஒரு சிறு எதிர்பார்ப்பும் இன்றி பிறருக்கு உதவ என்னால் முடிகிறது. யாராவது ஒருவர் தவறாக நடந்தால் அதற்கு காரணம் எனக்குப் புரிகிறது.

அனைத்துக்கும் மேலாக உற்ற தருணங்களில் ஐயப்பன் கை கொடுத்து உதவவும் தவறுவதில்லை' என்று ஒரு பிரசங்கம் நிகழ்த்தியவர் என்னைப் பார்த்து, 'மெய்யான பக்தியோடு ஒருமுறை போய் வாருங்கள். உங்களுக்கும் புரியும்' என்றார்.

அதற்கு ஏற்ப என் சகோதரனும், அவனது நண்பர்களும் மாலை போட்டுக்கொண்டிருந்த நிலையில் மதுரை வழியாக குமுளி, வண்டிப் பெரியார் வழியாக சபரிமலை செல்ல முடிவு செய்து 'முடிந்தால் நீயும் வா' என்று என்னை அழைத்தனர்.

நானும் 'சரி' என்று மாலை போட்டுக் கொள்ள முடிவு செய்தேன். மதுரையில் உள்ள ஒரு ஐயப்பன் ஆலயத்துக்குச் சென்று வழக்கமாக திருப்பதி, பழனி, திருச்செந்தூருக்குப் போகும்போது நான் அணியும் மாலையையே ஐயப்பன் சன்னதியில் வைத்து அணிந்து கொண்டேன்.

அப்படியின்றி ஐயப்பனுக்கென பிரத்யேக மாலையை குருசாமி ஒருவர் மூலமாக போட்டுக் கொள்ள வேண்டும் என்பதே ஆசார விதி. அது தெரிந்திருந்தும் நான் ஐயப்பன்தான் என் குருசாமி என்று மனதில் வரித்துக் கொண்டு மாலையும் போட்டுக் கொண்டேன்.

மலைக்குச் செல்லும் நாளும் வந்தது. மதுரையில் உள்ள எனது வீட்டில் எல்லோரும் கூட பெரிய அளவில் பஜனை எல்லாம் செய்து இருமுடி கட்டிக்கொண்டு மலைக்கும் பயணமானோம்.

காரில்தான் பயணம்!

மதியம் ஒரு மணிக்கு கிளம்பிய நாங்கள் இரவு 7 மணிக்கெல்லாம் பம்பையை அடைந்து விட்டோம். பம்பை ஆற்றை முதல் தடவையாக பார்க்கிறேன். ஒரே பரவசம் எனக்கு...

அங்கே ஒரு குளியலும் போட்டோம்.

அப்போதுதான் எனக்கான சோதனையும் ஆரம்பம் ஆனது. ஆற்றில் இடுப்பளவு தண்ணீர்தான் இருந்தது. குளித்து விட்டு மேலேறி வந்து பார்க்கும்போது என் கழுத்தில் அணிந்திருந்த அந்த மாலையைக் காணவில்லை. குளிக்கும்போது எப்படியோ கழன்று விழுந்து விட்டது. பகீரென்றது...

மாலை விலை சொற்பம்தான்.... ஆனால் அதை அணிந்து கொண்டுதான் கிட்டத்தட்ட 15 யாத்திரைகளை நான்

செய்திருந்தேன். அப்படி ஒரு ராசியான மாலை போய்விட்டதே என்கிற வருத்தம்.

எனது சகோதரனும் உடனேயே மாற்று ஏற்பாடாக பம்பைக் கரையில் ஒரு மணிமாலையை வாங்கி, வந்திருப்பவர்களில் மிக அதிக தடவை சபரிமலைக்கு சென்று வந்த ஒருவர் கையால் அதை எனக்கு அணிவிக்கவும் செய்தான்.

எனக்கு மிகமிக வருத்தமாக இருந்தது. அந்த உணர்வுடன் நான் மலை ஏறினேன். நண்பர்களும் 'ஐயப்பன்தான் உங்கள் மாலையை விலக்கி, புதிய மாலையை போட வைத்தவன்' என்பது போல பேசியபடி வந்தனர். மலையிலும் மிக அருமையாக தரிசனம் கிட்டியது. ஒரு குறையும் இல்லை. மாலை என்னை விட்டுப் போன அந்த சம்பவம் மட்டும் ஒரு குறைபாடாக மனதை உறுத்திக் கொண்டே இருந்தது.

அதே உணர்வுடன் திரும்ப கீழ் இறங்கினோம். இறங்கிய களைப்பு தீர திரும்ப ஒருமுறை பம்பையில் குளித்தால் என்ன! என்று எல்லோருக்கும் தோன்றவே குளிக்கச் சென்றோம்.

நான் கவனமாக மாலையைப் பற்றியபடியே முழுக்கு போட்டேன். அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக நீந்திக் குளித்துவிட்டு கரையேறும்போது காலில் ஏதோ ஒன்று சிக்கிக்கொண்டது போல இருந்தது. குனிந்து பார்த்தபோது உடம்பு சிலிர்த்து போனது, முதல் நாள் இரவு என் கழுத்தில் இருந்து கழன்று விழுந்த அதே மாலை!

வேகமாக எடுத்து முதல் காரியமாக என் கழுத்தில் அணிந்து கொண்டேன். அந்த நொடியே ஐயப்பனின் திருவிளையாட்டையும் புரிந்து கொண்டேன். அவன் என்

மாலையை தாழ்வாகக் கருதவில்லை. அதனால்தான் அது எனக்கு திரும்பக் கிடைத்தது. அதுவும் சதாசர்வ காலமும் ஓடியபடி இருக்கும் ஆற்றில்... 'இப்படி ஒரு சம்பவம் நடந்திராவிட்டால் நான் எப்படி ஐயப்பன் அனைத்தையும் கவனித்தபடியே இருக்கிறான்' என்பதை உணர முடியும்?

6. பிரார்த்தனையைப் பலிதமாக்கும் மஹானின் தரிசனம்!

எனது யாத்திரை அனுபவங்களில் நான் அடிக்கடி நினைத்து மகிழ்வது என்பது காஞ்சி பெரியவருடனான எனது ஓர் அனுபவத்தைத் தான்.

ஆன்மிகப் பெரியவர்களில் என் மனதுக்குள் நீக்கமற நிரம்பி வழிபவர் காஞ்சிப் பெரியவர். அவர் என் வரையில் ஒரு சன்னியாசி மட்டுமில்லை... அவரை நான் நடமாடும் தெய்வமாகவே கருதுகிறேன். புராணங்கள் வாயிலாக நாம் எவ்வளவோ சான்றோர்களைப் பற்றி கேள்விப் படுகிறோம். சமீப காலத்தில் நாம் பார்க்க முடிந்த தூரத்தில் ஆன்மிகத்தில் இறைவனுக்கு அருகில் நிறுத்திப் பார்க்கப்பட்டவர்கள் முதலில் அருணகிரிநாதர், பின்னர் பட்டினத்தார், அதற்குப் பிறகு இராமலிங்க வள்ளலார் ஆவர்.

இவர்களுக்குப் பிறகு 20ஆம் நூற்றாண்டில் இந்த உலகம் கண்ட உத்தமர்களில் காந்தியைத் தொடர்ந்து வருபவர், நமது மகாப் பெரியவர் ஆவார்.

காந்தியார் தேசத் தந்தையாகப் பார்க்கப் படுகிறார்.

திறந்த புத்தகம் போல தன் வாழ்க்கையை நடத்தியவர். 'என் வாழ்க்கையே இந்த சமுதாயத்துக்கான செய்தி ஆகும்' என்று 'சத்திய சோதனை' என்னும் தலைப்பில் அவர் தன் சுயசரிதையையும் எழுதி வெளியிட்டார்.

அனேகமாக பைபிளுக்குப் பிறகு உலகின் அனைத்து மொழிகளிலும் வந்திருக்கும் ஒரு புத்தகமாக 'சத்திய சோதனை' யை சொல்லலாம்.

காந்தியார் சமுதாய நலனுக்காக ஒரு சமுதாய சிந்தனையாளராக சாதித்ததை, நம்முடைய மகாப் பெரியவர் அவர்கள் ஆன்மிக வழியில் சென்று சாதித்ததாகவே நான் கருதுகிறேன்.

நாம் வாழும் காலத்தில் இப்படி இரு மகாத்மாக்கள் நம்மிடையே வாழ்ந்தது உண்மையில் நாம் செய்த பேறு ஆகும்.

அதிலும் நம்முடைய மகா பெரியவர் போல ஒரு மாசற்ற வேத வாழ்க்கை வாழ்ந்தவர்களை நாம் விளக்கு வைத்துத் தேடினாலும் கண்டறிய முடியாது. காந்தியாரின் சமுதாயக் கருத்துக்களில் கூட சில பிழைகளை அல்லது கருத்து மாறுபாடுகளைச் சிலர் கூறிடுவார்கள். இஸ்லாமியர்களோடு காந்தியார் உடன்பட்டு செல்ல விரும்பியதை - விரும்பாதவர்கள் பலர் உண்டு. ஆனால் மகாப்பெரியவரை ஒரு கடுமையான நாத்திகன்கூட வெறுத்ததில்லை என்பதே நிதர்சனம். அதற்கு நிறைய சான்றுகளும் உள்ளன.

ஒருமுறை காஞ்சியில் அவரது திருமடத்துக்கு முன்பாகவே பெரியார் சிலையை வைக்க வேண்டும் என்று பெரியார் அன்பர்கள் தீர்மானித்தனர். அவ்வாறே செய்தும் காட்டினர். இதற்கு ஆன்மிக உலகில் பரவலாக எதிர்ப்பு

கிளம்பியபோது பெரியவர் மட்டும் எதுவும் கூறவில்லை. மாறாக தன் மடத்துக்கு எதிரிலேயே கடவுள் மறுப்பாளர் ஒருவர் சிலை நிறுவப்படுகிறது என்றால் கடவுள் உண்டு என்று கூறிடும் தனக்கு மிகுதியான கடப்பாடு இருப்பதாகத் தான் பொருள். 'தான் சோர்ந்து விடாமல் கடமையாற்ற அந்த சிலை காரணமாக இருக்கும்' என்று கூறினாராம்.

இதைக் கேள்விப்பட்ட அந்த அன்பர்களும் கூட 'எங்களுக்கு கொள்கை ரீதியாகத்தான் பெரியவரிடம் பேதம். தனிப்பட்ட முறையில் அவரது அமைதி, அடக்கம், உண்மை ஆகியவற்றை நாங்கள் வெகுவாக மதிக்கிறோம்' என்றார்களாம். இப்படி மாறுபட்ட கருத்து உடையவர்களும் மெச்சிய பெருமைக்குரியவர் நமது பெரியவர்.

1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்தான் நான் பெரியவரை என் கண்ணார தரிசனம் செய்தேன். அதற்கு முன்பு அவர் எனக்குள் நிரம்பி வழிந்தது 'தெய்வத்தின் குரல்' என்னும் அவரது புத்தகம் மூலமாகத்தான்.

அந்த நாட்களில் என் வீட்டில் தவறாமல் வாங்கப்படுகிற ஒரு புத்தகம் உண்டென்றால் அது 'கல்கி'தான். அதில் 'தெய்வத்தின் குரல்' என்னும் பெயரில் ஒரு அரைப்பக்க அளவுக்கு பெரியவரின் கருத்துக்கள் இன்றும் வந்த வண்ணம் உள்ளது.

அந்த அரைப்பக்கம்தான் என்னை வெகுவாகப் பாதித்தது.

இன்று ஒவ்வொரு ஹிந்துவுக்குள்ளும் எவ்வளவோ கேள்விகள்... சந்தேகங்கள்...! அவைகளுக்கு பொட்டில் அடித்த மாதிரி ஒரு பதிலைக் கூறிடும் சான்றோர்கள் இன்று நம்மிடையே இல்லை என்றுதான் கூற வேண்டும்.

உதாரணமாக, 'நெற்றியில் பெண்கள் ஏன் குங்குமம் வைத்துக் கொள்கின்றனர்?' 'ஆண்கள் ஏன் விபூதி தரிக்கின்றனர்?' 'பஞ்ச கச்சம் கட்டிக்கொள்வது எதனால்?' 'ஏன் ஏகாதசி அன்று விரதம் இருக்க வேண்டும்?', 'எதற்காக தலை முடியை இறைவனுக்குப் போய் காணிக்கையாக கொடுக்கின்றோம்?'

இப்படி எண்ணற்ற கேள்விகள்! எல்லாவற்றுக்கும் விஞ்ஞான பூர்வமாகவே விடை உள்ளது. ஆனால் அரைகுறையாக புரிந்து கொண்டு பதில் சொல்பவர்களே நம்மிடம் உள்ளனர். ஆனால் பெரியவர் இந்த மாதிரி கேள்விகளுக்கு மட்டுமில்லை... வாழ்வில் எழும் எண்ணற்ற சந்தேகங்களுக்கு மிக எளிய முறையில் பதில் கூறியுள்ளார். அவ்வளவு பதில்களும் அவரது அரைப்பக்க 'தெய்வத்தின் குரல்' பகுதி வாயிலாகவே எனக்கும் கிடைத்து வந்தது.

அதனால் எனக்கு நம்முடைய சாஸ்திர சம்பிரதாயங்களின் மீது பெரிய நம்பிக்கையும், பிடிப்பும் ஏற்பட்டது. ஒரு சராசரி மனிதனாக இருந்துகொண்டே சாஸ்திர சம்பிரதாயங்களை மதித்து நடந்து எந்தவித பெரிய தவமும், வேள்வியும் இன்றியே இறைவனின் பரிபூரண கருணையைப் பெற்றுவிட முடியும்! என்பதை அவர்தான் அழுத்தமாக எனக்கு உணர்த்தியவர். இதனால் அவர் எனது மானசீக குருநாதர் ஆகிப் போனார். மெல்ல, மெல்ல நான் அவரால் ஈர்க்கப் பட்டேன். அவர் பற்றி பலர் மூலமாக நிறைய அனுபவங்களையும் கேள்விப்பட்டேன். இதன் காரணமாக பெரியவரை தரிசிக்க வேண்டும் என்கிற ஒரு விருப்பம் மொட்டு மலர்வது போல என்னுள் மலர ஆரம்பித்தது. அது நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டே போனது. ஆனால் வேளைதான் வரவில்லை.

நமது வாழ்வில் ஆத்மார்த்தமாக நாம் ஆசைப்படும் விருப்பங்கள் ஈடேறியே தீரும் என்று உளவியல் அறிஞர்கள் கூறியதை நான் அறிந்திருக்கிறேன். எனது ஆசையும் ஆத்மார்த்தமான ஒரு விருப்பமே... நான் ஒரு நடிகனையோ, நடிகையையோ மோக வயப்பட்டு கண்டு பேச விரும்பவில்லை.

பெரியவர் ஒரு தவயோகி. அவரைத்தான் தரிசிக்க என் மனது ஆசைப்பட்டது. எனது ஆசையும் பின்னர் ஈடேறியது. அது ஈடேறிய விதம்தான் அலாதியானது, ஆச்சரியமூட்டுவதும்கூட.

1993 ல் ஒரு மார்கழி மாதத்தில் திடும்மென்று என்னை டைஃபாய்டு ஜுரம் ஆட்கொண்டது. காய்ச்சல் உடம்பை நெட்டி முறித்திட்ட நிலையில் படுத்த படுக்கையாகக் கிடந்தேன். அதே சமயம் வெளியே புயல் மழை! பருவம் கெட்டுப் பெய்த பெருமழையால் எங்கு பார்த்தாலும் வெள்ளம். இந்த மழையின் தாக்கம் வேறு சேர்ந்து கொண்டது. இப்படி ஒரு நாளில்தான் திடீரென்று பெரிய வரைத் தரிசிக்கும் ஓர் எண்ணம் என்னுள் மூண்டது. வெளியே மழை... உள்ளே காய்ச்சல்... அதுவும் டைஃபாய்டு காய்ச்சல்! இதுவா பெரிய வரை தரிசிக்கும் நேரம்! நான் என் விருப்பத்தை என் மனைவியிடம் வெளிப்படுத்திய போது மனைவி பதறி விட்டாள்.

'உங்களுக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு... சாதாரண ஜுரம்னாலும் பரவாயில்லை. டைஃபாய்டு ஜுரம். இதுல போய் காஞ்சிபுரம் போகலாம்னா என்ன அர்த்தம்?' என்று என்னை உலுக்கி விட்டாள். ஆனாலும் நான் அசரவில்லை. எனக்கென்னவோ பெரியவரைப் பார்த்தால் என் உடல்நலம் சரியாகிவிடும் என்று

உள்ளுணர்வு சொல்கிறது. அடுத்து, ஆபீசில் லீவு கிடைப்பதும் இனி கஷ்டம். இந்த லீவிலேயே நான் பெரியவரை தரிசனம் செய்து வருவதுதான் புத்திசாலித்தனம் என்று என் மனைவியிடம் மல்லுக்கு நின்று இறுதியில் ஜெயித்தேன். அவளும் அரைமனதாக மாத்திரை மருந்துகளுடன் எனக்கு பெரிய ஸ்வெட்டர் எல்லாம் அணிவித்த நிலையில் கிளம்பத் தயாரானாள். அப்போது என் மகளுக்கு 4 வயது. அவளையும் அழைத்துக்கொண்டு புறப்படத் தயாரானோம். இவ்வேளையில் என்னோடு டி.வி.எஸ். நிறுவனத்தில் பணியாற்றி வரும் திரு.ராஜப்பா என்னும் நண்பர் யதார்த்தமாக என்னைப் பார்க்க வந்திருந்தார். அவரும் எனது காஞ்சி யாத்திரையை அறிந்து தானும் தன் மனைவியும் வருவதாகக் கூறினார். சொன்னவர் சொன்னது போலவே அவரது மனைவியை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்.

நாங்கள் மொத்தம் ஆறு பேர்! நான், என் மனைவி, என் மகள், என் தாய் என்று நாங்கள் நான்கு பேர். பின் நண்பர் ராஜப்பா, அவர் மனைவி உமா.

வெளியே மழை திரும்ப ஆரம்பித்துவிட்டது. என் உடல்நிலையிலும் சற்று டெம்பரேச்சர் எகிற ஆரம்பித்தது. என் மனைவி திரும்பவும் 'இப்பொழுது வேண்டாமே' என்னும் பல்லவியை பாடத்தொடங்கினாள். ஆனால் என் மன உறுதியோ துளிகூட குறையவில்லை. முன்வைத்த காலை பின் வைப்பதில்லை, என்பதில் உறுதியாக இருந்தேன். அதன்பின் தான் அதிசயங்களும் நடக்க ஆரம்பித்தன.

ஒரு ஆட்டோவை அழைத்து வரலாம் என்பதற்காக புறப்பட்ட நண்பர் ராஜப்பா ஓடிவந்தார். எங்கள் தெரு வழியாக செல்லும் டவுன் பஸ் என் வீட்டு வாசலிலேயே

நின்று கொண்டிருந்ததுதான் காரணம். ஓடிப்போய் அவ்வளவு பேரும் துளியும் மழையில் நனையாமல் பஸ்ஸில் ஏறி அமர்ந்தோம். எனக்கு ஆச்சரியம். அந்த பஸ் ஸ்டாப்பைத் தவிர எங்கும் நிற்காது. அந்த டிரைவர் வீட்டு வாசலில் பஸ்ஸைப் போட்டுக் கொண்டு என்ஜினை ட்யூன் செய்தபடி இருந்தது எங்களுக்கு வசதியாகிவிட்டது. அடுத்து, டவுன் பஸ் எங்களை மதுரை பெரியார் பேருந்து நிலையத்தில் இறக்கி விட்டது. அங்கே அடுத்த கட்ட அதிசயம் ஆரம்பமானது. சென்னை செல்லும் ஒரு ஸ்பெஷல் பஸ் எங்கள் டவுன் பஸ்ஸை ஒட்டி நின்றபடி இருந்தது. அது ரிசர்வேஷன் செய்து பயணிக்க வேண்டிய பஸ். அதில் ரிசர்வ் செய்திருந்த ஒரு ஆறு பேர் எதனாலோ வரவில்லை. அது அப்படியே எங்களுக்குப் பயன்பட்டது.

அதன்பின் செங்கல்பட்டு வரை எங்களுக்கு எந்த இடையூறும் இல்லை. செங்கல்பட்டில் இறங்கி காஞ்சிபுரத்துக்கு பஸ் பிடிக்க வேண்டியது தான் பாக்கி. அங்கும் காஞ்சி மடத்து வேன் ஒன்று யாரையோ 'டிராப்' செய்ய வந்திருந்தது. அதிலேயே நாங்களும் ஏறிக்கொண்டோம்.

ஸ்ரீ மடத்தில் நீலகண்டய்யர் என்பவர் பல காலமாக பணியாற்றி வருகிறார். நான் குடியிருந்த வீட்டின் வீட்டுக்காரருக்கு சம்பந்தி அவர். எனக்கு வென்னீர் போட்டுத் தருவதில் இருந்து கஷாயம் தருவது வரை அவர்கள் பார்த்துக் கொள்ள மிகச் சரியாக காலை எட்டு மணி அளவில் கைநிறைய பூ, பழத்துடன் நான் ஆவலாக எதிர்பார்த்து வந்திருந்த பெரியவர் முன் கொண்டு சென்று நிறுத்தப்பட்டேன்.

அந்த தெய்வம் சுவரில் சாய்ந்த நிலையில் கால் நீட்டி அமர்ந்திருந்தது. பெரிதாக கூட்டமும் இல்லை. அவரது திரு

உருவம் முன்னால் நான் வெகுநேரம் தியானித்தப்படி நின்று விட்டேன். கையில் இருந்த மல்லிகை சரத்தை அங்கிருக்கும் ஊழியர் வாங்கி பெரியவரின் நீண்டிருக்கும் கால் மேல் குறுக்காகப் போர்த்துவது போல் போட்டு விட்டார். அங்கீகரிப்பது போல பெரியவரின் காலும் ஒரு முறை இட வலமாக அசைந்து கொடுத்தது.

அதன்பின் அதிக பட்சமாக ஒருமணிநேரம் அவர் முன் நின்று தரிசனம் செய்து நான் பேச ஆசைப்பட்டேன். ஆனால் அவர் பேசும் நிலையில் இல்லை என்பது பிறகே தெரிந்தது. அதன்பின் காஞ்சியில் உள்ள காமாட்சியம்மன், ஏகாம்பரேஸ்வரர், வரதராஜர், கைலாசநாதர் என்று எல்லா ஸ்வாமிகளையும் தரிசனம் செய்துவிட்டு திரும்ப ஒருமுறை பெரியவரை நமஸ்காரம் செய்யப் போனபோது அவரை படுக்கச் செய்து விட்டார்கள் என்பது தெரிந்தது. ஏதோ இம்மட்டில் அவர் முன் ஒருமணி நேர காலம் நிற்க முடிந்ததே. அதுவே பெரிய பாக்யம் என்னும் உணர்வுடன் அங்கிருந்து திரும்ப பஸ்ஸில் புறப்பட்டோம்.

நம்பினால் நம்புங்கள்... காலையில் எப்படி எல்லாம் மிக வசதியாக அமைந்ததோ அதே போலவே திரும்பும்போதும் அமைந்தது. துளி சௌகர்யக் குறைவு கிடையாது. 'ஒரு டைஃபாய்டு பேஷண்ட் என்னைப் பார்க்க வருகிறான். அவன் துளிகூடச் சிரமப்படக்கூடாது' என்று பெரியவர் காலதேவர்களுக்கு கட்டளையிட்டு அதை அவர்கள் எனக்காக செயல்படுத்தினர் போலவும்தான் எனக்குத் தோன்றியது.

மதுரையில் இம்முறையும் அதே டவுன் பஸ், அந்த டிரைவர் வீட்டு வாசலிலேயே இறக்கி விட்டார்! வீடு திரும்பி கட்டிலில் விழுந்தேன். மிக அதிகபட்சமாக 36 மணி நேரத்துக்குள் ஒரு ஆசை தோன்றி, அது யாத்திரை செய்து முடித்தும் விட்டது.

திருவருள் துணை செய்தால் டைஃபாய்டாவது... கியஃபாய்டாவது... எனக்குள் பூரணமான ஒரு நிறைவு. புதிதாய் ஒரு தெம்பு...!

அதன்பின் மிகச் சரியாக ஒரு மாதம்தான். பெரியவர் அமரர் ஆனார். செய்தியை தொலைக்காட்சியில் கேட்டபோது மனது பதறியது. அதே சமயம் நான் ஏன் அந்த அளவு உடல் நலமில்லாத நிலையிலும் தரிசனம் செய்ய துடித்தேன் என்பதற்கு காரணமும் விளங்கியது.

என் மனைவி, தாய் இருவருமே அப்போது தான் 'அது பெரியவரே அழைத்துத் தந்த திவ்ய தரிசனம்' என்பதை உணர்ந்தார்கள். அதன் பிறகும் அவர் திருவருள் சும்மா இல்லை. அவரது தரிசனத்தின்போது 'எனக்கொரு சொந்த வீடு வேண்டும்' என்று மனதுக்குள் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். நண்பர் ராஜப்பா 'தனக்கொரு பிள்ளை வேண்டும்' என்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். எங்கள் இருவர் விருப்பமும் அதன்பின் ஈடேறியது.

9.9.1994ம் நாள் நான் கிரகப் பிரவேசம் செய்தேன். புதிய வீட்டில் ராஜப்பாதான் சாப்பாட்டு பந்தியை கவனித்துக் கொண்டிருந்தார். அப்போது தொலைபேசியில் ஓர் இனிய செய்தி; 'ராஜப்பாவுக்கு சேலத்தில் ஆண் குழந்தை பிறந்து விட்டதாக...'

எங்கள் பிரார்த்தனையைக் கூட பெரியவர் ஒன்றாக நிறைவேற்றித் தந்ததை எண்ணி சிலிர்த்துப் போனேன்.

7. காசி... எப்படி?

எனது ஆன்மீக யாத்திரைகளில் காசி யாத்திரைக்கு ஒரு தனித்த மதிப்பும் - பார்வையும் உண்டு. காசி என்ற உடனேயே எல்லோர்க்கும் புண்ணியம் தான் நினைவுக்கு வரும். அந்த நகரமும் சரி, அங்கு பாயும் கங்கையும் சரி,

ஒவ்வொரு ஹிந்துவையும் கடைத்தேற்றி அவனை முக்திக்கு அழைத்துச் செல்லும் ஒரு பக்தி ஷேத்திரம் அல்லவா காசி!

நமது இளம் வயதில் இருந்தே காசி பற்றிய பலவித பக்திக் கதைகள், குறிப்பாக கங்கை நதி குறித்த பலதரப்பட்ட செய்திகளை நாம் கேள்விப்படத் தொடங்கி விடுகிறோம்.

கிறித்தவர்களுக்கு ஒரு ஜெருசலேம் போல, இஸ்லாமியர்களுக்கு ஒரு மெக்கா போல, இந்துக்களுக்கு காசி என்று கூறுவார்கள். ஒரு ஹிந்துவின் வாழ்நாள் கடமையில் அவன் காசிக்கு சென்று அங்கு பாயும் கங்கையில் நீராடுவதுதான் முதல் கடமையாகவே உள்ளது.

அப்படி என்ன காசிக்கும், கங்கைக்கும் ஒரு தனிச்சிறப்பு என்று நான் எனக்குள் பலமுறை கேட்டுக்கொண்டதுண்டு. அதன் புராணச் சிறப்புகளை சிலர் கூறக்கேட்டிருக்கிறேன். கங்கை நதி நீரின் புனிதம் பற்றியும் வெகுவாக சிலாகிப்பார்கள்.

குறிப்பாக கங்கை நதி நீர் மாசு மருவற்றது. ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியில் உலகின் அத்தனை நதி நீர்களையும் ஆய்வுக்கு எடுத்து ஆறு மாத காலம் வரை வைத்திருந்து பரிசோதனை செய்தார்களாம். மற்ற நீரில் எல்லாம் நுண்கிருமிகள் இருந்தனவாம். ஆனால் கங்கை நீர் மட்டும் துளியும் கெடாமல் எடுத்தபோது எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் இருந்ததாம். இப்படி கங்கை குறித்தெல்லாம் நான் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறேன்.

கங்கையைப் பற்றி இப்படி மட்டுமா கேள்விப் பட்டிருக்கிறேன்? அவள் சிவனின் சடைக்குள் அடைபட்டுக் கிடப்பவள் என்பதில் தொடங்கி, அவளை மணந்த சாந்தனு மகாராஜாவுக்கும் அவளுக்கும் பிறந்த

பீஷ்ம பிதாமகர் பற்றியும் நிறையவே புராணத்தில் படித்திருக்கிறேன்.

ஹரிச்சந்திரன் வாழ்விலும் கங்கை குறுக்கிடுகிறாளே...! காசியில் கங்கைக் கரையோரமாக உள்ள மயானத்தில்தான் ஹரிச்சந்திரன் உண்மையைக் காப்பாற்ற நடந்த போராட்டத்தின் போது சுடுகாட்டுப் புலையனாக இருந்தான்?

சிவனார் சடையில் அடைந்து கிடந்தவளை பகீரதன் பெருமுயற்சியாலே பூமியில் பாயும்படி செய்தான் என்கிற 'பகீரதன் பிரயத்தனம்' ஒரு தனிப்பெரும் புராணமல்லவா?

நரகாசுரனை கிருஷ்ணன் கொன்ற தினம்தான் நமக்கெல்லாம் தீபாவளியாகிறது. அன்று அதிகாலை எல்லோருக்கும் கங்கையில் நீராடி பாவங்கள் நீங்கி புண்ணியம் சேரவேண்டும் என்றும், அன்று புத்தாடை உடுத்தி புவனமே மகிழ்வாக இருக்க வேண்டும் என்றெல்லாம் விரும்பித்தானே அவனும் கிருஷ்ணனிடம் வரம் கேட்டிருந்தான்? அதன் நிமித்தம் அந்த கங்கை அன்று காலை மட்டும் உலகின் எல்லா நீர்நிலைகளிலும் கங்கையாக மாறி வெளிப்படுகிறாள் என்பதால்தானே தீபாவளியன்று காலை ஒருவருக்கொருவர் 'கங்கா ஸ்னானமாச்சா?' என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

கங்கையைப் பற்றி நினைக்கத் தொடங்கி விட்டால் இப்படி எத்தனை, எத்தனை செய்திகள்!

இந்த கங்கையில் திருமுழுக்கு போடும் ஒரு வேட்கையுடனும், அந்த காசி விஸ்வநாதனையும், விசாலாட்சியையும் தரிசிக்கும் பெருவிருப்பத்துடனும் தான் நானும் என் நண்பர்களும் காசி யாத்திரை மேற்கொண்டோம்.

திட்டமிட்டதுபோல ஒரு அதிகாலை 6 மணி அளவில் நாங்கள் பயணித்த ரயிலும் காசியின் வாரனாசி ஜங்ஷனை அடைந்தது. ஜங்ஷனில் இறங்கி வெளியே வந்து ஒரு ஆட்டோ பிடித்து நாங்கள் தங்க விரும்பிய செட்டியார் சத்திரம் நோக்கி பயணிக்கத் தொடங்குகையில்தான் எனக்கு வாரனாசி என்பது எத்தனை பாவப்பட்ட ஒரு நகரம் என்பது தெரிந்தது.

குறிப்பாக வாரனாசி ஜங்ஷனில் நான் பார்த்த பிச்சைக்காரர்களுக்கு ஒரு அளவேயில்லை... அதேபோல ஜங்ஷனில் என் கண்ணில் பட்ட அசிங்கங்களுக்கும் ஒரு அளவில்லை. அவ்வளவு துர்நாற்றம்.

பெரிய கொடுமை... ஒரு ஆட்டோக்காரன் எங்களை விடாமல் உடும்புப் பிடி பிடித்துக் கொண்டது தான்... "நீ என் ஆட்டோவில்தான் வந்தாக வேண்டும். இதிலிருந்து தப்பி வேறு ஆட்டோவோ டாக்சிக்கோ நீ எப்படி போகிறாய் பார்க்கிறேன்'' என்பதுபோல எங்களை பிடித்துக் கொண்டான்.

எங்கே போனாலும் விடவில்லை... கூடவே வந்தான். எதைச் சொன்ன போதும் காதில் வாங்கவில்லை. 'கோபத்தில் அவனை ஒரு அறை அறைந்திருந்தால் அதைக்கூட வாங்கிக் கொண்டிருப்பான்' என்றுதான் தோன்றியது.

வேறு வழியின்றி அவன் ஆட்டோவில் ஏறிக்கொண்டு செட்டியார் சத்திரம் உள்ள 'அனுமன் காட்' எனப்படும் பகுதிக்கு நாங்கள் போய்ச் சேர்ந்தோம்.

அனுமன் காட் (காட் (Ghat) என்றால் கட்டம் அல்லது படித்துறை என்று பெயர்) அச்சு அசல் சென்னையிலுள்ள திருவல்லிக்கேணி பகுதி போலவே உள்ளது. திரும்பிய பக்கமெல்லாம் தமிழர்கள்... காஞ்சி காமகோடி மடம்

அங்கே ஒரு கோயிலை, நமது பாணியில் கட்டி பூஜைகளும் நடைபெற்று வருகின்றன.

நமது தமிழ்நாட்டுக்காரர்கள் பலர் வீடுகளிலேயே ஓட்டல் போல நடத்துகின்றனர். அப்படி ஒரு வீட்டுக்கு சாப்பிடப் போனோம். நாங்கள் போனபோது மின்சாரம் வேறு இல்லை. ஒரு பத்து பேர் போய் உட்கார்ந்தபிறகு மின்சாரம் வந்து ஃபேனும் ஓடத் தொடங்கியது. ஃபேன் இல்லாவிட்டால் அந்த ஊர் வெயிலில் நிச்சயம் மனிதர்கள் அங்கு கருவாடு ஆகிவிடுவார்கள்.

அப்போதுதான் அங்கே மின்சாரம் என்பது எப்போதாவது மட்டுமே வரும் ஒரு அதிசயம் என்பதும் அங்கே மின்சாரத்துக்கான பில்லையே பெரும்பாலும் யாரும் கட்டுவதில்லை என்பதும் காதில் விழுந்தது. அதிர்ச்சியாகக்கூட இருந்தது.

அடுத்தடுத்து எனக்கு ஏற்பட்ட எல்லாமே அதிர்ச்சிக்குரியவை தான். அடுத்து அங்கிருந்து கங்கைக்கு... நான் புராணங்களிலும், கதைகளிலும் கேட்டுக் கேட்டு பலவித கனவுகள் கண்டு வைத்திருந்த கங்கைக்குச் சென்ற போது எனக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. அனுமன் காட்டில் ஊரின் மொத்த சாக்கடையும் கலந்து கொண்டிருந்தது.

சாக்கடை என்றால் சாதாரண சாக்கடையல்ல. ஊரின் ஒட்டு மொத்த அசுத்தமே அதில் வந்து கொண்டிருந்தது. அதை விடக் கொடுமை அங்கேயிருக்கும் பிராமண பண்டாக்கள் 'வா நான் உன் பாவத்தை போக்க மந்திரம் கூறுகிறேன்' என்று கையைப் பிடித்து இழுக்காத குறையாக அழைத்ததுதான்.

பாபுஜி என்ற தமிழ் பேசத் தெரிந்த ஒரு படகுக்காரர் தலைக்கு 150 ரூபாய் பேசி ஒரு படகில் எங்களை ஏற்றிக்கொண்டார். அனுமன் காட்டில் தொடங்கி

கிட்டதட்ட ஐம்பத்தி ஆறு கட்டங்களை அவர் வழி நெடுக காட்டிக்கொண்டே போனார். திமுதிமு வென்று தண்ணீர் ஓடுகிறது. பார்க்கப் பயமாக இருக்கிறது.

கரை முழுக்க மனிதக்கூட்டம் அசிங்கப்படுத்திக் கொண்டே இருக்கிறது. ஹரிச்சந்திரா காட்டில் பிணங்களை எரித்துச் சாம்பலை அப்படியே 'சர்சர்' என்று இழுத்து விடுகின்றனர்... சமயங்களில் பாதி எரிந்த பிணங்களையும் இழுத்துத் தள்ளுகின்றனர்.

அந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்தபோது இந்த மனித சமுதாயம் எவ்வளவு சுயநலமானது. எவ்வளவு கொடுமையானது என்றுதான் தோன்றியது.

மனிதர்கள் நீராடத்தான் நதி... அதிலும் கங்கை நதி மனித சமுதாயத்தின் மகத்தான சொத்து! அது பெருமைக்குரியது என்பதாலேயே அங்கே அவ்வளவு கூட்டமும்கூட... ஆனால் எதற்காக அதைப் பயன்படுத்த வேண்டுமோ அதைக் கடந்து கங்கையை ஒவ்வொரு நொடியும் மனித சமுதாயம் பலவிதங்களில் கற்பழித்து வருவதைத்தான் நான் அங்கே கண்கூடாக கண்டேன்.

காசி விஸ்வநாதர் ஆலயத்துக்கு சென்றபோது பக்தர்கள் எண்ணிக்கையை விடவும் போலீஸ்காரர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. பாதுகாப்பு ஏற்பாடாம்!

வட இந்தியாவில் இறை உருவங்களை குறிப்பாக லிங்க ரூபங்களை நாம் தொட்டு வணங்கலாம்... இதனால் பெரிதும் ஆத்ம நிறைவு ஏற்படும். அது ஒருவித ஐதீகம்.

காசி விஸ்வநாதர் சன்னதியில் ஒரு பண்டா (நம் ஊர் குருக்களை போன்றவர்) விஸ்வநாதருக்கும் - பக்தருக்கும் நடுவில் நின்று கொண்டு அவர் கையில் ரூபாய் 50,100 என்று வைப்பவர்கள் கையை மட்டும் லிங்கத்தின் தலைபாகத்தில் பிடித்து வைத்து விடுகிறார்... மற்றவர்கள் பாவம், பாவிகள்!

இப்படியாக விஸ்வநாதரையும், விசாலாட்சியையும் தரிசித்துவிட்டு காசிக்குச் செல்பவர்கள் காசியின் காவல் தெய்வமான பைரவரையும் வணங்கிட வேண்டும் என்பதற்கேற்ப பைரவரையும் தேடிச்சென்று வணங்கிவிட்டுச் சத்திரத்துக்குத் திரும்பினோம்.

வெயில் கொடுமை வாட்டி எடுத்தது. தாகத்துக்கு தண்ணீர் குடித்தபோது உப்புக் கரித்தது. கங்கை பாயும் ஊரில் நல்ல தண்ணீர் கிடைக்காதா? என்று கேட்ட போது இன்னும் அந்த அளவு அரசாங்கம் வசதி செய்து தரவில்லை என்றனர். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

எங்கு பார்த்தாலும் குட்டி குட்டி சட்டிகளில் பாலும் தயிரும் விற்கிறார்கள்... அந்த இரண்டும் அவர்கள் வாழ்வில் இரண்டறக் கலந்து கிடக்கிறது. அடுத்து பான்பராக், பீடா, புகையிலை போன்ற ஐட்டங்கள்.

நூற்றுக்கு அறுபது பேர் 'ப்ரூச்...ப்ரூச்' என்று சதா துப்பிக்கொண்டே இருக்கிறார்கள். வெள்ளைச் சுவர்களையே பார்க்க முடியவில்லை.

ட்ராஃபிக் நெருக்கடியில் அந்த நகரம் விழி பிதுங்கிக் கிடந்ததைப் பார்த்தேன். கடைத்தெருவில் ஒரு கடையில் இருந்து எதிர்சாரியில் உள்ள ஒரு கடைக்குப் போக அரைமணி நேரத்துக்கும் மேல் ஆனது.

ஏழைகள் எண்பது சதம்... நடுத்தட்டு குடும்பத்தவர்கள் பத்து சதம்... ஓரளவு வசதியானவர்கள் பத்து சதம் பேர் இருக்கிறார்கள். டவுன் பஸ்ஸையே பார்க்கவில்லை. ஆட்டோதான்... தார் ட்ரம்களுக்கு என்ஜின் பொருத்திச் செய்தது போல் இருக்கிறது. அவ்வளவு சப்தம். சாலைகளும் அவ்வளவு மோசம். சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போடுகின்றனர். 50 ரூபாய் கூலி கேட்ட ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரர் போட்டி

ரிக்ஷாகாரர் வரவும், சர்ரென்று கூலியை 15 ரூபாய்க்கு குறைத்து விட்டார். அங்கே ஜனங்கள் உழைத்து பிழைக்க போராடுவது பளிச்சென்று தெரிந்தது.

பெருமைமிகு நகரம்-ஹிந்து சாம்ராஜ்ய புனித பூமி! பொருளாதார ரீதியிலும் பலவீனப்பட்டு கிடந்தது. ஏன் காசிக்குப் போனோம்... போகாமல் இருந்திருந்தால் கற்பனையில் அதை உயர்வாகவே எண்ணிக் கொண்டிருப்பேனே என்றெல்லாம் தோன்றியது.

காசியை விட்டு திரும்பிய நிலையில் நான் எனது கசப்பான அனுபவங்களை ஒரு தீபாவளி மலர் கட்டுரையில் எழுதியும் விட்டேன். அதில் அங்குள்ள அரசாங்கம் மேலும், மக்கள் மேலும் மாறி மாறிக் கோபம் கொண்டிருந்தேன்...

என் வரையில் அது ஒரு பாவம் போக்க செய்த யாத்திரையாகவே தெரியவில்லை. பாவிகள் எவ்வளவு பேர் உள்ளனர்! என்று பார்க்கச் சென்ற ஒரு யாத்திரையாகத்தான் அது தோன்றியது.

நாட்கள் உருள ஆரம்பித்தன! இரண்டு ஆண்டுகள் சென்ற நிலையில் என் மனைவி மகளுடன் நான் மட்டும் திரும்பவும் காசி செல்லும் ஒரு வாய்ப்பு அமைந்தது. என் மனைவி என்னோடு சேர்ந்து கங்கையில் முழுக்குப் போடுவதாக வேண்டிக் கொண்டிருந்தாளாம். அதன் எதிரொலி! நானும் வேண்டாவெறுப்பாக 'நீயும் உன் வேண்டுதலும்' என்கிற ஒரு கோபத்தோடுதான் உடன் சென்றேன்.

இந்த முறையும் காசியிடம் எந்த சின்ன மாற்றமுமில்லை. அதே நெருக்கடி... அதே சுகாதாரக்கேடு... அதே மக்கள் கூட்டம்தான். ஆனால் இந்த முறை காசி ஏன் அப்படி இருக்கிறது என்பதற்கு எனக்கு விடை கிடைத்தது... அது

மட்டுமல்ல. ஒரு உத்தமமான யோகியின் தரிசனமும் அவர் மூலமாகவே என் கேள்விகளுக்கெல்லாம் விடைகளும் கிடைத்தன. நான் பிரமித்தேன். எப்படி?

8. யோகியின் பார்வையில் காசி!

இந்துக்களின் மெக்கா என்று போற்றப்படும் காசி நகரம் எந்த அளவுக்கு ஜனசந்தடியாலும், மக்கள் தொகை பெருக்கத்தாலும் பாழ்பட்டு, அடிப்படை சுகாதார வசதிகூட பெரிய அளவில் இல்லாமல் இருப்பதைப் பற்றி எல்லாம் வருத்தமுடனே இருந்தேன்.

கோடிக்கணக்கான மக்களின் ஆன்ம நன்மைக்குரிய அந்த நகரம், ஒரு புனிதத் தலமாகும். ஒரு புனிதத்தலம் இப்படியா இருப்பது என்றும் கேட்டிருந்தேன். குறிப்பாக காசியின் உயிர்நாடியான கங்கை நதியின் சீர்கெட்ட நிலைதான் என்னை வெகுவாகப் பாதித்திருந்தது. அதில் குளித்தால் பாவம் போகிறதோ இல்லையோ 'வியாதி வந்தாலும் வந்துவிடும்' என்பது எனது பயமாக இருந்தது.

எனது பயமும் வருத்தமும்தான் அதன் பின் நான் எழுதிய கட்டுரைகளில் வெளிப்பட்டது. ஒரு இந்துவாக இருந்து கொண்டு ஒரு இந்துத் தலத்தைக் குறை கூறுவது சரியா...? அதிலும் ஈசன் உறைகின்ற காசியைப் பற்றி தவறாகச் சொல்வது பெரிய பாவமாயிற்றே என்று என் மனைவி கூட என்னிடம் கேட்டாள்.

என் வரையில் நான் உண்மையையும், சத்தியத்தையும் கடவுளாகக் கருதுகிறேன். பக்தி, ஆன்மீகத்தில் பற்று, கடவுள் நம்பிக்கை இதெல்லாம் இல்லாவிட்டால் கூட பரவாயில்லை. ஒருவர் உண்மையாக இருந்தால் போதும். சத்தியத்தோடு வாழ்ந்தால் போதும். அவர்கள் வேறு, கடவுள் வேறில்லை என்பதே என் அசைக்க முடியாத

கருத்து. எனவே நான் உண்மையைப் பேசியிருக்கிறேன். நானாவது இந்த உண்மைகளைப் பேசினேனே என்று இறைவன் மகிழவே செய்வான் என்று மனைவியை நான் சமாதானம் செய்தேன்.

இப்படி ஒரு நிலையில்தான் காசியில் இருந்து ரயிலில் திரும்பும்போது ஒரு யோகியைச் சந்தித்தேன். பார்க்க சாதாரணமாக இருந்தார். ஆனால் கண்களிரண்டும் பளிச்சென்று இருந்தது. நல்ல யோகிகளின் முக்கியமான லட்சணங்களில் அதுவும் ஒன்று. அவர் என்னிடம் 'எப்படி இருந்தது காசி?' என்று கேட்டார். யாராவது அப்படி ஒரு கேள்வியைக் கேட்கமாட்டார்களா? என்பது போல காத்திருந்த நான் அவரை வேகமாகப் பிடித்துக்கொண்டு என் மனதில் பட்டதையெல்லாம் கொட்டினேன். அவர் அதைக் கேட்டு துளிகூட வருத்தப்படவில்லை. மாறாக சிரித்தபடியே இருந்தார்.

''என்ன சுவாமி... காசியின் இன்றைய நிலை உங்களுக்கு வருத்தமளிக்கவில்லையா? சிரிக்கிறீர்களே!'' என்று திருப்பிக் கேட்டேன்.

''காசி வருத்தம் போக்கும் தலம்... அது வருத்தம் தராது... உங்கள் வரையில் வருத்தம் தந்திருக்கிறது என்றால் கோளாறு உங்களிடம்தான்... அதனிடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை'' என்று அதிர்ச்சியளித்தார்.

''கோளாறு என்னிடமா? இது என்ன முட்டாள்தனமான பதில்...''

''அப்படியா... எனது பதில் முட்டாள்தனமாகவா படுகிறது?''

''பின் என்ன சுவாமி... ஓர் உன்னதமான தலம் தூய்மையோடு, நல்ல நெறிகளோடும் இருக்க வேண்டும் என்று நினைப்பது எப்படித் தவறாகும்? எனக்கு

உண்மையில் வருத்தம் ஏற்படப் போய்த்தானே வருந்திப் பேசினேன்.''

''வருந்தத் தேவையில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். **'காசி பளிச்சென்று கூட்டம் இல்லாமல் இருந்தால் அது தன் சக்தியை இழந்துவிட்டது என்று பொருள்.'** ஒரு பார்பர் ஷாப்புக்கு போனால் அங்கே தலைமுடிகள் குவிந்திருக்கும். காய்கறி மார்க்கெட்டுக்குப் போனால் அழுகிய காய்கறிகள் ஒரு ஓரமாகக் குவிந்திருக்கும். அதேபோல, காசியில் அழுக்கு இருக்கிறதென்றால், அவைகள் தங்களைச் சுத்தப்படுத்திக் கொண்ட மனிதர்கள் கழுவிவிட்ட தாகத்தான் இருக்கும். நதி மட்டும் அழுக்கில்லை. ஊருக்குள்ளேயும் அழுக்கு இருக்கக் காரணம் நம்பிக்கையோடு வந்து குவியும் ஜனக்கூட்டம். **'நாம் காசிக்கு வந்துவிட்டோம். இனி நமக்குப் பாவமில்லை, தோஷமில்லை'** என்று அடிமனதில் இருந்து ஒவ்வொருவரும் எண்ணுவதால் அவர்கள் விடும் மூச்சில்கூட அங்கே பெரிய அளவில் மாற்றங்கள் நிகழ்கிறது தம்பி. அந்தக் காற்றுதான் அங்கே சுற்றிச் சுற்றி வருகிறது. மனித சமுதாயம் தன் மனதையும், உடம்பையும் ஒருசேர சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்! என்பதற்காகவே இப்படி ஓர் ஏற்பாட்டை நமது சான்றோர்கள் செய்து வைத்துள்ளனர்.

''இப்படி ஒரு நகரம் மட்டும் இல்லாது போகுமானால் மனித சமுதாயம் மிகவும் மோசமான இழிநிலையை அடைந்துவிடும். இப்படி எல்லாம் இருக்கும்போதே பலருடைய மனதுக்குள் வன்முறை உணர்ச்சி ஏற்பட்டு, அவர்கள் தீவிரவாதிகள் ஆகி, சமுதாயத்தை மாற்ற விரும்புவதாகக் கருதி, அதன் அழிவிற்குக் காரணமாக உள்ளனர். இப்படி மட்டும் ஓர் ஏற்பாட்டை நம்

முன்னோர்கள் செய்திராமல் போயிருந்தால் மன அழுத்தம் ஏற்பட்டு நிறைய பைத்தியக்காரர்கள் உருவாகியிருப்பார்கள். நிறையப் பேர் தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள். நிறையப் பேர் கொலைகாரர்களாக மாறி இருப்பார்கள். அம்மட்டில் காசி நகரம், தனக்குள் காலடி எடுத்து வைக்கும் ஒவ்வொருவரையுமே பெரிய அளவில் மனச்சலவை செய்கிறது.''

''இது ஏதோ நம்பிக்கையால் மட்டுமல்ல. பூகோள ரீதியாக இங்கே ஓடும் கங்கை வடக்கு நோக்கிப் பாய்கிறது. பிரபஞ்ச வெளியில் உலவும் மின்காந்த விசைப்பாட்டுக்கு உடம்பு, மனது இரண்டையும் ஊடுருவும் ஆற்றல் உண்டு. பொதுவில் மின்காந்த அலைகள் மிக அதிகம் உள்ள இடத்தில் புரியும் தவம் மிக வலிமையடையும். ஆழ்மனது அங்கே விழித்துக்கொண்டு செயல்படும். எனவே காசி நகரத்துக்கு எவர் வந்தாலும் அவர்களது ஆழ்மனது விழித்துக் கொள்வது அதிகம் இருக்கும். அத்தருணத்தில் 'எனது பாவங்கள் நீங்குகிறது.' என்கிற நம்பிக்கையை அதனுள் நிரப்பும்போது ஆழ்மனதும் தன்னுள் பதிவாகியிருக்கும் அழுத்தமான வடுவைப் போன்ற எண்ணங்களை நீக்கிக் கொண்டு லேசாகும். ஒருவகையில் இது மனதுக்குள் ஏற்படும் மாற்றம்தான். ஆனால் இப்படி ஒரு மாற்றத்தை நாம் எவ்வளவுதான் திட்டம் தீட்டிக் கொண்டாலும் நமக்கு நாமே செயல்படுத்திக்கொள்ள முடியாது. ஒரு மனநல மருத்துவரால்கூட இந்த மாற்றத்தை உருவாக்க முடியாது.''

'ஒரு விஷயத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வேண்டும்' என்று கூறுவார்கள். அப்படி ஒரு நம்பிக்கை வைத்துச் செய்யும் செயல்பாடு எதிலும் எவரும் தோற்பதில்லை. ஆனால் ஆழ்ந்த நம்பிக்கை வைப்பது அத்தனை சுலபமல்ல.''

''அதற்காக முயலும்போதுதான் மனம் என்ற ஒன்றின் விசித்திரத்தை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். இந்த உலகம் எப்பொழுதுமே நம்முள் நம்பிக்கையை வளர்ப்பதைவிட அவநம்பிக்கையை வளர்ப்பதில் முன் நிற்கிறது. நாம் நம் வாழ்நாளில் சந்திப்பவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் சராசரிகளே. எஞ்சியுள்ள பத்து பேர்தான் மாறுபட்டு வாழ்வில் வெற்றி பெற்றவர்களாக இருப்பார்கள். இந்த பத்து பேரும்கூட பார்க்கின்றவர்களுக்கெல்லாம் நம்பிக்கை அளிப்பவர்களாக இருக்க மாட்டார்கள். ஆனால் வெற்றியடையாத தொண்ணூறு பேர்கள் நாம் கேட்காமலே நம்முள் அச்சம், பயம், சந்தேகம் என்று வேண்டாத குணங்களை வளர்த்து விடுவார்கள். பெற்ற தாயே கூட நாம் வெளியே புறப்பட்டுச் செல்லும் சமயம், 'பார்த்து கவனமாகப் போய்வா' என்று ஒருவித எச்சரிக்கை கலந்த பயத்துடன் தான் நம்மை வழி அனுப்பி வைக்கிறாள். 'உன்னை நல்ல பாம்பே கடித்தாலும் அதுதான் சாகும்-உனக்கு எதுவும் ஆகாது' என்று தைரியம் தருபவர்கள் ஒருவர்கூட இல்லை என்று கூறலாம்.''

''இதனால் நாம் எந்த ஒரு விஷயத்தையும் நூறு சதவிகித நம்பிக்கையுடன் ஏற்பவர்களே கிடையாது. நமது கடவுள் நம்பிக்கைகூட பிறர் நம்புவதை வைத்தும், நாமும் நம்பி வைப்போம். எதற்கு வீணாகக் கடவுள் கோபத்துக்கு ஆளாகிக் கொண்டு என்கிற நிலையில்தான் உள்ளது. இல்லையில்லை, எனது நம்பிக்கை அசைக்க முடியாதது என்று கூறுபவர்கள் லட்சத்தில் ஒருவர் என்றுதான் கூற வேண்டும்.''

''எனவே நமது மனம் எதையும் முழுமையாக நூறு சதம் நம்புவதில்லை என்பதே உண்மை. எனவேதான் காசி

போன்ற தலங்களுக்கு சென்ற நிலையிலும் ஒருவித லேசான சந்தேகத்துடன்தான் பலரும் நீராடுகின்றனர். ஆனால் இங்கே அந்த ஊரின் பூகோள அமைப்பின் காரணமாக, கங்கைப்புனலின் விசைப்பாடு காரணமாக நமது ஆழ்மனது ஒரு அசைக்கமுடியாத நம்பிக்கைக்கு ஆட்படுகிறது. அதுதான் நம்மைக் கரை ஏற்றுகிறது. அதனால்தான் அன்றிலிருந்து இன்றுவரை காசி என்றாலே ஒரு மாபெரும் கூட்டம் மாத்திரமல்ல... புராணச் சிறப்பையும் இது கொண்டிருக்கிறது. எவ்வளவு அழுக்கையும் அது போக்கும். அந்த நகரமே ஒரு தியாகத்தின் வடிவம் தான்...'' என்று அந்த யோகி கூறவும், எனக்குள்ளும் அகக் கண்கள் திறந்து கொண்டன.

''பாவம் போக்க வந்த இடத்தில் இங்குள்ள பலர் ஏமாற்றிப் பணம் பிடுங்கிப் பாவம் புரிகிறார்களே... அவர்களுக்கும் முக்தி கிடைக்குமா?'' என்று அதே யோகியிடம் நான் கேட்டேன்.

''எதற்கு இந்த சந்தேகம்? வயிற்றுப் பாடும், பயமும் அவர்களை அப்படிச் செய்ய வைக்கிறது. ஒருவிதத்தில் ஏமாற்றுவதன் மூலம் அவர்கள் நமது பாவத்தை வேகமாக நம்மிடம் இருந்து தங்கள் தோள்களுக்கு மாற்றி வைத்துக்கொள்கிறார்கள். எப்பொழுதும் யாத்திரை செல்லும் இடத்தில் எது நடந்தாலும் அதை இறை விருப்பமாகக் கருதி ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் பக்குவப்பட்ட பக்திக்கு அடையாளம்'' என்றார்.

அழுக்கு கங்கைக்கும், சந்தடியான நகருக்கும் அவர் காட்டிய கோணம் புதியது. 'இங்கே என்று இல்லை. நீங்கள் மெக்கா - மெதீனா,ஜெருசேலம் என்று எங்கே சென்றாலும் இதுதான் நிலை. ஒரு குறிப்பிட்ட இடத்தை மனிதர்கள்

அவ்வளவு சீக்கிரமாகவோ, சுலபமாகவோ ஏற்க மாட்டார்கள். வலிந்து திணித்தாலும் அந்த இடத்துக்கு சக்தி இல்லாவிட்டால் காலத்தால் அந்த இடம் ஒன்றும் இல்லாமல் போய்விடும்' என்றார். அந்தக் கருத்தை என்னால் மறுக்க முடியவில்லை. காசி யாத்திரை இப்படி எனக்குள் புதியதொரு பொருளைப் புரியவைத்தது. காசியைத் தொடர்ந்து அடுத்து நான் மேற்கொண்டது ராமேஸ்வர யாத்திரையை... இந்த யாத்திரை எனக்கு கால நேரத்தின் சக்தியையும், அதுதான் நம்மை இயக்குகிறது, நாம் அதைத் துளிகூட இயக்கவில்லை என்பதையும் உணர்த்திய ஒரு யாத்திரை ஆகும். இந்த யாத்திரையால் நடுத்தெருவில் நின்றுவிட்ட சிதம்பரம் கோயில் தீட்சிதர் தம்பதிகளின் ஸ்னேகமும், தில்லை நடராஜனின் அருளும் என் நட்சத்திர தினம் தோறும் கிடைத்து வருகிறது. அதை எண்ணிப் பார்க்கும் போது எனக்கே வியப்பாக மட்டுமில்லை, இறைவன் கருணை காட்ட முடிவு செய்துவிட்டால் அதன் பொருட்டு எதுவும், எங்கும் நிகழும் என்பதுதான் உண்மை.

9. உண்ணாவிரதப் போராட்டம் எனக்கு அளித்த சிவப்பிரசாதம்!

காசி யாத்திரை அனுபவத்தையும், காசி நகரச்சிறப்பையும் தொடர்ந்து காலப்போக்கில் எனக்கு நல்லதொரு அனுபவத்தை வழங்கிய திருத்தலம் ராமேஸ்வரமாகும்!

1993ம் வருடம் தான் எனக்கும், ராமேஸ்வரத்துக்கும் ஒரு நெருங்கிய பரிச்சயம் ஏற்பட்டது. விதியமைப்பு

மட்டும் ஒருவருக்கு இருந்துவிட்டால் நடப்பது தானாக நடந்தேறும் என்பதற்கு என் வரையில் ராமேஸ்வர அனுபவங்களே நிதர்சன சாட்சியாகும்.

ஒரு வைகாசி மாத வேளை... ஹைதராபாத்திலிருக்கும் எனது பெரியம்மா மகனும் எனது அண்ணுமான ஸ்ரீதரனும் மன்னி சாருமதியும் மதுரை வந்திருந்தனர். பிள்ளைப்பேறு வேண்டி அவர்கள் ராமேஸ்வரம் செல்ல விரும்பியதால் அவர்களை நானே மதுரையில் இருந்து ராமேஸ்வரம் அழைத்துச் சென்றேன்.

அப்படி நான் சென்றது ஒரு அமாவாசை நாளில். நாட்களில் அமாவாசைக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. சூரிய சந்திரர்கள் ஒரு புள்ளியில் இருக்கும் நாள்! இதை மாற்றி ஆண், பெண் ஆத்மாக்கள் ஒன்றாயிருக்கும் நாள், சிவமும் சக்தியும் சேர்ந்து கிடக்கும் நாள், அசலும், நகலும் கலந்து கிடக்கும் நாள் என்று அமாவாசையை விதவிதமாய் பொருள் கொள்ளலாம். நம்முடைய இரு கரங்களும் எப்பொழுதும் பிரிந்துதான் இருக்கிறது. ஆனால் இவை இரண்டும் ஒன்று சேர்ந்து இயங்க வேண்டிய தருணங்களும் வாழ்வில் வருமல்லவா? என்றால் அப்போது அதிக பலம் தேவைப்படும். அதன் காரணமாய் இரண்டும் ஒன்று சேர்ந்தது என்று பொருள் கொள்ளலாம். அமாவாசை நாளிலும் அப்படி ஒரு சேர்க்கை ஏற்பட்டு கால வெளியில் சூட்சம சக்திகளுக்கு பலம் நிரம்பியிருக்கும். இப்படி ஒரு நாளில் கடலில் நீராடுவது என்பது ஏராளமான அர்த்தங்களை கொண்ட விஷயமாகும். உலகில் மிக அதிகமாய் இருப்பது நீர்தான்... நிலப்பரப்பு மூன்றில் ஒரு பங்குதான். இந்த நீர்ப்பரப்புதான் கடல். இதில் நாம் நிற்கும்போது நாம் ஒரு மிகப்பெரிய சக்தியை தொட்டுக்கொண்டு நிற்கிறோம் என்பதே உண்மை. அதில்

மூழ்கிடும்போது அந்த நீரினுள் நாமும் ஒரு அம்சமாய் மாறிவிடுகிறோம். காற்று, ஒளி, வெளி போன்றவற்றின் தொடர்பு அதன் நீருக்குள் நாம் மூழ்கியிருக்கும் நிலையில் அற்றுப் போய்விடுகிறது.

எப்பொழுதும் பஞ்சபூத சேர்க்கைக்குள் இருக்கும் நாம் கடலுக்குள் மூழ்கும் போது நீர், நிலம் எனும் இரு பூதப்பிடிக்குள் அதன் இரண்டாக மாறுகிறோம். இதனால் அதன் சக்தி நம் உடம்பையும் மனதையும் தொட்டுக்கொண்டு நிற்கிறது.

இப்படி ஒரு விஷயத்தை சூட்சம சக்தி மிகுந்த நாளான அமாவாசையன்று புரிவதில் நம் வாழ்வில் நிறையவே மாற்றங்கள் ஏற்படுகின்றன...

அந்த வைகாசி அமாவாசையில் என் சகோதரன் நிமித்தம் எனக்கும், என் மனைவிக்கும் கடல் நீராடல் வாய்த்தது. அதன்பின் ஆனிமாத அமாவாசையன்றும் உறவினர்கள் அழைத்ததன் நிமித்தம் ராமேஸ்வரம் சென்று கடல் நீராடும் வாய்ப்பு அமைந்தது. அடுத்து ஆடி அமாவாசை!

இந்த நாள்தான் எனக்கு விதியின் சக்தியை புரிய வைத்தது. நம் வாழ்வு என்பது ஏற்கனவே எழுதி முடிக்கப்பட்ட ஒரு புத்தகம் என்பதிலே இருந்து அந்தப் புத்தகத்தில் ஏதாவது ஒரு பக்கத்தில் அச்சுப்பிழை இருக்கலாம், ஒரு பக்கம் எழுத்துக்களே இன்றிக் காலியாக இருக்கலாம். ஒரு பக்கத்தில் பாதி நிரம்பி பாதி காலியாக இருக்கலாம். இப்படி இருப்பதை வாசிக்க வாசிக்கத்தான் உணர முடியும். ஆனால் அதில் ஒரு எழுத்தை மாற்றவும் நம்மால் முடியாது என்பது எப்படி ஒரு நிதர்சனமான உண்மையோ, அப்படித்தான் நம் வாழ்வில் அன்றாடம் நடைபெறும் நிகழ்வுகளும் என்பதை நான் உணர்ந்து

கொண்டேன். வாழ்க்கை இப்படி முன்பே தீர்மானிக்கப்பட்ட ஒன்று என்பதை முற்போக்கு சிந்தனையாளர்கள் என்று தங்களை வர்ணித்துக் கொண்டவர்கள் ஏற்கமாட்டார்கள்.

நம் வாழ்வை நாம் தான் தீர்மானித்து வழிநடத்திக் கொள்கிறோம் என்பதுதான் அவர்கள் சித்தாந்தம். அது உண்மையானால் நம் வாழ்வில் நாம் கர்ம சிரத்தையாக செய்யும் அவ்வளவு காரியங்களும் வெற்றியை மட்டுமே அடைய வேண்டும். ஆனால் அவ்வாறு நடப்பதில்லை. உடனே நாம் வெற்றியடைய வில்லை என்றால் இன்னமும் சரியாக அதை செய்திருக்க வேண்டும் என்பதே அதன் அடிப்படை உண்மையாகும் என்பார்கள். ஆனால் உண்மையில் உண்மை இருப்பது போல தோன்றும். அதில் எந்த ஒரு உண்மையுமில்லை... ஏனென்றால் சிலர் எந்த முயற்சியும் செய்யாமலே அல்லது சாதாரண அளவில் முயன்று பெரிய வெற்றிகள் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம். அதற்கு எது காரணம் என்று கேட்கும் போதுதான் அதிர்ஷ்டம் என்கிற வார்த்தை முளைக்கிறது. உண்மையில் அதிர்ஷ்டம் என்கிற வார்த்தையே மிக விபரீதமானது... அதன்+இஷ்டம்தான் அதிர்ஷ்டம் ஆனது. நம் முயற்சி, எண்ணம், எதிர்பார்ப்பு, உழைப்பு, திட்டமிடல் என்கிற அனைத்துக்கும் வெளியே இருக்கும் இது எவ்வளவோ முட்டாள்களை - புத்திசாலிகள் போல காட்டியிருக்கிறது. புத்திசாலிகளையும் முட்டாள்களாக காட்டியுள்ளது.

வாழ்வில் நம் கைப்பிடிக்குள் அகப்படாத, வெளியே உள்ள இந்த காரணியைத்தான் அதிர்ஷ்டம் என்கிறோம். ஆங்கிலத்தில் Luck எனப்படும் இந்தச் சொல்லுக்கும் நம் வாழ்க்கைக்கும் பல நேரங்களில் தொடர்பு உண்டு.

சாலையில் நடந்து செல்லும்போது ஒரு மணிபர்ஸ் கீழே கிடந்து, நம் வசம் வருவதை அதிர்ஷ்டம் என்றுதான் கூறுகிறோம். நூறு பேருக்காக நடக்கும் ஒரு சீட்டுக் குலுக்கலில் நம் பெயர் வந்துவிட்டாலும் அதிர்ஷ்டம் என்றே அழைக்கிறோம். இது எப்போது ஒருவரை மேலே தூக்கிச் செல்லும், எப்போது கைவிடும் என்பதெல்லாம் புரியாத புதிர்... இவ்வாறு இருக்க நம் வாழ்க்கை நம் கையில்தான் உள்ளது என்பதை எப்படி ஏற்பது? அதற்காக அது நம் கையில் இல்லை! என்று நாம் எனக்கென்ன என்றும் இருந்துவிடுவதில்லை. இருக்கவும் கூடாது.

நம் விருப்பத்துக்கு ஒரு வாழ்க்கை வாழ முயல்கிறோம். சில விஷயங்கள் கைகூடுகிறது. பல விஷயங்கள் கைகூடுவதில்லை. அந்தவகையில் சந்தோஷம்-ஏமாற்றம் என்ற இரண்டும் உடைய ஒரு வாழ்வாகவே நம் வாழ்வு உள்ளது. இப்படி வாழும் வாழ்வில் சில சம்பவங்கள் நடைபெறும் போதுதான் அது நமக்கு புரியவே வருகிறது. அப்போது இது ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தால் மட்டுமே சாத்தியம் என்பதும் புரிய வருகிறது.

அந்த ஆடி அமாவாசை அன்றும் அப்படித்தான் நடந்தது. மூன்றாவது அமாவாசை நீராடல் எனக்கும், என் மனைவிக்கும் வாய்த்திட இந்த முறையும் உறவினர்களாலேயே இந்த விஷயங்கள் நிகழ்ந்து முடிந்தன. என் மனைவியும் கூட 'தொடர்ந்து மூன்று அமாவாசைகளாக நாங்கள் பிரத்யேக முயற்சி எதுவும் எடுக்காமல் உறவினர்கள் நிமித்தம் ராமேஸ்வர யாத்திரை புரிந்துள்ளோம்' என்றாள்.

நீராடலும், தரிசனமும் முடிந்து நாங்கள் புறப்பட்டோம். ஒரு மகிந்திரா வேன்தான் எங்கள் வாகனம். உள்ளே 12 பேர் அமரலாம். நாங்களோ எட்டு பேர்தான். அங்கிருந்து

நாங்கள் புறப்பட்ட சமயம் அன்று செல்வி ஜெயலலிதா அவர்கள் காவிரிப் பிரச்சனைக்காக உண்ணாவிரதம் இருக்கப் போய், தமிழ்நாட்டில் பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் ஆடி அமாவாசை தர்ப்பணம் புரிவதற்காக ராமேஸ்வரம் வந்திருந்த, சிதம்பரம் கணேச நடராஜ தீட்சதர் என்பவரும், அவர் துணைவியாரும் நடுச்சாலையில் நிற்கும் ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. அவர் மறுநாள் சிதம்பரம் சென்றேயாக வேண்டும். ஏனென்றால் அவருக்கு பூஜை முறை உள்ளது.

பஞ்சகச்சமும், மடிசார் புடவையுமாக ஒரு புளியமரத்தடி நிழலில் நின்றபடி இருவரும் கைகாட்டி எங்கள் வாகனத்தை நிறுத்தி நாங்கள் சிதம்பரம் பக்கமாக போவதாக இருந்தால் ஏற்றிக் கொள்ளச் சொன்னார்கள். நாங்களோ மதுரை நோக்கிச் செல்பவர்கள். இறுதியில் மதுரை வந்து அங்கிருந்து ரயிலில் சிதம்பரம் செல்ல முடிவு செய்து ஏறிக்கொண்டனர்.

தங்கள் மூதாதையர்களுக்கு ஆடி அமாவாசை வேளையில் திதி கொடுத்து தர்ப்பணம் செய்ய வேண்டும் என்பது அவர்கள் விருப்பம். அதற்காக வந்த இடத்தில்தான் உண்ணாவிரதம் காரணமாக தடை! அதுவும் எங்களால் மாறிப் போனது.

பார்ப்பதற்கு பார்வதி பரமேஸ்வரனாகவே கண்களுக்குக் காட்சி தந்த அவர்கள் பயணிக்கும் போது சிதம்பரத்தின் பெருமை மற்றும் சிறப்புக்களை ஒரு வைஷ்ணவக் குடும்பமான எங்களுடன் பகிர்ந்து கொண்டு வந்தார்கள்.

அன்று இரவு சிதம்பரம் செல்ல உரிய ரயில் வசதி இல்லாததால் எங்கள் இல்லத்தில் தங்கி மறுநாள் எங்கள் இல்லத்திலேயே பூஜாகர்மங்களை முடித்து பின்

உணவருந்திய நிலையில் எங்களை ஆசீர்வதித்து விட்டுத்தான் புறப்பட்டார்கள். எங்கள் உதவியை மனதில் வைத்துக்கொண்டு மாதம்தோறும் என் நட்சத்திரம் வரும் நாளில் நடராஜருக்கு என் பெயரில் அர்ச்சனை செய்து தவறாமல் பிரசாதம் அனுப்பி விடுகின்றனர். கிட்டத்தட்ட 16 வருடங்களாக இந்த அர்ச்சனையும், பிரசாதமும் சிவப்பிரசாதமாய் என்னை அடைந்தபடி உள்ளது.

இதற்குக் காரணம் ராமேஸ்வரம்-அப்போது நிகழ்ந்த உண்ணாவிரதப் போராட்டம்!

இதில் என்ன இருக்கிறது...? ஒருவர் உதவி கேட்கும் போது செய்துள்ளீர்கள் நல்ல விஷயம்-அதைக் கடந்து இதைப்பற்றி பெரிதாக சிந்தித்துப் பேச என்ன உள்ளது? என்று சிலருக்குத் தோன்றலாம்.

எனக்கே கூட அப்போது பெரிதாக எதுவும் தோன்றவில்லை. ஆனால் அதன்பின் ஒரு ஜோதிடரை யதார்த்தமாக சந்தித்தபோது அவர் வேறு ஒருவருக்கு பலன் கூறிக்கொண்டிருந்தார்.

'தொடர்ந்து மூன்று அமாவாசை அன்று ராமேஸ்வரம் சென்று கடல் நீராடி வழிபட்ட நிலையில் ஒரு பிராம்மண தம்பதிகளுக்கு போஜனமளித்து அவர்கள் ஆசியையும் பெறுவது மிக விசேஷமானதாகும். ஒருவர் ஜாதகத்தில் 12ம் இடத்தில் கேது எனும் கிரகம் இருந்தால் அந்தக் கிரகம் தன் புத்தி காலத்தில் அல்லது தசை நடைபெறும் சமயம் தனது ஜாதகரை அது அவ்வாறு செய்து கொள்ளச் செய்து கடைத்தேற்றி விடும். நீங்களும் அவ்வாறு செய்யுங்கள். வீடு வாசல் அமைந்து பெயரும் புகழும் பெறுவீர்கள்' என்று அவர் சொல்லவும் நான் என் ஜாதகத்தை எடுத்துப் பார்த்தேன். என் ஜாதகத்திலும் 12ல் கேது. அதேபோல அப்போது கேது புத்திதான் நடந்து கொண்டிருந்தது. அந்த

ஜோதிடர் சொன்ன பரிகாரத்தை எனது கோள் அமைப்பு எனக்குத் தெரியாமலே எனது உறவினர்களைப் பயன்படுத்திச் செய்து வைத்து விட்டது என்பதும் புரிந்தது.

அந்த நொடி நான் அடைந்த ஆச்சரியத்துக்கும் ஆனந்தத்துக்கும் அளவில்லை. அந்த நாளில்தான் நம் வாழ்க்கை என்பது நமது தீர்மானத்தில் இல்லை. அது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்று என்கிற உறுதியான ஒரு முடிவுக்கு நான் வந்தேன்.

நம் வாழ்க்கை நமது விதியில் இருக்கிறது என்றால் இருக்கிறது. இல்லை என்றால் இல்லைதான். இருக்கிறதோ, இல்லையோ நாம் நடுவில் நின்று விட்டால் இரண்டுமே நம்மை பாதிப்பது இல்லை. நம் வாழ்க்கை நமக்கு ஒவ்வொரு நாளும் சொல்லித்தரும் அனுபவப் பாடம் கூட அதுதான். எதையும் பெரிதாக நினைக்காதே-சிறிதாகவும் நினைக்காதே-நடுநிலை கொள். இதை உணர்த்துவதே வாழ்க்கை என்பதை நுட்பமாய் புரிந்து கொண்டேன்.

என் யாத்திரையில் சோட்டானிக்கரை பகவதி அனுக்ரகம் பற்றி கட்டாயம் சொல்ல வேண்டும்!

10. "என்னப்பா சௌந்தர்ராஜா எப்படி இருக்கே...?"

பலவிதமான எனது ஆன்மீக யாத்திரைகளில் சோட்டானிக்கரைக்கு ஒரு பிரத்யேக இடம் உண்டு. கேரளாவில் எர்ணாகுளத்தில் இருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு சக்தி ஷேத்திரம்தான் சோட்டானிக்கரை! இங்கே அந்த ஆதிசக்தி பகவதியாக, லலிதாவாக, துர்கையாக மூன்று கோலங்களில் சேவை சாதிக்கிறாள்.

சோட்டானிக்கரை என்ற உடனேயே மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் நினைப்புதான் எல்லோருக்கும் வரும். ஆம்... மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், ஆவிகளின் பிடிக்குள் அகப்பட்டிருப்பவர்கள், ஏவலால் பாதிக்கப் பட்டிருப்பவர்கள் இவர்கள் அவ்வளவு பேருக்குமே சோட்டானிக்கரை என்றாலே சிம்ம சொப்பனம்.

பாதிப்புக்குள்ளானவர்களை இந்த ஆலயத்தின் பக்கம் அழைத்து வரும்போதே அவர்கள் எகிறிக் குதித்து ஓடப் பார்ப்பார்கள். அதிலேயே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு எந்த ரகம் என்பது தெரிந்து விடும்.

இந்த ஸ்தலத்தில் அந்த ஆதிசக்தி கீழ்காவு, மேல்காவு (கீழ்காவு-மேல் காவு: காவு என்றால் நீரும், தோட்டமும் கொண்ட இடத்தில் உறைபவள் என்று பொருள்) என்று இரு இடங்களில் கோவில் கொண்டுள்ளாள். மேல்காவில் அவள் லலிதா... சாந்தரூபிணியாக வருபவர்களுக்கு வாரி வழங்கும் மகாலக்ஷ்மியாக காட்சி தருகிறாள். இங்கே இவளை பக்தர்களும் 'அம்மே நாராயணா... தேவி நாராயணா.. லக்ஷ்மி நாராயணமா... சக்தி நாராயணா...' என்கிற கோஷத்துடன்தான் வணங்குகின்றனர். கீழே உள்ள கீழ்காவில் இவள் பத்ரகாளி! யாருக்கும் கட்டுப்படாத உக்ர ரூபிணியாக கோவில் கொண்டுள்ளாள். இந்த ரூபம் முன்னால்தான் ஏவல் சக்திகள், துர் ஆத்மாக்கள் அப்படியே அடங்கி ஒடுங்கி விடுகின்றன. அதனால் இங்கே 'அம்மே தேவி பகவதி...' என்கிற பக்திக் குரலைவிட, கூக்குரலுக்கு தான் அதிக இடம்.

சோட்டானிக்கரைக்கு ஒவ்வொருவரும் வாழ்வில் ஒருமுறையாவது போய் வர வேண்டும். அப்போதுதான்

வாழ்வில் மனநலம் என்பதற்கு நமக்கு பொருள் விளங்கும். மனநலத்திற்கு ஒரு பங்கம் வந்துவிட்டால் வாழ்க்கை எப்படி எல்லாம் சீர்கேடடையும் என்பதையும் இங்கே சென்றால் இங்கு பேய் பிடித்த ஆண்களையும், பெண்களையும் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

அதுமட்டுமல்ல... பிறந்துவிட்ட நாமெல்லாம் இறப்புக்கு பின் என்னவாகிறோம் என்கிற ஒரு கேள்விக்கு இங்கே ஆளுக்கு ஆள் ஒரு விடை இருக்கிறது. இறப்புக்கு பின் நாம் இல்லாமல் போகிறோம் என்று ஒரு வரியில் நாத்திகம் பேசுகின்றவர்கள் கூறி விடுகிறார்கள்... ஆனால் உண்மை அதுவல்ல! ஒரு காகிதம் கூட எரிந்த நிலையில் சாம்பலாகிறது. பின் மண்ணோடு மண்ணாகிறது. நாமும் மண்தான் ஆகிறோம் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. அது இந்த உடம்புக்கு மட்டும்தான் பொருந்தும். உள்ளம் என்கிற ஒன்று என்னாகிறது என்கிற கேள்வி எழுகிறது. ஆறறிவு கொண்டு மனமாய் விளங்கும் அந்த உள்ளம் மனிதன் வரையில் பேச்சாய் வெளிப்படுகிறது. பேச்சைக் குரலாய் இனம் காண்கிறோம். இந்தக் குரல் ஆளுக்கு ஆள் வேறுபடுகிறது... இல்லாவிட்டால் எது யார் குரல் என்று பகுத்தறிய முடியாது. ஒரு நுட்பமான வேற்றுமை மானிடர்களின் குரலுக்குள் இருக்கிறது.

மற்ற உயிரினங்கள் எழுப்பும் ஒலிகளில் இந்த வேற்றுமை இல்லை. நூறு மாடுகள் இருந்தாலும் அவைகளின் 'மா' என்கிற குரல் ஒன்றுபோலத்தான் இருக்கிறது. ஆப்பிரிக்க சிங்கமும் சரி, இந்திய சிங்கமும் சரி கர்ஜிக்கும் போது ஒன்றாகத்தான் உள்ளது.

ஏன் என்றால் அவைகளுக்கு ஆன்மா எனும் ஆறாம் அறிவு (அல்லது) ஆறாம் விஷயம் இல்லை.

எனவேதான் ஒருவர் இறந்த நிலையில் அவர் உடலின் முடிவு தெரிகிறது. உள்ளத்தின் முடிவு அவரவர் விதிப்பாடு மற்றும் அவரின் வாழ்ந்த விதத்துக்கு ஏற்ப மறு ஜென்மம் கொள்வதாகவோ அல்லது முக்தியை அடைந்து விடுவதாகவோ நமது இந்து சாஸ்திரங்கள் மூலமாக உணர முடிகிறது.

இந்த மறு ஜென்மம் மற்றும் முக்திக்கு வழியில்லாத நிலையிலும் சில ஆத்மாக்கள் அகப்பட்டுக் கொண்டு விடுதல் சில நேரங்களில் நிகழ்ந்து விடுகிறது. இந்த ஆத்மாக்களே அலைந்து திரியும்போது பேய், பிசாசு, பிரம்ம ராட்சஸன், மோகினி என்றெல்லாம் அவைகளின் முந்தைய நிலைப்பாட்டுக்கேற்ப வடிவங்கள் எடுக்கின்றன.

ஒரு கன்னிப் பெண் வலிந்து தற்கொலை செய்து கொள்ளும்போது அவள் கன்னிப் பேயாக மாறி விடுகிறாள். அதே கன்னிப் பெண் ஒருவரால் பயங்கரமாகக் கொல்லப்படும்போது கன்னிப் பிசாசாக ஆகிறாள். ஒரு பிராம்மணன் கொல்லப்பட்டால் பிரம்ம ராட்சஸன் ஆகிறான். ஒரு ஆத்மா இறப்புக்குப் பின் ஒரே இடத்தில் கிடந்தால் அது பிசாசாக கருதப்படுகிறது. அது அலையத் தொடங்கினால் பேயாக கருதப்படுகிறது. அலைவதற்கு ஒரு சக்தி வேண்டும். ஒரு ஆவேசம் வேண்டும். இதெல்லாம் உயிருடன் அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே அவர்கள் வாழ்ந்த விதத்தைப் பொறுத்தும் மரணிக்கும் விதத்தைப் பொறுத்துமே உருவாகிறது.

இவைகளை விளங்கிக் கொள்ள கருட புராணமும், நான்கு வேதங்களில் ஒன்றான அதர்வண வேதமும் நமக்கு துணை செய்கின்றன. இந்த அதர்வண வேதத்தின் ஒரு பகுதிதான் மாந்திரீகம். நவகிரகங்களில் ஆயுள்காரகனான சனியின் புதல்வன்தான் மாந்தி. ஒருவர் ஆயுள்

முடிவடைவதை தீர்மானிக்கும் ஒரு சக்தியாக மாந்தி விளங்குவதால் இதை மரணத்தோடு தொடர்புடைய ஒரு கிரகமாக பார்க்கப்படுகிறது. இந்த மாந்தியின் பேரால் அமைந்த கோட்பாடுகள் தான் மாந்திரீகம் எனப்படுகின்றன.

மாந்திரீகத்துக்கு அடிப்படையே அலைபாயும் ஆத்மாக்களும் அவைகளின் சக்தி அம்சங்களும் தான். வீடு கட்டுவதானால் எப்படி மண்ணும், கல்லும் பிரதானமாக தேவைப்படுகின்றதோ அப்படி மாந்திரீகத்துக்கு துர்ஆத்மாக்கள், அலைகின்ற ஆவிகள் மற்றும் கெட்ட சக்திகள் தான் அடிப்படை தேவை. இவைகளைக் கொண்டு பின்னப்பட்டதே மாந்திரீகம் ஆகும்.

இந்த மாந்திரீகம் மற்றும் அலைகின்ற ஆத்மாக்களுக்கு ஒரு நல்ல முடிவையும், இவைகளால் பாதிக்கப் படுகின்றவர்களுக்கு விடுதலையும் வாங்கித்தரும் ஒரு ஷேத்திரம்தான் சோட்டானிக் கரை!

ஒரு தமிழனான எனக்கு சோட்டானிக்கரை பற்றி பெரிய அளவில் தெரிய வந்ததே ஜோதிடர் ஷெல்வீ அவர்களால்தான்...

ஒருமுறை நான் குளித்துக் கொண்டிருக்கும் போது தலைச்சுற்றல் ஏற்பட்டு மயங்கிவிட்டேன். பின் கண் விழிக்கவும் எனக்கே அந்த சம்பவம் ஆச்சரியமளித்தது...

லோ பிரஷர் ஏற்பட்டதன் விளைவு என்பது இதற்கு பின்னால் உள்ள விஞ்ஞான பிரணம். உண்மையில் ஒரு கிரக அமைப்பு காரணமாகவே இவ்வாறு ஏற்பட்டது. 'குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட கிரகங்கள் சஞ்சாரம் செய்யும்போது அதன் காரணமாக நம் உடல் நிலையில் அந்தக் கிரகங்களுக்கு தொடர்புடைய பாகங்களில் பாதிப்பு

ஏற்பட்டு நாம் நோய்வாய்ப்படுகிறோம்' என்பது ஒரு ஜாதகக் கணக்கு. அந்த நோய்க்கு காரணமான கிருமி எது? அதற்கு என்ன பெயர்? என்பது வரைதான் டாக்டர்களால் வரமுடியும். அந்தக் கிருமி ஏன் அப்போது அவரிடம் வந்தது என்பதற்கெல்லாம் விடை டாக்டரிடம் கிடையாது. அது ஜாதகத்தில் ஒளிந்திருக்கும் ரகசியமாகும். அந்த ரகசியத்தை அறிய ஜாதகக் கணக்கு போடத் தெரிய வேண்டும். நான் ஜோதிடர் ஷெல்வீயைச் சந்தித்து எனது ஜாதகத்தை அவர் பார்த்தபோது இந்த மயக்கம் பற்றி அவர் தெளிவாகக் கேட்டார். நானும் ஆமோதித்தேன். அப்படியே வேறு சில விஷயங்களையும் பார்த்தவர், உங்களுக்கு கிரக அமைப்புப்படி விபத்து ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. அதே கிரக அமைப்புப்படி நீங்கள் விபத்தில் இருந்து தப்பிக்கவும் வாய்ப்பு உள்ளது. நீங்கள் தப்பிக்க வேண்டும் என்றால் உடனடியாக துளியும் தாமதமின்றி சோட்டானிக் கரைக்கு சென்று பகவதியை வணங்குங்கள். 'ஏதோ போனோம் வந்தோம்' என்று ஓடி வராதீர்கள். அங்கே ஒரு மூன்று நான்கு தினங்கள் தங்குங்கள். அந்த ஷேத்திரத்தில் நீங்கள் இருப்பதும், அங்கு நிலவும் அருட்கதிர்கள் உங்களைத் தொட்டுக் கொண்டிருப்பதும் உங்களுக்கு வருங்காலத்தில் நிறைய நல்ல விஷயங்கள் நடந்திட அடிப்படை காரணமாக அமையும் என்றார்.

நானும் அவ்வாறே செய்ய எண்ணம் கொண்டேன். அப்போது அவரும் இப்போது என்று இல்லை... உங்கள் வாழ்நாளில் பகவதியை நீங்கள் எப்பொழுதுமே கெட்டியாகப் பிடித்துக் கொள்வது மிக நல்லது. அது செவ்வாய் கிரகத்திற்குரிய ஷேத்திரம். உங்களுக்கும் ராசியாதிபதி, லக்னாதிபதி இருவருமே செவ்வாய்... எனவே உங்களுக்கு நிறைய சிறப்பும் முன்னேற்றங்களும் அதனால்

ஏற்படும் என்றார். அவர் இதையெல்லாம் அருள்வாக்காகக் கூறவில்லை. அவ்வளவும் ஜோதிடக் கணக்கு! அதிலே அவர் நிபுணர் என்பதால் கூட்டிக் கழித்து தெளிவாக கூறினார். நானும் என் மனைவியோடு ஒரு வியாழக்கிழமை குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணமானேன். வெள்ளிக்கிழமை அதிகாலை எர்ணாகுளத்தில் இறங்கி ஒரு ஆட்டோ பிடித்து நூறு ரூபாய் கட்டணத்தில் சோட்டானிக்கரையையும் அடைந்தேன். அங்கே ஒரு நாள் முழுக்க இருந்து ஒரு முறைக்கு மூன்று முறை தேவியை தரிசனமும் செய்தேன். அந்த ஸ்தலம் இயற்கை எழில் நிரம்பியது. பொதுவாகவே கேரள ஆலயங்கள் மிகத் தூய்மையாக நல்ல சான்னித்யமுடன் இருக்கும்... இதமான பருவகால சூழல் வேறு... அங்கே தமிழர்களை சற்று சங்கடப்படுத்தும் ஒரே விஷயம் சாப்பாடுதான்!

நான் அந்தச் சூழலை வெகுவாக ரசித்தேன். இங்கேயும் கைரேகை பார்க்கிறேன். ஜோதிடம் சொல்கிறேன் என்று ஒரு கூட்டமே அலைகிறது. நான் இவர்களுக்கெல்லாம் இடம் கொடுப்பதில்லை...

இங்கே வெடி வழிபாடு என்னும் ஒரு விஷயம் உள்ளது. நமது வினையாகிய கஷ்டத்தை இந்த வெடி வழிபாட்டில் வெடிக்கப்படும் வெடியானது, வெடித்துப் பொடிப் பொடியாக்கி விடுகிறது என்பது நம்பிக்கை.

இதை இங்கே காண்ட்ராக்ட் எடுத்தவர்கள் செயல்படுத்துகின்றனர். மிகச் சூட்சமமான ஒரு விஷயம் இது. ஆனால் இவர்கள் இதை மிக வணிகத்தனமாக நடத்துகின்றனர். இருப்பினும் நானும் எனது தீவினைகள் பொடிப்பொடியாக வேண்டும் என்று வேண்டிக்கொண்டு வெடி வழிபாடும் செய்தேன். பின் அங்கே ஒரு ஓரமாக

அமர்ந்து தியானிக்கலாம் என்று எண்ணியபோது ஒரு இளம்பெண் தலைவிரிகோலமாக என் முன்னே வந்து நின்றாள். அவள் மனநலம் சரியில்லாத ஒரு ஆவித் தாக்குதலுக்கு ஆளானவள் என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. அவள் என்னிடம் நல்ல தமிழில் 'என்னப்பா' சௌந்தர்ராஜா எப்படி இருக்கே... ஊர்ல அப்பா அம்மால்லாம் சௌக்யமா?' என்று கேட்கவும் எனக்கு ஒரே ஆச்சரியம்.

அந்தப் பெண்ணோ ஒரு கேரளத்துப் பெண். அவளுக்கு சுத்தமாகத் தமிழ் தெரியாது! அப்படி இருக்க அவள் தமிழில், அதுவும் என்னைத் தெரிந்ததுபோல் என் பேர் சொல்லி பேசவும் எனக்கு பலத்த ஆச்சரியம்!

11. பஞ்சபூதங்கள் பலமாக உள்ள பரசுராம ஷேத்திரம் எனப்படும் கேரளம்!

சோட்டானிக்கரை ஸ்தலத்தில் ஒரு தமிழ் அறியாத பெண், அதிலும் ஒரு துஷ்ட ஆத்மா வசம் அகப்பட்டுக் கொண்டு விட்ட ஒரு பெண் என்னைப் பார்த்து பெயர் சொல்லி அழைத்து நலமா? என்று கேட்கவும், எனக்கு சப்தநாடியும் உறைந்து போனது!

அதற்கு மேல் அந்தப் பெண் என்னிடம் வேறு எதுவும் பேசவில்லை. வழக்கமான பைத்தியச் சேட்டைகள் அவளிடம் தொடரத் தொடங்கி விட்டது.

எனக்கோ பதைப்பு... கூடவே இது எப்படி சாத்யம்? என்கிற விஞ்ஞானபூர்வமான சிந்தனை... அப்போது எனக்குள்ளே பல கேள்விகள்... நான் அந்தப் பெண் எதிரில்

செல்போனில் எனக்கு வந்த அழைப்பு ஒன்றுக்கு 'நான் சௌந்தர்ராஜன் பேசறேன்!' என்று பலமான குரலில் பேசியிருந்தேன். அதை அந்தப் பெண் கேட்டுவிட்டு என் பெயரை தெரிந்து கொண்டு பேசினாளோ என்று ஒரு சந்தேகம்.

அப்படித்தான் என்றாலும் ஒரு மலையாளப் பெண்ணுக்கு தமிழ் எப்படித் தெரியும் என்கிற கேள்வி எழும்பியது. மொத்தத்தில் நான் அந்த ஒரு கேள்வியால் வெகுவாக குழம்பிப் போனேன். அதைப்பற்றி யாரிடமாவது கேட்கலாம் என்றால் பாஷை ஒரு பிரச்சினை!

சோட்டானிக்கரையில் ஏற்பட்ட இந்த அனுபவத்துக்கு இன்றுவரை எனக்கு தெளிவான விடை கிடைக்கவில்லை. ஆனால் அதன்பின் என் உடல்நலனில் யாதொரு பிரச்சினையும் இல்லை. நானும் ஒரு வருடத்திற்கு குறைந்தது இரண்டு முறையாவது பகவதியை தேடிப்போய் தரிசித்து விட்டு வருகிறேன். அப்படியே குருவாயூர் வரை போய் கிருஷ்ண தரிசனத்தையும் முடித்துக் கொண்டு இரவு 9 மணிக்கு குருவாயூரில் புறப்படும் ரயிலில் ஏறிப் படுத்தால், மறுநாள் 12 மணிக்கு மதுரைக்குச் சென்று விடும்.

இதுபோல் நடந்த யாத்திரை ஒன்றில் ஒருமுறை என் தங்கையும், தங்கை கணவரும் கலந்து கொண்டனர். என் தங்கை கணவர் 35 வயதிலேயே பைபாஸ் சர்ஜரி செய்து கொண்டவர். மிகவும் கவனமாக உடம்பைப் பேண வேண்டிய கட்டாயம் அவருக்கு இருந்தது.

அவரது ஜாதகத்தைப் பார்த்த ஜோதிடர் ஒருவர் 'இவருக்கு ஒரு மிகப்பெரிய கண்டம் இருக்கிறது. கவனம்!' என்றார். கண்டம் என்ற உடனேயே பகவதி நினைப்புதான்

எனக்கு வந்தது. எனவே நான் அவரை சோட்டானிக்கரை அழைத்துச் செல்ல தீர்மானித்து விட்டேன்.

அவரும் வந்தார். மதுரையில் மாலை நான்கு மணிக்கு ரயிலில் ஏறினோம். மறுநாள் அதிகாலை நாலரை மணிக்கு எர்ணாகுளத்தில் இறங்க வேண்டும். அந்த ரயில் நாகர்கோவில் தாண்டியதில் இருந்தே மழை பெய்யத் தொடங்கிவிட்டது. அத்துடன் ஏ.சி.கோச் என்பதால் வெளியே எந்த ஸ்டேஷன் வருகிறது, எது போகிறது என்றே தெரியாத ஒரு நிலை!

அதிகாலை மணி நாலரை! அலறி அடித்துக்கொண்டு எழுந்து வெளியே சென்று பார்த்தேன். ரயில் ஸ்டேஷனில் நின்றபடி இருந்தது. நானும் எர்ணாகுளம்தான் வந்து விட்டது என்று எண்ணி ஒரு பெரியவரிடம் கேட்டேன். அவரும் ஆமாம் என்றார். பெரும்பாலும் கேரள ரயில் நிலையங்கள் ஒன்றுபோல இருக்கும். எனவே நாங்களும் இறங்கிக் கொண்டோம். பிறகுதான் தெரிந்தது. அது எர்ணாகுளம் இல்லை. அதற்கு முன்பாக உள்ள ஒரு ஸ்டேஷன் என்று. ரயிலோ போய் விட்டது! எனக்கோ பெரிய ஏமாற்றமாக இருந்தது. சரி, பின்னாலேயே ஒரு ரயிலைப் பிடித்து போகலாம் என்றால், லோக்கல் பாசஞ்சர் காலை சரியாக ஆறு மணிக்கு என்று கூறிவிட்டனர். எனவே அவ்வளவு நேரத்தை எப்படிக் கழிப்பது?'' என்று யோசித்து அந்த ஸ்டேஷன் ஓய்வறையில் தங்கி அங்கேயே உள்ள ஒரு பாத்ரூமில் குளிக்கவும் செய்தோம். நாங்கள் மொத்தம் ஐந்து பேர். அவ்வளவு பேரும் குளித்து முடித்து உடை மாற்றிக்கொண்டு அந்த பாசஞ்சர் ரயிலிலும் போய் ஏறி அமர்ந்து கொண்டோம்.

பெட்டியில் விளக்கு எரியவில்லை! எஞ்ஜின் வந்து இணைந்தால்தான் கரண்ட் வரும் என்னும் நிலை.

இருட்டில் காத்திருந்தோம். ஒருவழியாக அந்த ரயில் வண்டி புறப்படுவதற்கு பத்து நிமிடம் முன்பாக எஞ்ஜின் வந்து இணைந்து கொண்டது. விளக்குகள் எரியத் தொடங்கின. ஆனால் அப்போதும் மின்விசிறி ஓடவில்லை. என் மாப்பிள்ளைக்கோ இமயமலையில் கூட மின்விசிறி வேண்டும். எனவே தலைக்கு மேல் உள்ள விசிறியை தன் வசம் உள்ள சீப்பால் சுற்றிவிட்டுப் பார்த்தார். அதுவும் ஓடத்தொடங்கியது. ஆனால் அடுத்த நொடியே அந்த விசிறி அப்படியே கழன்று விழ ஆரம்பித்தது. அவரும் பதறிப் போய் பக்கவாட்டில் விழுந்தார். ஒரு வினாடி எங்கள் அவ்வளவு பேருக்குமே உயிர் போய் உயிர் வந்தது. அந்த மின்விசிறி ஏதோ பேருக்கு மேலே ஒட்டிக் கொண்டிருந்திருக்கிறது. அதன்பின் அந்தப் பெட்டியை விட்டு வேறு பெட்டிக்கு சென்று அமர்ந்தோம். ரயிலும் புறப்பட்டு விட்டது. நேராக எர்ணாகுளம் சென்று அங்கிருந்து ஆட்டோ பிடித்து சோட்டானிக்கரை சென்று பகவதி தரிசனத்தை முடித்தோம்.

அதிகாலை தவறாய் ஸ்டேஷனில் இறங்கியதில் இருந்து அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகள் எல்லாமே ஒரு கண்டம் வந்து விலக வேண்டும் என்று பகவதியே நினைத்து அவளே செயல் படுத்தியது போலத்தான் எனக்குத் தோன்றியது.

அவளை தரிசிப்பதற்கு முன்பே அவள் அனுக்ரஹம் செய்து விட்டாள் என்றே கருதத் தோன்றுகிறது. இன்றும் அம்பிகையின் ஆலயத்து சிகப்புக் கயிறு என் குடும்பத்தவர் கரங்களில் ஒரு பாதுகாப்புக் கவசம் போல் இருந்து காத்து வருகிறது.

இந்த யாத்திரைகளின் போது கேரளம் பற்றிய என்னுடைய பார்வையும் கருத்துக்களும் கூட மாறிப்போனது. பரந்த இந்த உலகில் எவ்வளவோ

இடங்கள், ஆனால் பரசுராம ஷேத்திரம் எனப்படும் ஒரு நாடுதான் கேரளம் ஆகும். இங்கே மலையும் கடலும் பிரதானம். பின் நிறைய ஏரிகள்... ஆறுகள்... பஞ்சபூதங்களில் அக்னி நீங்கலாக மீதமுள்ள நான்கு பூதங்களும் மிக வலுவாக இருப்பது இந்த ஒரு மண்ணில்தான்!

இந்த மண்ணில்தான் பல அரிய அருங்கலைகளும் இருந்து வருகின்றன. செண்டைமேளம், கதகளி, மோகினியாட்டம், வர்மச் சிலம்பம், வாளாட்டம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இவர்கள் உணவில் தேங்காய்க்கும், அதன் எண்ணெய்க்கும் தனி இடம் உண்டு. இவர்களது மருத்துவமும் அலாதியானது. குறிப்பாக ஆயுர்வேத வைத்தியத்துக்கு பேர்போன இடம் கேரளம். இயற்கை இங்கேதான் மிகச் செழிப்பாக ஆரோக்கியமாக இருக்கிறது. ஆனால் அதே இயற்கை கேரளத்திடம் இருந்து மெல்ல விடைபெற்றுக் கொண்டு செல்வதாகத்தான் நான் இப்போது கருதுகிறேன்.

1980ம் வருடம் நான் தலைச்சேரியில் ஒரு வருடம் ஒரு கல்வி ஸ்தாபனத்தில் (NTTF) தொழிற்பயிற்சி பெற்றிருக்கிறேன். அப்போதெல்லாம் நான் பார்த்த கேரளத்துக்கும், இப்போது நான் பார்க்கும் கேரளத்துக்கும் நிறைய வித்தியாசங்கள். முன்போல மழைவளம் இல்லை. மரங்களும் வெட்டப்பட்டு விடுகின்றன. போக்குவரத்து அதிகமாகி எங்கு பார்த்தாலும் புகைதான். கேரளத்துக்குள் நுழைந்து விட்டாலே சிலுசிலுவென்று இருக்கும். வியர்க்கவே வியர்க்காது. இப்போது அப்படி இல்லை. மின்சாரத்திற்கும் நிறையவே தட்டுப்பாடு. லாட்ஜில் தங்கியிருக்கும் போது கையில் அறைக்கான சாவியை தரும்போது மெழுகுவர்த்தி, விசிறி என்று இரண்டு

ஐட்டங்களை சேர்த்தே தருகிறார்கள். முன்பெல்லாம் புழாக்களில் படகு சவாரி மிக அருமையாக இருக்கும். இப்போது புழாக்களில் பெட்ரோல் வாடை அடிக்கிறது.

கொச்சின் ஹார்பரில் உள்ள கடல் பகுதி கருத்துப் போய் கசடு பிடித்துக் கிடக்கிறது. அந்தப் பக்கமாகவே மீன்கள் வருவதில்லை. 'கடவுளின் தேசம்' எனப்படும் கேரளத்தை மனிதர்கள் மெல்லக் கற்பழித்து வருகிறார்கள் என்பதே உண்மை.

ஒருபுறம் ஐயப்பன், இன்னொருபுறம் பகவதி, இன்னொரு புறம் மகாதேவர், திருவனந்தபுரத்தில் அனந்தபத்மநாபன், குருவாயூரில் கண்ணன் என்று திருத்தலங்களுக்கு பஞ்சமேயில்லாத தேசத்தை அந்த தெய்வங்கள்தான் பழைய பொலிவுக்கு ஆட்படுத்த வேண்டும்.

எனது யாத்திரைகளில் நெடிய யாத்திரை என்று ஒன்று உண்டு என்றால் அது திருப்பதிக்கு நான் ஆண்டு தவறாமல் செல்லும் பாத யாத்திரைதான். இந்த யாத்திரையில் எனக்கு நேரிட்ட அனுபவங்களை நான் 'யாத்திரை ஞானம்' என்னும் தலைப்பில் ஏற்கனவே எழுதி அது புத்தகமாகவும் வந்துள்ளது.

1997 ம் ஆண்டு தொடங்கிய எனது யாத்திரை இந்த 2009 வரை 12 ஆண்டுகளுக்கு தடையின்றி ஈடேறி விட்டது. சென்னை, பெரம்பூரில் நடக்கத் தொடங்கினால் நான்காவது நாள் காலையோ, மதியமோ திருப்பதியை அடைவதுதான் யாத்திரையின் அமைப்பு. இந்த யாத்திரையின் முதல் நான்காண்டு கால அனுபவங்கள்தான் யாத்திரை ஞானமாக வெளிப்பட்டது. அதன்பின் மேலும் எட்டு ஆண்டுகள்! இந்த எட்டு ஆண்டு கால

அனுபவங்களை இப்போது உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு முன் பாத யாத்திரை காரணமாக பெரம்பூர் பட்டேல் தெருவில் உள்ள வெங்கடேச பக்த சமாஜம் பற்றி சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அமைப்பு சேஷன் என்பவராலும் அவரது நண்பர்கள் சிலராலும் 32 வருடங்களுக்கு முன்னால் சாதாரண அளவில் தொடங்கப்பட்டது. அப்போது திரு.சேஷன் ஒரு ரயில்வே ஊழியர். இப்போது அவர் இந்த அமைப்பின் செயலாளர். எளிய அந்த அமைப்பு இன்று பெரம்பூரில் பெரிய அளவில் ஒரு தியான மண்டபத்தை கட்டி அதில் திருப்பதி பெருமாளை ஸ்ரீதேவி, பூதேவி சகிதம் எழுந்தருளச் செய்து ஒரு ஆகம விதிப்படி அமைந்த ஆலயம் போலவே முறையான பூஜைகள், பஜனைகள், அன்னதானங்களுடன் செயல்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான அன்பர்கள் இந்த சமாஜத்தில் உறுப்பினராக உள்ளனர்.

கட்டுக்குலையாத அமைப்பு. நேர்த்தியான செயல் திட்டங்கள், சீரிய நோக்கம்-சிறப்பான நிர்வாக முறை, ஒவ்வொரு நயா பைசாவுக்கும் கணக்கு என்று இருப்பதால் இங்கே யாருக்கும் எந்தவிதமான கசப்புகளுக்கும் இடமில்லை.

வருடா வருடம் புரட்டாசி மாதத்தின் தொடக்கத்தில் மாலையணிந்து விரதம் ஆரம்பமாகிறது. திருமலையில் பிரம்மோத்சவம் முடிந்த மறுவாரத்தில் எங்கள் தரிசனத்திற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆண்களும் பெண்களுமாக 300 பேருக்கு குறையாமல் பயணிக்கிறோம். இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு கூடுகிறதே யொழிய

குறைவதில்லை. யாத்திரையில் பங்கு கொள்கிறவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வேண்டுதல்-ஒரு எதிர்ப்பார்ப்பு. அதை அந்த வேங்கடவனும் மறுக்காமல் அளித்து வருகிறான். ஒவ்வொரு அனுபவமுமே சிலிர்க்க வைக்கும் அனுபவம்தான்.

திருமலையில் நிகழ்ந்து வரும் அருளாட்சியில் யாருக்கும் ஒரு குறைவுமில்லை. அதனால்தான் எப்பொழுதும் அந்த மலையில் ஒரு லட்சம் பேருக்கு குறையாமல் ஜனத்திரள் இருந்து வருகிறது.

அங்கே பசி இல்லை, அது கிடைக்கவில்லை... இது கிடைக்கவில்லை... என்கிற குறைபாடுகள் இல்லை. ஒரு மிகச் சிறந்த நிர்வாக முறை அங்கே செயல்பட்டு வருகிறது.

அந்த ஒரு மலையில்தான் சாதாரண ஒரு பிச்சைக்காரன் கூட நாளொன்றுக்கு 300 ரூபாய்க்குக் குறைவின்றிச் சம்பாதிக்கிறான். தெருவில் கயிறு விற்பவன்கூட 500 ரூபாயை தினம் வீட்டுக்குக் கொண்டு செல்கிறான்.

அங்கே எல்லோருக்கும் ஒரே ஒரு வருத்தம்தான் இருக்க முடியும். அந்த பாலாஜியை கண்குளிர நின்று சேவிக்க விடமாட்டேன் என்கிறார்களே என்பதுதான் அது!

இந்த கலியுகத்தில் தொட்டதுக்கெல்லாம் விஞ்ஞானம் பேசுகின்றவர்கள் கூட வியந்து பார்க்கும் ஒரு அருட்கோட்டை தான் திருமலை! இஸ்லாமியர்களின் மெக்கா மதினாவுக்கு கூட ஒரு சீஸன் இருக்கிறது. ஆனால் திருப்பதி வரையில் வருடம் 365 நாளும் சீஸன்தான்.

அந்த மலைக்கு மட்டும் ஏன் அப்படி ஒரு சிறப்பு?

அதை அனுபவ ரீதியாகவே பார்ப்போம்...

12. திருமலையானுக்கு முடிகாணிக்கை மூடப் பழக்கமா?

என் யாத்திரை அனுபவங்களில் திருமலை யாத்திரை அனுபவத்துக்கு தனித்த சிறப்பு உண்டு. எனக்கு மட்டுமா? இந்த மண்ணில் திருமலைக்கு சென்று வருபவர்களுக்கெல்லாமும் கூட விசேஷமான அனுபவங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

சும்மாவா பாடினார் கண்ணதாசன்...

"திருப்பதி சென்று திரும்பி வந்தால் ஓர் திருப்பம் நேருமடா... உன் விருப்பம் கூடுமடா?" என்று... கோடிக்கணக்கான பக்தர்கள் அதனால் தானே திருமலைக்கு ஆண்டு தவறாமல் சென்று வருகின்றனர். தங்கள் வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் நேர வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, தங்கள் வேண்டுதல் பலித்ததற்காகவும் நன்றி கூற திருப்பதி செல்லுகின்றனர்.

எனக்கு தெரிந்து ஒரு பக்தர் மாதம் தவறாமல் திருப்பதிக்கு பெருமாளுக்கு உகந்த திருவோண நட்சத்திரத்தில் அந்தப் பெருமாளை தரிசனம் செய்வதற்காக சென்று வருகிறார். ஆயிரம் தரிசனத்தை அவர் நெருங்கியபடி உள்ளார். இவர் வருடத்திற்கு இரண்டு முறை சென்னையில் இருந்து நடந்தே சென்று அந்த திருமலையானை தரிசிப்பவர். வருடம் தவறாமல் ஒருமுறை தலை முடியையும் காணிக்கையாக கொடுத்து விடுவார்.

இன்னொருவர் திருவோணம் தவறாமல் விரதம் இருப்பவர்... வருடா வருடம் புரட்டாசி மாதம் முழுக்க தீட்சை முடி வளர்த்து பிரம்மோத்சவத்தின் போது அந்த

வேங்கடவனை தரிசிப்பவர்... கூட்டம் அதிகமாக இருந்து தரிசிப்பதற்கு தாமதம் ஆனால் இவர் மிக்க மகிழ்ச்சி அடைவார். அதை வேங்கடவன் புரியும் கருணை என்பார். இதைக்கேட்க ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

ஆனால் அவர் அதற்கு சொல்லும் காரணம் மிக ஆழமானது... நம்மை எல்லாம் மிகவே யோசிக்க வைப்பதும்கூட...!

பொதுவாக திருமலைக்கு ஏழுமலை என்றும் ஒரு பெயர் உண்டு. ஆம், ஏழு மலையில் ஆறு மலைகளுக்கு அப்பால் ஏழாவது மலையில்தான் அந்த பெருமாள் கோயில் கொண்டிருக்கிறான். கருடாத்ரி, அஞ்சனாத்ரி, சேஷாத்ரி என்று ஒவ்வொரு மலைக்கும் ஒரு பிரணவப் பெயரும் இருக்கிறது.

அது என்ன ஏழு என்று ஒரு கணக்கு என்றும் கேட்கலாம். ஏழு என்ற உடனே சப்த லோகம், சப்த ராகம், சப்த சமுத்ரம், சப்த ரிஷி பெருமக்கள், சப்த ஜென்மங்கள் என்று அது தொடர்பான விஷயங்கள் வரிசையாக நம் நினைவுக்கு வரும்.

இந்த ஏழுகளுக்கும், இந்த ஏழு மலைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அதை சூட்சமமாகப் பார்த்து உணர்தல் வேண்டும். இந்த ஏழு மலைகளுக்கும், நமது பிறப்புக்கும் அதில் நாம் புரியும் கர்மங்களுக்கும்கூட நெருங்கிய தொடர்பு இருக்கிறது... பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உருவான உயிரினங்களில் மனிதனுக்கு மட்டும்தான் ஆறாவது அறிவு! அந்த அறிவை அவன் ஏழாகிய பேச்சு சப்தத்தால் தான் உணர்த்துகிறான். பேசக் கிடைத்த அந்த வாய்ப்பை அவன் கண்ட விஷயங்களைப் பேசி அரட்டையில் கழித்து விடக்கூடாது.

'நாம ஜெபம்' சொல்லி அவன் எட்ட வேண்டும். இப்படி அவன் எட்டுவதே எட்டாகிறது. எட்டி விட்டால் அடுத்து ஒன்பதுதான். அதாவது இறைதரிசனம்தான். ஒன்பது என்பதும் ஒன்றுவது என்பதும் கிட்டத்தட்ட ஒரே பொருளைக் கொண்டதே. எட்டிவிட்டவர்க்கே ஒன்பதை நெருங்குவது சாத்யம். ஒன்பதாக இறைவன் இருக்கிறான். இந்த ஒன்பதை நீங்கள் பெருக்கினாலும் வகுத்தாலும் தன்னிலை மாறாமல் அதிலும் ஒன்பதே வரும்! இறைவனை அடைந்து விட்டாலும் நாம் அதன்பின் மாறாத இன்ப நிலை அடைந்தவர்களாவோம்.

இறைவனை எட்டிட முதலில் ஏழை கடந்தாக வேண்டும். ஏழாகிய திருமலையைக் கடந்தால் அங்கே எட்டிப் பிடிக்க முடிந்தவனாக இறைவன் காட்சி தருகிறான். இறைவன் ஆணுமற்றவன், பெண்ணுமற்றவன் அவன் பொதுவானவன்.

அந்த திருமலைப் பெருமாளும் முன்புறம் ஆண் வடிவிலும் பின்புறத்தில் நீண்ட கூந்தல் கொண்ட பெண் வடிவமாகவும் காட்சி தருகிறவர் என்பார்கள்.

ஏழுமலையைப் பற்றி எண்ணும்போது இப்படி எண்ணங்கள் விரிகின்றன. இந்த ஏழு மலையில் நாம் எட்ட முடிந்த ஆலயமும் தனிப்பட்ட ஒரு சிறப்பினைக் கொண்டதாக உள்ளது. அதாவது பஞ்சபூதங்கள் சம நிலையில் இருக்கும் ஒரு இடத்தை வாஸ்துச் சிறப்புடைய ஒரு இடமாக சாஸ்த்ரம் கூறுகிறது. திருமலை நூறு சதம் வாஸ்துச் சிறப்புடைய ஒரு ஸ்தலமாகும்.

நூறு சதம் வாஸ்துச் சிறப்புடைய ஓர் இடத்தில் வசிப்பது உடல் ஆரோக்யத்துக்கும், உள்ள ஆரோக்யத்துக்கும் மிக நல்லது.

இதை உத்தேசித்தே அந்த நண்பர் மலையில் கூட்டம் அதிகமாகி தரிசனம் புரிய தாமதமாகும் போது மகிழ்ந்தார். அதுமட்டுமா? இறைவன் நாமங்களில் கோவிந்தனாகவும், ஸ்தூலங்களில் பக்தர் வடிவாகவும் இருக்கிறான் என்பது ஆழ்வார் பெருமக்களின் அரிய கருத்து.

நாம் திருப்பதியில் வரிசையில் நிற்கும்போது கோவிந்த நாமம் கேட்டபடியே இருக்கும். எத்தனைக்கெத்தனை நாமம் சொல்கிறோமோ அத்தனைக்கத்தனை நமது ஜாதகம் வலிமையடையும். நமது ஜாதகத்தில் நல்ல நிலையில் உள்ள கிரகங்கள் அதீத பலம் பெறும். தவறான நிலையில் உள்ள கிரகங்களின் தாக்கமோ முற்றாகக் குறையும். அடுத்து ஸ்தூல வடிவாக உள்ள பக்தர்கள் பாகவதோத்தமர்கள் எனப்படுவர். அவர்கள் மேனிமேல் நம் மேனி படுவதும், அவர்களின் நிழல் நம்மேல் படுவதும் மிகுந்த சிறப்புக்குரியது.

நல்ல விதியமைப்பு உள்ள ஒருவராலேயே திருமலைக்கு செல்ல முடியும். அங்கே பிச்சை எடுக்கும் ஒருவருக்கூட நல்ல விதியமைப்பு இருக்கிறது என்பதே உண்மை. அவர்கள் நிஜத்தில் நாளைக்குச் சேர்த்து வைத்துக் கொள்ள முடியாத நிலையில் அன்றைய தினத்துக்கு யாசகம் புரிந்து மற்றவர்கள் தர்மம் புரிய ஒரு வாய்ப்பை தந்து துறவி போல வாழ்பவர்கள் ஆவர்.

எனவே, அப்படிப்பட்டவர்கள் நடுவே திரிவதும் உழல்வதும் எத்தனை புண்ணியமான செயல் என்று எண்ணிப் பாருங்கள்.

இதை எல்லாம் உணர்ந்தே அந்த நண்பர் தாமதமானால் பெருமாளுக்கு இம்முறை என் மேல் அதிக கருணை என்று கூறினார். இதை அறிந்த நானும் கூட அதன்பின் அங்கு கிடக்கும் கூட்டத்தைப் பார்த்து மலைத்துப் போய் அதிக

கட்டணத்தில் வேகமாக சென்று சேவித்து திரும்புவது போன்றவற்றில் உள்ள ஈடுபாட்டை குறைத்துக் கொண்டேன்.

திருமலையைப் பற்றி இப்படி சூட்சமமாக எண்ணிப் பார்க்க ஏராளமான விஷயங்கள் உள்ளன. உச்சபட்ச சிறப்பே அங்குள்ள தெய்வீக சான்னித்யம்தான். அங்கே நாம் எதைச் செய்தாலும், அதற்கு பலனும் ஏழு மடங்காக கிட்டும். உண்டியலில் ஒரு ரூபாய் போட்டால் அந்த பெருமாள் நமக்கு ஏழு ரூபாயை தந்துவிடச் சித்தமாகிறான். தலைமுடியை இறக்கி அரூபியாக்கிக் கொண்டாலோ ஏழு மடங்குக்கு அழகையும், தேஜஸையும் தரச் சித்தமாகிறான். ஏழுமலைகளை நாம் கடந்து வந்திருப்பதை மனதில் கொண்டு வாரத்தின் ஏழு நாட்களும் நாம் மகிழ்வோடு வாழ அவன் வரமளிக்கிறான். இதெல்லாம் மிகையான பேச்சோ இல்லை போலியான புகழுரையோ அல்ல... அவ்வளவும் நிதர்சனமான அனுபவம்!

அதனாலேயே அப்படி ஒரு கூட்டம் அந்த மலைக்கு... ஒரு முறை சென்றவர் மறுமுறை செல்லத் துடிப்பதும் அதனாலேயே...!

எனக்கும் நடந்தே கால் தேயத் தேய அந்த மலை மீது ஏறியதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி.

நான் மட்டுமா...? கோடானு கோடி பேர்கள்... எனது அனுபவங்களில் சிலவற்றை இனி பார்க்க விரும்புகிறேன்.

எங்கள் குடும்பங்களில் குழந்தைகளுக்கு முதல் முடி எடுப்பது என்பது எங்கள் குலதெய்வக் கோவிலான தாந்தோணி மலை பெருமாளுக்குதான். இந்த தாந்தோணி மலை கரூருக்கு ஐந்தாவது கிலோ மீட்டரில் உள்ளது.

அடுத்த முடி திருப்பதி பெருமாளுக்கு...

மூன்றாவது முடி பழனி முருகனுக்கு...

இந்த பழனி முருகனுக்கு முடி எடுப்பது என்பது எங்களின் பிரத்யேக பக்திக் காரணத்தால். இது கட்டாயமில்லை. ஆனால் முதல் அந்த இரண்டு முடிகள் கட்டாயம்! அதுமட்டுமல்ல, திருமணத்துக்குப் பிறகு தம்பதி சமேதராக முகூர்த்த வேட்டி புடவையோடு போய் சேவிக்க வேண்டியதும் கட்டாயமானது!

அந்த வகையில் எனது திருமணம் முடிந்த நிலையில் நானும், என் மனைவியும் திருமலைக்கு சென்றோம். தரிசனமும் புரிந்தோம்... அப்போதே குழந்தை பிறந்தால் குழந்தைக்கு முடி எடுக்க அடுத்து வரவேண்டியிருக்கும் என்று பேசிக்கொண்டோம். அதே போல எனக்கு மகள் பிறந்தாள். முதல் முடியை தாந்தோணி மலை பெருமாளுக்கு எடுக்க தயாரானபோது எனது பாட்டி இறந்துவிட தீட்டு வந்து விட்டது. அதன்பின் அப்படி இப்படி என்று இரண்டரை வருடங்கள் ஓடிவிட்டது. என் மகளுக்கும் தலைமுடியில் சடை விழுந்துவிட்டது. அதை நல்ல விதமாக தாந்தோணி மலைக்கு சென்று காணிக்கையாக்கி விட்டு வந்தோம். அடுத்து திருப்பதிக்கு சென்று முடி காணிக்கை செலுத்த வேண்டும். என் மகளுக்கும் கருகருவென்று முடி வளர்ந்து பார்க்கவும் வெகு அழகாக இருந்தாள். அலையாடும் கூந்தல் என்பார்களே... அப்படி ஒரு கூந்தலாக அவள் கூந்தல் இருந்தது. அதை திருப்பதிக்கு காணிக்கையாக தரும் அந்த எண்ணம் வந்தபோது நான் அதை தள்ளித் தள்ளிப் போட்டேன்.

அதுதான் ஒரு முடியை குலதெய்வத்துக்கு கொடுத்தாகி விட்டதே... திரும்ப எதற்கு? என்று ஒரு கேள்வி என்னுள் எழும்பியது... இந்த ஒரு கேள்வி மட்டுமா?

முடியை வாங்கி அந்த பெருமாளுக்கு என்ன ஆகப்போகிறது? வெள்ளைக்காரர்கள் எல்லாம் முடிக் காணிக்கையா தருகிறார்கள்? அவர்களும் ஓஹோவென்று வாழத்தானே செய்கின்றனர்.

இதெல்லாம் ஒருவரைப் பார்த்து ஒருவர் மேற்கொண்டுவிட்ட மூடப்பழக்கம் என்றெல்லாம் சிந்திக்க தொடங்கி விட்டேன்.

13. ஒன்றுக்கு நான்கு!

என் மகளுக்கு திருப்பதியில் முடி இறக்குவது தொடர்பாய் ஏனோ என்னுள் அப்படி ஒரு தயக்கம்... அப்படி ஒரு கேள்வி... இன்றைக்குப் பகுத்தறிவாளர்கள் என்று தங்களை கூறிக் கொள்பவர்கள் எப்படி எல்லாம் சிந்திப்பார்களோ அப்படி எல்லாம் சிந்தித்தேன்.

உலகையே படைத்ததாக கருதப்படும் கடவுளுக்கு போயும், போயும் முடியையா காணிக்கையாகக் கொடுப்பார்கள்?

கோபத்தில் நாம் யாரையாவது வெய்யும்போது 'போடா மசுரே' என்கிறோம். இப்படித் திட்ட பயன்படுகிற சமாச்சாரத்தையா காணிக்கை என்ற பெயரில் தருவது?

இப்படிப் பல கேள்விகள்... உண்மை என்னவென்றால் இன்று நம்முடைய மதத்தில் நாம் பின்பற்றும் அநேக ஆசாரங்கள், சடங்குகளுக்கு சரியான பொருள் கூறக்கூடியவர்கள் பெரிய அளவில் இல்லை. இது சம்பந்தமாக யாரிடமாவது கேள்வி எழுப்பினால், 'யாருக்கு தெரியும்... பெரியவர்கள் செய்யச் சொன்னதில் அர்த்தம் இல்லாமலா இருக்கும்?' என்று திருப்பிக் கேட்கிறார்களே தவிர, ஒருவரும் மிகச்சரியான ஒரு பதிலை எனக்கு

இம்மட்டில் கூறியிருக்கவில்லை. அதனாலேயே என் மனமும் இப்படி எல்லாம் கேள்விகளை கேட்டுக் கொண்டது.

எப்போது திருப்பதிக்கும் முடி இறக்கணும் என்று என் மனைவி ஆரம்பித்தாளோ அன்றிலிருந்து என் மகளின் தலைமுடி காளிதாசனின் வர்ணனைப்படி கார்குழலாகவே மின்னியது. சுருள் சுருளாக அலை பாய்ந்தது. பார்க்கவும் அவ்வளவு அழகாக இருந்து கண்களில் வழிந்தாள்.

இறுதியில் திருப்பதிக்கு போனோம். ஆனால் நான் முடி எடுப்பது பற்றி வாயே திறக்கவில்லை. என் மனைவி அதுபற்றி பேசியபோது, அடுத்த முறை பார்த்துக் கொள்ளலாம் என்று அவள் வாயையும் அடைத்து விட்டேன்.

திருப்பதி கோயில் கோபுரத்துக்கு முன் உள்ள பகுதியில் நிறைய பிரசாதப் பொருட்கள் விற்கும் கடைகள். அதில் ஒன்றில் ஒரு பெருமாள் படம் வாங்க ஆசைப்பட்டு, அதற்கான முயற்சியில் நான் இருந்தேன். படத்தை வாங்கிவிட்டுத் திரும்பினால், அதுவரை என்னோடு என் கையை பிடித்தபடி வந்த என் மகளைக் காணவில்லை.

பகீரென்றது!

சுற்றிச் சுற்றி பார்த்து, சுற்றி வந்து பார்த்து, நாலாபுறமும் தேடியும் அவளைக் காணவில்லை. என் மனைவிக்கு மயக்கமே வந்து விட்டது. என் தம்பி, என் அப்பா என்று ஆளுக்கு ஒரு பக்கம் தேடிக்கொண்டு ஓடினார்கள்.

கிட்டத்தட்ட 2 மணி நேரம் திருப்பதியின் எல்லா சந்து பொந்துகளிலும் புகுந்து வந்துவிட்டோம். என் மகள் வயதில் எந்த ஒரு பெண் கண்ணில் பட்டாலுமே தோளைப் பிடித்துப் பார்ப்பதும் ஏமாறுவதுமாகவே இருந்தது.

எங்கள் தேடலைப் பார்த்த ஒருவர், 'பதட்டப்படாதீர்கள்... உங்கள் பிரார்த்தனையில் ஏதாவது தவறு இருக்கலாம். அதை உங்களுக்கு உணர்த்தத்தான் இப்படி நடக்கிறது. அது எதுவாக இருந்தாலும் அதை உணர்ந்து சரி செய்து கொள்வதாக பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். உங்கள் மகள் கிடைத்து விடுவாள்' என்றார்.

எப்பொழுதும் திருப்பதி பெருமாளுக்கு வேண்டிக்கொண்டு அதன்படி நடக்கத் தவறுபவர்க்கு சோதனைகள் ஏற்படும்-அந்த சாமி ரொம்பக் கறாரான சாமி என்று நானும் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். அவரும் அப்படிச் சொல்லவும் என் மனைவி கப்பென்று அந்த முடி கொடுக்க நான் தயங்கிய விஷயத்தைத்தான் தொட்டாள்.

'நாம முடி கொடுக்க யோசிச்சோம். அதான் இப்படி ஆயிடுத்து. இப்ப சொல்றேன். நம்ம பொண்ணு மட்டுமில்ல நீங்களும் முடி கொடுக்கறேள். இதுதான் என் பிரார்த்தனை. பெருமாளே! எங்களை மன்னிச்சிடு...' என்று நின்ற இடத்தில் இருந்து கொண்டு கோபுரத்தைப் பார்த்து பிரார்த்தனை செய்து கொண்டாள்.

அதன்பின் நான் தேவஸ்தான அலுவலகம் சென்று மகள் பெயரைச் சொல்லி ஒலிபெருக்கியில் அறிவிக்கச் சொன்னேன். அவர்கள் தெலுங்கில் அறிவித்தார்கள். நான் தமிழில் அறிவிக்கச் சொன்னேன். எங்காவது என் மகள் இருந்தாலும் அதைக்கேட்டு இங்கே அலுவலகத்துக்கு வந்து விடுவாள் என்றேன். அவர்களோ என் பேச்சைக் காதில் வாங்காமல் தெலுங்கிலேயே அறிவித்தபடி இருந்தனர். எனக்குள் கோபமான கோபம். அந்த அலுவலகத்தில் இருந்தவரை அடிக்கக்கூட துணிந்து விட்டது என் மனது.

என் மனைவி ஒரு பக்கம் அழுதபடியே இருக்க, திடீரென்று எதிரில் என் அப்பா என் மகளோடு வந்தபடி இருந்தார். எனக்கும் அவர்களைப் பார்த்த நொடி போன உயிர் வந்தது போல இருந்தது. மகளையும் வாரி அணைத்துக் கொண்டோம். ஒரு 2 மணி நேரம் நாங்கள் அந்த மலையில் தவிக்க வேண்டும் என்பது என்ன விதியோ?

என் மனைவி உடனேயே என்னையும், என் மகளையும் தரதரவென்று முடி காணிக்கை செலுத்தும் இடத்துக்கு அழைத்துப் போய் உட்கார வைத்து விட்டாள். எங்களோடு என் அப்பா, தம்பியும் அமர்ந்து முடி கொடுத்தனர். 'நீங்கள் எதற்கு?' என நான் கேட்கவும், 'நாங்களும் பிரார்த்தனை செய்து கொண்டோம்' என்றனர்.

நான் ஒரு மொட்டைக்கு யோசித்தேன். ஆனால் நாலு மொட்டைகளை நாங்கள் கொடுக்கும்படி செய்து விட்டான் அந்த வேங்கடவன்!

இந்தச் சம்பவம் என்னை வேறுவிதமாய் பாதித்தது. முன்பு நான் கேட்ட கேள்விகள் என்னுள் அப்படியேதான் இருந்தது. கூடவே மேலும் அநேக கேள்விகள் சேர்ந்து கொண்டு விட்டது.

ஒருதலை முடி விஷயத்தில் இத்தனைக் கறாராக தட்ட வேண்டிய இடத்தில் தட்டி வாங்க வேண்டிய விதமாய் வாங்கிக் கொண்ட சாமி, இதே மலை தலத்தில் அன்றாடம் பல தவறுகள் புரிபவர்களை எப்படி விட்டு வைத்திருக்கிறார்? இது என் முதல் கேள்வி.

வேங்கடவனின் இந்தக் கண்டிப்பும், கறாரும் தனக்கானதை வாங்கிக் கொள்வதில் மட்டும்தானா? இத்தனை அருள் மிகுந்த பெருமாள் இந்த இந்தியாவை ஏன் இன்னும் அழுக்கு நாடாகவே வைத்திருக்கிறார்?

அந்த மலையில் இன்று எல்லோருக்கும் ஓசியிலேயே சோறு கிடைத்து விடுகிறது. அந்த மலை மட்டும்தான் உலகமா? ஏன் உலகம் எங்கும், குறைந்த பட்சம் இந்தியாவில் எல்லோருக்கும் இலவசமாய் உணவு கிடைக்க அருளவில்லை?

குடிக்கின்ற தண்ணீருக்கு புத்தி இல்லாத முட்டாள்கள் அடித்துக் கொண்டால் அதில் ஒரு அர்த்தம் இருக்கிறது. ஆனால் நாடாள்வோரே அடித்துக் கொள்கின்றனரே... அவர்கள் மனதில் புகுந்து அவர்களை ஏன் இவர் திருத்த மறுக்கிறார்?

இப்படி என் பகுத்தறிவு வேங்கடவனிடம் கேள்விகளை அடுக்கிக் குவிக்கத் தொடங்கிவிட்டது. குறிப்பாக அன்று மாலையில் சந்தித்த இருவர், 'சார்... ஒரு ஐநூறு ரூபா இருந்தா சாமி முன்னாடி உங்களைப் பத்து நிமிஷத்துக்கு நிறுத்த இங்க ஆள் இருக்கு...' என்று என்னிடம் பேசியது என்னை வெகுவாகவே பாதித்தது.

இத்தனை விஸ்தாரமாக நான் இங்கே பேசுவதற்கு காரணம் உள்ளது. என் கேள்விகள், நான் எவ்வளவு புத்திசாலி என்று காட்டுவதற்கான கேள்விகளே இல்லை. நிஜமாய் எனக்கு தாக்கம் ஏற்பட்டது. புத்தியும் கேள்விகளை கேட்டுக்கொண்டே போனது.

கேள்வி கேட்டால்தானே பதில் கிடைக்கும்?

அடுத்து அந்த மலையில் என் மகள் காணாமல் போனதையும் நான் ஒரு தற்செயல் சம்பவமாய் நினைக்கத் தொடங்கி விட்டேன். ஒரு மொட்டைக்கு நாலு மொட்டை கொடுக்க மறுத்திருந்தாலும் என் மகள் கிடைத்துதான் இருப்பாள். நாம் அவசரப்பட்டு விட்டோம் என்றெல்லாம் என் மனது என்னையே கேள்வி கேட்டு

கிழித்தெடுத்தது. ஐநூறு ரூபாய்க்கு ஒருவன் குறுக்கில் புகுந்து தரிசனம் முடித்து விட்டு வந்தேன் என்று சொன்னதும் என்னை கிள்ளியது. ஐநூறுக்கு ஐயாயிரம் தர முடிந்தால் பெருமாளை நீங்கள் தொட்டு மகிழலாம் என்றுகூட சொல்வார்களோ...? இப்படியும் கேள்விகள்.

அதேபோல நான் பெருமாளை தரிசிக்க வரிசையில் நின்றபோது அனைவரும் முண்டியடித்த செயல் என்னைப் பாதித்தது. பக்தி என்பது மனிதனை பண்படுத்தும் ஒரு விஷயம். ஆனால் இங்கே பாடாய் படுத்தும் விஷயமாக இருக்கிறதே! அடிப்படை ஒழுக்கம்கூட இல்லாமல் நசுக்கி, மூச்சுத்திணற வைக்கிறார்களே...? எங்கெங்கிருந்தோ நாட்கணக்கில் பயணித்து வந்துவிட்டு இங்கே நல்லவிதமாய் பிறருக்கு பாதிப்பு இன்றி சேவிக்காமல் அவசரம் காட்டி, இது என்ன சினிமா தியேட்டர் டிக்கெட் கவுண்டரில் அடித்து கொள்வது போல அடித்துக்கொண்டு...?

கோயில் நிர்வாகம் 'ஜெரகண்டி ஜெரகண்டி' என்று சட்டை காலரை பிடித்து இழுத்துத்தான் தள்ளட்டுமே, நாம் ஒருவர் மேல் ஒருவர் மோதாமல், கொள்ளாமல் அமைதியாக வரிசையில் சென்றால் அவர்களால் என்னதான் செய்துவிட முடியும்?

என்னைப் பாடாய்ப் படுத்திய இந்த கேள்விகளால் வேங்கடவனை பார்த்தபோது என் மனம் ஒன்ற மறுத்தது. ஒரு நபர் நூறு ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்றை தலைக்கு மேல் வேங்கடவன் பார்க்க வேண்டும் என்பதுபோல காட்டியபடியே நடந்தார். அது அவர் தொழில் தொடங்க வைத்திருக்கும் பணமாம். வேங்கடவன் பார்த்து, 'ரைட் ஓ.கே.' என்று கூறிவிட்டால் அந்தத் தொழில் தனக்கு லாபத்தை அள்ளித்தரும் என்பது அவர் எதிர்பார்ப்பு.

ஒருவர் திடீரென்று வெறிபிடித்தவர் போல 'கோவிந்தா கோவிந்தா' என்று கத்த ஆரம்பித்துவிட்டார்.

தீர்த்தம் வாங்கும் இடத்திலும் ஒரே தள்ளுமுள்ளு... அங்கே தீர்த்தம் தருபவர்கள் 'உம் கவனி' என்பது போல கையை நீட்டியபடியே இருக்கிறார்கள்.

அப்படியே சுற்றி வந்தால் உண்டியலில் பணம் போட ஒரு பெரும் கூட்டம். உலகத்திலேயே பணம் தருவதற்கு வரிசையில் நிற்பது திருப்பதி ஒன்றாகத்தான் இருக்கும். அந்த உண்டியலில் பணம் போட்ட ஒருவர் பணப்பையை உதறி, 'சல்லிப் பைசா பாக்கி இல்லப்பா... எல்லாத்தையும் போட்டுட்டேன்' என்கிற பாவனையோடுதான் அந்த இடத்தை விட்டே நகர்ந்ததையும் பார்த்தேன்.

எனக்குள் வியப்பு! அப்படியும் இப்படியுமாகப் பலப்பல கேள்விகள். எது பக்தி? என்பதில் குழப்பம். மேலும் ஆயாசம், கோபம், களைப்பு... என் மேலேயே எனக்கு வெறுப்பு வேறு, நான் புத்திசாலியா? முட்டாளா? என்கிற ஒரு சந்தேகம்... மொத்தத்தில் திருப்பதி யாத்திரை, எது ஆன்மீகம்? என்பதற்கு ஒரு பதில் தர என்னை எல்லா கோணங்களிலும் தயார் படுத்தியது என்றே கூற வேண்டும்.

இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தேன்! அது...?

14. ஏ பெருமாளே... நீ ஒரு கல்!

திருமலையில் ஏற்பட்ட அனுபவமும் கூடவே எனக்குள்ளே எழும்பிய கேள்விகளும் பெரிய அளவில் என்னை பக்தி செலுத்த விடவில்லை. இந்தக் கேள்விகளை நான் சில பெரியவர்களிடம் கேட்ட போது எனக்கு நிறைவாக எவரும் பதில் கூறவில்லை. 'காலம்

கலிகாலமாச்சே... அப்படித்தான் இருக்கும்...' என்றார் ஒருவர்.

''எந்தக் கோயில்ல தப்பு நடக்கலே... நீங்க என்னமோ திருமலைல மட்டும் நடக்கற மாதிரி பேசறீங்களே... சர்ச்சுல நடக்கிறதில்லையா? மசூதிகள்ள நடக்கிறதில்லையா?'' என்று சம்பந்தமே இல்லாமல் மற்ற மதத்தவர்களையும் வம்புக்கு இழுத்தார் இன்னொருவர்.

'நமக்கெதுக்கு சார் இந்தக் கேள்விகள். நாம் அவனை நம்புவோம்-மிச்சத்த அவன் பாத்துப்பான்' என்றார் மூன்றாமவர்.

ஒருவராவது என் கருத்தை ஆதரித்தோ, பாராட்டியோ பேச வேண்டுமே... ஊஹூம்!

இப்படி ஒரு நிலையில்தான் என் அலுவலகத்தில் எனக்கு மேலதிகாரியாக பணிபுரிந்த திரு.ரமேஷ் என்பவரால் சென்னை பெரம்பூரில் இப்போதும் இயங்கி வரும் வெங்கடேச பக்த சமாஜம் பற்றி நான் அறிய நேர்ந்தது.

திரு.ரமேஷ் 50,000-60,000 என்று சம்பாதிக்கும் ஒரு அதிகார வர்க்க பிரதிநிதி. ஆனபோதிலும் ஆண்டு தவறாமல் முறையாக விரதமிருந்து அவர் சமாஜம் மூலமாக திருப்பதிக்கு சென்னையில் இருந்து பாதயாத்திரையாக நடந்தே சென்று வருகிறார்! நான் அவரை சந்தித்தபோது அவர் கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் யாத்திரை செய்தவராக இருந்தார். எனக்கு அதுவே பெரிய ஆச்சரியமாக இருந்தது. ஆபீசிலும், வீட்டுக்குள்ளும் பெரும்பாலும் ஏ.சியில் இருந்து கொண்டு எங்கே போனாலும் காரில் போய் வரும் ஒரு அமைப்பை உடையவர், மெய் வருத்தத்தோடு திருப்பதிக்கு ஆண்டு தவறாமல் நடந்தே செல்வது எனக்கு ஆச்சரியத்தை மட்டுமல்ல, பெரிய அளவில் ஒரு அபிப்ராயத்தையும் உருவாக்கியது.

அதைவிட பெரிய ஆச்சரியம், அதிசயம் அவரைப்போல கிட்டத்தட்ட 250 பேர் யாத்திரை மேற்கொள்வதுதான். அவ்வளவு பேரும் வாழ்வில் ஒவ்வொரு விதத்தில் சீரோடும், சிறப்போடும் இருப்பவர்கள்.

எனக்கும், ரமேஷைப் பார்க்கவும் ஒரு வேட்கை உண்டானது.

நானும் ஒரு பாத யாத்திரை பிரியன்தான்! பழனிக்கும், திருச்செந்தூருக்கும் நான் பலமுறை சென்று வந்தவன். எனவே திரு.ரமேஷ் மூலமாக பெரம்பூர் சமாஜத்திற்கு அறிமுகமாகி நானும் மாலை போட்டுக்கொண்டு பாத யாத்திரைக்குத் தயாரானேன். ஆனால் திருமலையில் என் மகளை நான் தொலைத்து விட்டு பின் திரும்பக் கிட்டிய போது எனக்குள்ளே முளைத்த அவ்வளவு கேள்விகளும் அப்படியே தான் இருந்தன.

பாத யாத்திரை புரிவது பற்றி இன்று பல்வேறு கருத்துக்கள் உள்ளன. அதை ஒரு அலட்டலான பக்தியாகவும், ஆர்ப்பாட்ட பக்தியாகவும் கருதும் சிலரும் உள்ளனர்.

'அந்த காலத்துல கார், பஸ் கிடையாது-நடந்தே போனாங்க. இந்தக் காலத்துல இதெல்லாம் இருக்கும்போது என்னங்க தலை எழுத்து...?'' என்று கேட்பவர்களில் தொடங்கி, ''கடவுள் ஒன்றும் இப்படி எல்லாம் நம்மை வரச் சொல்லவில்லை. இது நாமாக முட்டாள்தனமாய் இழுத்துப் போட்டுக்கொண்டு செயல்படுவது' என்பது வரை பலவித கருத்துக்கள் இந்த பாத யாத்திரைக்கு பின்னாலே இருக்கிறது உண்மைதான்... இந்த கருத்துக்களிலே எனக்கும் மாறுபாடு கிடையாது.

ஆனால் நான் பாதயாத்திரையை முற்றிலும் வேறு கோணத்தில் பார்க்கிறேன். பாதயாத்திரை புரியும்போது

நான் கிட்டத்தட்ட ஒரு சன்யாசி! ஒரு காவி வேட்டியும், காவித் துண்டும் மட்டுமே என் உடை! மற்றபடி என்னிடம் எதுவும் கிடையாது... இதோடு நான் நிலத்தை அளந்தபடி நடக்கும்போது ஏராளமான காட்சிகள்! காரில், பஸ்ஸில் போகும்போது வேகமாக நம் கண்ணில் பட்டு மறைந்து விடும் காட்சிகள், நடந்து செல்லும்போது நிதானமாக கண்களில் பட்டு வழியும். அதுமட்டுமல்ல, பூகோள ரீதியாக ஒரு ஊருக்கு இன்னொரு ஊர் இருக்கும் விதமும், மக்களின் வாழ்வியல் முறைகளும் வியப்பளிப்பதாக இருக்கும். இதைப்பற்றி முன்பே நிறையக் குறிப்பிட்டுள்ளேன். எல்லாவற்றுக்கும் மேலாக யாத்திரைக்கு நடுவில் ஓய்வாக அமர்ந்திடும் சில நிமிட நேரப் பொழுதுகள் உண்மையில் எது சுகம்? என்பதற்கு அர்த்தம் கூறுவதாக இருக்கும்.

நம்மோடுதான் இருக்கிறது. நமது உடம்பு. ஆனால் நமது உடம்பில் எந்த பாகத்திற்கு பலம் அதிகம்? எதற்கு சக்தி குறைவு? என்பது நமக்கே தெரியாது. அதை எல்லாம் இந்த யாத்திரை துல்லியமாகக் காட்டிக்கொடுக்கும்.

உடம்பின் ஒவ்வொரு பாகமும் நம்மோடு பேசும். தெரு முக்கில் இருக்கும் பெட்டிக் கடைக்குக் கூட டூ வீலரில் போன உடம்பு இப்படி யாத்திரைகளின் போது தேங்கிப் போன கொழுப்பு கரைவதை உணரும்.

நடப்பதை ஒரு சர்வ சாதாரண விஷயமாகக் கருதி பல பேர் பாத யாத்திரைகளில் பங்கு கொள்வது உண்டு. அவர்களெல்லாம் 20வது கிலோ மீட்டரிலேயே கலகலத்துப் போய்விடுவார்கள். 'ஐயோ, நடப்பது என்பதே இவ்வளவு கொடிய விஷயமா? இது தெரியாமல் சவடாலாக பேசிவிட்டு வந்து விட்டேனே!' என்று மனதுக்குள் துடிப்பார்கள். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை.

உண்மையில் நமக்கிருக்கும் உடல் சக்திக்கு இந்த உலகத்தையே கால்களால் நடந்து கடக்க முடியும்.

அந்த நாளில் ஞானி ராமானுஜர் திருவரங்கத்தில் இருந்தும், காஞ்சியில் இருந்தும் திருக்கோஷ்டியூருக்கு நடந்துதான் வந்தார். அப்போது திருக்கோஷ்டியூரில் நம்பி என்பவர் வைணவ குருவாக இருந்து வைணவர்களை வழிநடத்திக் கொண்டிருந்தார். அவரிடம் சிஷ்யனாகச் சேர்ந்து தானும் ஒரு வைணவச் செம்மல் ஆகவேண்டும் என்பது ராமானுஜரின் விருப்பம். அதற்காக அவர் ஒவ்வொரு முறை வந்த போதும் அவரைத் திருப்பி அனுப்பியவர் நம்பி. இறுதியாக 18வது முறை ராமானுஜர் வரவும் அவரை சிஷ்யராக ஏற்றுக்கொண்டார். இதற்குப் பின்னாலே சுவையான அரிய பல சம்பவங்கள் உண்டு.

இதிலே இங்கே நாம் கவனிக்க வேண்டியது ஒன்றைத்தான். காஞ்சிபுரம் எங்கே இருக்கிறது. திருக்கோஷ்டியூர் எங்கே இருக்கிறது? ஆனால் ராமானுஜர் சளைக்கவில்லை. அவர் ஒரு பரம சாது எனவே குதிரை மேல் வருவதோ, இல்லை மாட்டுவண்டிகளில் பயணிப்பதோ, அவருக்கு ஆகாத விஷயங்கள்.

நடந்தேதான் வந்தார். அது மட்டுமா? மாபெரும் ஞானியாக அவர் மாறிவிட்ட நிலையில் அவர் திருப்பதிக்கும் நடந்தேதான் சென்றார். அவர் மட்டுமா? சைவ சிந்தாந்தத்தில், 'நால்வர்' என்று போற்றப்படும் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர் போன்றோர்களும் நடந்தேதான் உலகம் முழுக்கச் சுற்றி வந்தனர். அதிலும் திருநாவுக்கரசர் அவர்கள் கைலாய மலை எனப்படும் இமய மலைக்கே கால் தேய நடந்துதான் சென்றார்.

எனவே நடப்பது என்பது நமது சமுதாயத்தில் ஒரு புதிய விஷயமோ, அரிய விஷயமோ கிடையாது. ஆனால் வாகன கலாச்சாரம் இன்று நம்மை தலைகீழாக மாற்றிவிட்டது. கால்கள் இருப்பது என்பதே வீட்டுக்குள் மாடிப்படி ஏறி, இறங்க மட்டுமே என்று நாம் நினைக்கும் அளவுக்கு நம்மை சோம்பேறிகளாக்கி விட்டது. இதனால் உடம்பும் கொழுத்து ஊளைச் சதை போட்டு நாம் ஒவ்வொருவருமே மாமிசக் குன்றுகளாகத்தான் நடமாடுகிறோம்.

நடப்பதை ஒரு மருத்துவச் செயலாக கருதும் அளவு கெட்டுக் கிடக்கிறோம். மருத்துவர்கள் உடம்பைக் குறைக்க முதலில் சொல்வதே நடப்பதைத்தான். வியர்க்க விறுவிறுக்க கை, கால்களை வீசி நடக்கச் சொல்கின்றனர். இதனால் அதிகாலை வேளையில் இன்று ஒரு பெரும் கூட்டம் 'ஜாகிங்' என்ற பெயரில் நடந்து செல்வதையும் பார்க்கிறோம்.

நடப்பதை இப்படி அபூர்வப்படுத்திவிட்ட ஒரு காலத்தில் நடந்தே நீண்ட தூரம் செல்லத் துணிவது ஒரு நல்ல விஷயம். ஆனால் உடம்பைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நாம் வளைக்க முடியும். அது ஒரே நாளில் நம் வசம் வந்து விடாது. அதனால்தான் வீராவேசமாக நடையின் தன்மை பற்றி அறியாமல் சிலர் யாத்திரைகளில் கலந்து கொண்டு அவதிக்கும் ஆளாகி பாதி வழியிலேயே பஸ் ஏறி விடுகின்ற கொடுமைகள் நடக்கின்றன. ஒரு பாத யாத்திரை மேற்கொள்வதற்கு பின்னாலே இப்படிப் பல விஷயங்கள் இருக்கும் போதிலும் என் வரையிலும் அது எனக்கு அன்னியமில்லை. அடிப்படையில் ஓர் எழுத்தாளனான எனக்கு அனுபவங்களை அள்ளித் தரும் ஓர் அற்புதமாகும்.

எனவேதான் நானும் பங்கு கொண்டேன். 1997... இந்த ஆண்டுதான் என் முதல் திருமலை பாதயாத்திரை தொடங்கியது. இந்த 2009 வரை இடைவிடாது சென்று வருகிறேன். இந்த வருடம் எனக்கு 13வது யாத்திரை. அந்த முதல் யாத்திரைக்கு திரும்பச் செல்வோம்... திருமலையில் எனக்குள் எழும்பிய கேள்விகளும் அப்படியே இருந்திட அந்த முதல் யாத்திரையில் எனக்கு அவைகளுக்கு விடைகள் கிடைக்க ஆரம்பித்தது.

முதல் யாத்திரை இரண்டாவது யாத்திரையைவிட மூன்றாவது யாத்திரைதான் சூப்பர்! நானும், என் நண்பரும் சன்னதிக்குள் சென்று அந்த வேங்கடவனை வணங்க வில்லை. காரணம் அப்படி ஒரு தள்ளுமுள்ளு-அப்படி ஒரு நெருக்கடி!

என் மனம் உடைந்து போனது. சென்னையில் இருந்து நடந்தே வந்திருந்ததால் நெஞ்சு நிறைய கர்வமும், கோபமும் பொங்கி வழிந்தன.

"ஏ பெருமாளே... நீ ஒரு கல்! உன்னை நம்பும் அவ்வளவு ஜனங்களும் மூடர்கள். இப்படி ஒரு பக்திக்கு இடம் தரும் நீயும் ஒரு கடவுளா?

உன்னை கூட்டம் இன்றி, உண்டியல் அது இது என்கிற சங்காத்தங்கள் இன்றி ஒருவரால் ஏகாந்தமாக சேவிக்கவே முடியாதா?

நீ அற்புதங்கள் சாதித்ததெல்லாம் கதைகளில் மட்டும்தானா? இப்பொழுது உண்மையில் நீ இருக்கிறாயா-இல்லையா? உன்னை கேள்வி கேட்க என்னிடம் பக்தியின் பேராலே உணர்வும் கால்கடுக்க நடந்து வந்ததன் பேராலே உரிமையும் உள்ளது.

இந்த நாளில் ஓர் ஏழை பக்தனுக்கு உன் தரிசனம் என்பது எட்டாக்கனியா? காசு இருந்தால்தான் சேவையா? ச்சே...'' என்று மனது நொந்து வருந்திவிட்டு திரும்பி விட்டோம். ஏற்கனவே மனதுக்குள் பல கேள்விகள்-போதாதக்குறைக்கு இப்படி ஒரு வருத்தம் வேறு.

அந்த ஏழுமலையானும் இதற்கு மேல் கல்லாக இருப்பதில் அர்த்தமில்லை என்று முடிவு செய்தான். எனக்கும், நான் எழுப்பிய அவ்வளவு கேள்விகளுக்கும் பதில் அளிக்கத் தயாரானான்.

அதற்கு முன் நான் ஆசைப்பட்ட அந்த ஏகாந்த தரிசனத்தையும் கொடுத்தான்!

இன்று நான் நினைத்தாலும் என் ரோமக் கால்கள் சிலிர்க்கின்றன! அது...!

15. நீ கேட்டதை அளித்துவிட்டேன்; நான் அளித்தது உனக்கு தெரியவில்லை!

பெரம்பூர் வெங்கடேச பக்த சமாஜத்தின் பாதயாத்திரை முடிந்து ஒருவழியாக வீடு திரும்பினேன். பார்க்கின்றவர்கள் எல்லாம் 'திருமலையில் கூட்டம் எப்படி? தரிசனம் நல்ல விதமாய்க் கிடைத்ததா?' என்றே கேட்டனர். எனக்கு எரிச்சலாக இருந்தது.

''நான் முதல்வரோ, கவர்னரோ குறைந்தபட்சம் நாடறிந்த ஒரு சினிமா நடிகனோ இல்லை. எனவே எனக்கெல்லாம் பெருமாள் தரிசனம் என்பது மின்னல்

மாதிரிதான்!'' என்று எரிச்சலுடன் என்னிடம் கேட்டவர்களுக்குப் பதில் கூறினேன்.

நான் நேசமுடன் பழகும் சில எழுத்தாளர்களில் சிலர் கம்யூனிச சித்தாந்தத்தில் நம்பிக்கை உடையவர்கள். அவர்களுக்கு என்னை மிகப் பிடிக்கும். ஆனால் எனது பக்தி, அப்புறம் இந்த மாதிரி பாதயாத்திரைகளைத்தான் அவர்களுக்கு கொஞ்சமும் பிடிக்காது. என்னை ஆச்சரியமாகப் பார்ப்பார்கள். 'ஒரு எழுத்தாளனா இருந்துகிட்டும் எப்படி சார் உங்ககிட்ட பக்தி இருக்குது? புரியவில்லையே!' என்பார்கள். எனக்கும் அவர்கள் கேள்வி புரியவில்லை.

'எழுத்தாளனாக இருந்தால் பக்திமானாக இருக்கக்கூடாதா! இது என்ன கணக்கு?' என்று நானும் கேட்டுக் கொள்வேன். பிறகு எனக்கு நானே சில சமாதானங்களையும் செய்து கொள்வேன். நானறிய வெகு சில எழுத்தாளர்கள் நீங்கலாக, குறிப்பாக முற்போக்கு எழுத்தாளர்கள் என்று இலக்கிய உலகம் குறிப்பிடும் சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன் உட்பட எவரிடமும் நான் மதச் சின்னங்களையோ, பக்தி பூர்வமான பேச்சு மற்றும் எழுத்துக்களையோ நான் உணர்ந்ததில்லை. திரு.நா.பார்த்த சாரதி, நான் நெருங்கிப் பழகிய எழுத்தாளர்களில் ஒருவர். அவர் பக்திச் சொற்பொழிவுக்கு அவரோடு துணையாக வெல்லாம் போயிருக்கிறேன். ஆனால் அவர்கூட சின்னங்கள் தரித்து நான் பார்த்ததில்லை.

இதிலிருந்து சார்புகளை மனதுக்குள் மட்டுமே ஒரு எழுத்தாளன் வைத்துக் கொள்ள வேண்டும். அதை பிறர் உணரும்படி காட்டினால் அவனை ஒரு பிற்போக்காளனாகத்தான் சிந்தனையாளர்கள் என்பவர்கள் கருதுவார்கள் என்பதுதான் நான் இறுதியாக புரிந்து கொண்ட விஷயம்.

விஷயத்திற்கு வருகிறேன்!

திருப்பதியில் நேரிட்ட தரிசன அனுபவம் என்னை பக்தியிலிருந்து விலக்கத் தொடங்கியது. ஒரு சிறு ஒழுங்கும் இல்லாமல் முட்டி மோதிக்கொண்டும், அந்த பாலாஜியை வெகுவான சுயநலத்தோடும், பொன்-பொருள் வேண்டியும் அணுகும் அந்த அணுகுமுறை அர்த்தமற்றது என்று பட்டது. வெகுஜனம் எப்பொழுதுமே இப்படித்தான் என்று ஒரு பதில் தோன்றியது.

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு!' இவர்கள் சார்ந்ததல்ல... இவர்கள் வடிவத்தால் மட்டுமே மனிதர்கள் என்னும் எண்ணங்கள் கொப்பளித்தன. இப்படி பக்தி செய்வதற்கு, செய்யாமல் இருப்பது ஆயிரம் மடங்கு மேல் என்று தோன்றியது.

அன்பாக இருக்க வேண்டும்.

உண்மையோடு இருக்க வேண்டும், ஒழுக்கமுடன் திகழ வேண்டும்-இது போதும்!

எதற்குக் கடவுள்? அவர் இருந்தால் என்ன..? இல்லாது போனால்தான் என்ன? இதற்கெல்லாம் மீறி பக்தி உணர்வு மேலிட்டால் கூட்டமே இல்லாத இடிந்த கோயில்களுக்குப் போவோம். எங்கும் நிரம்பியுள்ளவன் அங்கு மட்டும் இல்லாது போவானா என்ன?

இப்படியாக முடிவுகள் செய்து கொண்டு, என் எழுத்துப் பணியில் மூழ்கிப் போனேன். நெற்றித் திலகத்தையும் விட்டுவிட்டேன். என் எழுத்தாள நண்பர்கள் ஆச்சரியப்பட்ட போது அவர்களிடம் திருப்பதி அனுபவத்தைக் கூறி அப்படி பக்தி செய்வதற்கு செய்யாமல் இருப்பது மேல் என்கிற முடிவிற்கு வந்துவிட்டதை கூறியபோது 'இப்பதான்யா ஒரு முழு எழுத்தாளனா நீர் மாறியிருக்கிறீர்' என்றனர்.

மதுரை திரும்பிய நிலையில், இரண்டு நாட்கள் சென்றுவிட்ட நிலையில் எனக்கு ஒரு டெலிவிஷன் சீரியல் நிமித்தம் ஹைதராபாத்தில் இருந்து அழைப்பு வந்தது. இயக்குநர் சண்முகம் என்பவரும், நானும் மறுநாளே சார்மினார் எக்ஸ்பிரஸில் புறப்பட்டுப் போனோம்.

ஆந்திராவின் புகழ் மிகுந்த திரைப்படத் தயாரிப்பாளர் திரு.ராமாநாயுடு அவர்களின் புதல்வர் திரு.சுரேஷ் அவர்கள்தான் எங்களை ஒரு தெலுங்கு சேனல் பொருட்டு அழைத்து கதை கேட்டார். நானும் 'நாகா' எனும் பெயரில் ஒரு கதையை கூறினேன். அன்று வியாழக்கிழமை! மறுநாள் வெள்ளிக்கிழமையானதால், மறுநாள் அட்வான்ஸ் தருவதாகவும் இன்னும் ஒருநாள் தங்கி இருங்கள் என்றார். நானும், சண்முகமும் சம்மதித்தோம். அப்படியே நான் ஹைதராபாத்திற்கு முதல்முறையாக வந்திருக்கிறேன் என்பதை அறிந்துகொண்ட திரு.சுரேஷ் 'இங்கே நீங்கள் பார்க்க பல இடங்கள் உள்ளது. நாளை காலை ஆறு மணிக்கெல்லாம் கார் அனுப்பி விடுகிறேன். பிர்லா மந்திர், சார்மினார், புத்தர் சிலை உள்ள ஏரி என்று எல்லா இடங்களுக்கும் போய்விட்டு பத்து மணிக்குள் வந்துவிடுங்கள்' என்றார்.

அதேபோல மறுநாள் காலை ஆறு மணிக்கெல்லாம் கார் வந்துவிட்டது. சண்முகம் நல்ல தூக்கத்தில் இருந்தார். முதல்நாள் இரவு உறங்கப் போகும்போதே 'இந்திரா, நீங்க மட்டும் போய்ட்டு வாங்க. இந்த இடத்துக்கெல்லாம் நான் பலமுறை போயிருக்கேன்' என்று கூறிவிட்டிருந்தபடியால் நான் மட்டும் கிளம்பினேன். கார் முதலில் பிர்லா மந்திர் நோக்கிச் சென்றது!

ஹைதராபாத் நகருக்குள் ஏ.சி. காருக்குள் சொகுசாக வேடிக்கை பார்த்தபடி நான்... என் எண்ணங்கள் சற்று பின்னோக்கிச் செல்லத் தொடங்கின!

கடந்த வெள்ளிக்கிழமை இதே நேரம் திருமலையில் கூட்டத்தில் சட்னியாய் அரைபட்டபடி நடந்தது நினைவுக்கு வந்தது!

காரும், பிர்லா மந்திரில் சென்று நின்றது!

டிரைவர் 'இப்படியே மேல போங்க சார்... நான் கார்கிட்ட இருக்கேன்' என்று கூறிவிட நான் மட்டும் ஒரு சிறிய மலைமேல் இருக்கும் அந்த பிர்லா மந்திருக்குள் நுழைந்தேன்.

சத்தியமாய்ச் சொல்கிறேன். பிர்லா மந்திர் ஒரு வழிபாட்டுத் தலம் என்பதோ, அங்கே அந்த திருமலையானுக்கு கோயில் இருப்பதோ எனக்குத் தெரியவே தெரியாது! ஒருவர்கூட சொல்லவும் இல்லை. சொல்லிக்கொள்ளும் ஒரு சூழலும் வாய்க்கவில்லை. உள்ளே செல்லச் செல்ல ஆச்சரியமாக இருந்தது.

ஒருவர் என்றால் ஒருவர்கூட இல்லை. எங்கு பார்த்தாலும் பளிங்கு... தரை, சுவர், மேலே உத்திரம் என்று அவ்வளவும் பளிங்குக் கற்கள். மெல்லிய பனி சூழ்ந்த காலைப்பொழுது. ஹைதராபாத், எட்டுமணிக்குதான் ஊரே கண்விழிக்கும் என்பதெல்லாம் எனக்குத் தெரியாத உண்மைகள்.

கோயிலுக்குள் ஒருவித பிரமிப்புடன் நடக்கிறேன்.

அவ்வளவு தூய்மை! கடந்த வெள்ளிக்கும், இந்த வெள்ளிக்கும் தான் எத்தனை வேற்றுமை? கேள்வி எழுகிறது. அப்போது நான் கேட்ட கேள்வியும் மனதுக்குள் எழும்புகிறது. 'உன்னை ஆளரவமே இன்றி ஏகாந்தமாக சேவிக்க வழியே இல்லையா? நீ அதிகாரம் படைத்தவர்களுக்கும், பணக்காரர்களுக்கும் மட்டும்தானா? உண்டியல் இல்லாத, 'ஜரகண்டி' சப்தம் இல்லாத ஒரு

சூழலில் உன்னைச் சேவிப்பது இந்த ஜென்மத்தில் சாத்யமே இல்லையா?"

இப்படியாக நான் கேட்ட கேள்விகள் அப்படியே வரிசையாக அணிவகுக்கின்றன.

எதிரில் அந்த வேங்கடவன் சன்னதி! திருமலை சன்னதியை விடவும் ஒளியோடு... அலங்காரத்தோடு... ஆகிருதியோடு... சன்னதியிலும் பட்டர் இல்லை.

இது என்ன ஆச்சர்யம்?

கோயில் திறந்திருக்க பட்டர் எங்கே போனார்?

எனக்கு ஏகாந்த தரிசனம் தரும் வேங்கடவனை தரிசிப்பது பின்னால் போய் இந்த மாதிரிக் கேள்விகள் தான் முன் எழும்பின!

இது எவ்வளவு பெரிய பிழை!

'நீ கேட்டதை நான் அளித்துவிட்டேன். ஆனால் நான் அளித்தது உனக்குத் தெரியவில்லையே...' என்று வேங்கடவன் நினைப்பதாக பிறகுதான் நான் மெல்ல உணர்ந்தேன்.

மனமாயை அங்கே வேறுமாதிரியாகவும் கேள்விகளைக் கேட்டது.

ஒருவேளை இங்கே உள்ள சாமிக்கு சக்தி குறைவோ? அதனால்தான் கூட்டமே இல்லையோ?

ஐய்யோ... என்ன பேதமை-இந்த உலகம்தான் என்னை எப்படியெல்லாம் கெடுத்து வைத்திருக்கிறது.

நானே விழுந்தேன்... நானே எழுந்தேன்!

இப்படியும் கூட சொல்லலாம். விழச் செய்தான்... எழவும் செய்தான்... அனைத்தையும் காட்டினான். புரியவைத்தான். இரவென்றால் பகலென்ற ஒன்று

இருப்பதைப்போல பக்தி என்றால் அதற்கு எதிராக யுக்தி, நம்பிக்கை என்றால் அதற்கு எதிராக நம்பிக்கை இன்மை... எல்லாமே ஒன்றுதான்!

அங்கே கூட்டம்! இங்கே அமைதி! அங்கே ஆரவாரம்! இங்கே ஏகாந்தம்!

அது அந்த இடத்து லட்சணம்! இது இந்த இடத்து லட்சணம்!

அது உயர்ந்தது-இது தாழ்ந்தது என்பதெல்லாம் மாயை காரணமாக நாம் கற்பித்துக் கொள்வது... எல்லாம் நிலைப்பாடுகள்! அவ்வளவுதான்!

ஓர் அரைமணி நேரம் அப்படியே நின்று விட்டேன். பிறகே பட்டர் வந்தார். ஆச்சர்யமாகப் பார்த்தார்.

தமிழ் அவருக்குத் தெரியாதோ என்று ஆங்கிலமும் அரைத் தெலுங்கும் கலந்து பேசினேன். 'எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று கேட்டார். சொன்னேன்.

"ஓ தமிழ்நாடா... எனக்கு கூட ஸ்ரீரங்கம்தான்" என்று நொடியில் நெருங்கி விட்டார். பக்கத்திலேயே தங்குமிடம் சன்னதியைத் திறந்து முதல் பூஜையை முடித்துவிட்டு ஜாகைக்குச் சென்று சந்தியாவந்தன கர்மத்தை முடித்துவிட்டு வந்ததாகச் சொன்னார். இது தனியார் கோயில். எனவே இங்கே உண்டியல் வசூல், தட்டு வசூல் எல்லாம் கிடையாது என்றார். நிறைய பிரசாதம் தந்தார்.

எனக்கு வைகுண்டத்தில் இருந்தது போலவே இருந்தது. எனது கோபம், ஆவேசம், அவ்வளவும் போன இடம் தெரியவில்லை. முன்பைவிட பக்தியிலும் ஒரு புதிய பலம் பெருகியது போல் ஓர் எண்ணம்!

தேடுபவர்களுக்கே கிடைக்கும்-என்பது எவ்வளவு உண்மை? கடவுள் பார்த்துக் கொண்டே இருக்கிறார் என்பதும் எவ்வளவு பெரிய உண்மை...?

16. என்னையே எனக்குக் கொடு!

கடந்த 15 அத்தியாயங்களாக எனது யாத்திரை அனுபவங்களை உள்ளது உள்ளபடியும், என்னுள் தோன்றியபடியும் கூறி வந்திருக்கிறேன்.

நானொன்றும் வைணவச் செம்மலான ஸ்ரீ ராமானுஜம் போன்றோ, காஞ்சிப் பெரியவர் போன்றோ இறை தேடி அலைந்த மகா பக்தனில்லை.

பெயருக்கும், புகழுக்கும் ஆசைப்பட்டு கதை கட்டுரை எழுதும் ஒரு எழுத்தாளன். மணமாகிப் பிள்ளைகள் பெற்றுவிட்ட ஒரு கிரகஸ்தன். பிராம்மண ஜாதியில் பிறந்துவிட்டபடியாலே அதன் அனுஷ்டானங்களை பின்பற்றுபவன். அதே சமயம் 'எம்மதமும் சம்மதம்' என்கிற கருத்தையும் ஏற்றுக்கொண்டு எல்லோருடனும் இணக்கமாய் இருந்து வரும் ஒருவன்.

மொத்தத்தில் ஒரு சாமான்யன்!

இந்த சாமான்யனுக்குத்தான் இப்படி எல்லாம் அனுபவங்கள் நேரிட்டன. இதில் எனக்கேற்பட்ட தெளிவும், புரிதலும் தான் பிரதானம்.

இறைபக்தி என்பது எப்படிப்பட்டது? அது ஒரு மனிதனிடம் இருந்தால் அவன் எப்படி மேன்மை அடைகிறான்? அல்லாத பட்சத்தில் அவனுக்கு ஏற்படும் பாதிப்புகள் எப்படிப் பட்டதாக இருக்கும் என்பதை எல்லாம் என்னாலே உணர முடிந்தது.

'இத்தனை யாத்திரைகள் புரிந்து இறை தரிசனங்கள் கண்ட எனக்கு என்ன கிடைத்தது...? நான் சாதித்தது என்ன?' என்பது இறை மறுப்பாளர்கள் சிலரது கேள்வி. சில பக்தர்களேகூட கேட்டுள்ளனர்.

"கோவில், கோவிலா ஏறி இறங்கி நீங்க கண்டது எதை சார்...? உங்க வீட்டுல தேனும் - பாலும் பெருக்கெடுத்து ஓடுதா...? குறைந்தபட்சம் கடன் எதுவும் இல்லாம இருக்கீங்களா? போகட்டும், நோய் நொடி இல்லாம உங்க விருப்பப்படி பிள்ளை குட்டிகளோட வாழற ஒரு அமைப்பாவது இதனால ஏற்பட்டிருக்கா?" என்பதுதான் இவர்களின் கேள்விகளின் சாராம்சம்!

இந்தக் கேள்விகளை கூட ஒரு கணக்கில் எடுத்துக் கொண்டு விடலாம்.

"சார்... பன்னெண்டு பிராந்திக் கடை போதாததுக்கு சீட்டாட்ட கிளப் வேற-இது போக கடத்தல் தொழில்னு பண்ண ஒருத்தர் சாமி பத்தி எல்லாம் யோசிக்கிறதே இல்லை. இவர்லாம் எப்படி சார் நல்லா இருக்கார்? நிஜமா கடவுள் இருக்காரா சார்...?" என்று ஒரு கேள்வி.

"எனக்குத் தெரிஞ்சு கடவுள் இல்லைன்னு சொல்றதோட கடவுளைப் பற்றியே நினைக்காம வாழ்ந்துக்கிட்டிருக்கிற ஒருத்தர் பெரிய பதவியில் இருக்கார்... அவர்கிட்ட கடவுள் நம்பிக்கை உள்ளவன்லாம் அந்த பதவிக்காக மடங்கிப் போறான். கடவுள் இல்லேங்கற இவர் ஒண்ணும் கெட்டுப் போயிடல. நான் தெரியாமதான் கேக்கறேன். எதுக்கு பக்தி?" என்றும் ஒரு கேள்வி.

இப்படி என்னை நோக்கி பல கேள்விகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு சிந்தனையாளனாக, எழுத்தாளனாக, மேடைப் பேச்சாளனாக பல பரிமாணங்கள் கொண்டவனாக இருக்கும் நான். இந்தக் கேள்விகளை எல்லாம் புறந்தள்ளி விட்டு போய்க்கொண்டே இருப்பதில் அர்த்தமில்லை என்றே தோன்றுகிறது.

இவை ஒன்றும் விடையில்லாத கேள்விகள் இல்லை! தீர்க்கமாகவும், ஆழமாகவும் சிந்தித்தால் மிகச் சரியான விடைகள் இவைகளுக்கெல்லாம் இருக்கவே செய்கின்றன!

பகவான் ராமகிருஷ்ணர் எதிர்கொள்ளாத கேள்விகளா?

இவர்களது கேள்விகள் என்னை ஒன்றும் அசைத்து விடவும் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் தெளிவாக விளங்கியது.

கடவுளை ஒப்புக்கொண்டு வழிபாடுகள் செய்கிறவர் களிடமும் பிழை உள்ளது-மறுப்பவர்களிடமும் பிழை உள்ளது என்பதுதான் அது!

ஒப்புக்கொண்டு வழிபடுகின்ற பலர், கடவுளை ஏதோ ஒரு பேரரசனைப் பார்ப்பது போலத்தான் பார்க்கின்றனர். அரசன்தான், ஒருவன் தன்னிடம் எவ்வளவு பணிவாக நடந்து கொள்கிறான்-தன்னை எந்த அளவு துதி செய்கிறான்-தனக்கு எவ்வளவு கட்டுப்பட்டு நடக்கிறான் என்றெல்லாம் பார்த்து, அதற்கேற்ப அவர்களுக்கு பொன்னோ இல்லை பொருளோ, அதுவுமில்லை பதவிகளோ அளிப்பான். நானறிந்தவரை நல்லாட்சி புரிந்த பல அரசர்கள் இந்த பணிவு, துதி, கட்டுப்பாடுகளை எல்லாம் கூட பெரிதாகக் கருதியதே இல்லை. காரணம்... இவைகளெல்லாம் தன்னை ஏமாற்றி விடக்கூடியவை என்கிற ஞானம் அந்த அரசனுக்கு இருந்ததுதான்.

இப்படி கடவுளை அரசனாகக் கருதித் துதிப்பவர்கள்தான், தாங்கள் கேட்டது தங்களுக்குக் கிடைக்காதபோது, கடவுளுக்குக் கண்ணில்லை என்று திட்டவும் செய்கின்றனர்.

கடவுளே இல்லை! என்பவர்களுக்கோ, அவன் கண்ணுக்குப் புலனாகாத ஒரு பெரும் கேள்வியாக

இருக்கிறது. அவன் இருக்கிறான் என்றால் காட்சி தருவதற்கென்ன?

ஒருநாள் ஒரு சில விநாடிகள் விண்ணில் தோன்றி, 'எல்லோரும் ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் நிச்சயம் தண்டிக்கப்படுவீர்கள்' என்றால் யாருக்காவது தவறு செய்ய மனம் வருமா? அப்புறம் இந்த உலகில் தான் நாத்திகம் என்று ஒன்று இருக்க முடியுமா? என்று கேட்கின்றனர்.

-இப்படித்தான் இருக்கிறது ஆத்திகமும் நாத்திகமும்!

இதற்கு நான் பதில் சொல்வதை விட காஞ்சிப் பெரியவர் சொன்ன ஒரு கருத்தை அப்படியே முன்மொழிய விரும்புகிறேன். அவரது 'தெய்வத்தின் குரல் முதல் பாகத்தில் பக்கம் 545 ல் 'பக்தி செய்வது எதற்காக?' என்னும் தலைப்பில் அவரது உரை இடம் பெற்றுள்ளது.

அதில் "எப்போது பார்த்தாலும் காரியம் செய்து கொண்டிருப்பதே நமக்கு இயல்பாகிவிட்டது. உடம்பால் காரியம் செய்யாத போதும், வாக்கால் பேசி காரியம் செய்யாத போதும்கூட நம் மனசு சதா எதையாவது நினைத்துக் கொண்டே இருக்கிறது. இதுவும் ஒருவிதத்தில் காரியம்தான்!

இந்த காரியம் நின்றால்தான்... அதாவது மனசில் எண்ணமே தோன்றாமல் இருந்தால்தான் எந்த காரியமும் இல்லாத பிரம்ம நிலையை அடைய முடியும்.

ஆனால் மனதால் அதை அவ்வளவு சுலபமாக சாதிக்க முடிவில்லையே. மனதை அடக்கி, அதை எண்ணங்களற்ற வெறும் கூடாக ஆக்குவது என்பது லேசான விஷயமா என்ன?

'நான் இப்போது எந்த எண்ணமும் இல்லாமல் நிர்மலமாய் இருக்க விரும்புகிறேன்' என்பதே ஒரு எண்ணம்தானே?

இதை சாதிக்க எது வழி? ஒரே வழிதான்... பக்தி புரிவதுதான் அது.

காரியம் இல்லாத பிரம்மத்தை புரிந்து கொண்டு பிரம்மமாக எண்ணங்கள் அற்றுப் போக வேண்டும் அல்லது பிரியத்தை செய்கிற அல்லது இந்த உலகத்தை இயக்குகிற ஈசுவரனாக இருக்கிறதல்லவா? அந்த ஈஸ்வரனை விடாமல் சிந்திக்க வேண்டும்.

அதாவது சித்தம்-செயல்-வாக்கு என்று எல்லாவற்றிலும், 'ஈஸ்வரா... ஈஸ்வரா...' என்கிற பக்திப் பெருக்கு வேண்டும்.

அப்போது அந்த ஈஸ்வரனே பிரம்மத்திடம் கொண்டு சேர்த்து விடுவான்.

பக்தி செய்பவர்களுக்கு தூய்மையான அன்பு மிக முக்கியம். அன்பில்லாத பக்தி ருசியில்லாத பதார்த்தம் போன்றது!"

என்று பக்திக்கு பெரிய விளக்கமே தருகிறார். இப்படி என்னதான் பக்தி குறித்து பட்டுத் தெரித்தாற் போல் விளக்கினாலும் வாழ்க்கைப் பாட்டுக்கே திண்டாடும்போது அதாவது ஒரு வாய் சோற்றுக்கே அல்லாடும்போது ஒருவரால் எப்படி பக்தி செய்ய முடியும்? அவன், "தன்னைப் படைத்த இறைவனிடம், "அதைக்கொடு...இதைக்கொடு..." என்று பிரார்த்திப்பது எப்படி தப்பாகும்" என்றும் ஒரு கேள்வியை கேட்கின்றனர்.

இதற்கும் பெரியவர் அழகாய் பதிலளிக்கிறார்.

'நம் கஷ்டத்தை ஈஸ்வரனிடம் சொல்கிறபோதே அவனுக்கு அது தெரியாது என்று நாம் நினைப்பதாக

ஆகிறது. அதாவது அவன் அனைத்துமானவன் அனைத்தையுமறிந்தவன் என்பதை மறந்தோ அல்லது புரியாமலோ பக்தி செய்கிறோம். இது எப்படி உண்மையான பக்தி ஆகும்? இப்படிப் பார்த்தால் நாம் கேட்டால் தான் அவன் தருவான் என்றோ இல்லை கேட்காவிட்டால் எதுவும் கிடைக்காது என்றோ ஓர் அர்த்தம் ஏற்படுகிறது அல்லவா?

இது, நம் துதிக்கிற ஈசுவரனையே மட்டப் படுத்துவதாக ஆகிறதா இல்லையா?'

பெரியவர் திருப்பிக் கேட்கிறார் என்றால், கேட்பது தவறா? துன்ப விடுதலையை பிறகு யார்தான் தருவார்...?

கேள்விகள்... கேள்விகள்... கேள்விகள்...!

பெரியவர் இதற்கும் பதிலளிக்கிறார்.

'கேட்பது பிழைதான் எனும் போதிலும், நமக்கு அப்போது மனபாரம் குறைகிறது. அத்தோடு நம்மாலேயே எல்லாம் முடியும் என்கிற அகங்காரம் போய் யாசிக்கும் ஒரு எளிமை நமக்கு ஏற்படுகிறது.

இதனால் ஈஸ்வர அனுக்ரகத்துக்கு ஒரு குறை உண்டாக்குவது போல நாம் நடந்து கொண்டாலும் அவன் அதை பொருட்படுத்தாது நமது பிரார்த்தனைகளை நிறைவேற்றுகிறான்' என்கிறார்.

உண்மையில் பக்தியின் மூல நோக்கு முக்தி என்கிற போதிலும் சதாசிவ பிரம்மேந்திரரைப் போல் நாம் பிரார்த்திக்க வேண்டும் என்கிறார் பெரியவர்.

அவர்தான் இறைவனிடம், 'இறைவா! உன்னிடம் நான் அதைக் கொடு, இதைக்கொடு என்றெல்லாம் கேட்கப் போவதில்லை. என்னையே எனக்குக்கொடு' என்று பிரார்த்திக்கிறாராம் சதாசிவ பிரம்மேந்திரர்! எப்பேர்ப்பட்ட பிரார்த்தனை இது...?

பக்திக்கு இப்படி அநேக விளக்கங்கள்! இவைகளை எல்லாம் கடந்து இத்தனை ஆண்டுகளில் எனது யாத்திரை அனுபவங்களில் நான் புரிந்து கொண்டதெல்லாம் இதுதான்...

'எனது இந்தப் பிறப்பு கர்மத்தால் வந்தது... இது கர்மத்தாலேயே கழியும். எனது விதிப்பாட்டை எதாலும், யாராலும் ஏன் அந்த ஈஸ்வரனாலும் ஒரு நூலளவுகூட மாற்ற முடியாது. எனக்கு எது கிடைக்க வேண்டுமோ அது கிடைத்தே தீரும். கிடைக்கக் கூடாதது என் அருகிலேயே இருந்தாலும் நான் அதை உணர மாட்டேன். உண்மையில் எதிரிகள் என்று ஒருவர் கிடையாது. எல்லோரும் நண்பர்களே! நாளையே எனக்கு ஒரு பெரும் நசிவு ஏற்பட்டாலும் அது என் கர்மத்தின் பொருட்டே... நான் நாடாள்பவனாக மாறினாலும் அதுவும் கர்மத்தின் பொருட்டே... இதற்கும், கடவுளுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. கடவுளுக்கு எனக்கு தண்டனை தருவதோ, இல்லை பரிசு தருவதோ வேலை இல்லை. அண்ட, பேரண்டங்களை இயக்கும் பெரும்ம்ம்ம்... பொறுப்பிலுள்ள அந்த மகாசக்திக்கு முன் நான் தூசு கூட இல்லை தூசுக்குள் தூசுக்குள் தூசுக்குள் தூசு!''

இதைத்தான் பக்தி எனக்கு உணர்த்தியது. இதைவிட ஒரு பெரிய தெளிவு இருக்க முடியுமா?

நாளையே நான் பொட்டுத் துணியின்றி ஒரு நடுக்காட்டில் தலைக்கு மேல் மலைப்பாம்பு முன்னாலே சிங்கம்-பின்னாலே ஒரு புலி-பக்கத்திலே சுடுநெருப்புக்கு நடுவில் நிற்க நேர்ந்தாலும் துளியும் கலங்க மாட்டேன்.

அடடே... நமது கணக்கு இப்படி இத்தனை கோரமாக முடிய வேண்டும் என்று இருக்கிறது போலும் என்று எண்ணிக் கொள்வேன்.

உலக மகா கோடீஸ்வரனாகி அத்தனை சுகங்களும் அணிவகுத்து நிற்கும் போதும் அசர மாட்டேன். எனக்கு தேவை நாலு இட்லி-இரண்டு தோசை மட்டுமே என்று இருந்து விடுவேன்.

நினைவுக்குத் தெரிந்து பொய் பேசமாட்டேன். யாரையும் ஏமாற்ற மாட்டேன். எதையும் எதிர்பார்க்க மாட்டேன். முடிந்தவரை இறை நினைப்போடு இருப்பேன். பத்து ரூபாய் சம்பாதித்தால் இரண்டு ரூபாயை நிச்சயம் தர்மம் செய்வேன். அந்த தர்மத்தைக்கூட புண்ணியம் கருதி செய்யமாட்டேன். ஆஹா கொடுக்க என்னால் முடிந்ததே என்ற மகிழ்வோடு மட்டும் செய்வேன்!

இதை எல்லாம்தான் எனது யாத்திரை அனுபவங்கள் பக்தி வாயிலாக எனக்கு அளித்தன. இதை விட ஒரு பெரும் செல்வத்தையோ அல்லது மனத்தெளிவையோ வேறு எதனால் தந்துவிட முடியும்?

பகுத்தறிவுக்கு கேள்வி கேட்கத் தெரியும்; அது சந்தேகப்பட கற்றுத்தரும்-ஒரு எல்லையை அதனால் கடக்க முடியாது. நாம் கடவுள் என்பதை இயற்கை என்று சொல்லி நமது சிந்தாந்தத்தை வேறுவிதமாய் ஒப்புக் கொள்ளப் பார்க்கும். இல்லாவிட்டால் சண்டிமாடு போல புலன்களை மட்டுமே நம்பிக்கொண்டு அதனுள்ளேயே உழன்று மடியும்.

என்னை எனக்குக் காட்டித் தரும் பக்தியை விட என்னுள் அச்சம் போக்கி ஒரு சமநிலையை தோற்றுவிக்கும் பக்தியைவிட எது மேலானது?

அந்த ஈஸ்வரனே கூறுகிறான்: 'என்னைவிட பெரியது பக்தி' என்று...!

அந்த பக்திக்கு ஒரு சரணம் சொல்லி நிறைவு செய்து கொள்கிறேன்.

17. அமர்நாத் உருக வைக்கும் பனிலிங்கம்!

இமயத்தைப் பற்றிச் சொல்லத் தேவையே இல்லை. ஓங்கி உயர்ந்த மலைத்தொடர்! நிகரில்லாத பனிப் புதையலும் கூட.

இந்த மலைவெளியில்தான் இருக்கிறது இறைவன் நடராஜனின் கைலாயகிரி! அருகிலேயே மானஸரோவர் என்னும் மாசு மருவு காணமுடியாத பன்னீர் ஏரியும் உள்ளது. அருகிவிட்டதாகவும் அழிந்தே விட்டதாகவும் சொல்லப்படுகிற அன்னப்பட்சிகளை இந்த ஏரிக்கரையினில் பார்க்கலாம் என்கின்றனர் பலர்.

இதிகாச புராணங்களில் நிரம்பிக் கிடக்கும் தேவதேவியர்கள் இந்த மானஸரோவரில்தான் நீராடுவார்கள் என்று கூறும்போது நமது வியப்பு அதிகரிக்கிறது.

இதெல்லாம் வெறும் நம்பிக்கை என்று நமது அறிவுபூர்வங்கள் இரைச்சலிட்டாலும் அந்த ஏரியும் அதன் தூய்மையும் உணர்வுபூர்வமாக நம்முள் மூட்டும் சிலிர்ப்புக்கு ஒரு அளவே கிடையாது.

இந்த பூஜ்ஜிய ராஜ்ஜியத்தில் மிகமிகமிக உயர்ந்த ஒரு மலைவெளியில் ஒரு குன்றே சிவமாகவும் அதன் அருகாமை நீர்த்தேக்கமே தீர்த்தமாகவும் திகழும் அற்புதம் ஒருபுறத்தில் இருக்க, குன்றாய்த் திகழும் அந்தச் சிவம் ஒரு பனிலிங்கமாகவும் உருக்கொண்டு அருள்பாலிக்கும் ஸ்தலம் ஒன்றும் அதே மலைப்பிராந்தியத்தின் நீட்சியில் ஸ்ரீநகருக்கு நூற்றுநாற்பத்தோரு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது! அமரத்வம் பெற்றுத் திகழும் இடம்

என்பதாலேயே 'அமர்நாத்' என்று அது அழைக்கப்படுகிறதோ என்னவோ!

நானும் என் நண்பர் குழாமும் ஒரு ஆன்மீக யாத்திரைக்காக அமர்நாத்துக்குப் புறப்பட்டோம். பத்தாயிரம் ரூபாயும் பத்து நாள் அவகாசமும், கூடவே தளராத பற்றுதலும் இருந்துவிட்டால் போதும்... அந்த அமரநாதனை தரிசித்துத் திரும்பலாம் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது.

எங்கள் பயணத்தை 13.8.2002 அன்று மதுரை, நன்மை தருவார் ஆலயத்தில் இருந்து துவக்கினோம். மொத்தம் பத்துப் பேர்!

மதுரையிலிருந்து ஜம்மு வரை சீரான ரயில் பயணம். பின் அங்கிருந்து ராணுவத்தின் பாதுகாப்பில் ஜம்மு.... காஷ்மீர் மாநிலப் பேருந்தில் 'பெகல்காம்' என்னும் இடம் வரை சுமாராக 8 மணி நேரப் பயணம்.

வெளிர் நீலத்தில் ஓடும் ஜீலம் நதியும், ஆல்பைன் மரக்காடுகளுமாக ஆங்காங்கே பனிப் பாளங்களோடு நம்மை வரவேற்கிறது பெகல்காம். ஸ்வெட்டர், குல்லாய், கிளவுஸ், ஷூ என்கிற அயிட்டங்கள் இல்லாதபட்சத்தில் உடல் விறைத்துப் போகும் அபாயமுண்டு.

கையில் கோல் இல்லாமல் பெகல்காமிலிருந்து ஒரு நூறு அடிகூட, நடக்க முடியாது. கரடுமுரடாக மேலேறுகிறது மலைப்பாதை. அப்போதுதான் கைத்தடியின் அருமையும் புரிகிறது. ஆர்வக்கோளாறினாலும் ஆரம்ப சூரத்தனத்தினாலும் விறுவிறுவென்று மேலேற முயன்றனர் சிலர். ஆனால், ஐம்பதடி தூரம் கூடப்போயிருக்க மாட்டார்கள். மூச்சிரைத்துப் போய் அமர்ந்துவிட்டனர். அப்போதுதான் தெரிந்தது. அங்கே காற்றில் ஆக்ஸிஜன் மிக மிகக் குறைவு என்பது.

ஆக்ஸிஜன் அபரிமிதமாக இருக்க வேண்டுமானால் பச்சைத் தாவரங்கள் மண்டிக் கிடக்க வேண்டும். ஆனால், ஒரு ஒற்றைச் செடிக்குக்கூட வக்கில்லாத குளிர் நெருப்பின் ஜ்வாலை வீசிக்கொண்டிருக்கும் பூமி அது...

ஆக்ஸிஜன் இல்லாமையை சரிக்கட்ட ஒரு குறுக்குவழியும் சொல்லப்பட்டது.

அது தான் கட்டிக்கற்பூரம்!

உள்ளங்கையில் அதை வைத்துக்கொண்டு உறிஞ்சிக்கொண்டே நடந்தால் சுவாசப் படபடப்பு குறையும் என்றனர். உண்மைதான்!

நாம் நடக்கும் பாதை கூடவே சலசலவென்று பனிநீர் உருகிப் பெருகி குதித்தோடி வருகிறது. விடலைச் சிறுவனின் கும்மாளமும் பருவக் குமரியின் வனப்பும் செழிப்புமாக மனசை ஒரு அள்ளு அள்ளுகிறது. ஆனால், ஒரு கவளம் நீரை மொண்டு வாயாரப் பருக முடியாது. அப்படி ஒரு சிலுசிலுப்பு.

இல்லாவிட்டால் அத்தனை குளிரிலும் வியர்வைத் தெப்பமாய் மேலேறும் லட்சக்கணக்கான மனிதக்கூட்டம் அந்த நீல நதியை இன்னொரு கூவமாக்கிவிடும் அபாயமும் புரிகிறது.

ரசித்தபடியே மேலேறினோம். செங்குத்தாக பிரண்டு, பிரண்டு கிடக்கிறது மலைப்பாதை. அண்ணாந்து பார்த்தால் திகைக்கவைக்கும் தொலைவு கண்டு மலைத்துப்போய் ஊருக்குத் திரும்பிவிடத்தான் மனது நம்மைத் தூண்டும். எனவே நிமிர்ந்து பார்க்காமல் கழியை ஊன்றிய படி நிதானமாக ஏறிச் செல்வதே உத்தமம்.

இத்தனை இக்கட்டான மலைப்பாதையில் எப்படியோ இந்த மலைப்புரத்தின் மக்களாகிய குறிப்பிட்ட முஸ்லிம்

இனத்தவர்கள் ஆளுக்கொரு மட்டக்குதிரையோடு அனாயாசமாக மேலேறுகிறார்கள். அவர்களுக்கு மட்டும் எப்படி இந்த ஆக்ஸிஜன் உபாதை எல்லாம் இல்லாமல் இருக்கிறது என்று கேட்டேன்.

அந்த மண்ணிலேயே பிறந்து வளர்ந்த அவர்களுக்கு அந்த மண் செய்திருக்கும் இயற்கைச் சலுகை அது என்று ஒருவரும், அனுபவம்தான் என்று சிலரும் கூற... எது நிஜமோ தெரியாது. ஆனால், ஆச்சரியமூட்டிய அவர்கள், உழைப்புக்கு இலக்கணமும் சொன்னார்கள்.

அமர்நாத் யாத்திரை என்பது ஜூலை மத்தியில் தொடங்கி ஆகஸ்ட் இறுதிக்குள் முடிந்துவிடும் ஒரு குறிப்பிட்ட காலப்பயணம். இந்த நாட்களில்தான் இந்த மலையில் மனிதர்கள் ஏறி இறங்க முடியும். மற்ற நாட்களில் எங்கும் பனி மூடி ஒரு வெள்ளைச் சமவெளியாகவும் பனிக்குல்லாயாகவும் இந்தச் சிகரங்கள் மாறிவிடும்.

எனவே, இந்த இரண்டு மாதத்தில் பாடுபட்டு காசு பார்த்தால்தான் வருஷம் முழுக்க காலம் தள்ளலாம் என்றார் ஒரு குதிரைக்காரர்.

பெகல்காமிலிருந்து அமர்நாத் குகைக்கோயில் நாற்பத்தாறு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இதில் சந்தன்வாடி வரை காரிலும், ஜீப்பிலும் பயணிக்கலாம். அதன்பின் நடந்து மட்டுமே அந்த பனீஸ்வரனைத் தரிசிக்க இயலும்.

வழியில் சேஷ்நாத், பஞ்சதாரிணி என்று இரண்டு முக்கிய இடங்கள்-அனைவரும் தங்கிச் செல்லத் தோதாக முகாம்களோடு காத்திருக்கின்றன.

இந்த இடங்களுக்குச் சில புராணச் சிறப்புகளும் இருக்கின்றன. சேஷ்நாத்-சிவபெருமான், ஆதிசேஷனைக்

கொண்டு அரக்கன் ஒருவனோடு யுத்தம் நிகழ்த்திய இடமாம். பஞ்சதாரிணி-அவன் தன் சரீரத்திலிருந்து ஐவகை ஆபரணங்களை உதிர்த்த இடமாம்.

யாத்திரீகர்கள் கூட்டம் அதிகமாக இருந்தால் இங்கே ஒரு முகாமின் வாடகை ஒரு இரவுக்கு ஆயிரம் ரூபாய். தாராளமாக ஆறு பேர் தங்கலாம். அதுவே கூட்டம் குறைந்துபோனால் நூறே ரூபாய்தான்.

நாங்கள் போனபோது இறுதிக்கட்டம்.

தீவிரவாதிகளின் தாக்குதலில் ஒன்பது பேர் வரை உயிரை விட்டிருந்தனர். அலை அலையாக வந்த கூட்டம் அப்படியே கலைந்து அங்குமிங்குமாக சிலர் மட்டுமே வரும்படியாகச் செய்துவிட்டது. கூட்டம் அவ்வளவாக இல்லாத சூழல் பல வகைகளில் எங்களுக்குப் பேருதவியாக இருந்தது.

ஒற்றையடிப்பாதை போன்ற இடர்ப்பாடான மலைப்பாதைகளில் நிதானமாக நடக்க முடிந்தது. அப்படியும் எப்படியோ தவறி விழுந்து உயிரை விட்டிருந்த ஒரு குதிரையையும் அதில் பயணித்தவரின் ரத்தத் திப்பிகளையும் பார்க்க முடிந்தது.

ஏறத்தாழ ஏழெட்டு கிலோ மீட்டர் தூரம்.

இந்த நடைக்கு நடுவே ஆங்காங்கே ஒரு புல்லுக்கு வக்கற்ற அந்த மலைத்தளத்தில் 'லாங்கர்' என்னும் அன்னதனாப் பந்தல்களை அமைத்துக் களைப்புடன் நடந்து வருபவர்களுக்குச் சுடச்சுடச் சோறிட்டவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மற்றபடி தேங்கா, மாங்கா, பட்டாணி, சுண்டல் வகையறாக்களோ, கடலைமிட்டாய், பான்பராக், பெப்சி, கோக் சமாச்சாரங்களோ எங்கும் கிடையாது.

'ஜெய் போலோ... பம்பம் போலோ...' என்ற கோஷம் மலைமுழுக்க எதிரொலிக்கிறது.

முதல் நாள் சந்தன்வாடியிலிருந்து சேஷ்நாத் முகாம். மறுநாள் சேஷ்நாத்தில் இருந்து பஞ்சதாரிணி முகாம். அதற்கு அடுத்த நாள் பஞ்சதாரிணியிலிருந்து அமர்நாத் மலைக்குகை என்பதுதான் நடப்பவர்களில் அநேகரது பயணத்திட்டமாக இருக்கிறது. சிலர் மட்டும் விதிவிலக்காக சேஷ்நாத்திலிருந்து, பஞ்சதாரிணியையும் மலைக் கோயிலையும் ஒரே நாளில் அடைந்து விடுகின்றனர். அதாவது பத்தொன்பது கிலோ மீட்டர் தூரம்...

சாதாரணமாக ஒரு கிலோ மீட்டருக்கு ஆயிரம் மீட்டர்தான் உலகம் ஒப்புக்கொண்டிருக்கும் அளவு. ஆனால், இங்கே நடக்கும்போது ஒரு கிலோ மீட்டருக்கு பத்தாயிரம் மீட்டர் இருக்குமோ என்று மனது நினைத்து விடுகிறது. அந்த அளவுக்குப் பாதை நீண்ண்ண்டு கிடக்கிறது. இந்த நீண்ட தூரத்தை நானும் என்னோடு வந்த நண்பர் குழாமும் ஒரே நாளில் கடந்து வெற்றிப் புன்னகை புரிந்தோம்.

நல்லவேளை... இடையில் மழை என்னும் ஒரு தடை பெரிதாக எங்களைச் சோதிக்கவில்லை. ஒரு சாம்பிள் மழை மட்டும் ஒரே ஒரு கிலோமீட்டர் தூரத்துக்குப் பெய்து ஒரு உலுக்கு உலுக்கி எடுத்தது.

பாதுகாப்புக்குக் குடையை விரித்துப் பிடித்ததும் தப்பாகிவிட்டது. அது அப்படியே கிளைடர் விமானம் போல காற்றோடு மேலே தூக்கப் பார்த்தது. மூடி வைத்துவிட்டு நனைந்தபடியே நடந்தேன்.

இடைவழியில் பனிச்சரிவின் வழிசல். நொறுங்க நொறுங்க அதன் மேல் காலை வைத்து நடந்தபோது எங்கே புதைந்துபோய் விடுவோமோ என்னும் அச்சம் வேறு.

நல்லவேளை... எதிரில் ஒரு கிலோமீட்டர் தொலைவில் அந்த கைலாய சிவத்தின் பனிலிங்கக் குகை கண்ணில் பட்டு தெம்பைத் தந்தது.

இந்தப் பயணத்தில் இன்னொரு அசாதாரண விஷயம்-நமது ராணுவத்தின் காவல்... நாற்பத்தாறு கிலோ மீட்டர் தூரமும் நூறு அடிக்கு ஒரு ராணுவவீரர் துப்பாக்கியுடன் காவலில் இருந்து நாம் 'பம்பம் போலோ' என்றால் அவர் 'ஜெய் போலோ' என்கிறார்.

பல தமிழ்நாட்டுச் சிப்பாய்களும் கண்ணில் பட்டனர். சிரித்தனர். மழை பற்றி, 'பாபா' பற்றி, வீரப்பன் பற்றியெல்லாம் கேட்டுக் கணிசமாய் இளைப்பாறினர்.

பனிலிங்கம் இங்கு வந்ததற்கு ஒரு கதையும் சொல்கிறார்கள்... அவர் ஒரு ஆட்டிடையர்! பெயர் பூடாமாலிக். அந்த பனிமலைக் காட்டில் ஆடுமேய்ப்பதுதான் அவர் வேலை. ஒருநாள் அவரது ஆடுகளில் சில, அபாயமான பள்ளத்தாக்கு ஒன்றின் பக்கம் சென்றுவிட, பூடாமாலிக்கும் தேடிச் செல்கிறார். ஆடுகள் கிடைக்கவில்லை. அவரும் பாதை மாறி எங்கெங்கோ சென்று விடுகிறார்.

ஒரு கட்டத்தில் 'கடவுளே! இது என்ன சோதனை' என்று மாய்ந்து போகும்போது காதில் 'ஓம் நமசிவாய' என்கிற ஒரு மெல்லிய குரல் அவரைத் தீண்டுகிறது.

அவரது காதுகளிலும் விடைப்பு. கண்களும் கூர்மையாக, ஒலி வந்த திக்கைத் தேடிச் செல்கின்றன கால்கள். அப்போது அவர் கண்களில் முதன்முதலாகப் பட்டது தான் இன்று லட்சக்கணக்கான ஜனங்களின் தரிசனத்துக்கு ஆளாகியிருக்கும் பனிலிங்கக் குகை என்கிறது ஒரு பூர்வ கதை.

அமர்நாத்தின் இந்த பிள்ளையார்சுழியை மறுப்பவர்களும் அநேகர்.

தெய்வங்களில் நாகத்தை ஆபரணமாகவும் தோலை இடையாடையாகவும் சூடிய நிலையில் மிக எளிமையாகக் காட்சி தருபவன் பரமன்.

அந்த எளிய கோலம் அன்னை பார்வதியை உறுத்துகிறது. பரமனிடமே அதுகுறித்து வினா எழுப்புகிறாள். புன்னகை பூக்கும் பரமன். அவளுக்குப் பதில் சொன்ன இடம்தான் அமர்நாத்தின் அந்த குகைக்கோயில் என்னும் ஒரு கதை உண்டு.

உலகையே தன் வீடாகக் கொண்ட பரமன், படைப்பின் ரகசியத்தைப் பார்வதிக்குச் சொன்ன இடமாகவும் இந்த மலைக்குகை விளங்குவதாகக் கூறுவார்கள்.

அப்படி அவர், அன்னை பார்வதிக்கு ரகசியத்தை உரைத்தபோது அதை ஒளிந்திருந்து கேட்ட ரிஷி ஒருவர் பின்னர் பரமனால் சபிக்கப்பட்டு புறாவானார் என்றும், இன்றும் அந்த மலைக்குகையில் ஒரு புறாவைத் தவறாமல் காணலாம் என்றும் ஒரு கதை. அது உண்மைதான் என்கிற மாதிரி அங்கே ஒரு புறாவை நாங்களும் பார்த்தோம்.

இந்த கதைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு மெய் அந்த குகைக்கோயிலில் பனிலிங்கமாக உருக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ பன்னிரண்டு அடி உயரம். ஆவுடையாகிய பீடமே ஒரு அடி உயரம். ஆவுடையாகிய பீடமே ஒரு அடி உயரம் இருக்கிறது. அந்த பனிலிங்கத்தைத் தவிர குகையில் வேறு எங்கும் பனிக்கட்டிகளே இல்லை.

ஒரு ஹெலிகாப்டர் தன் சுழல் விசிறிகளோடு பறந்தபடி உள் நுழையலாம். அத்தனை பெரிய குகை. ஆனால், இரு மலையின் இடையே அடித்தளத்தில் இருந்து பழநி மலைக்கு

ஏறுகிற மாதிரி செங்குத்துப் படிகளில் ஏறித்தான் செல்ல வேண்டும்.

சிலுசிலுப்பு பாதத்தை அப்பி எடுக்கிறது. குளிர்காற்று பிடரியைப் பிடித்து உலுக்குகிறது.

ஏறத்தாழ பதினான்காயிரத்து ஐந்நூறு அடி உயரத்தில் உள்ள, மனிதனால் கட்டப்படாத, இயற்கையே கட்டி முடித்து, பின் அதுவே அழித்து விடுகிற உலகின் ஒரே கோயிலுக்குள் நுழைகிறோம்.

எதிரே நாராயணனாலும், பிரம்மனாலும்கூட ஆதி அந்தம் காணமாட்டாத அந்த கருணாமூர்த்தி வெண்பனி உடலோடு லிங்க ரூபமாக நமக்கெல்லாம் அருளக் காத்திருக்கிறான்.

மனம் முழுக்கப் பரவசத்திலும், அவன் அருளாலும் நிரம்பித் தளும்புகிறது.

கூடி நிற்கும் கூட்டம் கோஷிக்கிறது...

'அமர்நாத் கீ... ஜே!

சங்கர் பகவானு கீ ஜே...'

காவலுக்கு நிற்கும் ஜவான்கள்கூட தங்களை மறந்து கோஷிக்கின்றனர். சமயங்களில் கூடி ஆடுகின்றனர்.

அதன்பின் ஒரே நாளில் அங்கிருந்து பால்டால் என்னும் ஊருக்கு வந்து பஸ்ஸைப் பிடித்து விட்டோம்.

திரும்பும்போதும், திரும்பிய பின்பும்கூட அதே நினைப்புதான்... காதுகளிலும் பக்தர்களின் கோஷம் எதிரொலித்தபடியே இருக்கிறது.

'ஜெய் போலோ...
பம்பம் போலோ...!'

18. அஞ்சனா நந்தனன்

அனுமனைப் பற்றிய கட்டுரை இது!

அவனைப் பற்றி சற்று சிந்திப்போமா...? அவனுக்கு மிகப்பிடித்த நாமமான ராம நாமத்தை கூறிவிட்டு ஆரம்பிப்போமே...!

'ஜெய்ராம் ஸ்ரீராம் ஜெய ஜெய ராம்!'

இந்த தீபாவளி விழாக்காலம் என்பது மிக விசேஷமானது. நம்முடைய இந்து சமுதாயத்தில் சூட்சுமமான விஷயங்கள் மிக அதிகம். அதில் தீபாவளிக்கு பிரதான இடம் இருக்கிறது. இந்த நாளில் ஒரு தொழுநோய் பிச்சைக்காரன் கூட மற்ற தினங்களைக் காட்டிலும் கூடுதலான மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் இருப்பான்.

கோடீஸ்வரனிலே இருந்து கோமணாண்டி வரை இன்று வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டு இனிப்பு சாப்பிட்டு புத்தாடை அணிந்து சந்தோஷமாக இருப்பார்கள்.

அன்றாட பிரச்சினைகள் எல்லோருக்கும், எப்பொழுதும் இருக்கவே செய்கிறது. அதை வெற்றி கொள்ளும் ஒரு போராட்டமும் எல்லோரிடமும் தொடர்ந்தபடியே இருக்கிறது. மரண பரியந்தம் இந்தப் போராட்டம் தொடர்கிறது. இதில் இருந்து விடுபட யாருக்கும் வழி தெரியவில்லை. பூலோக மாயையில் இருந்து விடுபடமுடியாது என்பதே சத்யமான உண்மை. எனவே

தான் விடுபட முடியாத அதனில் இருந்து தற்காலிகமாக நம்மை விடுவித்துக் கொள்ள நமது சான்றோர்கள் ஒரு வழிமுறையை கண்டறிந்தார்கள். அதில் ஒன்றுதான் பண்டிகைகள்!

அதற்காக வருடத்தில் ஏதோ ஒரு நாளை போகிற போக்கில் தேர்வு செய்து இன்று ஒரு நாள் மட்டுமாவது நாமெல்லாரும் துன்பங்கள் மறந்து இன்பமாக இருப்போம் என்று அவர்கள் கூறத் தயாரில்லை.

என்று? ஒரு மனிதன் மகிழ்ச்சியோடு இருந்தால் அது பலத்தோடு நீடிக்கும் என்று ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டு, அதற்குரிய நாட்களைக் கண்டறிந்தார்கள்.

இந்த விஷயத்தில் அவர்களுக்கு வானசாஸ்திரமும் பஞ்சாங்கமும் பெரிதும் துணை நின்றது. அதன் அடிப்படையில் ஐப்பசி மாதம் வருகிற அமாவாசை நாளும், திதியும் மனித சமுதாயத்துக்கு மகிழ்ச்சியை வாரிவழங்கும் நாளாக மட்டுமல்ல, அந்த மகிழ்ச்சியை எவ்வளவு தூரத்துக்கு நீட்டித்துக் கொண்டு போகமுடியுமோ அவ்வளவு தூரம் நீட்டிக்கும் வல்லமை கொண்டதாகவும் இருப்பதையும் கண்டறிந்தே அன்றைய தினத்தில் தீபாவளித் திருநாளை உருவாக்கி அளித்தனர்.

அசுரனான நரகாசுரன் அழிந்த நாள், அவனை பகவான் கிருஷ்ணர் வெற்றி கொண்டநாள் என்பதெல்லாமும் கூட, இந்த நாளின் பின் உள்ள பலத்தால்தான்...

'அஞ்சனா நந்தனன்' என்று அனுமனைப் பற்றி சிந்திப்போமா என்று கேட்டு விட்டு, இது என்ன தீபாவளிக்கு பொழிப்புரை சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்று பலருக்கு தோன்றலாம்.

சம்பந்தம் இருப்பதால் தான்!

தீபாவளி எப்படி மன இருளைப் போக்கி ஏழை முதல் பணக்காரன் வரை அவரவர் உள்ளப் பாங்குக்கு ஏற்ப எப்படி ஒளியாகிய மகிழ்வைத் தருகிறதோ அப்படி ஒரு ஒளியையும், மகிழ்வையும் தந்திடும் தேவன் தான் அஞ்சனா நந்தனன் என்றும், ஆஞ்சநேயன் என்றும், வாதாக் மஜன் என்றும், வாயுமைந்தன், வானர தூதன் என்றும் பல பெயர்களைக் கொண்ட நமது அனுமன்!

தீபாவளி அன்று அகல் விளக்கு ஏற்றிவைக்க இல்லங்களில் ஒளி ஏற்படுகிறது. தீபாவளிக்கு அகல்விளக்கு போல அனுமனுக்கு ராமநாமம் கைகொடுக்கிறது. அனுமனை எண்ணிக்கொண்டு ராமநாமத்தை நாம் சொல்லச் சொல்ல, உள்ளத்துக்குள் ஒளி ஏற்படுகிறது.

தீபாவளியாவது வருடத்துக்கு ஒருமுறைதான் வருகிறது. ஆனால், ராமநாமத்தை எப்பொழுது சொன்னாலும் சரி, எந்த வேலையானாலும் சரி, அதைச் சொல்லும் போதே அனுமன் வந்து விடுகிறான். அனுமனை நம் வசப்படுத்திக் கொள்ள ஒரு எளிய உத்திதான் ராமநாமம்!

எல்லாம் சரி... அனுமன் நம்முள் வந்தால் என்னாகும்? அதனால் நமது துன்பங்களில் இருந்து நாம் விடுபட்டு விடுவோமா? செல்வச் சீமானாக வாழ்வோமா? நோய் இருந்தால் அது நீங்கிவிடுமா? இப்படிப் பலர் கேட்கலாம்.

அனுமன் நம் முன் வந்தாலே இதெல்லாம் நிகழ்ந்துவிடும்... நம்முள் வந்தால் கேட்கவா வேண்டும்?

அதற்குக் காரணமும் இருக்கிறது.

இந்தக் காரணத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டுமானால் 'அனுமன் யார்...? அவனது கீர்த்தியும் சக்தியும் எப்படிப்பட்டது? என்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

உலகின் மிகப்பெரிய சக்தி எது... இந்த சக்தி முன்னால் அந்த ஆதிபராசக்தி கூட பெரிதில்லை. என்று கூறத்தக்க அளவுக்கு ஒரு சக்தி இருக்கிறதா? என்கிற கேள்வியை யட்சன் ஒரு முறை பஞ்சபாண்டவர்களில் ஒருவனான தர்மபுத்திரனிடம் கேட்டான்.

தர்மபுத்திரனும் ஒரே வார்த்தையில் 'கற்பு' தான் அந்த சக்தி என்று பதிலளித்தான்.

ஆம்... கற்புதான் உலகின் மிகப்பெரிய சக்தி. இந்தக் கற்பில் சிறந்து விளங்கியவர்களைதான் நமது புராணங்களும் பதிவிரதைகள் என்று கூறி கொண்டாடுகின்றன. சதி அனுசுயை, சத்யவான் சாவித்திரி, சீதாதேவி என்று வரிசையாக அதற்கு உதாரணங்களும் உள்ளன.

உலகில் உள்ள அனைத்தையும் பஞ்சபூதங்களில் தனிப்பெரும் பூதமான நெருப்பானது அழித்து விடும். ஆனால் இதனால், கூட அழிக்க முடியாத ஒன்று உண்டென்றால், அது பதிவிரதா சக்தி தான். இதை உலகம் உணரவேண்டும் என்றே ராமன் கூட சீதையை அக்னிப் பிரவேசம் செய்யச் சொன்னான்.

சீதையும் அக்னியில் புகுந்து புதுப்பொலிவுடன் மீண்டும் வந்தாள். (இதை ஒரு வித பெண்ணடிமைத் தனமாகவும், சீர்கேடாகவும் சிலர் முற்போக்கு என்றும் கருதி பேசுவதெல்லாம் தவறான கோணங்களாகும்.)

இப்படிப்பட்ட பதிவிரதைகள் வரிசையில் வருபவள் தான் அகலிகை! இந்த அகலிகையின் பேரன்தான் அனுமன் என்றால் எல்லோருக்கும் வியப்பாக இருக்கும். ஆனால், அதுதான் புராணங்கள் காட்டும் நுட்பமான உண்மை.

அகலிகை பிரம்மனின் மானஸ புத்ரி!

ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் அடைந்திட பிரம்மன் விரும்பினான். பெண் என்பவள் மிக அழகியவளாக ஆண் இனத்தையே மயக்குபவளாக இருந்தால் அவளது சக்தி நிர்மூலகதியாக மாறிவிடுகிறது. அவளே பதிவிரதா தர்மத்தில் ஒழுகி நின்றால், அவள் உலகின் மேலான சக்தி ஆகிறாள். இதை உத்தேசித்தே பிரம்மன் அகலிகையைப் படைத்தான். அவ்வாறே அவளை வளர்க்கவும் செய்தான். அகலிகை ஒரு பெண் துறவி போலவே வளர்க்கப்பட்டாள். அதனாலேயே அவள் கௌதம மகரிஷிக்கு மனைவியாகவும் ஆனாள். கௌதமருக்கும், அவளுக்கும் ஒரு புதல்வனும் தோன்றினான்.

பிரம்மன் இதனால், பூரித்துப் போனான்.

ஆனாலும் தேவர்களிலேயே பலர் அகலிகை ஒரு பெரும் சக்தியாக மாறுவதை விரும்பவில்லை. அவளுக்கு இழுக்கு நேரவேண்டும் என விரும்பினர். குறிப்பாக, இந்திரன் அதை பெரிதும் விரும்பினான். ஏன் என்றால் இந்திரனுக்கு எல்லோரும் கட்டுப்பட்டிருந்த நிலையில், கௌதமரும், அகலிகையும் தன்வழி சென்றனர். அதுமட்டுமல்ல, அவர்களின் சக்தியும் பெருகிக் கொண்டே போனது.

இதை தடுத்து நிர்மூலப்படுத்த விரும்பிய இந்திரன் கௌதம முனிவர் உருவில் அகலிகையை நெருங்கி அவளை களங்கப்படுத்தியும் விட்டான். இதனால், கௌதமர் இந்திரனுக்கு உடம்பெல்லாம் பெண்ணுறுப்பாகும்படி பிறருக்கு தெரியும் ஒரு சாபத்தை அளித்தார். அகலிகையும் அதன் பின் கல்லானாள். ராமன் காலடி பட்டு பிறகு மீண்டும் பெண்ணானாள். காரணம், ராமன் என்பவன் இறை அம்சம் கொண்டவன் என்பதால் மட்டும் அல்ல... அவனும் ஆடவர்க்குரிய கற்பு நெறியில் ஒழுகியதால்...

"ஒரு ஒழுக்கச் சிதைவை இன்னொரு ஒழுக்க சக்தியால் மட்டுமே மேம்படுத்த முடியும்" என்பதும் ஒரு பிரமாணம்.

இப்படிப்பட்ட அகலிகைக்குள் அழகாக இருப்பது கூட ஒரு குற்றம் என்பது போல ஒரு எண்ணம் கற்பிப்பதில் வியப்பென்ன இருக்க முடியும்? எனவே இந்திரன் அவளை ஏமாற்றும் முன்பே கருக்கொண்டிருந்த அவள், அந்த கருப்பிண்டத்தை அழகில்லாத எந்த ஆடவனும் பார்த்து மயங்கிவிடாத ஒரு அம்சம் கொண்ட பெண்ணாக பெற்றெடுக்கவே விரும்பினாள்.

அப்படி எண்ணி அவள் பெற்றெடுத்தவள் தான் அஞ்சனை, குரங்கு வடிவில் இருந்த அஞ்சனை வானரக் கூட்டத்தோடு சேர்ந்து வளர்வதே அவளுக்கு ஏற்புடையது என்று கருதி கிஷ்கிந்தை எனும் வனப்பகுதியை ஆண்டு வந்த பிள்ளைப் பேறில்லாத குஞ்சரன் என்பவனிடம் தன் மகளை ஒப்படைத்தாள். அப்போது அகலிகை குஞ்சரனிடம் என் தவசக்தி, பதிவிரதாசக்தி என்று சகலத்தையும் நான் என் மகள் வடிவாக பெற்றுள்ளேன் என்று கூறியே ஒப்படைத்தாள்.

குஞ்சரனும் அஞ்சனையை தன் மகள் போலவே கருதி வளர்த்தான். கேசரி என்கிற மாவீரன் ஒருவனுக்கும் மணம் முடித்தான். இருந்தும் பிள்ளைப் பேறு அஞ்சனைக்கு உருவாகவில்லை. இறுதியாக அவள் அந்த விஷ்ணு குறித்து திருமலை மலைப்பகுதியில் தவம் இருந்தாள். இந்த தவத்துக்கு வரமாக வந்து பிறந்தவன் தான் அனுமன்.

கூட்டிக் கழித்து பார்த்தால் பிரம்ம தேவனின் மானஸ சிருஷ்டியான அகலிகையும், கௌதமர் என்னும் தவசியும் கூடிப்பெற்ற ஓர் அற்புத சக்தியான அகலிகையின் மகளான அஞ்சனை காமத்தால், உந்தப்பட்டு கேசரியோடு கூடிப் புணர்ந்து அனுமனைப் பெறவில்லை.

அவள் தவத்தில் இருக்கையில் அற்புதம் நிகழ்ந்தது. அஞ்சனை தவத்தில் இருக்கும் போது தான் தசரத மன்னன் புத்திரப்பேறு வேண்டி புத்திர காமேஷ்டி யாகம் செய்தான். அதன் பலனாக நான்கு வேதங்களும், நான்கு கனிகளாகி அந்த யாக நெருப்பில் தோன்றி தசரத பத்தினியர் மூவருக்கும் மூன்று பழம் என்னும் கணக்கில் சென்று சேர்ந்தது.

அதர்வண வேதக்கனி அஞ்சனை கையில் வாயுவால் கொண்டுவந்து சேர்க்கப்பட்டது. அதை உண்ட அஞ்சனையின் கர்ப்பத்துக்குள் கரு உண்டாயிற்று. வாயுவால் இது நிகழ்ந்ததால் இங்கே வாயுவுக்கு தந்தை ஸ்தானம் கிட்டியது. இத்துடன் சில சக்தி சேர்க்கையின் போது இருவரிடமும் வெளிப்பட்ட இன்ப மூச்சுக்காற்றும், அஞ்சனையின் சுவாசம் வழியாக உள் சென்று உள்ளிருக்கும் கருப்பிண்டம் உயிர்கொண்டது. அப்படி உயிர் கொண்டு அஞ்சனை வயிற்றில் பிறந்த பிள்ளைதான் **அனுமன்.**

உலகில் இப்படி ஒரு பிறப்பு வேறு எங்கும், எவருக்கும் சாத்தியப்பட்டதில்லை.

அடுத்து மானுட வாழ்வில் மனித உயிர்கள் கடைத்தேற கர்மவழி எது? என்று காட்டுவது அதர்வண வேதம் ஆகும். இதனுள் தான் மாந்திரீகம், தாந்திரீகம் போன்ற மாயாசக்திகள் எல்லாம் உள்ளன.

அந்த அதர்வண வேதமே கனியாகி அது தான் சிவசக்தியின் ஆன்ம கலப்புடன் கூடி அஞ்சனை வயிற்றில் அனுமனாகத் தோன்றியது.

எனவே அனுமன் முன்னால் நமது கர்ம துயரங்கள், மாந்திரீக, தாந்திரீகமெல்லாம் பகைவரைக் கண்டவுடன் கரைந்துவிடும் பனி போல, கரைந்து சென்று விடும்.

மும்மூர்த்தியரின் சம்பந்தத்தால், அஞ்சனை மகனாகப் பிறந்த அனுமனுக்கு பாலகனாக இருந்தபோதே அபார சக்தி இருந்தது...

உலகிலேயே மிக வேகமாக சுற்றிச் சுழன்று இயங்குபவன் சூரியன் மட்டுமே... அவனுக்கு நிகராக அனுமனும் அவனோடு சேர்ந்து சுற்றிச் சுழன்று அவனிடமே பல அரிய கலைகளைக் கற்றுக்கொள்ளவும் செய்தான்.

முன்னதாக சூரியனை வான மண்டலத்தில் கண்ட பால அனுமனுக்கு, சூரியன் ஓர் ஒளிப்பந்தாகத்தான் தெரிந்தான். உடனேயே அதைப்பறித்து விளையாடும் ஆசை தோன்றி விட்டது.

ஆகாயத்தில் தாவி ஏறி அதைப் பறிக்கவும் தயாராகிவிட்டான். இதைக் கண்ட ராகுதேவன் ஓடிச்சென்று இந்திரனிடம் முறையிட்டான். இந்திரன் உடனே தனது வஜ்ராயுதத்தை ஏவி விட்டான். அது அனுமன் தாடையை தாக்கி தடுத்து நிறுத்தியது. இதனால் அனுமன் மயங்கி விழுந்து விட்டான். அனுமன் மயங்கியதால் வாயு தேவனுக்குக் கோபம் வந்தது. தன் பிள்ளையைத் தாக்கிய இந்திரனுக்கு பாடம் கற்பிக்க எண்ணிய வாயு, உடனேயே தனது கடமையை நிறுத்திக்கொண்டு விட உலகெங்கும் காற்று வீசாமல் போனதில் உயிரினங்கள் சுருண்டன. இதைத் தொடர்ந்து இந்திரன் ஓடிவந்து வாயுவை சமாதானம் செய்து, அனுமனுக்கும் தன் வஜ்ராயுதத்தால் இனி ஒரு தீங்கும் நேராது என்று வரம் அளித்தான். இந்திரனைத் தொடர்ந்து வரிசையாக எல்லா தேவர்களுமே வரமளிக்கத் தொடங்கினர். ஒவ்வொரு வரமும் ஒவ்வொரு விதம். மரணம் என்பது அனுமனை நெருங்காது என்று எமன்

ஆரம்பிக்க, தீயால் ஆபத்து நேராது என்று அக்னி வரம் அளிக்க, வரசித்திகள் அனுமனை அடைந்தன.

ஏற்கனவே மும்மூர்த்திகளின் சிறப்பம்சங்களுடன் பிறந்த பிள்ளையான அனுமன், இப்போது அனைவரும் தந்த வரங்களால் உலகின் மகா சக்தியாகவே ஆகிவிட்டான்.

அந்த ஆதி சக்திதான் மும்மூர்த்திகளைப் படைத்து அவர்களுக்குத் துணையாக முப்பெரும் தேவியரைப் படைத்து, பின் இந்திராதி தேவர்களைப் படைத்து, பஞ்சபூதங்களையும் படைத்து இந்த உலகையும் படைத்தவள்.

தனித்தனியே திகழும் இந்த அத்தனை சக்திகளும் ஒன்றுகூடிய ஒரு தொகுப்பு சக்தியாக அனுமன் மாறியது தான் விந்தை.

இப்படியொரு சக்தி அம்சம் கொண்டவரை எவராலும் வெல்ல முடியாது என்பதே நிதர்சனம். மும்மூர்த்திகளால் கூட அனுமனை வெல்ல முடியாத அளவு அனுமன் பலவானாகி விட்டான்.

இது ஒரு வகையில், ஆபத்தும் கூட...

நெருப்பென்றால் அதனை அணைக்க நீர் இருப்பது போல, வானளாவிய ஒரு மரத்தையும் நறுக்கிட ஒரு கோடாலி இருப்பது போல அனுமனுக்கு அவன் சக்திகள் அவ்வளவும் நினைவுக்கு வரக்கூடாது என்று ஒரு சாபத்தை சில முனிவர்கள் வழங்கி விட்டனர்.

அனுமன் என்னும் சக்தி பூட்டுக்கு, அந்த சாபமே சாவியாகிப் போனது. பின்னர் இதையெல்லாம் அறிந்த ஜாம்பவான் அவனுக்கு இதை ஞாபகப்படுத்தவும், அனுமன் விஸ்வரூபம் எடுத்தான். இலங்கைக்குப் பறந்து சென்று அன்னை சீதை இருக்கும் இடத்தை தெரிந்து

கொண்டு, இலங்கை நகரையே நிர்மூலமாக்கி விட்டும் வந்தான்.

அதன் பிறகும் பெரும் ராமபக்தனாகத் திகழ்ந்து ராமனின் சிறிய திருவடி என்றே அழைக்கப்பட்டான்.

இப்படிப்பட்ட அனுமன் நம்முள்ளும் வரவேண்டும் என்றால், நாமும் ராம நாமத்தை ஜெபிக்க வேண்டும். ராமநாமம் அவனை அழைத்து வரும். அவன் வந்து விட்டால் மனதும் ஒளிபெறும். எல்லா விதமான சக்திகளும் அவனோடு சேர்ந்து நமது மனதிற்கு வந்துவிடும்.

அதன்பின், எந்தத் துன்பத்தால் நம்மை என்ன செய்துவிட முடியும்? நம் வரையில் எல்லா நாளும் எல்லா பொழுதும் கூட தீபாவளியாகி விடாதா என்ன?

19. மந்த்ரோபதேசம்

சோழ ராஜ்ஜியத்தின் அந்த உறையூர் அந்தகாரச் சிறையானது கரிய மையையும், கன்னங்கரிய இருளையும் சேர்த்துக் குழைத்தாற் போல் இருந்தது. தீப்பந்தம் தாங்கியபடி வந்திருந்த இரு சிறைக் காவலர்கள் தீப்பந்த ஒளியினுள் சிறைக் கதவைத் திறக்கவே பெரும் பாடுபட்டனர்.

திறந்து கொண்ட கதவினைத் தொடர்ந்து உள்ளே காலை வைக்கவே அவர்களுக்கு அச்சமாக இருந்தது. ஒருவித கசட்டுவாசம் மூக்கைக் குமட்டியது. சில கருவண்டுகள் தீச்சுடர் தென்படவும் வேகமாய் மோதுவதுபோல் பறந்து வந்தன. அவர்கள் இருவரும் ஒதுங்கிக் கொண்டனர். அப்படியே, "ஒரு மன்னனை... அதிலும் அன்னமிடுவதை ஒரு பெரும் அறச்செயலாகவே கருதி செயல்பட்ட ஒரு மன்னனை இப்படி ஓர் அந்தகாரச்

சிறைக்குள் அடைத்திருப்பது சற்றும் தகாது. இதே சிறைச் சாலையில் காவலிருக்கும் நமக்கே இந்த இடம் குலை நடுக்கம் தருவதாக உள்ளது... என்றால் உள்ளிருக்கும் அரசனுக்கு எப்படி இருக்கும்? என்கிற கேள்வியுடன் அவர்கள் சிறை மையத்தை அடையவும் அந்த சிறையின் ஒரு மூலையில் மூடிய விழிகளும், சப்பணமிட்ட கோலமுமாய் அவர்கள் அரசன் என்று பார்த்த பரகாலனின் திவ்யரூபம் காட்சியளித்தது. நெற்றியிலே சிறையில் அடைப்பதற்கு முன் தரித்துக் கொண்ட ஸ்ரீ சூரணத் திருமண்காப்பு, துளியும் அழிந்திடாதபடி காட்சி தந்தது! அவர்கள் வரவும் அவர்கள் வருகையை உணர்ந்து பரகாலனும் கண் மலர்ந்தான். முகத்தில் மெல்லிய குறுநகை ஒன்றையும் விளைவித்தான்.

"பரகாலருக்கு எங்களுடைய பணிவான வந்தனங்கள்..." என்று இருவரில் ஒருவன் வந்த நோக்கத்தைக் கூறத் தொடங்கினான்.

"நானொரு கைதி-அதிலும் உங்கள் பேரரசனுக்கு கப்பம் கட்டத் தவறிய ராஜதுரோகி எனக்கு நீங்கள் வந்தனம் கூறுவது தவறு..." என்ற பரகாலனை இருவருமே அதிர்வோடு பார்த்தனர்.

"சரி நீங்கள் வந்த நோக்கத்தைக் கூறுங்கள்..."

"அதை எப்படிக் கூறுவது என்று தான் எங்களுக்குத் தெரியவில்லை."

"அப்படியாயின் திரும்பிச் செல்லுங்கள். நான் அந்த மாலவன் நாமங்களை ஜெபித்தபடி இருக்கிறேன். கால விரயம் செய்யாதீர்கள்..."

"பரகாலரே!... இந்த அந்தகாரச் சிறைக்குள் எப்படி உங்களால் எந்த அச்சமுமின்றி அமர்ந்து ஜெபிக்க முடிகிறது?"

"கண்ணிரண்டை யார் எப்பொழுது மூடிக் கொண்டாலும் அந்தகாரம் தானே? இதில் அச்சப்பட என்ன இருக்கிறது...?"

"உங்களை எண்ணி நாங்கள் வியக்கிறோம். இன்று இந்த அந்தகாரச் சிறையில் உள்ள தாங்கள் நாளை இப் பூவுலகில் இருப்பீர்களா? என்பது தான் இன்றைய பெரிய விஷயமே..." "ஓ!... அப்படி என்றால் நாளை நான் தூக்கிலிடப்படப் போகிறேன் என்று கூறுங்கள்...?" சாதாரணமாக எதிர்கொண்டு திருப்பிக் கேட்டான் பரகாலன்.

"ஆம்... பெரும் ராஜதுரோகியாக உங்களை அரசரின் அவையில் உள்ள சான்றோர்கள் முடிவெடுத்துள்ளனர். திருமங்கை எனும் குறுநிலத்துக்கு உங்களை மன்னனாக்கிய சோழப் பேரரசுக்கே தாங்கள் துரோகம் செய்தது மட்டுமல்ல, கப்பமும் செலுத்தத் தவறி விட்டீர்கள். அதோடு சோழப்படை உங்களைக்கைதுசெய்ய வந்தபோது அவர்களை எதிர்த்துப் போரிட்டு அவ்வளவு பேரையும் ஓடஓட விரட்டியும் அடித்துள்ளீர்கள். ஒரு குற்றத்துக்கு மூன்று குற்றங்கள். முதல் குற்றம் நன்றி மறந்தது-அடுத்த குற்றம் கப்பம் கட்டத் தவறியது. மூன்றாவது குற்றம் அரசப் படைகளுடன் போரிட்டது. இதற்கு அந்தகாரச்சிறையில் அடைத்திருப்பது என்பது சாதாரண தண்டனை-தூக்கிலே போடுவது தான் சரியான தண்டனை என்பது அவைச் சான்றோர்களின் கருத்து..."

சிறை வீரர்களின் பேச்சில் விவரங்கள் மட்டுமல்ல, அதை அவர்கள் விரும்பவில்லை! என்பதும் பளிச்சென்று தெரிந்தது.

பரகாலன் முகத்தில் திரும்பவும் ஒரு புன்னகை! "எப்படி உங்களால் இந்த நிலையிலும் புன்னகை புரிய முடிகிறது...?"

"நான் புன்னகை புரிந்த உங்கள் சான்றோர்களை எண்ணி... அவர்களுக்கு எப்பொழுதும் ஒரு பக்கத்தை மட்டுமே பார்க்க முடியும் என்பது தெரிகிறது. பரவாயில்லை... நான் என்னை அந்த மாலவனுக்குக் கொடுத்து விட்ட ஒருவன். அந்த நாராயணன் தான் இனி என் விஷயத்தில் முடிவு செய்யவேண்டும். என் வாழ்நாள் இந்த ஸ்தூலம்-நான் விடும் மூச்சு-எல்லாமே நாராயணப் பிச்சை தானே?"

"உங்கள் நாராயண பக்தியும் கூட இன்று பெரும் சர்ச்சைக்கு உள்ளானது. சோழ சாம்ராஜ்ஜியம் ஒரு சைவ நாடு. இங்கு வைணவத்திற்கு இடமில்லை என்று ஒருவரும், சிவமே பெரிது, அந்த நாராயணன் ஒன்றுமில்லை என்றொரு வரும் பேசிட உங்கள் பக்தியே இன்று விவாதப் பொருளாகவும் ஆகிவிட்டது..."

"அடடா... எம்பெருமானைச் சிறிதாக எண்ணும் ஊனுயிர்கள் கூட இந்த மண்ணில் உள்ளனரா...? ஐயோ பாவம்! நான் அவர்களுக்காக வருந்துகிறேன்....."

"இப்படி நீங்கள் பேசுவதால் ஆகப்போவது ஒன்றுமில்லை. உங்களை அந்த நாராயணனா வந்து நாளை காப்பாற்றப் போகிறான்?"

ஒரு சிறைக்காவலன் கேட்ட விதமே சற்று இளப்பமாக இருந்தது. அது பரகாலனைக் கீறியது. கோபமும் மூட்டியது.

"எதற்கு இந்தச் சிறுமையான பேச்சு? என்னை மட்டுமல்ல. உங்களை, உங்கள் அரசனை, இந்த நாட்டினுள்ள அத்தனை உயிர்களையும் காத்து ரட்சித்துக் கொண்டிருப்பது அந்த நாராயணன் தான். ஒன்றுக்கு ஒன்பதாக அவதாரங்கள் கண்டு இந்த பூமியில் தர்மம் வாழ வழி காட்டியதும் அந்த மாதவன் தான்.

"ஊர் உலகைக் காப்பது இருக்கட்டும். நீங்கள் வணங்கிடும் அந்த நாராயணத்திற்கு சக்தி இருப்பது உண்மை என்றால் அது நாளை உங்களைக் காப்பாற்றுமா?"

"எனக்கு அதில் ஏதாவது சந்தேகம் விளைந்தால் அல்லவா உங்களைப் போல நான் கேள்வி கேட்டிட....?"

"மன்னியுங்கள் பரகாலரே!.... நாங்கள் உங்களுக்காக அனுதாபப்படுகிறோம். குமுதவல்லி என்னும் ஒரு நாட்டியக்காரி மீது காதலுற்று அவள் சொன்னாள் என்பதற்காக நீங்கள் திருமால் பக்தர் ஆனதாகத்தான் அறிகிறோம்.

அவள் சொன்னாள் என்பதற்காகவே அன்றாடம் ஆயிரம் வைணவர்களுக்கு அன்னதானம் செய்து வருவதாகவும் அறிந்தோம். அதனாலேயே நிதிப்பற்றாக் குறை ஏற்பட்டதால் தான் எங்கள் அரசருக்கும் உங்களால் கப்பம் கட்ட இயலவில்லை. இப்படி ஒரு நிலைப்பாடுதான் உங்களை யுத்தம் செய்ய வைத்து இன்று கைதியாகவும் ஆக்கியுள்ளது.

அதாவது உங்களது இன்றைய இக்கட்டுக்குக் காரணமே உங்கள் நாராயண பக்திதான்... இதைத் துளியும் உணராமல் அந்த நாராயணன் உங்களைக் காப்பாற்றிடுவான் என்று எதை வைத்து நம்புகிறீர்கள் என்றே புரியவில்லை."

அவர்கள் கேட்ட கேள்விகள் பரகாலனின் பொட்டில் அவர்கள் குறிபார்த்து அறைந்தது போன்ற உணர்வைத் தான் தோற்றுவித்தன. அப்படியே மௌனமாகி விட்டான். காவலர்கள் மீண்டும் தொடர்ந்தார்கள்.

"சொல்கிறேன் என்று தவறாகக் கருதவேண்டாம். நீங்கள் நாராயணன் காலடிகளில் விழுவதால் கால்பணத்திற்கு கூட எதுவும் ஆகப்போவதில்லை. நாளை

காலை உங்களுக்கு தூக்கு தண்டனை விதிக்க எங்கள் சிறைத் தலையாரி வருவார்.

அப்போது அவர் கால்களிலும், பின்னர் அமைச்சர்கள், அரசர் என்று மற்றவர்கள் கால்களிலும் விழுந்து மன்னிப்பு கேளுங்கள். ஒருவேளை அவர்கள் உங்களை மன்னித்து மீண்டும் திருமங்கைக்கு உங்களை மன்னனாக்கக் கூடும்.

அதன்பின் நீங்கள் முறையாக கப்பம் கட்டி வந்தால் போதும். காலமெல்லாம் அரசனாகவே இருந்து தாங்கள் ஜெயம் பெறலாம். அன்றேல் நாளை காலை உங்களைத் தூக்கிலிட்டு அந்தப் பிணத்தைக் கூட குழிதோண்டிப் புதைத்திடாமல் சித்தன்ன வாசல் மலை மீதுள்ள சவப்பாறை மேல் தாங்கள் வீசப்பட்டு காக்கை, குருவிகளுக்கு உணவாவீர்கள் என்று எச்சரிக்கிறோம். வருகிறோம்...''

அவர்களும் தாங்கள் வந்த நோக்கத்தை தெரிவித்து விட்டு, பேச வேண்டியதையும் பேசி விட்டுப் புறப்பட்டும் சென்றனர்.

மீண்டும் அந்தச் சிறையை அந்தகாரம் சூழ்ந்து கொண்டது. அவர்கள் கேட்ட கேள்விகள் பரகாலனின் மனத்தில் முட்டி மோதி பெரிய தர்க்கப் போராட்டமே நிகழ்ந்தது.

இது ஒரு பெண்ணால் வந்த பக்தியா?

உண்மையில் நான் நாராயண பக்தனல்லவா?

இல்லாத ஒரு பக்தியை எவரால் தான் தூண்டிவிட முடியும்?

அந்த பக்தியின் பேராலே நான் ஆயிரமாயிரம் பேர்களுக்கு அன்னமிட்டது ஒரு தவறா?

அள்ளி அள்ளித் தந்திடும், அழகிய லட்சுமிக்கு தன் மார்பிலேயே இடமளித்திருக்கும் அந்த மாலவனுக்கு அவன் பொருட்டு நான் செய்யும் அன்னதானமெல்லாம் ஒரு செலவா....? அதன் பொருட்டு நான் நிதி இழக்கலாமா? நான் நிதியை இழந்து இப்படி சிறையில் கிடப்பதும் சரிதானா?

சிறைக் கதவுகளுக்கு அப்பால் விறைப்பாக நின்று கொண்டு வயிற்றுப்பாட்டின் நிமித்தம் காவல்புரிய வேண்டிய வீரர்கள் எல்லாமா என்னைக் கேள்வி கேட்பது? சிங்கம், சற்றே களைத்து உறங்கிடும் போது எலிகள் அதன் மேல் ஏறி விளையாடுவது போல, இவர்களும் என்னிடம் எனக்குச் சமதையாக நின்று தலையாரி காலிலும், அமைச்சர், அரசன் என்று எல்லோர் கால்களிலும் விழும்படி கூறும் அளவிற்கு எனக்கும் இழிநிலை வந்துவிட்டதே....? இவர்கள் கால்களில் எல்லாம் விழுந்து உயிர் வாழ்வதைவிட இங்கேயே இப்போதே நான் மூச்சையடக்கி உயிர் விடுவது தானே உத்தமம்?

மனத்துக்குள் பலவாறாக முட்டி போதிய பரகாலனும் அவ்வாறே செய்ய சித்தமாகி மூச்சையடக்கி உயிர் விடத் துணிந்தபோது, அந்த அந்தகாரச்சிறையே பிரகாசம் ஆகும் அளவிற்கு ஓர் ஒளி தோன்றியது. அத்தோடு ஓர் அசரீரி ஒலியும் எழும்பியது.

''பரகாலா! குழப்பங்களை விலக்கு-அச்சத்தை உதறு. அசூயையும் அகற்று! எவர் பொருட்டு நீ என்பால் பக்தி கொண்டிருப்பினும், அதில் துளியும் சுயநலம் இல்லாததால் யாம் உன்னை ஆட்கொள்வோம். பொழுது விடியட்டும். காஞ்சி மாநகரிலிருக்கும் என் கருவறைக்கு வருவாய்! அதன் பின் உன் அவ்வளவு கடன்களும் நீங்கிட யாமே வழியுரைப்போம்...''

அசரீரி அடங்கி ஒளியும் விலகவும் திரும்பவும் அந்த காரம் சூழ்ந்து கொண்டது. ஆனால் பரகாலன் மனத்திலோ இனம் புரியாத பரவசம்... உதடிரண்டும் "பெருமாளே.... பேரருளாளா.... மாலனே....நான் தன்யனானேன்" என்று கூற, உள்ளம் புளங்காகிதம் எய்தியது!

மறுநாள் காலை! தலையாரி வந்து நின்றபோது பரகாலன் முகத்தில் தெரிந்த தெம்பையும் பொலிவையும் பார்த்து வியந்து போனான். அவனிடமே, "நான் உடனடியாக காஞ்சி மாநகர் சென்றாக வேண்டும். அங்கே உங்களுக்கான கப்பப் பணத்தை அந்தப் பெருமாளே தருவதாகக் கூறியுள்ளார்.... என்றான். தலையாரி சிரித்தான். "தப்பி ஓட இப்படி ஒரு தந்திரமான பேச்சா?" என்றும் கேட்டான்.

"காஞ்சிக்குச் சென்ற பின்னர் நான் கூறியபடி நடந்து கொள்ளவில்லை என்றால் அங்கேயே அப்போதே என்னை வாளால் வெட்டிக் கொல்லலாம். இது நாராயண சத்தியம்" என்றான் பரகாலன்.

விஷயம் சோழ அரசன் காதுவரை சென்றது. "சரி.... அவன் விருப்பப்படி காஞ்சி செல்க.... நடப்பதையும் பார்ப்போம்" என்றார் மன்னர்.

அதன்பின் ஒரு கைதி போல சங்கிலிகள் பூட்டி கொலைக் களத்திற்கு அழைத்துச் செல்வது போலத்தான் காஞ்சி நகருக்கு பரகாலனை அழைத்துச் சென்றனர். ஆலயத்தின் கருவறையை எட்டிய போது எல்லோர் கண்களுக்கும் கல் உருவாகத் தெரிந்த அந்த வரதராஜன் பரகாலனுக்கு மட்டும் தன் திவ்விய ரூபம் காட்டினார். அதே சமயம் திருச் சந்நிதிக்குள் இருந்து ஒரு கருட பட்சி வெளியேறிய நிலையில் "என் பின்னால் வாருங்கள்" என்பது போல வழி காட்டத் தொடங்கியது.

அதன் வான் நீச்சல் அருகிலுள்ள பாலாற்றங்கரை புன்னைமரம் ஒன்றின் அடி நிழலில் முடிவடைந்தது. அங்கே தோண்டிய போது எட்டு அண்டாக்களில் வழிய வழிய பொன்!

சோழ அரசனின் காவல் வீரர்களும், தலையாரியும் வாயைப் பிளந்து விட்டனர். அவற்றை அப்படியே கட்டப்படாத கப்பத்துக்கு ஈடாக எடுத்துக் கொள்வதாகக் கூறிய உடன் வந்திருந்த அமைச்சர் அந்த அருட்சம்பவத்தையும் ஒரு தந்திரச் செயலாகவே கருதினார்.

இந்த பொன் அண்டாக்களைப் பரகாலன் தான் முன்பே இங்கு புதைத்து வைத்துள்ளான். இப்போது இறைவன் தருவது போல நாம் உணரவேண்டும் என்பதற்காக நாடகமாடுகிறான்! என்று கருதியவர் "கப்பப்பணத்துக்கு இதை நேர் செய்து கொள்ளலாம். பத்தாயிரம் மூடை நெல்லுக்கு என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டார்.

சோதனைக்கே சோதனை!

பரகாலன் அயரவில்லை. கண்களை மூடினான். "திருமாலே...! பொன்னை வாரித் தந்த உனக்கு பொருள் தருவது தானா பெரிது?" என்று மனத்துக்குள் கேட்ட கேள்விக்கு "எதிரில் தெரியும் ஆற்றுமணல் அவ்வளவும் உன் பொருட்டு நெல்லாகும்" என்று அப்போதே பதில் கிட்டியது. பரகாலனும் கண் திறந்து "அதோ நெல் வெளி. வேண்டும் மட்டும் அள்ளிக் கொள்ளுங்கள்..." என்றான்.

"மண்வெளியைக் காட்டி நெல்வெளி என்கிறாயே...?" என அமைச்சரும் சீறிட "அருகில் சென்று பாருங்கள். உண்மை புரியும்" என்றான் பரகாலன். அதே போல சென்று பார்க்கவும், அவ்வளவு விளைந்த நெற்கதிர்களாய் இருந்ததைக் கண்ட அமைச்சர் அப்போதே மனம்

மாறியவராக "பரகாலரே...! இனி நானும் அந்த நாராயணன் அடிமை. அடியவர் பொருட்டு அவனது அருளாற்றலை உணர்ந்தேன்!" என்று கண்ணீர் மல்கக் கூறினார். அப்படியே பரகாலனின் காலடியிலும் விழுந்தார்.

செய்தி சோழ அரசனின் செவிகளுக்கும் சென்று சேர்ந்தது. அரசன் வியந்தான். அந்த நாராயணனையே ஆட்சி செய்யும் பக்தித் திறம் கொண்டவரை இவ்வளவு நாள்களும் குறுநில மன்னனாக, தான் வைத்திருந்தது எவ்வளவு பேதமை என உணர்ந்தவன் அதன் காரணமாகவே பரகாலரை நேருக்கு நேர் பார்க்கவே மருண்டான்.

காலச் சக்கரமும் உருண்டது.

பரகாலர் இப்போது கைதியுமல்லன்-அதற்காக மன்னனுமில்லன். இறைவன் கொடுத்த அவ்வளவு நிதியும் கப்பத்துக்கே பதிலாகிவிட்டது.

இந்த நிலையில் மீண்டும் அன்னதானம் புரிவது எங்ஙனம்?

பெரும்கேள்வி உள்ளத்துள் விளைந்து குடைந்தது. பார்த்தவர்கள் எல்லாரும் காலில் விழுந்து வணங்கினர்.

"பரகாலரே...! நீங்கள் கேட்டால் அந்தத் திருமால் குபேரனையே உங்களுக்கு ஏவல் புரிய வைப்பார். உங்களுக்கென்ன?" என்றனர். "அப்படியே ஆற்று மணலும் உம்பொருட்டு நெல்லாகுமே..." என்றனர்.

சிலர் நிதிஉதவியும் வேண்டினர். எல்லாம் சேர்ந்து பரகாலனை பெரிதும் பாதித்தது. மீண்டும் இறைவனிடம் கையேந்த ஏனோ மனம் தடுமாறியது. ஒருமுறை கேட்பதே உதவி. பலமுறை கேட்டால் அது பிச்சை... இறைவனிடம் பிச்சை கேட்க எதனாலோ மனது கூசியது.

அவனிடம் பெற்று அவன் அடியவர்க்கே தானமிடுவதில் அர்த்தம் இல்லை என்றும் தோன்றியது. அதே சமயம் இயலாதவன் போல் பொழுதை வீணே கழிப்பதிலும் பரகாலனுக்கு உடன்பாடில்லை.

ஒரு வீரனாய், ஓர் அரசனாய், ஒரு வைணவனாய் பலவாறு வாழ்ந்த வாழ்க்கை முறை புரட்டி எடுத்தது. அதே சமயம் 'அவரால் இனி நிச்சயம் தங்களுக்கு அன்னம் கிட்டப்போவது உறுதி' என்கிற எண்ணத்தில் நெற்றி நிறைய திருமண்பூச்சுடன் அடியவர் கூட்டம் மீண்டும் கூடத்தொடங்கிவிட்டது.

'அடடா... பசி என்று வந்து நிற்பவர்களுக்கு சோறிட்டாக வேண்டுமே.....? இதைச் செய்ய திருடுவது கூட பாபமில்லையே' ஒரு நியாயம் மனத்தில் எழும்பலாயிற்று! அடிப்படையில் கள்ளர் பிறப்பில் பிறந்து வளர்ந்ததும் கள்ளர்களுக்கே உரிய இருப்பவரிடம் இருந்து எடுத்து இல்லாதவர்க்குக் கொடுத்திடும் புதிய-நியாய சித்தாந்தம் பெரிதாக வேலை செய்ய ஆரம்பித்தது. அடுத்த நொடியே பரகாலர் பழையபடி கள்ளராகி விட்டார். அதைத் தொடர்ந்து அவரது சகாக்களும் அவரோடு சேர்ந்து கொண்டனர்.

பாற்கடலில் கண்மூடிச் சயனித்தபடி இருக்கும் அந்த திருமாலின் உதட்டிலும் ஒரு மர்மப் புன்னகை.

தன் பக்தன் தன்னைக் கேளாமல் எப்படி தனது வைணவ நெறிப் பாட்டைக் காட்டப் போகிறான் பார்ப்போம் என்று காத்திருந்தவருக்கு அவனது கள்வனாவதாரம் ஓர் ஆச்சரிய அதிர்வும் கூட...

இவன் ஒரு விசித்திர பக்தன்-வினோதகன்! யாசிக்க மறுக்கும் சுயமரியாதை, பசியைப் போக்கத் துடிக்கும்

பரோபகாரம்-இது இரண்டும் அந்த பக்தனை மீண்டும் கள்வனாக்குவதில் அந்தத் திருமாலுக்கு உடன்பாடில்லை அந்த நொடியே ஒரு முடிவுக்கு வந்தார்.

தானும் லஷ்மியுமாக ஒரு புதுமணத் தம்பதி கோலத்தில் சொர்ணாபரணங்கள் மேனிமேல் மின்ன பரகாலர் கள்ளத்தொழில் புரியத் தொடங்கிவிட்ட காட்டுக்குள் புகுந்து விட்டார்.

'ஜல் ஜல் ஜல்' என்றது அவர் அமர்ந்து வந்த மாட்டு வண்டி! பரகாலனும் சுற்றி வளைத்தான். புதுமணத் தம்பதியிடம் நகைகளை கழட்டித் தரச் சொன்னான். திருமாலும் அவனுடன் வாதத்தில் இறங்கினார்.

''அப்பனே! இப்படி திருடுவதற்கு பிச்சை எடுப்பது அல்லவா? இது இழிவாகத் தெரியவில்லையா உனக்கு?''

''நாட்டில் பசித்த வயிற்றோடு பலபேர் இருக்க இப்படி நகைகளில் முதலீடு செய்வது அதைவிட இழிவல்லவா?''

''சேர்க்கத்தானே செல்வம்...?''

''சேர்த்ததை விண்ணகத்துக்குக் கொண்டு செல்ல இயலுமா உம்மால்?''

''அதற்காக சன்யாசி போல எல்லோரும் எதுவுமின்றி இருப்பது தான் இல்லற வாழ்வா?''

''பொன்னகை எதற்கு... புன்னகை இருக்க? வீண் பேச்சு பேசாமல் நகைகளைக் கழற்றுங்கள். இதைக் கொண்டே நாளைய அன்னதானம் நடந்தாக வேண்டும்.

''ஓகோ... என் செல்வம் கொண்டு உன் தர்மமா? வினோதம் தான்.

''வேண்டாம்... நீயே உன் பெயரில் அன்னமளிப்பதாக சொல். விட்டு விடுகிறேன்.

''அன்னமளிப்பதை ஆசையாகச் செய்யவேண்டும். இப்படி அடித்துப் பிடித்து செய்யக் கூடாது.''

''உபதேசம் போதும்-இது என் வழி-நான் இப்படித் தான் செயல்படுவேன். எந்த மயிலும் கேட்பவர்களுக்கு தங்கள் இறகுகளைத் தந்ததில்லை. பிடுங்கினால் தான் ஆயிற்று.''

பரகாலனும் பிடுங்கினான். இருந்தும் அந்த மணமகன் காலில் உள்ள ஒரு மிஞ்சியைக் கழற்ற முடியவில்லை. போகட்டும் என்று விட்டுவிட பரகாலனும் தயாரில்லை. காலைப் பிடித்து தன் வாயில் உள்ள பற்களால் கடித்து அந்த மிஞ்சியைக் கழற்ற முனைந்தான்.

பிறருக்கு தர்மம் செய்வதற்காக இப்படி ஒருவர் காலையே பிடித்து அதை நெருடலின்றி வாயிலும் வைத்துக்கொள்வது எத்தனை பெரிய செயல்? மணமகன் வடிவில் வந்திருக்கும் அந்தத் திருமாலும் பரகாலனின் இந்த அரிய செயல் கண்டு இவன் நம் கலியனோ? என வியந்தார்.

ஆயிற்று... ஒரு வழியாக அவ்வளவு நகைகளையும் மூட்டை கட்டிய பரகாலன் அதைத் தூக்க முனைந்த போது தான் ஆரம்பமாயிற்று நாராயண சோதனை!

அதை அசைக்கக்கூட முடியவில்லை.

மணமகனோ கை கொட்டிச் சிரிக்கத் தொடங்கி விட்டார். பரகாலரிடம் அதிர்வு....

இவன் மணமகன் மாத்திரமல்லன். இவனொரு மாயாவி இது ஏதோ சித்து வேலை...? என்று தீர்மானித்தவன் ''உண்மையைச் சொல் யார் நீ...? மாயாவி தானே?'' என்று கேட்க ''அப்படித்தான் எல்லோரும் சொல்கிறார்களப்பா'' என்று பதில் வந்தது.

''எந்த மந்திரத்தால் இதை இப்படி கட்டிப் போட்டாய்...?''

"அதை நான் உனக்கு உபதேசிக்கட்டுமா?"

"அந்த மந்திரம் உபதேச மந்திர'மா?"

"ஆமப்பா... அதற்கு அண்ட சராசரங்களே கட்டுப்படும் போது அற்பமான இந்த நகை மூட்டை எல்லாம் ஒரு பொருட்டா என்ன?"

மணமகனின் கேள்வி பரகாலன் காதைக் கரித்தது.

"என்ன அந்த மந்திரோபதேசத்துக்கு நீ தயாரா?"

"நான் தயார்... ஆனால் என்னை உன் மந்திரம் எதுவும் செய்து விடாதே?"

"இந்த மந்திரம் உன்னை வாழ்வாங்கு வாழவைக்கும். பொன்னையும், பொருளையும் இன்று திருடும் நீ நாளை இந்த மண்ணிலுள்ளோர் மனங்களை எல்லாம் திருடு பவனாக ஆகிவிடுவாய். அவ்வளவு ஏன்....? நீ எந்தத் திருமாலை உன் இறைவனாகக் கருதி இதை எல்லாம் செய்கிறாயோ அவரே இந்த மந்திரத்தை நீ உச்சரிக்கும் போது உன் முன் தோன்றி நிற்பாரப்பா..."

"அப்படியானால் நான் இப்போதே தயார்" என்ற பரகாலன் மணமகனுக்கு காதைக் கொடுத்தான். அந்தத் திருக்காதில் மணமகனாகிய அந்தத் திருமாலே, "ஓம் நமோ நாராயணா" என்கிற அஷ்டாட்சர திருமந்திரச் சொல்லை உபதேசித்தார். அடுத்த கணமே பரகாலனிடம் ஒரு பெரும் சிலிர்ப்பு. இரும்பைப் பற்றிய காந்தத்தைப் போல அதை அப்படியே பற்றிக் கொண்ட பரகாலன் கண்களை மூடிய நிலையில்

ஓம்நமோ நாராயணா....

ஓம்நமோ நாராயணா....

ஓம்நமோ நாராயணா...! என்று கூறக் கூற விண்மேல் கருட வாகனத்தில் அந்த பரந்தாமனே திருமகளுடன் ஒன்று சேர்ந்து திருக்காட்சி தந்தான்.

வழிகள் பிழையுடையதாக இருப்பினும் நோக்கம் தீர்க்கமாகவும், உறுதியாகவும் இருந்தால் இறைவனே மந்திரோபதேசம் புரிய ஓடி வருவான் என்பதற்கு சான்றாக அந்தத் திருக்காட்சி திகழ்ந்தது.

இப்படித் திருடியாவது பசிப்பிணியைப் போக்க வேண்டும் என்று கருதி பக்தி செய்த பரகாலன் தான் பின்னாளில் திருமங்கை ஆழ்வாராக ஆகி போற்றப்படுகிறார்!

20. மதுரையம்பதிக்கு இன்று நீ மன்னன்!

கி.பி.1634 ல் ஒருநாள்...

மாமதுரைக்கு வடமேற்கிலான திண்டுக்கல். நகரின் பிரதான சாலை ஒன்றின் மேல் நல்ல அஷ்மங்கல புரவி ஒன்றின் மேல் நாயக்க வீரன் ஒருவன் முன் சென்றபடி இருக்க அவன் பின்னாலே ஒரு கோச்சு வண்டியானது இரட்டைக் குதிரைகளின் இழுவையோடு ஓடிக்கொண்டிருந்தது.

சாலை ஓரமாய் பதனீர் அங்காடி ஒன்றும் இளைப்பாற்றிச் சத்திரம் ஒன்றும் இருந்தன. அந்த அங்காடியிலும், சத்திரத்திலும் ஊர்க்குடிகள் தேங்கிக் கிடந்தார்கள். அவர்களுக்கெல்லாம் நாயக்க வீரனின் புரவியை கோச்சு வண்டி பின்தொடர்வது ஒரு ஆச்சரியமான விஷயமாகவே இருந்தது.

அந்தக் கோச்சு வண்டி கன்னிவாடி பாளையக்காரருக்கு சொந்தமானது. அதன் படுதாக்களில் தெரிந்த தென்னைமர இலச்சினையே அதைச் சொல்லாமல் சொல்லிவிட்ட நிலையில் கோச்சு வண்டிக்குள் பாளையக்காரர்தான் இருக்கிறாரோ என்றும் அவர்களிடம் ஒரு சந்தேகம்.

அவ்வேளை பார்த்து சாவடிக் காவல் வீரன் ஒருவன் பதனீர் அருந்த அங்கே வந்து சேர்ந்தான். அங்கிருப்பவர்களும் அவனைப் பார்த்து சற்று மதிப்பான முகபாவனைகளுக்குத் தங்களை மாற்றிக் கொண்டனர்.

அந்த வீரனுக்கு நன்கு பெரிய மீசை... ஏனோ அதிக அளவில் தலைமுடி மாத்திரமில்லை. எனவே தலைப்பாகையை அகற்றாமலே அங்காடி முன் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தான். மற்றவர்களும் அவனிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தனர். எல்லோருமே வயற்கூலிகள். அவன் மட்டும்தான் அரசாங்க சம்பளக்காரன்!

அரைப் பொன் ஆனாலும் அரசுப் பொன் என்றாலே இன்றும் சரி, அன்றும் சரி அதன் மதிப்பே தனிதான். அது அவர்களின் பேச்சிலும் நன்கு வெளிப்படத் தொடங்கியது.

"என்ன அண்ணாச்சி... சாவடிக் காவல் முடிஞ்சு வர்றீங்க போல இருக்கே?"

அவனும் ஆமோதிப்பதாய் தலையை அசைத்தான்.

"மேலல்லாம் ஒரே அசதிங்கறத பாத்தாலே தெரியிது. இந்த அசதிக்குப் பதனியை குடிச்சால்லாம் சரிப்பட்டு வராது. கொதிக்க, கொதிக்க பனவெல்லத்த தட்டிப் போட்டு சுக்குத் தண்ணிதான் தோது... குடிக்கீகளா?"

அவன் அதைக் கேட்டு ஆனந்தமாய் சிரித்ததோடு, "அப்படியே தாங்க..." என்றான். அங்காடிக்குள் கும்மிட்டி

அடுப்பின் மேல் பானை ஒன்றில் சுக்குத் தண்ணீர் தளதளத்துக் கொண்டிருந்தது. பக்கத்திலேயே ஒரு பனை ஓலைச் சிப்பத்தில் தட்டை தட்டையாக பனைவெல்லத் துண்டுகள். அதில் இரண்டை எடுத்து மிதி கல்லில் வைத்து தட்டித் தூளாக்கி சுக்கு நீரில் போட்டபோது ஒருவித சுகமான வாடை பரவத் தொடங்கியது. மூக்குக்கும் மிக இதமாக இருந்தது. அதை ஒரு மண் குவளையில் வடித்துப் பிடித்து நீட்டவும் அந்த சாவடி வீரன் அதை வாங்கி ஆனந்தமாகக் குடித்து முடித்தான். மீசை எல்லாம் ஈரம்... அதை தலைப்பாகை தொங்குமுனையாலே ஒத்தித் துடைத்துக் கொண்டான்.

"ஆங்... அப்புறம்?" தலையாரி போல காட்சி தந்த ஒருவர் தன் காவிப் பற்கள் தெரிய ஆரம்பித்தார்.

"என்னத்த அப்புறம்... ஏண்டா சாவடி வீரனா இருக்கோம்னு ஒரே சஞ்சலமா இருக்குது..."

"பார்றா... அரம்மண உத்யோகம் பாக்கற உங்களுக்கே சஞ்சலமா?"

"பொறவு...? மூணு நாளா சாவடிலயே கெடக்கறேன் ராவில்ல... பகலில்ல.... சீராப்பள்ளில (திருச்சி) இருந்து (இருந்து திருச்சி) ராசா வந்து ஆறு நாள் ஆச்சு. இந்த ஆறு நாள்ள அஞ்சு நாளா அவர் வயித்து வலில அவஸ்தைப் படுறாரு. சுத்து வட்டாரத்துல இருக்கற அவ்வளவு வயித்தியர்களும் வந்து பாக்கறதும் போறதுமா இருக்காங்க. அவங்கள - பாத்துப் பாத்து அனுப்ப வேண்டியிருக்கு. இப்பகூட கன்னிவாடி வைத்தியர் ஒருத்தர்தான் போறாரு... இவர் என்னத்த பண்ணப் போறாரோ?"

அந்த சாவடி வீரன் பேச்சுவாக்கில் நாயக்க அரசர் திருமலைக்கு வயிற்றுவலி என்கிற தகவலைச் சொல்லவும் அங்காடிக் கூட்டமே பதறிப் போனது.

"நம்ம ராஜாவுக்கு வயித்து நோவா... ஒரு வயித்து நோவுக்கா இத்தன வயித்தியருங்க...?"

ஒருவன் ஆச்சரியப்பட்டான்.

"ஹூம் வயித்துல புண் இருந்தா மிளகு தக்காளிக் கீரை சாரெடுத்து கொஞ்சம் பெருங்காயத்த தட்டிப்போட்டு நாலு உப்புக்கல் சேர்த்துக் கரைச்சு மூணு வேளை குடிச்சா வயித்து நோவு சிட்டா பறந்துடாது?"

ஒருவன் மருந்தையே கூறி நின்றான்.

"எலேய்... ஆடும், மாடும், மேய்க்கிற உனக்கு தெரிஞ்ச இந்த வைத்தியம் வைத்தியருங்களுக்கு தெரிஞ் சிருக்காதாக்கும்... வாய மூட்றா..."

"இது அப்படி இல்ல... எந்த மருந்துக்கும் கேக்க மாட்டேங்குது. பஞ்சணைல ராசா புழு மாதிரி துடிச்சிகிட்டிருக்கார். அன்ன ஆகாரம் இல்ல. ராசா இப்படி துடிக்கறத பார்த்துட்டு நேத்துதான் மகோதரம்னு முடிவுக்கு வந்தாங்க... மகோதரம் வந்தா அவ்வளவு தானாம்ல...?"

சாவடி வீரன் வருத்தம் கொப்பளிக்க திருப்பிக் கேட்டான். அவனே தொடர்ந்தான். "மகோதரம்கறது வயித்துல வர்ற ஒரு கட்டி... அதை அறுத்துதான் எடுக்கணும். அதை செய்ய வல்லவங்க இந்த பக்கத்துல யாரும் கிடையாது. மலையாள தேசத்துல சிலர் இருக்காங்க. ஆனா இது வெளிய தெரியக்கூடாதுங்கறது தளவாய் ராமப்பய்யர் உத்தரவு..."

"அது எப்படி... வெளிய தெரிஞ்சாதானே வைத்தியன் வரமுடியும். அதுலயும் ராஜ வைத்தியம் பாக்க கொடுத்து வெச்சிருக்கணுமே...? பேரு. பொன் எல்லாம் கிடைக்குமே..."

"இப்படி நினைக்கறவங்க சுத்து வட்டாரத்துல இருந்தா சொல்லுங்க. ராஜாவுக்கு நோவுன்னா இதுதான் சமயம்னு திருவிதாங்கூர் உன்னி வர்ம ராஜா போர் தொடுத்தாலும் தொடுப்பாரு...! ஏற்கனவே அவர் ஆறு மாசமா கப்பம் கட்றத நிறுத்திட்டாரு. அவரைப் பாத்துட்டு இங்க பக்கமா இருக்கற ராமநாதபுரத்து குட்டன் சேதுபதியும் திருமலை நாயக்கர்னாலே எரிஞ்சு விழறாரு. இவங்களுக்கெல்லாம் இப்படி ராஜா மகோதரத்தால கஷ்டப்படறார்னு தெரிஞ்சிச்சின்னு வை... அவ்வளவுதான்! அப்புறம் இந்த மதுரையையும், திருச்சியையும் அந்த மீனாட்சியும், ரங்கநாதரும் தான் காப்பாத்தணும்!"

அந்த நாயக்க வீரனின் குரலில் தொனித்த வருத்தமும், அவன் சொன்ன விஷயங்களும் கூட்டத்தாரையும் வெகுவாக கலக்கி விட்டது. அப்போது ஒரு சக்தி உபாசகர் போன்ற ஒருவர் குங்கும வண்ணத்தில் ஆடை அணிந்தவராக நெற்றியிலும் குங்குமம் துலங்கிட அங்கு வந்தார்.

அவரைப் பார்த்த உடனேயே எல்லோருக்கும் கை எடுத்துக் கும்பிட வேண்டும் போல தோன்றியது. அவ்வாறே செய்தனர்.

"சாமிக்கு எந்த ஊரு?"

"நான் மதுரைக்காரனப்பா..."

"சன்யாசம் வாங்கிட்டீங்களோ?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்... நானொரு சக்தி உபாசகன்!"

"அப்ப நீங்க வேற, சாமியாருங்க வேறயா சாமி..."

"தோற்றத்தில் அவர்களுக்கும் எனக்கும் பெரிய வேற்றுமை கிடையாது. ஆனால் நான் அந்த சக்தி வடிவான

மீனாட்சி அம்மையை மட்டுமே துதிப்பவன். சதாசர்வகாலமும் அவள் நினைப்பாகவே இருப்பவன்...''

''என்னமோ போங்க... சாமியாரோ, உபாசகரோ யார் இருந்து என்ன புண்ணியம்? எங்க ராஜா வயித்து வலியால செத்துகிட்டிருக்காரு.... இப்படியே போன ஒருநாள் அவர் உயிர் போயிடலாம். எப்ப, எப்பன்னு காத்துகிட்டிருக்கற எதிரிங்களுக்கு தான் இனி கொண்டாட்டம்...''

அந்த வீரனின் அலுப்பு அந்த உபாசகரையும் தாக்கியது. அவருக்கு அடுத்த நொடியே நாயக்க மன்னர் நோய்வாய்ப்பட்டிருப்பது புரிந்துவிட்டது. அவர் முகத்திலும் உடனேயே பெரிய அளவில் மாற்றங்கள்.

''ஆமாம் இப்பொழுது மன்னர் எங்கே இருக்கிறார்?''

''திண்டுக்கல் - மலைக்கோட்டை முகாமில்தான்...''

அந்த பதிலோடு அவரும் முகாம் நோக்கி நடையிட்டார்!

மலையடிவாரத்தில் மாரியம்மன் கோயிலை ஒட்டிய முகாமில் தான் நாயக்கர் தங்கியிருந்தார். அந்த உபாசகர் சென்ற சமயம் கன்னிவாடி வைத்தியர் தனக்குத்தெரிந்த மருந்துகளைக் கொடுத்துவிட்டு தான் வந்த கோச்சு வண்டியில் திரும்பிக் கொண்டிருந்தார்.

உபாசகரை காவல் வீரர்கள் முகாமுக்குள்ளேயே நுழைய விடவில்லை..

''என்னைத் தடுக்காதீர்கள்... நான் அந்த மீனாட்சியின் தூதுவன். அரசருக்கு நான் மருந்து கொண்டு வந்திருக்கிறேன்'' என்று அவர் கூறியதைக் கேட்டு அவர்கள் ஏளனமாகச் சிரித்தனர்.

''சிரிக்காதீர்கள். என்னை மன்னரைச் சந்திக்க அனுமதியுங்கள்'' அவர் தீனமான குரலில் பேசுவது சற்று தூரத்தில் சிந்தனையோடு சென்று கொண்டிருந்த தளவாய்

ராமப்பய்யரின் காதுகளில் விழுந்தது. திரும்பிப் பார்த்த ராமப்பய்யர் சைகையாலேயே அவரை உள்ளே விடச் சொன்னார்.

அவரும் ராமப்பய்யரை நெருங்கி வணங்கினார்.

''தாங்கள்...?''

''நானொரு அம்பாள் உபாசகன். குறிப்பாக மீனாட்சியம்மையின் பக்தன்''

''நீங்கள் எதற்காக மன்னரைச் சந்திக்க வேண்டும்?''

''அவருடைய வயிற்று உபாதை நீங்கிட மருந்து கொண்டு வந்திருக்கிறேன்...''

''உபாசகர் என்கிறீர்கள்... உங்களிடம் மருந்தா?''

''ஆம்.... இதோ...'' அவர் அன்னையின் ஆலயக் குங்குமத்தையும், மடப்பள்ளி விபூதியையும் தன் இடுப்பு மடிப்பில் இருந்து எடுத்து நீட்டினார்.

ராமப்பய்யர் முகம் கோபத்தில் சிவக்கத் தொடங்கி விட்டது.

''உபாசகரே... இந்த குங்குமமும், விபூதியுமா மருந்து... இது என்ன உளறல்?''

''தளவாய் அவர்களே... இது சாதாரண மருந்தல்ல அருமருந்து! உங்களுக்கு இப்பொழுது நான் ஒரு அரிய செய்தியையும் சொல்லப் போகிறேன். நான் இரு தினங்களுக்கு முன்பு அன்னையின் ஆலயத்திற்குச் சென்று அன்னையை உபாசித்தபடியே தியானத்தில் ஆழ்ந்து விட்டேன். அப்பொழுது அசரீரி போல ஒரு ஒலி என் காதில் ஒலித்தது. 'இந்தக் குங்குமத்துடன் ஆலவாய் அண்ணலின் விபூதியையும் எடுத்துக் கொண்டு திண்டுக்கல் செல்வாயாக. அங்கே இதன் தேவையை நீ உணர்வாய்...' என்றது அந்த அசரீரி. நானும் அவ்வண்ணமே இந்த

பிரசாதத்துடன் புறப்பட்டு வந்தேன். வழியில் ஒரு அங்காடியில் உங்களின் காவல் சாவடி வீரர் ஒருவர் மூலமாக அரசருக்கு மகோதரம் என்னும் வயிற்று வலி பற்றி அறிந்தேன். அம்பிகை என்னைப் பணித்தது எதற்கு என்பது பிறகே புரிந்தது...''

உபாசகரின் பேச்சைக் கேட்ட ராமப்பய்யர் முன்பிருந்த கோபத்தை விலக்கிக் கொண்டு சிரிக்கத் தொடங்கி விட்டார்.

''எதற்கு இந்த சிரிப்பு தளவாய் அவர்களே...?''

''சிரிக்காமல் என்ன செய்வது? மன்னர் அவர்கள் ஒரு வைணவ நெறியாளர்... அவரை சைவச் சார்புக்கு மாற்றிட தாங்கள் இப்படி எல்லாமா முனைவது?''

''தளவாய் அவர்களே... எதற்கிந்த பேதமான சிந்தனை? வைணவமும், சைவமும் வழிமுறைகள்! அன்னையை வணங்குவதற்கும், இதற்கும் என்ன சம்பந்தம்?''

''நிறையவே இருக்கிறது... எங்கள் மன்னர் ஒன்றும் நாத்திகரல்ல. அந்த திருவரங்கத்து அரங்கனை அனுதினமும் தொழுபவர்... அப்படி இருக்க அவர் நீங்கள் குறிப்பிடும் அம்பிகை மீனாட்சியை நினைக்கவே நினைக்காத நிலையில் அந்த மீனாட்சியின் கருணை இவரை எப்படி தேடிவந்திட முடியும்? அதனால்தான் நானும் இதை உங்களின் செயற்கையான ஒரு முயற்சியாகவே நினைத்தேன். சிரிப்பும் தானாக வந்து விட்டது.''

''அந்த மீனாட்சி பக்தர்கள் ஒரு போதும் பொய்யுரைக்க மாட்டார்கள் தளவாய் அவர்களே...''

''சரி, உண்மை என்றால் அந்த அம்பிகையே உங்கள் காதில் அசரீரி வடிவில் ஒலிக்கச் செய்தது போல நேராக

அரசருக்கே ஒலிக்கச் செய்திருக்கலாமே? எதற்காக இப்படிச் சுற்றி வளைத்து மூக்கைத் தொட வேண்டும்?''

தளவாய் ராமப்பய்யரின் கேள்வி நியாயம் அந்த உபாசகரை அப்படியே கட்டிப் போட்டு விட்டது., கண்ணிரண்டும் கூட கலங்கிப் போனது. அதுவே அவர் உண்மையாகப் பேசுகிறவர் என்பதை ராமப்பய்யருக்கு உணர்த்தியது.

''மன்னிக்க வேண்டும்... உங்களைப் புண்படுத்துவது என் நோக்கமில்லை. நீங்கள் அந்தப் பிரசாதத்துடன் என்னுடன் வாருங்கள். அரசர் இப்போது மயக்க உறக்கத்தில் இருக்கிறார். உங்கள் கைகளாலேயே அவருக்கு இந்த விபூதியையும், குங்குமத்தையும் வைத்து விடுங்கள். அம்பிகை உங்களைப் பணித்தது உண்மை என்றால், இதுவே மருந்தாக வேலை செய்து மன்னரும் குணமடையட்டும்.''

என்று பேசி அந்த உபாசகரையும் நாயக்க மன்னரின் பஞ்சணை நோக்கி அழைத்துச் சென்றார். நாயக்கர் ஒரு புழுவைப் போல சுருண்டு படுத்திருந்தார். அடர்வான கூந்தல் முகத்தை மூடியிருந்தது. அதை விலக்கி குங்குமத்தையும், விபூதியையும் பூசிவிட்டு உபாசகர் அங்கேயே நின்றுகொண்டு மீனாட்சியை பிரார்த்திக்கத் தொடங்கினார்.

''தாயே... தளவாய் கேட்ட கேள்வியிலும் நியாயம் இருக்கிறது. நீ நேராகவே மன்னருக்கு உணர்த்தியிருக்கலாம். அதை விட்டுவிட்டு என்னைப் பணித்ததன் உட்பொருளை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அம்மா... இந்தக் குங்குமமும் , விபூதியும் துளியும் பொய்யாகி விடக்கூடாது. இதுவே என் பிரார்த்தனை!'' என்று முடித்துக் கொண்டு புறப்பட்டார்.

மறுநாள் அதிகாலை!

நாயக்க மன்னரின் உறக்கம் சட்டென்று கலைந்தது. உடம்பிலும் ஒரு புத்துணர்ச்சி! வயிற்றிலும் வலியோ, வேதனையோ துளிகூட இல்லை.

அவர் காதுகளிலும் ஓர் அசரீரி குரல்!

''திருமலை மன்னா... நான் ஆட்சி செய்த மதுரையம்பதிக்கு இன்று நீ மன்னன். உனது மகோதரம் ஆகிய வயிற்றுநோவு உன் ஊழ்வினை! அதை நான் என் அருளால் நேர்செய்ய விரும்பியே என் பக்தன் ஒருவனை அனுப்பினேன். பிள்ளை தவிக்கும்போது வேடிக்கைப் பார்ப்பவள் தாயாக இருக்கமாட்டாள். எனவேதான் நீ என்னை நினையாத நிலையிலும், நான் உன்னை நினைந்து என் பக்தனை பிரசாதத்துடன் அனுப்பினேன். நீரும், குங்குமமும் அருளின் அடையாளங்கள். அந்த அடையாளம் தீண்டிய மேனியை இனி ஊழ்வினை வருத்தாது.''

''உன் ஆட்சிக்கட்டிலை நான் ஆண்ட மண்ணில் வைத்து இனி நீ இயக்கிடு. எதிர்காலத்தில் பேதங்களின்றி பக்தி செய்ய நீயே ஒரு ஆரம்பமாகத் திகழ்வாய். உன்னால் ஷன்மதமும் கலந்த ஒரு பொதுவழி தோன்றட்டும்...''

அந்தக் குரல் ஒலித்து ஓய்ந்தது. திருமலை நாயக்கர் கண்களிரண்டிலும் ஆனந்தக் கண்ணீர் பொங்கிப் பெருகலாயிற்று. ''தாயே மீனாட்சி...'' என்று உரத்தக் குரலில் அவர் எழுப்பிய குரலால் திண்டுக்கல் மலையடிவாரமே கண்விழித்துக் கொண்டது. ராமப்பய்யரும் ஓடிவந்தார். அசரீரி விபரம் அறிந்து முந்தின நாள் மாலையில் உபாசகர் வந்த விபரத்தையும் கூறி அவரும் திருமலை நாயக்கரோடு சேர்ந்து கொண்டு ''மன்னா! அம்பிகை உங்களைத் தேடி வந்து ஆட்கொண்டிருக்கிறாள். இது பெரும் பாக்கியம்'' என்றார்.

நாயக்கரால் பேச முடியவில்லை. அப்படியே நெக்குருகிப் போயிருந்தார்.

முக்கிய குறிப்பு:- நாயக்கர் காலத்தில்தான் மதுரை மீனாட்சி ஆலயமும், அழகர் கோயில் கள்ளழகர் ஆலயமும் பெரிதும் மேம்பாடுகள் கண்டது. சைவம், வைணவம் இரண்டையும் இணைத்து சித்திரை திருவிழாவை அவர் உருவாக்கியதே இந்தச் சம்பவத்தின் எதிரொலியால்தான். பதினொரு ஆண்டுகள் திருச்சியை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நாயக்கர் இதன் பிறகே மதுரைக்கு தன் மையத்தை மாற்றிக் கொண்டார்.

21. வரமுனி எனும் சித்தன்

சித்த புருஷர்களைப் பற்றிச் சிந்திக்கும் போது பதினெட்டு சித்தர்கள் என்கிற ஒரு வரிசை நமக்கு நினைவுக்கு வரும். ஆனால், உண்மையில் நூற்றுக்கணக்கான சித்த புருஷர்கள் இப்பூவுலகில் வாழ்ந்துவிட்டு மறைந்துள்ளனர்.

மறைந்தது அவர்களின் ஸ்தூல உடல் தானேயன்றி சூட்சும உடம்பல்ல. இன்றும் அந்த சூட்சும சரீரங்களை அழைத்து சிந்தை தெளியும் சான்றோர் பலர் இருக்கவே செய்கின்றனர்.

அப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் வரமுனி என்னும் சித்தராவார். இவர் பதினெட்டு சித்தர் பட்டியலில் இடம் பெறாவிட்டாலும் கூட சில விசேஷ காரணங்களுக்காக சித்தர்கள் பட்டியலில் இடம் பெற்ற ஒருவராவார்.

இவர் பற்றி எவ்வளவோ கர்ணபரம்பரைக் கதைகள் உண்டு. அவை அவ்வளவும் வரமுனியே மூச்சு கட்டுவதிலே நிபுணர் என்று கூறுவதுதான் ஆச்சர்யம்!

மூச்சு கட்டுவது என்பது ஒரு பெரும் கலை. எல்லோராலும் அது முடியாது. வேண்டுமானால் அதிகபட்சம் இரண்டு நிமிட நேரம் நாம் சுவாசிக்காமல் இருக்கலாம். அதற்குள்ளாகவே இதயமானது தத்தளித்துப் போய் ரத்த நாளங்களும் ஜீவ வாயுக் குறைபாட்டால் புடைத்துக் கொண்டு விடும். உள்தங்கி விட்ட காற்றோ

மார்பைப் பிளந்து கொண்டு வெளியேறப் பார்க்கும். ஆனால் வரமுனி பல மணி நேரம் வரை மூச்சு விடாமல் இருக்க முடிந்தவர் என்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

இது எப்படி இவருக்கு சாத்தியமாயிற்று என்பதற்குப் பின்னால் ஒரு சுவையான பின்னணி உண்டு.

வரமுனி சித்த புருஷராவதற்கு முன்னால் கூட்டமாகச் சென்று திருடி வரும் கள்ளர் கூட்டத்தில் ஒருவராக இருந்தார். ஒருமுறை அப்படி திருடச் சென்ற போது இவரையும், இவர் கூட்டத்தையும் பொதுமக்கள் துரத்தத் தொடங்கினர். இவரது கூட்டாளிகளால் சிறிது தொலைவுக்கு மேலே ஓட முடியவில்லை. ஆனால் வரமுனி ஓடிக்கொண்டேயிருந்தார். ஓடியவர் நின்று திரும்பிப் பார்த்த போதுதான் பல மைல் தொலைவு வந்திருப்பது தெரிந்தது. அவ்வளவு தொலைவு வந்திருந்தும் அவரிடம் மூச்சிறைப்பு ஏற்படாதது தான் விந்தை! ஆனால் அப்போது அதை அவர் பெரிதாகக் கருதவில்லை. எல்லாரும் தன்னைப் போலத்தான் என்று நினைத்துக்கொண்டார்.

இன்னொரு முறை பொருள் திருடப் போன சமயம் வசமாகச் சிக்கிக்கொண்டார். பின் ஊர்த் தலையாரி முன்னாலும் கொண்டு சென்று நிறுத்தப்பட்டார். தலையாரி வரமுனியின் காலில் கல்லைக்கட்டி அவரைத் தூக்கி கிணற்றில் வீசிக் கொல்லும்படி கட்டளையிட்டான். ஊர்க்காவலர்களும் ஊரார் முன் அவருடைய காலில் கல்லைக்கட்டி பெரும் கிணற்றுக்குள் தள்ளிவிட்டனர். வரமுனியும் மூழ்கிப் போனார். ஒரு கொலைத் தண்டனை ஈடேற்றப்பட்டதாக ஊரே கருதியது. ஆனால் கிணற்றுக்குள் மூழ்கிய வரமுனி மூச்சுவிட முடியாதபடி சிரமப்பட்டு தன் இன்னுயிரை இழந்து விடவில்லை. அப்படியே மூச்சைக் கட்டிக்கொண்டு கிடந்தார்.

அன்று மாலை வரமுனியின் உடம்பு கிணற்றின் அடியாழத்தில் ஒரு முனிவர் அமர்ந்து தவம் செய்யும் கோலத்தில் இருப்பதை அந்தக் கிணற்றில் இறங்கிக் குளிக்க முனைந்த ஒரு தேசாந்தரி கவனித்தான். அவன் நீருக்குள் மூழ்கி எழுந்த நிலையில் உள்ளே இருக்கும் வரமுனியின் மேல் அவன் கால்படவே பதைத்துப் போய் என்னவோ ஏதோ என்று அவர் கட்டுகளை அவிழ்த்து அவரையும் விடுவித்தான். அதன்பின் அந்த தேசாந்தரியால் விடுவிக்கப்பெற்ற வரமுனியும் கிணற்றை விட்டு வெளியே வந்த போது அந்தக் கிணற்றில் வசித்து வரும் முனீஸ்வரனே ஆச்சரியப்பட்டு வரமுனியைப் பார்த்து, "இந்தக் கிணற்றில் மூழ்கிய யாரும் உயிர் பிழைத்ததில்லை. ஆனால் நீயோ உயிர் பிழைத்து விட்டாய். நீ தெய்வாம்சம் உள்ளவன். நான் இனி உனக்கு அடிமை" என்றது.

பிறகுதான் வரமுனிக்கே தன்னால் பல மணி நேரம் மூச்சடக்க முடியும் என்பது தெரிய வந்தது.

திரும்ப ஊருக்குள் வந்த வரமுனியைப் பார்த்து ஊரார் பயந்து ஓடினர். இறந்துவிட்ட நிலையில் அவரது ஆவிதான் வருவதாகக் கருதினர். ஆனால் வரமுனி அவர்களைத் தடுத்து நிறுத்தி தான் உண்மையில் சாகவில்லை என்றும் கிணற்று முனி தனக்கு அடிமையானதையும் கூறியதைக் கேட்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

வரமுனி கூறியதைக் கேட்டுச் சிலர் சந்தேகப்படவும் செய்தனர். அவர்களுக்கெல்லாம் வரமுனி தன் சக்தியை நிரூபிக்க ஒரு வழி செய்தார். அந்தக்கிணற்று நீர் அவ்வளவையும் காலைப் பொழுது விடிவதற்குள் தான் வெளியேற்றிக் காட்டுவதாகக் கூறி, கிணற்றுக்குள் சென்றார். கிணற்று முனியிடம் விவரத்தைக் கூறவும் முனியும் "அவ்வளவு நீரையும் நான் குடித்தே காலி செய்து

தருகிறேன். நீ கவலைப்படாதே" என்றது. அவ்வாறே செய்தும் முடித்தது.

மறுநாள் காலை ஊரார் வந்து பார்த்த போது கிணற்றில் சொட்டு நீர் இல்லை. அந்த நொடியே வரமுனியை ஊரார் கடவுளாகக் கருதி காலில் விழுந்து கொண்டாடத் தொடங்கி விட்டனர்.

ஒரு திருடனாக இருந்து திருடிப் பிழைத்து வந்த வரமுனிக்கு ஊராரின் மதிப்பும், மரியாதையும் ஒரு புதிய ருசியை உருவாக்கியது.

அவ்வளவுக்கும் காரணம் தனது மூச்சடக்கும் சாதுர்யம் என்பதும் வரமுனிக்குப் புரிந்தது. ஒருநாள் அகத்திய முனிவர் அந்த ஊருக்கு வந்தார். அவரும் வரமுனியின் மூச்சடக்கிய சாதுர்யத்தை அறிந்தார். வரமுனியையும் அழைத்து, "அளவாகவும், குறைவாகவும் சுவாசித்து வாழ்பவனே யோகி. நீ பிறக்கும் போதே இறையருளால் அது போன்ற ஓர் அமைப்போடு பிறந்து விட்டாய். இதைக்கொண்டு நீ முழுமையான யோகியாக மாறினால் இந்த உலகையே வெல்லலாம். இன்று இந்த ஊரார்தான் உன்னை வாழ்த்துகின்றனர். நாளை உலகமே வாழ்த்தும்" என்று கூறினார்.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று வரமுனி கேட்டதற்கு. "இதயத்தில் மூச்சுக் காற்றை முழுமையாக அடக்கி சமாதி யோகத்தில் ஆழ்ந்து உயிரின் ரகசியத்தை நீ முதலில் தெரிந்துகொள். உயிர் என்பது எது? அதை எப்படி உணர்வது? உணர்ந்த நிலையில் உடம்பை விட்டு அதை எப்படி பிரித்தெடுப்பது? திரும்பவும் எப்படி அதை உள் நுழைப்பது? என்று நீ அதன் மூலம் பல ரகசியங்களை அறியலாம்" என்று கூறிய அகத்தியர். "மூச்சுக்காற்றுக்குள் தான் எல்லாமே இருக்கிறது. ஒருவன்

எப்பொழுதும் ஒன்றுபோல மூச்சு விடுவதில்லை. மூச்சு துவாரங்களில் இடகலை, பிங்கலை என்று இருவிதம் உள்ளது. இந்த இருவிதத்துக்கும் இரண்டுவித விளைவு உண்டு. பல நேரங்களில் நாம் ஏதாவது ஒரு மூக்குதுவாரம் வழியாகத்தான் சுவாசிக்கிறோம். அதற்கேற்ப சுவாசிக்கும் காற்றின் வழியாகவே பிரபஞ்சத்தில் உலா வந்தபடி இருக்கும் கோள்களின் கதிர்கள் நம்முள் நுழைகின்றன. அதன் நுழைவுக்கு ஏற்ப ரத்த ஓட்டமும் மனத்தின் எண்ணங்களில் நாம் அறியமுடியாத நிலையில் மாற்றங்களும் நிகழ்கின்றன. பின் அதற்கேற்பவே நாம் முடிவுகள் எடுத்து செயல்படுகிறோம். எனவே நாம் ஒரு முடிவு எடுப்பதற்குப் பின்னாலே இப்படி நுட்பமான பல சங்கதிகள் உள்ளன. அனைத்துக்கும் ஆதாரம் சுவாசமே!'' என்று வரமுனிக்கு அவர் பல அரிய விஷயங்களை விளங்க வைத்தார்.

''அது மட்டுமல்ல, நம் ஒவ்வொருவர் உடலிலும் ஏழு சக்கரங்கள் உள்ளன. சக்கரம் என்றால் வட்ட வடிவமாக என உடனே பொருள் கொள்ளக்கூடாது. இடையறாது இயங்கும் ஓர் இயக்கத்தையே இங்கே சக்கரம் என்கிறோம். நம் உடம்பில் இடையறாது இயங்கும் ரத்த ஓட்டம் கூட சக்கர இயக்கமே. இதில் உடம்பின் ஏழு சக்கரங்களைத் தெளிவாகக் கண்டறிந்து அதற்கு ஏழு பெயர்களையும் இட்டனர். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞா, சகஸ்ராரம் என்பனவே அந்த ஏழு சக்கரங்களாகும்.

''நாம் சுவாசிக்கும் விதத்துக்கு ஏற்ப இந்தச் சக்கரங்களில் வேகமும், விசையும் உண்டாகின்றன. அதற்கேற்ப பலன்களும் நமக்குக் கிட்டுகின்றன.''

அகத்தியரும் வரமுனிக்கு இவற்றை உபதேசித்த கையோடு அவருக்கு மந்திர தீட்சையும் அளித்தார்.

மந்திர தீட்சை என்பது சீடன் காதில் உரிய மந்திரத்தை சுருக்கமாக ஓதுவதாகும். அதன்பின் சீடன் அந்த மந்திரத்தைப் பிடித்துக் கொண்டு இடையறாது அதை ஜெபிக்க, ஜெபிக்க அவனது மனோசக்தியாலே அவன் உடம்பிலே மட்டுமல்ல. அவனைச் சுற்றிலும் கூட அற்புதங்கள் நிகழும்.

குறிப்பாக, மூச்சையடக்கித் தவம் செய்ய வல்லவர்களுக் கென்றே சிவவாக்கியர் ஒரு பாடலைப் பாடியுள்ளார்.

''சிவாயவசி எனவும் செபிக்க இச்சகம்எலாம்
சிவாயவசி எனவும் செபிக்க யாவும் சித்தியாம்
சிவாயவசி எனவும் செபிக்க வானமாளலாம்
சிவாயவசி என்பதே இருதலைத்தீ ஆகுமே!''

என்றார். இங்கே இருதலைத்தீ என அவர் குறிப்பிடுவது பிறப்பு. இறப்பு எனும் இரண்டையும் ஆகும்.

வரமுனியும் அகத்தியர் கூறியதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். பின்னர் சித்தர்களுக்கு அழகு, தவம் என்பதையும் அறிந்தார். தவமே வரத்துக்கு அடிகோலுகிறது. வரமுனியும் நிகரிலாத் தவம் புரிய ஆசை கொண்டார். அதன்படி **கண்ணன் - காளிங்கன்** என்னும் பாம்பின்மேல் நடனமாடி அதைக் கொன்ற காளிங்கமடுவைத் தேடிச் சென்று அதனுள் மூழ்கி அமர்ந்த நிலையில் 12 வருட காலம் தவம் செய்தார்.

இந்தத் தவத்தை சித்த உலகம் **ஜலஸ்தம்பனம்** என்கிறது. உடம்பின் இதய ஓட்டம், ரத்த ஓட்டத்தை நிறுத்திவிட்டு அப்படியே தண்ணீருக்குள் குறிப்பிட்ட அழுத்தத்தில் மனத்தையும் எண்ணங்களற்ற ஒரு நடுநிலைக்குக் கொண்டு

சென்று அப்படியே அமர்ந்து விடுவது. அதற்குமுன் நீரின் குளிர்ச்சி மற்றும் அழுத்தத்தைத் தாங்கும் வண்ணம் ஒரு மூலிகைத் தைலத்தைத் தயாரித்து அதை உடம்பு முழுக்கப் பூசிக் கொண்டதோடு அந்தத் தவத்தை வெற்றிகரமாகவும் முடித்துத் திரும்பினார்.

12 ஆண்டு என்கிற கணக்கை அவர் தன் ஜாதகப்படி குரு எனும் கிரகம் ஒவ்வொரு வீடாக 12 வீட்டையும் அடைந்து விட்டு தான் தொடங்கிய வீட்டுக்கே வரும் காலம் மட்டும் என்கிற ஒரு கணக்கிற்கு உட்பட்டுச் செய்தார் என்பர்.

"காணாரே தவசியென்னும் வரரிஷியார்தானும்
கருவாக காளிங்க மடுவுதன்னில்
வேணபடி தவயோகம் செய்யவென்று
விட்டகுறை தனை அகற்றி மருவிச் சென்று
தோணவே பன்னிரண்டு ஆண்டு மட்டும்
தொல்உலகில் ஜலஸ்தம்ப சமாதியாகி"

என்று போகர் ஒரு பாட்டில் வரமுனி பற்றிக் குறிப்பிடுகிறார்.

இப்படிக் கள்ளனாக இருந்த வரமுனி கிணற்று முனியின் நட்பால் ஊரார் மதிக்கப்படும் ஒருவராக ஆகி, பின் அகத்தியரின் வழிகாட்டுதலால் பெரும் தவசியாகி வரமுனி என்றழைக்கப்பட்டார். வரமுனி ரசமணிகளைக் கட்டுவதிலும் வல்லவர். இவர் கட்டிய பல ரசமணிகள் உடம்பில் பலவித மாற்றங்களை ஏற்படுத்தின. நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு அதற்கான சுரப்பு இல்லால் போன ஒருவருக்கு இவரது ரசமணி சுரப்பை ஏற்படுத்தியது.

ஆனால் அவர் அதை எப்படிச் செய்தார் என்பது கடைசி வரை ரகசியமாகவே இருந்து விட்டது.

வரமுனி தன் வாழ்நாளில் கண்டறிந்த ஒரு பெரும் உண்மை 'ஓர் ஆணோ, பெண்ணோ, விந்துவைத் துளிகூட இழக்காமல் இருந்தால் அதைத் திடமாக்கி அதையே ரசமணி போலாக்கி பசி, தாகம் என்று இயற்கைத் தேவை அவ்வளவையும் வெற்றி கொண்டு விடலாம்' என்பதாகும்.

இன்றும் வரமுனியைத் தியானிப்பவர்களுக்கு அவர் ஏதோ ஒரு வடிவில் வந்து வழி காட்டுகிறார் என்கின்றனர், அவரைத் தியானித்து பலன் கண்ட பல அன்பர்கள்.

22. பதினெட்டு சித்தர்கள் ஒரு பார்வை!

முதலில் யார் **சித்தர்கள்** என்று பார்த்து விடுவோம்! சித்தர்கள் என்ற உடனேயே இன்று பலரும் அவர்களை ஒரு மாயாவிகளாகவும், கொஞ்சம் போல பைத்தியக்காரர்கள் போலவும், யாருக்கும் கட்டுப்படாமல் காட்டு யானை போல திரிபவர்கள் போலவும்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை இப்படி எல்லாம் விளங்கிக் கொள்வது பெரும் பிழையில் தான் முடியும். உண்மையில் சித்தர்கள் என்பவர்கள் எந்த ஒரு நெறிப் பாட்டுக்கும் கட்டுப்படாதவர்கள் தான்... ஆனாலும் கூர்ந்து கவனித்தால் ஒவ்வொரு சித்தரிடமும் ஏதாவது ஒரு நெறிப்பாடு இருக்கும். சித்தர்கள் என்ற வார்த்தையை உற்று நோக்கினால் அதற்குள் நுட்பமாய் ஒரு உண்மை ஒளிந்திருப்பது நம் கருத்துக்கு புலனாகும்.

சத்தம் என்கிற வார்த்தையில், 'ச' என்கிற எழுத்துக்கு கொம்பு முளைக்கப் போய் அது 'சி' ஆகிறது. அதன்பிறகு

சத்தம் என்பதே சித்தம் என்றாகி விடுகிறது. சத்தத்துக்கும், சித்தத்துக்கும் அப்படி என்ன வேறுபாடு என்றும் கேள்வி எழுகிறது.

இந்த உலகில் ஆறறிவு படைத்தவன் மனிதன் மட்டுமே... ஐந்து பூதங்களால் ஆன நம் உடம்பில் ஆறாவது அறிவாக செயல்படுவது மனம். மனதை உடையவன் தான் மனிதன் என்றாகி மனிதன் என்றும் ஆனது. இந்த மனிதனின் மனம் என்பது எண்ணங்களின் ஒரு தொகுப்பு தானே? அதாவது எண்ணங்கள் எனும் சப்தமே மனமாக உள்ளது. சதாசர்வ காலமும் அது எது குறித்தாவது யோசித்தபடியே தான் உள்ளது. உறக்கத்தில் கூட கனவுகளின் வழியாக அது தன் செயல்பாட்டை நிகழ்த்திக் கொண்டுதான் இருக்கிறது. இதைத்தான் அலைபாயும் மனது என்றனர். ஆயிரம் யானைகளைக் கூட ஒருவன் சுலபமாக அடக்கி விடலாம். ஆனால் அவனால் மனதை அடக்க முடியாது என்பார்கள்.

அம்மட்டில் மனம் ஒரு காட்டுக்குதிரை. அது தறிகெட்டு ஓடியபடியே தான் இருக்கும். அதை அடக்கி விட்டாலோ நாம் பேராற்றல் உடையவராக மாறி விடுவோம். அடக்கப்படாதவரை மனமானது சத்தம். அடக்கி விட்டாலோ அது சித்தம் என்றாகி விடுகிறது.

ஒரு மனதில் சந்தோஷமான எண்ணங்கள் நிலவும் போது மட்டும் மனம் மகிழ்கிறது. ஆனால் எப்பொழுதும் மனதில் சந்தோஷமான எண்ணங்களே இருப்பதுமில்லை. இந்த உலகில் எவராலும் நிரந்தரமாக சந்தோஷத்துடன் மட்டுமே இருக்க முடிவதுமில்லை. மனம் மட்டும்தானா இப்படி? உடம்பிடமும் இதே கதைதான். எவ்வளவு தான் குளித்தாலும் திரும்பத் திரும்ப உடல் அழுக்காகிறது. எவ்வளவு சாப்பிட்டாலும் திரும்பப் பசிக்கிறது. எவ்வளவு

தான் அனுபவித்தாலும் மனது புதுப் புது ஆசைகளுக்காக அலை பாய்கிறது.

நம்மோடுதான் இருக்கிறது நம்முடைய வயிறு. 'நமது எஜமானர்தானே... ஒருவேளை அவர் உணவிடாவிட்டால் பரவாயில்லை பசியாது இருப்போம் என்று அது இருப்பதில்லை'.

நம்மிடம் உள்ள ஒரு தலைமுடி கூட நம்மைக் கேட்டுக் கொண்டு நரைப்பதில்லை. இதுதான் ஒரு மனிதனின் உலக நிலைப்பாடு.

சுருக்கமாக சொல்லப் போனால் நம் கையில் எதுவுமே இல்லை. நமது உருவம், அதன் அழகு, வாய்த்திருக்கும் நிறம் எதுவுமே நாம் தீர்மானித்ததில்லை. இந்த தாய்க்கும், இந்த தந்தைக்கும் மகனாக அல்லது மகளாக பிறக்க வேண்டும் என்பதைக் கூட நாம் தீர்மானிக்கவில்லை.

நமக்கென்று ஒரு பெயர் இருக்கிறது... அது கூட பிறர் அழைப்பதற்காகத் தான்... நமக்கு அதனால் ஆகப்போவது எதுவுமே இல்லை.

இதனால்தான் ஞானிகள் 'நான் யார்?' என்ற கேள்வியை உலகின் தலைசிறந்த கேள்வியாகக் கருதினர். அந்த கேள்விக்குள் புகுந்து விடை தேட முற்பட்டனர். நான் என்பது என் உடம்பா? இல்லை என் மனமா? எனக்கான பெயரா? இல்லை நான் செய்யும் தொழிலா? பேசும் பேச்சா? இப்படி கேட்டுக் கொண்டே போயினர்.

இறுதியில் அவரவர்கள் தேடலுக்கு ஏற்ப ஒரு விடையை அறிந்தனர். அறிந்த நிலையில் வண்ணக் கூட்டங்களால் ஆன மனதுக்குள் ஓர் அமைதி. இந்த அமைதி தற்காலிகமான ஓர் அமைதி எல்லாம் இல்லை. நிரந்தர அமைதி. அதாவது சத்தம் அடங்கினால் சித்தம்!

இந்த சித்தம் உடையவர் எவரோ அவரே சித்தர்! இப்படிப்பட்ட சித்தர்களுக்கு தெளிவு ஒன்றே கணக்கு. இவர்கள் தங்களுக்கான தெளிவாலே உடம்பையும் வெற்றி கொண்டவர்களாய்த் திகழ்ந்தனர். உடம்பை ஜெயித்தால் மட்டுமே உயிரை தாம் விரும்பியபடி பேண முடியும் என்பதில் மிகவே கவனமாக இருந்தனர். எனவே காய கல்பங்களை கண்டறிந்தனர். அவற்றை உண்டு உடம்பை உருக்கு போல் வைத்துக் கொண்டனர். உடம்பும் அவர்கள் சொன்னபடி எல்லாம் கேட்டது. **அல்லமர்** என்று ஒரு சித்தர்... இவர் உடம்பில் கத்திபட்டு காயம் ஏற்பட்டால் சில வினாடிகளில் அது ஆறி பழைய நிலைக்கு அவரது உடம்பு சென்றுவிடும். அந்த அளவுக்கு உடம்புச் செல்களை வேகமாகச் சேர்க்கும் கல்பங்களை கண்டறிந்து அதை உட்கொள்கிற ஒருவராக அவர் இருந்தார். அவரோடு மோதி ஒருவராலும் அவரை வெல்ல முடியவில்லை. இதனால் 'அல்லமர்' ஒன்றும் திமிர் பிடித்து தன்னை வெல்ல ஆளில்லை, என்றெல்லாம் மார் தட்டவில்லை. தன் சித்தத் தெளிவாலே அவர் உடம்பை வென்று காண்பித்தார்.

திருமந்திரம் தந்த **திருமூலர்** இவருக்கு நேர் எதிர்...! அவர் கூடுவிட்டு கூடு பாய்வதில் சமர்த்தர். மூலன் என்கிற ஒரு மாடு மேய்ப்பவன் உடம்புக்குள் அவர் புகுந்து கொள்ள அவரது உடம்பை இறைவன் புலி வடிவில் வந்து தின்றுவிட்டான். பூஉலகில் அவர் இறுதி வரை இறந்து விட்டவர்களின் உடம்புக்குள் புகுந்துதான் வாழ்ந்தார். உடம்பை இழந்து விட்ட காரணத்தாலேயே அவர் உடம்புக்கு பெரிதும் முக்கியத்துவமளித்து பாடல்கள் பாடினார்.

'உடம்பை வளர்த்தேன்... உயிர் வளர்த்தேனே!' என்றும் கூறினார். உடம்பைச் சீராகவும், ஆரோக்யமாகவும் வைத்துக் கொள்ள அவர் காற்றை அதிகம் பயன்படுத்தினார். சுவாசிப்பதில் தான் சூட்சமமே உள்ளது என்பதே அவர் வலியுறுத்திய கருத்தாகும்.

அவர்கள் இருவரையும் புறந்தள்ளி உடம்பு முழுக்க வியாதியோடு வாழ்ந்தவர் **பிராந்தர்**. குறிப்பாக அவருக்கு யானைக் கால் நோய் இருந்தது. ஆனால் அவர் உடம்பையும், அதன் நோய்ப்பாட்டையும் கர்ம வினையாக கருதினார்.

கர்ம வினையாகக் கருதியதாலேயே அதை அனுபவித்தே தீர்க்கவும் முனைந்தார். கல்பங்கள் உண்டு, மருந்துகள் சாப்பிட்டு குணப்பாட்டை தேடிக் கொள்ள முனையவில்லை. அதேசமயம் நோய் நிமித்தம் கொஞ்சமும் வேதனையையும் அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஒருசமயம் காளி தேவி அவர் முன் பிரசன்னமாகி 'உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டபோது 'ஒரு வரமும் தேவையில்லை' என்று சொன்னவர்... காளிதேவி அதைக் கேட்டு ஆச்சரியமடைந்தாள். குறைந்தபட்சம் உன் யானைக்கால் நோயையாவது குணப்படுத்துகிறேன் எனக்கு அனுமதி கொடு என்றபோது மறுத்துவிட்டார்.

அது என் கர்மம்... அதை நான் அனுபவித்தே தீர்த்துக் கொள்கிறேன் என்று கூறிவிட்டார்.

எவ்வளவு திட சித்தம் இருந்தால் இப்படி கூற முடியும் என்று யோசித்துப் பார்த்தால் மட்டும் தான் புரியும். யார் சித்தன் என்கிற கேள்விக்கு சித்தர்கள் உலகில் ஒரு அசைக்க முடியாத பதிலாக திகழ்பவர் பிராந்தர்!

காற்றுத் தத்துவம் பேசின திருமூலர் 'ஆசை அறு' மின் ஆசை அறுமின்... ஈசனோடாயினும் ஆசை அறுமின்...' என்றார். அதை பின்பற்றிக் காட்டியவர் பிராந்தர். கடவுளே முன் தோன்றி வலிய வந்து வரம் தரும்போதும் அதை மறுக்க எத்தனை பேருக்கு துணிவு வரும்?

அவர் இப்படி என்றால் வரம், வரம் என்று வரத்துக்காக அலையோ அலை என்று அலைந்தவர் **கொங்கணர்.** ஹோமம், யாகம், தவம் என்று ஒன்றை விடவில்லை. இந்த உலகை ஆட்டி வைக்க விரும்பினார். விசுவாமித்திரர் திரிசங்கு சொர்க்கத்தைப் படைத்தது போல ஒரு புது உலகை படைத்துக் காட்ட விரும்பினார். எனவே எல்லாவித வரசித்திகளும் தனக்கு வேண்டும் என்று விரும்பி அவற்றை அடைவதையே குறியாகக் கொண்டிருந்தார்.

சப்த ரிஷிகளில் ஒருவரான **கௌதமர்** அவரின் தேடுதல்களை கண்டித்தார். சித்தனுக்கு ஆசை கூடாது. அதிலும் எல்லா சித்திகளையும் அடையும் ஆசை கூடவே கூடாது. எதையும் வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளு, தானாக அவை உன்னை தேடி வந்து உன்னுள் நிரம்பிவிடும் என்றார். ஆனால் கொங்கணர் கேட்கவேயில்லை. வானில் பறந்து கொண்டிருந்த நிலையில் தன் மேனி மேல் எச்சமிட்டு விட்ட ஒரு கொக்கை தன் பார்வையாலேயே பொசுக்கியவர். அதே ஆங்காரத்தோடு அவர் வள்ளுவர், மனைவி வாசுகியை பார்த்தபோது வாசுகிக்கு எதுவும் ஆகவில்லை. மாறாக வாசுகி அவரைப் பார்த்து 'கொக்கென்று நினைத்தாயா கொங்கணா?' என்று கேட்டதுதான் உச்சபட்சம். அந்த ஒரு கேள்வி அவர் வாழ்வைப் புரட்டிப் போட்டுவிட்டது. எவ்வளவு திடசக்தியும், வலிமையும் இருந்தாலும் அது ஒரு கற்புக்கரசியின் பதிவிரதாத்தனம் முன் ஒன்றுமேயில்லை

என்கிற உண்மையை அதன் பிறகே புரிந்து கொண்டு தெளிந்தார்.

இப்படி தவறுகளால் மேன்மைகளை உணர்ந்தவர் அவர் என்றால் பிறக்கும் போதே 'குவா குவா' என கத்தாமல் சிவா சிவா என்றே கத்திக் கொண்டு பிறந்து ஒவ்வொரு சிறு' விஷயத்திலும் மேன்மைகளை உணர்ந்தவர் **சிவ வாக்கியர்.** ஆசைக்கு இவர் பெரிய எதிரி. 'நட்டகல்லை சுற்றி வந்து நாலு புட்பம் சாத்தியே' என்கிற இவரது பாடல் மிக பிரபலமான பாடலாகும். 'கடவுள் வெளியே எங்கும் இல்லை நமக்குள்ளேயே இருக்கிறார். நம்மால்தான் அவரை உணர முடிவதில்லை. அதனால் வெளியே தேடி ஏமாந்து போகிறோம்' என்றவர்.

ஒரு வென்னீர் அடுப்புச் சாம்பலில் இருந்து பிறந்தவர் **கோரக்கர்.** ஒரு பெண்ணின் பிள்ளைக்கலி தீர **மச்சமுனி** எனும் சித்தர் மந்திரித்த திருநீற்றை தந்தார். அவளோ அந்த திருநீற்றை சந்தேகித்து வென்னீர் அடுப்புக்குள் போட்டு விட்டாள். ஆனாலும் சித்தன் வாக்கு பொய்க்கக் கூடாது என்பதற்கேற்ப அந்த அடுப்புச் சாம்பலுக்குள் இருந்து உயிர் பெற்று வந்தது ஒரு குழந்தை. அதுதான் **கோரக்கர்.** இவரும் **பிரம்ம முனியும்** உற்ற தோழர்கள். அவர்கள் துன்பம் என்பதே துளி கூட இல்லாத 'இன்பம் சத்யம் தர்மம்' என்கிற நல்ல விஷயங்கள் மட்டுமே உள்ள ஓர் உலகையே படைக்க முனைந்தனர்.

அதைக் கண்டு படைப்புக் கடவுளான பிரம்மா முதல் தேவேந்திரன் வரை அனைவரும் அதிர்ந்தனர். பூவுலகம் என்பது மாயையால் ஆனது. மாயை இருப்பதாலேயே இன்பம். துன்பம், உயர்வு, தாழ்வு, நோய், சுகம், உறவு, பிரிவு, ஏழை, பணக்காரன் என்கிற இரண்டு நிலைப்பாடுகள் பூமியில் நிலவுகிறது. எதற்கு இரண்டு

நிலைப்பாடு...? ஒன்றுமட்டும் தான் இருக்க வேண்டும். அது இன்பமாக, உயர்வாக, சுகமாக, உறவாக, எல்லோருமே செல்வந்தராக என்று இருக்கும் ஓர் உலகை படைப்போம் என்பதே அவர்கள் இருவரின் நோக்கம். ஆனால் அவ்வாறு படைப்பது சாத்யம் இல்லை என்பது மட்டுமல்ல அது உயிர்களுக்குள் செயலாக்கமே இல்லாமல் செய்துவிடும் என்பதே உண்மை. எனவே அவர்களின் தவத்தையும், வேள்வியையும் கலைத்திட இந்திரன் 'இருள் மாயை', 'அருள் மாயை' எனும் இரு மாயைகளையும் அழகிய பெண்கள் வடிவில் அனுப்பி வைத்தான்.

அவர்களும் இருவர் புரியும் வேள்வி முன் நடனமாடி அவர்களது வேள்வியில் தடையை உருவாக்கி வெற்றி கண்டனர். ஆனால் அவர்கள் இருவரும் கோரக்கராலும், பிரம்மரிஷியாலும் சபிக்கப்பட்டு புகையிலை மற்றும் கஞ்சாப் பத்திரம் என்னும் தாவரப் பயிர்களாக மாறிப் போயினர். இன்றும் அவற்றை நாடுவோர் நலம் குன்றி நோயுற்று இறப்பர். அவர்களது ஒருமையை கெடுத்த இவர்கள் பூவுலகில் மனதுக்கு ஒருமை அளிப்பது போல தீமை புரிபவர்கள் ஆவர். அவர்களின் கோபத்தால் இப்படி ஒரு தாக்கம் பூமியில் ஏற்பட்டது. அதுவே ஓர் எச்சரிக்கையாகவும் மாறியது.

சித்தர்களைப் பற்றி சிந்திக்கும் போது **போகரை** நினைக்காமல் இருக்க முடியாது. இவர் ஒரு சீனர் என்கிற கருத்தும் உண்டு. பழனியில் உள்ள தண்டாயுதபாணியான முருகனின் நவபாஷாண உருவத்தை இவரே செய்தவராவார். நவபாஷாணங்களின் மேல் பட்டு வரும் பாலும், பன்னீரும், பஞ்சாமிர்தமும் மிகப்பெரிய மருந்தாகத் திகழ்ந்து தீராத நோய்களைத் தீர்க்கின்றன. அது மட்டுமல்ல நவபாஷாணங்கள் நவகிரகங்களையும்

குறிக்கின்றன. இதனால் கிரகங்களின் தீயதாக்கம் உள்ளவர்கள் பழனி முருகனை வணங்கி பிரசாதம் பெறும்போது அந்த தாக்கத்தில் இருந்து விடுபடுகின்றனர். மனித சமுதாயம் இப்படி ஓர் அரிய பயனை பக்திமார்க்கம் மூலம் பெற வேண்டும் என்றே போகர், தண்டாயுத பாணியை நிறுவினார். மேலும் அரிய மூலிகை ரகசியங்கள் பலவற்றை அறிந்து **'போகர் நாலாயிரம்'** எனும் நூலில் இவர் குறித்துள்ளார். சித்த மருத்துவ உலகுக்கு அது பெரிய வழிகாட்டியாகவே உள்ளது.

அவரது சீடர்தான் **புலிப்பாணி!** போகர் மூலிகை பறிக்க மலைக்கு சென்ற இடத்தில் மயக்கம் அடைந்து விட்ட நிலையில் மயக்கம் தெளிவிக்க தண்ணீர் தேடி சென்றார். அவருடன் சென்ற சீடர், அப்போது அவர் எதிரில் புலி ஒன்று வந்தது. அது குருவை தாக்கித் தின்று விடக்கூடாது என்பதால் அதை தன் வல்லமையால் அடக்கி அதன் மேலேயே அமர்ந்து தண்ணீர் எடுத்து வந்தவர் இவர். அதனாலேயே புலிப்பாணி என அழைக்கப்பட்டார்.

இவர் போகரின் சீடராக மட்டுமின்றி காலஞானம் உடையவராகவும் திகழ்ந்தார். அதனால் ஜோதிடம் தொடர்பான பல பாடல்கள் இயற்றியுள்ளார். ஜோதிடத்தில் 'புலிப்பாணி முறை' என்றே ஒன்று உண்டு.

தேரையர் என்று ஒரு சித்தரும் இருந்தார். இவர் குருவை விஞ்சிய சீடன். **அகத்தியரே** இவரது குரு! மன்னன் ஒருவன் தீராத தலை நோவால் அவதிப்பட்டபோது அதற்கு காரணம் யாருக்கும் விளங்கவில்லை. ஆனால் மன்னன் கபாலத்தின் மூளைப் பகுதியில் அதன் திசுக்களோடு இறுகப் பற்றியபடி இருந்த ஒரு ஈயளவிலான தேரைக்குஞ்சுதான் அந்த வலிக்கு காரணம். கபாலத்தை பிளந்து அந்த தேரைக் குஞ்சை எடுக்க முனையும் போது

முளைத் திசுக்கள் பாதிக்கப்பட்டால் மன்னனுக்கு பைத்தியமே பிடித்து விடலாம்.

எல்லோரும் அந்த தேரைக் குஞ்சை எப்படி நீக்கலாம்? எனத்தெரியாமல் தவித்தபோது ஒரு கிண்ணத்தில் நீருடன் அந்த் மூளை அருகே சென்ற சீடர் நீரில் அசைவை உருவாக்கவும் அந்த தேரை மூளையை விட்டு விட்டு கிண்ணத்திலிருந்த நீருக்கு தாவியது. மன்னனின் தலை நோவும் நீங்கியது. சீடனின் புத்திசாலித்தனத்தை அக்ததியரும் மெச்சினார். அன்று முதல் அந்த செயலே அவரை தேரையர் என்றாக்கியது. இவர் கூன் விழுந்த முதுகையையும் ஒரு குறிப்பிட்ட தைலத்தால் நிமிர்த்த வல்லவர். சுருக்கமாக சொல்வதானால் தேரையர் இருக்கும் இடத்தில் நோய் நொடிக்கு துளியும் இடமில்லாது போனது.

தேரையர் போலவே தந்திரமாய் காரியம் சாதிப்பதில் சிறந்தவர் **கருவூரார்!** இவர் ஆகம சாஸ்த்ரம் அறிந்தவர். ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படும் விக்ரகங்களுக்கு கீழே **'மருந்து சாற்றுதல்'** என்று ஒரு நடைமுறை உண்டு. அந்த மருந்தின் விகிதாசாரத்தை வைத்தே அந்த சிலாரூபம் கால காலத்துக்கும் உறுதியாகவும், அருளோடும் திகழ முடியும். இப்படி ஒரு மருந்தை செய்வதில் மட்டுமல்ல. பிரதிஷ்டை செய்ய இயலாதபடி மருந்தின் மேல் அமராமல் நழுவிச் செல்லும் விக்கரங்களை நிலைப்படுத்துவதிலும் இவர் நிபுணர். மனிதர்களால் மிகவும் துயரப்பட்டு அந்த துயரங்களில் இருந்து பாடம் கற்று ஞானம் பெற்று சித்தரானவர் இவர்.

சித்தராவதற்கு, மேல் ஜாதியில் பிறக்க வேண்டும் என்கிற அவசியங்கள் எல்லாம் இல்லை. ஓர் ஆடு - மாடு மேய்க்கும் இடையன் கூட சித்தனாக முடியும் என்பதற்கு

உதாரணம் **இடைக்காடர்.** இவரும், கால ஞானம் உடையவர். கோள்களையே ஆட்டி வைத்தவர். இவர் வாழ்ந்த காலத்தில் கால கதியால் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. ஆனால் அப்போதும் இவரும் இவரது ஆடுகளும் தப்பிப் பிழைத்து வாழ்ந்து வந்தன. ஆடுகளுக்கு எருக்க இலையை தின்னக் கொடுத்தும், தான் ஒரு வேளைக் கஞ்சி குடித்தும் வறட்சியை சமாளித்தார். இது எப்படி சாத்யம் என்று அதை அறிய இவரது குடிசைக்கு ஒன்பது கோள்களும் வந்தபோது, அவர்கள் உறங்கும் சமயம் அவர்களை இடமாற்றம் செய்து படுக்க வைத்து அதன் காரணமாக பெரும்மழை பெய்ய வைத்து வறட்சியை நீக்கியவர். அப்படி அவர்கள் இருந்த அமைப்பில்தான் இன்று நமது ஆலயங்களில் நவகிரகங்கள் நிறுவப்படுகின்றன.

தாம் திமித்திமி தையக் கோனாரே
தீம் திமித்திமி தையக் கோனாரே...'

என்று நிறைய தத்துவப் பாடல்களை பாடியவர் அவர்.

காட்டில் திரியும் பாம்புகளைப் பிடிப்பதை தொழிலாக கொண்டவன் அவன். அதைப் பெரிய வீரமாகவும் கருதுகிறான். ஆனால் உண்மையில் அந்தப் பாம்பை பிடித்து அடக்குவது ஒரு பெரிய விஷயமேயில்லை. ஒவ்வொரு மனிதனின் உடம்புக்குள்ளேயும் குண்டலினி என்னும் ஒரு விஷயம் பாம்பு போல சுருண்டு படுத்த நிலையில் உள்ளது. நமது மலப்பைக்கு கீழே கிடக்கும் அதை தட்டி எழுப்பி முதுகுத் தண்டு வழியாக உச்சந்தலைக்கு கொண்டு செல்லும் ஒரு யோகப் பயிற்சிக்கு பெயர் குண்டலினி யோகப்பயிற்சி. அதன்மூலம் நாம் யோகம் புரியும் போது பேரின்பத்தில் திளைக்க முடியும். அரிய இந்த வித்தையில் ஓர் உச்சம்

தொடுகிறான் பாம்பு பிடிக்கும் அந்த **பிடாரன். அவனே பின்னாளில் பாம்பாட்டி சித்தன் எனப்பட்டான்.**

பிறக்கும்போதே நாக்கு பின்னப்பட்டு இரட்டை நாக்காக காட்சி தந்த நிலையில், பேசுவதே சிரமமாக இருந்தது ஒருவருக்கு. பின்னப்பட்ட நாக்கை உடையவர் என்பதே பின்னாளில் **பிண்ணாக்கீசர்** என்று அவரை அழைக்க காரணமானது. அவர் சர்வ சாதாரணமாக இரும்பை - தங்கமாக்குவார். அதனால் அவரைச் சுற்றி அந்த ரகசியத்தை அறிய ஒரு கூட்டம் எப்போதும் இருந்து வந்தது. ஆனால் அவர் அந்த கூட்டத்துக்கு வாழ்க்கை ரகசியங்களைக் கூறி உபதேசம் செய்து அவர்களை கடைத்தேற்ற முற்பட்டார். இறுதிவரை அவர் ரசவாத ரகசியத்தை ஒருவருக்கும் கூறவில்லை. தனக்கெனவும் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

ஊர் ஊராகப் போய் புடவை வியாபாரம் செய்த ஒருவர் வண்ண வண்ணப் புடவைகளைக் கண்டு பெண்கள் மனம் மகிழ்வதையும், எவ்வளவு வண்ணங்களைப் பார்த்தும் திருப்திப் படாததையும் கண்டு வருந்தினார். ஆசை அலைக்கழிப்பதைப் பார்த்துப் பார்த்து அதனாலேயே மனம் மாறி எல்லாம் அகத்துக்குள் இருக்கும் ஆசையாகிய பேய் செய்யும் செயல். அந்த பேயை அடக்கி ஒடுக்கா விட்டால் வாழ்க்கை கெட்டு விடும் என்றார். ஆசை அகத்தை பேயாகக் கருதியதாலேயே **அகப்பேய் சித்தர்** என்றும் அழைக்கப்பட்டார்.

நாகப்பட்டணத்தைச் சேர்ந்த **ராமதேவர்** என்பவர் சித்தர் உலகில் வித்தியாசமாக பார்க்கப்படுபவர். அவர் மூலிகைகளை தேடிக்கொண்டு கண்டம் விட்டு கண்டம் சென்றவர். அந்த வகையில் அவர் மெக்கா நகருக்கே சென்று விட்டார். பெரும் உஷ்ண பிரதேசமான அங்கே

சென்று தன் வைத்தியம் பார்க்கும் திறனால் அங்கு வசிக்கும் முகலாயர்களில் ஒருவராகவே ஆகிவிட்டார். அங்கே இவர் பெயர் யாக்கோபு... பின் தான் அறிந்த மூலிகை ரகசியங்களோடு நாகை திரும்பி நெடுங்காலம் அரிய வைத்தியங்கள் பல செய்தார். அவர் பல நூல்களையும் எழுதியவராவார். அவர் சித்தர்கள் என்பவர்கள் மதம், மொழி இனத்துக்கு அப்பாற்பட்டவர் என்பதை உலகத்துக்கு உணர்த்தியவர்.

சித்தர்களில் **காலாங்கிநாதர்** என்பவர் இமயத்தில் தவம் செய்தவர். கைலாயத்தில் அந்த ஈசனோடு நித்தமும் பூஜைகள் கண்டு வாழ்ந்து வரும் நவநாயக சித்தர்கள் மற்றும் சப்தரிஷிகளை அறிந்தவர்.

கருத்த தேகம் உடையவர் என்பதே காலாங்கி என்றாகி காலாங்கி நாதர் எனப்படுகிறார் என்பர். உண்மை அதுவல்ல... காலத்தையே இவர் அங்கமாக கொண்டவர் என்பதே உண்மை, ஆம். இவர் பலநூறு ஆண்டுகள் தவம் செய்து பல அரிய உண்மைகளை உணர்ந்தவர். அந்த உண்மைகளை நீண்ட காலத்தால் அறிந்தவர் என்பதால் காலமே இவர் வரையில் அங்கியாகிப் போனது என்பார்கள்.

சட்டைமுனி என்று ஒரு சித்தர்!

பொதுவாக சித்தர்கள் கோவணமோ, இல்லாவிட்டால் இடையில் ஒரு துண்டையோதான் உடையாக கொண்டிருப்பர். ஆனால் சட்டைமுனி தன் மேனி மேல் கம்பளியை போர்த்திக் கொண்டிருந்தார். அவர் சீதளம், வாதம், பித்தம் என்னும் மூன்றையும் கம்பளிச் சூட்டால் வென்றவர். அதுமட்டுமல்ல ஒரு மனிதனின் நோய் குணமாக மருந்து மட்டும் போதாது. அதை அவன் சரியான

காலநேரத்தில், சரியான வைத்தியரிடம் இருந்து பெற்று உண்டாலே நோய் முற்றாக குணமாகும் என்று உலகிற்கு சொன்னவர்!

அதாவது வைத்தியனின் கைராசி, உண்ணும் நேரம், உண்ணும் மருந்தின் வீர்யம் இந்த மூன்றும் சரியான விகிதாசாரத்தில் இருந்தால் நோய் குணமாவது திண்ணம் என்பதை உலகுக்கு உணர்த்தியவர் அவர்.

இப்படி பதினெட்டு சித்தர்களின் வாழ்க்கைக்குள்ளும் புகுந்து புறப்பட்டால் அவர்கள் வாழ்ந்த விதம் மற்றும் அவர்கள் சொன்ன கருத்துக்களால் நமக்கும் ஒரு தெளிவு பிறக்கும். சித்தர்களின் எண்ணிக்கை 18 என்கிற ஓர் அளவுக்குள் அடங்கி விடுவதில்லை... நூற்றுக்கணக்கான சித்தர்கள் இருந்திருக்கிறார்கள். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்றும் அழிவு கிடையாது. ஆனாலும் 18 என்னும் ஒரு கணக்குக்குள் அவர்களை வைத்து சிந்திப்பதற்கு பின்னாலே ஆழ்ந்த ஒரு பொருள் இருக்கிறது.

எண்களில் 18 ஒரு சூட்சமமான எண். பல அரிய செய்திகளை தன்னுள் பூட்டிக் கொண்டிருக்கும் எண்! எண்கள் என்ற உடன் ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்களே நம் நினைவுக்கு வரும். பள்ளிக்கூடம் பக்கமே செல்லாதவர்களுக்குக் கூட இந்த ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்கள் பரிச்சயம். இந்த எண்களைப் பயன்படுத்தாமல் சேர்ந்தாற் போல் ஐந்து நிமிடங்கள் நம்மால் பேச முடியாது. லட்சம் கோடிகளில் எண்ணிக்கைகள் இருந்தாலும் அவை எல்லாம் இந்த ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்களைப் பயன்படுத்தி, கூட்டியும், கழித்தும், வகுத்தும், பெருக்கியுமே நமக்கு கிடைத்து விடுகிறது. அம்மட்டில் 18 என்பது ஒன்று முதல்

ஒன்பது வரை உள்ள எண்களின் முதல் கூட்டு வடிவம் ஆகும். முதல் பெருகிய வடிவம் ஆகும்! அதாவது ஒன்றையும், எட்டையும் கூட்டிட... ஒன்று என்பது எண் கணிதப்படி சூரியனை குறிக்கும். சூரியன் என்பவன் நம் வரையில் ஆத்மகாரகன், எட்டு என்பது எண் கணிதப்படி சனியைக் குறிக்கும். சனி என்பவன் நம் வரையில் ஆயுள்காரகன். நமது ஆத்மாவானது தனது ஆயுள் காலத்தில் நல்ல விதமாய் மண்ணில் வாழ்ந்து இறுதியாக இறைவனை அடைய வேண்டும் என்பதை உணர்த்தும் எண் 18.

எட்டையும் ஒன்றையும் கூட்டினால் ஒன்பது வரும்! இறைவனின் நிலைப்பாட்டை ஒன்பது என்போம். பஞ்ச பூதங்களால் ஆன நாம் ஆறாவது அறிவால் ஏழாகிய பேச்சைக் கொண்டு எட்டுவது ஒன்பதாகிய இறை நிலை என்பது இதன் உள்ளடக்கம். 18 இதனை உணர்த்தும் விதமாய் உள்ள ஓர் எண்ணாகும். அதனாலேயே 18 படிகள் சபரி மலையில், பாரத யுத்தம் 18 நாட்கள் நடந்தது. முடிவு பாண்டவர்களுக்கு ஜெயமானது. பாண்டவர்கள் ஐந்து பேர், கௌரவர்கள் நூறு பேர். இந்த ஐந்து பேரை நமது உடலாகவும், நூறு கௌரவர்களை நமது ஆயுளாகவும் கொள்ள வேண்டும். அந்த ஆயுட் காலத்தில் நாம் கடைத்தேற 18 வழிகாட்டுகிறது. இதனாலே புராணங்களையும் பதினெட்டுக்குள் அடக்கினர். இப்படி 18க்கு பின்னாலே சூட்சமப் பொருள் நிறைய உள்ளது. எனவேதான் நமக்கு வழிகாட்டும் சித்தர் பெருமக்களையும் 18க்குள் அடக்கி **'பதினெட்டு சித்தர்கள்'** என்றனர்.

இந்த 18 சித்தர்கள் கணக்கு ராமேஸ்வரத்தில் ஒரு விதமாகவும், திருப்பதியில் ஒரு விதமாகவும், வைத்தீஸ்வரன் கோவிலில் ஒரு விதமாகவும், பழனியில் ஒரு

விதமாகவும் இருப்பதையும் மனதில் கொள்ள வேண்டும். சில சித்தர்கள் எல்லா 18 க்குள்ளும் இருப்பார்கள். சிலர் விடுபட்டிருப்பார்கள். இதில் பிழைக்கு இடமில்லை. அன்றைய சூழலில் ஒரு 18 ஐ அன்றைக்கு இருந்த சான்றோர்கள் உருவாக்கிக் கொண்டனர் என்பதே உண்மை. அடுத்து, சித்தர்களைப் பின் தொடர்ந்தால் பெரும்பாலோருக்கு காரணப் பெயர்களே பெயர்களாக உள்ளன. பெற்றோர்களின் பெயர், பிறந்த தினம், நட்சத்திரம், ஊர் போன்றவைகளில் தெளிவு இல்லை. அவர்கள் முக்தி அடைந்த இடங்களிலும் குழப்பம் நிலவுகிறது. அவர்களது செயல்பாடுகளை மட்டுமே அறிய முடிகிறது. நதி மூலமும், ரிஷி மூலமும் நமக்கெதற்கு? என்று சிலர் கேட்பார்கள். அப்படி இவர்களிடமும் இவர்களது மூலத்தை பற்றிய கேள்வியை புறந்தள்ளி விட்டு இவர்களுடைய செயல்களை வைத்து இவர்களை விளங்கிக் கொண்டு அதில் நமக்கு எதுவெல்லாம் உகந்ததோ அதை நாமும் பின்பற்றத் தொடங்கி விட்டால் வாழ்க்கையை எளிதாய் வெற்றி கொண்டு விடலாம்!

23. வரம் தரும் வள்ளல்!

கரூரில் இருந்து ஐந்து கிலோமீட்டர் தூரத்தில், அமராவதி ஆற்றின் தென்கரைப் பக்கத்தில் ஒரு சிறு குன்றின் மேல் சுயம்புவாய் தோன்றிய இம்மூர்த்தி கேட்டவருக்கு கேட்ட வரத்தை தருபவர்...

கிட்டத்தட்ட 12 அடி உயரம்!

மலைச்சுவரில் நிமிர்ந்து நெகிழ்ந்து நின்று கவர்ந்திழுக்கும் கம்பீரம். மார்பிலே மகாலஷ்மி. இதுபோக சாளக்ராமங்களையே மாலையாக தரித்துக் கொண்டு ஓங்கி

உலகளந்த அந்த உத்தமன் போலவே நிற்கும் இந்த ஸ்வாமியை ஒருவர் ஒருமுறை தரிசித்தாலே போதும்... அவர்கள் மனது ஒரு விஸ்வரூபியை தரிசித்த பிரமிப்பில் ஆழ்ந்துவிடும்.

கரூர் நகருக்கு எவ்வளவோ பெருமைகள், கருவூரார் என்கிற சித்தர் வாழ்ந்த தலம். சிலகாலம் சோழப் பேரரசு கரூரை மையமிட்டுத்தான் செயல்பட்டது. கரூருக்கு பெருமை சேர்க்கும் விஷயங்களில் புனிதமான அமராவதி நதியும் ஒன்று. இந்திரனின் உலகத்துக்கு அமராவதிப் பட்டினம் என்பது பெயர். பூவுலகில் அப்பெயரிலேயே ஒரு நதி ஓடுகிறது-அமராவதி நதி. இதில் ஒருவர் மூழ்கி எழுந்தால், அவரது அவதிகள் நீங்கி அவர் அமரராகிய தேவர் நிலைக்கு உயர்வார் என்பார்கள். அத்தகு சிறப்பு கொண்ட ஒரு நதிக்கரையில் ஒரு சிறு குன்றின் மேல் காட்சி தருகிறார், தான்தோன்றி பெருமாள். தாந்தோணி மலைப்பெருமாள் என்றெல்லாம் பலவிதமாக பக்தர்களால் அழைக்கப்படும் கல்யாண வேங்கட ரமண ஸ்வாமி!

இது ஒரு வைணவத் தலம். அரசர்களின் போஷிப்பும் இல்லை, புராணச் சிறப்பின் பின்னணியும் இல்லை. ஆனால், சோமசர்மா என்கிற ஒரு பரம பக்தனுக்காக கருணை காட்டிய ஸ்ரீமன் நாராயணன், பின்னாளில் பக்தர் உலகை கரூரில் இருந்து ஆட்கொள்ள, தானே கட்டிக் கொண்ட ஒரு கோயிலாகத்தான் இந்த ஆலயம் கருதப்படுகிறது.

சோமசர்மா ஒரு பரம நாராயண பக்தர். அன்றாடம் அமராவதியில் நீராடி 'நாராயணா நாராயணா' என்று நெஞ்சுருக அவனைத் துதிப்பதே அவரது முதல் பணி. அந்த நாளில் ஒவ்வொரு வைணவருக்கும் திருமலைக்குச் சென்று அந்த திருப்பதி வேங்கடவனை தரிசிக்க வேண்டும் என்பது

வாழ்க்கை லட்சியங்களிலேயே ஒன்று என்றால் மிகையாகாது. சோம சர்மாவுக்குள்ளும் அந்த வேட்கை மிகவே இருந்தது. ஆனால், திருமலைக்கு நடந்தே சென்று திரும்ப ஆண்டுக் கணக்காகும். உடம்பிலும் தெம்பு இல்லை. நிதி வசதியும் இல்லை. போதாக்குறைக்கு அவருக்கு குடும்பம் குட்டிகள் என்கிற ஒரு சூழலும்கூட... இதனால் அமராவதி ஆற்றங்கரையில் ஈர மணலில் வேங்கடவனின் உருவத்தை பிடித்து அதன்முன் அமர்ந்துகொண்டு தியானிக்கத் தொடங்கி விடுவார்.

சோமசர்மாவின் பக்திக்கு இரங்கிய நாராயணனும் ஒரு முடிவிற்கு வந்தான். அதன்படியே ஒருநாள் இரவில் சோம சர்மாவின் கனவில் தோன்றி, அவரை விடிந்தபின் அமராவதி ஆற்றின் தென்கரையில் உள்ள குன்றுப் பகுதிக்கு வரப் பணித்தான்.

கனவு கலைந்து எழுந்த சோம சர்மாவும் அப்போதே புறப்பட்டு விட்டார். என்ன ஆச்சரியம்! வானில் ஒரு கருடன் பறந்து சென்றபடியே அவருக்கு வழியினை காட்டியது. இறுதியில் அது குன்று ஒன்றின் சிறிய குகை போன்ற வாயினுள் சென்று மறைந்தது.

சோம சர்மாவும் 'நாராயணா, நாராயணா' என்று கோஷத்துடனும், பரவசத்துடனும் அதனுள் நுழைந்தார். நுழைந்த நொடியிலேயே அங்கே உட்புறம் மலைச் சுவரில் நாராயணன் சங்கு சக்கரத்துடன் ஒரு ஒளிப்பிழம்பாய் சேவை சாதித்தான். அந்த நொடியே, அந்த திருமலைத் தெய்வமும், இந்த வேங்கடவனும் வேறு வேறு இல்லை என்கிற ஞானமும், தெளிவும் சோம சர்மாவுக்கு ஏற்பட்டு விட்டது.

பக்தனுக்கு தரிசனம் தந்திட அந்த வேங்கடவனைப் போலவே இந்த வேங்கடவனும் ரமணீயமாக, மனதுக்கு

இனியனாகக் காட்சி தந்ததால், பெருமாளை வேங்கடரமணன் என்றே சோம சர்மா சொல்லித் துதித்தார்.

அந்த வேங்கடவனுக்கும் மார்பிலேதான் தாயார். அங்கே தாயாருக்கென்று தனிச் சந்ததியில்லை. இங்கேயும் அதுபோலவே மார்பிலே தாயார் இருப்பதால் தனிச் சந்நதியில்லை. இப்படி தந்தையும், தாயும் ஒன்றாகி நிற்கின்ற தலங்களில் எல்லாமே கல்யாண குணங்களோடு கல்யாண ப்ராப்திக்கும் இறைவன் அருள் பாலிப்பதால் திருமலையிலும் சரி, இங்கேயும் சரி, கல்யாண உற்சவம் மிக பிரசித்தமாக விளங்குகிறது.

இந்த ஜென்மத்தில் உனக்குத் திருமணமில்லை. உன் ஜாதகம் அப்படி என்று சொல்லப்பட்ட ஒரு வரன் இந்த ஆலயம் வந்து, கல்யாண உற்சவம் கண்டு தரிசித்த காரணத்தாலேயே பரிகாரத்துக்கு உள்ளாகி பின் நல்லவிதமாய் திருமணமும் நிகழ்ந்து இன்று அவரது ஐந்தாவது தலைமுறை தான்தோன்றீஸ்வரரையே தங்கள் குலதெய்வமாகக் கொண்டாடி மகிழ்கிறது.

இன்றும் திருப்பதி வரை செல்ல முடியாத சிரமத்தில் இருப்பவர்களுக்கு இவரே திருப்பதி வேங்கடவன். இந்த தலத்தை 'சின்ன திருப்பதி' என்றும் பக்தர்கள் அன்பினால் விளிப்பார்கள். இந்த தலத்தின் இன்னொரு பெருஞ்சிறப்பு. வருடத்தின் 365 நாட்களும் இந்த ஸ்வாமிக்கு திருமஞ்சன அபிஷேகம் நடப்பதுதான். இதனால் மனம் குளிரும் பெருமாள், பக்தர் ஒருவர் நினைத்து வரம் கேட்கும் முன்பே, அவர் மனதில் இருப்பதை அறிந்து, வரத்தை தந்து விடுகிறான் என்கிறார் சதாசிவ பிரம்மேந்திர ஞானி!

ஆம்... சதாசிவ பிரம்மேந்திரர் புரட்டாசி மாதத்தில், மூன்றாவது சனிக்கிழமை தோறும் இந்த ஸ்வாமியை

மனமுருக தரிசிப்பதை தன் வாழ்வின் பெரும் பேறாக கருதியவர்.

எத்தனை வைணவ சந்நதிகள் மேற்கு பார்த்து இருக்கிறதோ தெரியாது. இது சூரியன் அஸ்தமிக்கும் திசையை பார்த்து நிற்கும் சந்நதி. வாழ்வில் அஸ்தமித்துப்போகும் அளவு துன்பம் உடையவர்களை ஆட்கொள்ளவே பெருமாள் இங்கே மேற்கு பார்த்து நிற்கிறார் என்று ஒரு கருத்து அவரது பக்தர்கள் இடையே நிலவுகிறது.

இந்த ஆலயத்தின் இன்னொரு ஆச்சரியமான விஷயம். வருடத்திற்கு இரண்டு தேர்த் திருவிழாக்கள். புரட்டாசி மாதம் பெருமாளின் நட்சத்திரமான திருவோணத்தன்று ஒரு தேர், மாசி மாதம் மகம் நட்சத்திரத்தன்று ஒரு தேர், ஒரே ஸ்வாமிக்கு இரு தேர்கள் என்பது மிகச்சிறப்பான ஒரு விஷயம். கூட்டிக் கழித்து பார்த்தால் உத்தராயண, தட்சிணாயண காலம் எனும் இரு சூரிய காலங்களிலும் பெருமாள் திருவீதி வந்து தண்ணருளைத் தந்தருள்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது. இத்தனை சிறப்பு கொண்ட தான்தோன்றி மலைக்கு ஒரு முறையாவது செல்பவருக்கு ஒரு குறையும் வாழ்வில் வந்திடாது என்பதை கூறவும் வேணுமா!

24. 'மீனாட்சி கல்யாண வைபோகமே'

புதிய தமிழ் வருடம் பிறந்திடும் சித்திரை மாதத்தில், அந்தப் பொன்னாளைத் தனியே கொண்டாட வேண்டிய அவசியம் தென் தமிழ் நாட்டு மக்களுக்கு எப்போதுமே ஏற்பட்டதில்லை. சைவமும், வைணவமும் கைகோர்த்துக்

கொண்ட ஒரு புதுமையாய், "ஹரியும், சிவனும் ஒன்று" என்கிற சொலவடைக்கு சான்றாய், மாமதுரை நகரில் ஒரு புறம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் திருவிழாக் கொண்டாட்டங்கள்! மறுபுறம் அழகர் மலையில் எழுந்தருளியுள்ள கள்ளழகரின் மதுரை நகர் பிரவேசக் கொண்டாட்டங்கள்! இவை இரண்டுமாகச் சேர்ந்து சித்திரையின் முத்திரையை பாண்டிய நாட்டில் அழுத்தமாகப் பதிவு செய்கின்றன.

ஊடே வைகை நதி. இரு கொண்டாட்டங்களையும் இணைக்கும் விதமாகப் பெருமிதத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறது.

இக்கொண்டாட்டங்களின் தலையாய அம்சம் அன்னை மீனாட்சியம்மை காணும் திருக்கல்யாண வைபவமாகும்!

இத்திருக்கல்யாண வைபவம் அன்னை மீனாட்சி ஆலயத்தில் ஆடி வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் மைய மண்டல மேடையில் பல்லாயிரக்கணக்கானோர் தரிசிக்கும் வண்ணம் அமைக்கப் பட்டுள்ளது.

சக்தியும், சிவமும் ஒன்று சேரப் போகும் அந்த முகூர்த்த நேரம் என்பது மிதுன லக்னத்தில் காலை 9.30 மணியில் இருந்து 9.54க்குள் வந்திடும் 24 நிமிட கால அளவில் உள்ளது.

இந்த 24 நிமிட காலநேரம் என்பது லட்சக் கணக்கான கன்னிப் பெண்களுக்கெல்லாம் அவர்கள் மனதிற்கு ஏற்ற கணவனை அளிக்கப் போகின்ற வரப்ரசாதமான ஒரு கால கதியாகும்.

சுமங்கலிப் பெண்களோ இவ்வேளையில் தங்கள் கழுத்தில் சரடு மாற்றிக் கொண்டு தீர்க்க சுமங்கலிகளாக விளங்கிட வேண்டிக் கொள்ளும் ஒரு கால கதியாகும்.

இதைத் தொடர்ந்து லட்சக்கணக்கானோர் இறைவனுக்கும், இறைவிக்குமான திருமண விருந்தினில் பங்கேற்று. அதைக் கண்டும், உண்டும் களிப்பதன் மூலம் ஆரோக்கியமான ஒரு வாழ்க்கைக்கு அடி கோலப் போகிறார்கள்.

இதுபோக பல லட்சம் பேர் தங்கள் இல்லங்களில் இருந்தபடியே இத்திருக்கல்யாணத்தை மீடியாக்கள் வாயிலாக கண்ணாரக் கண்டு, கண்களைப் பெற்றதற்கான பயனை முழுமையாக அடையப் போகிறார்கள். சிந்தை செவிகளெல்லாம் மங்கல இசைதான் கேட்கப் போகிறது.

'ஆள் செய்யாததை நாள் செய்யும்' என்பதற்கு அனைவருமே இலக்கணம் அறிந்திடப் போகிறார்கள்.

தன் அன்பு மக்களை ரட்சிக்க அந்த ஆதிசிவன் ஆடிய திருவிளையாடல்களில் ஐந்தாவதாக அன்னை மீனாட்சியின் திருமணப் படலம் வருகிறது.

விண்ணில் இருந்து தேவியை மண்ணுக்கு அனுப்பி, உடம்பிலே சமபங்கு கொடுத்ததை உலகுக்கும் உணர்த்த ஆட்சிப் பொறுப்பிலும் சம பங்களித்து, அந்தத் தேவியை உலகெலாம் வெற்றி கொள்ளச் செய்து பின் அந்த சிவம் தானே நேரில் வந்து திருமணம் எனும் பெயரில் சக்தியை வெற்றிகொண்ட ஒரு தினம் இத்திருக்கல்யாண வைபவம்!

சிவத்துக்குள் சக்தியும் ஞானத்துடன் சங்கமித்து மகிழ்கிறது. மானுட சமுதாயத்தின் இரு பெரும் பிரிவுகளான ஆண், பெண் பிரிவுகள் சமமானது மாத்திரமன்று, அது எப்படி ஒன்றுக்குள் ஒன்று அடங்க வேண்டும் என்பதற்கான பாடத்தை வார்த்தைகளைக் கொண்டு நிகழ்த்தாமல், வாழ்க்கையாகவே வாழ்ந்து காட்டி நிரூபிப்பதே திருக்கல்யாண வைபவத்தின் நோக்கம்.

அல்லி ராஜ்யமும் தவறு! அர்ஜுன ஆதிக்கமும் தவறு! அன்பே சிவமான ஈசனின் நெறிப்பாடே உலகை உய்விக்கும் என்பதற்குச் சான்று திருக்கல்யாணம்.

ஒவ்வொரு மனித உயிருமே ஆண், பெண் எனும் இரு பாலரின் ஆனந்த அன்புச் சேர்க்கையின் விளைவுதானே? விளைந்தவர்களுக்கு விளைவிக்கும், இன்பக் கடமையும் உள்ளதே... அதுதானே இல்வாழ்க்கை?

இல்வாழ்க்கை என்பது இருள் வாழ்க்கையாகிவிட்டலோ எல்லாம் பாழாகிப் போய்விடுகிறது. அது அருள் வாழ்க்கையானாலோ அதனால் இன்பம் அவர்களுக்கு மாத்திரமன்று... மொத்த மனித சமுதாயத்துக்கும் தான்.

அந்த அருள் வாழ்க்கை யாருக்கெல்லாம் வாய்க்கும்? அருளும், அருளும் சங்கமிக்கும் இறைவன்-இறைவி திருமணத்தைக் காண்பவர்களுக்கெல்லாம் அது வாய்த்திடும் அந்த வாய்ப்பை தருவதற்கே அந்த ஆதி சிவன் தனது திருவிளையாடல்களில் ஒன்றாக இதை உலகுக்குத் தந்தான்.

தெரிந்தோ, தெரியாமலோ மாயவாழ்க்கைக்குள் மனிதன் சில பிழைகளையும் புரிந்தவனாக ஆகி விடுகிறான்.

அதில் அவனது பிழைகளுக்கேற்ப வினைகள் உருவாகி அதையும் அவன் அனுபவித்தே தீர்க்க வேண்டும் என்பதே கர்ம நெறி.

இந்தக் கர்ம வினைகளில் சிலரின் ஜாதகத்துடைய 'சப்தம ஸ்தானம் (ஏழாம் வீடு) பெரிதும் பாதிக்கப்பட்டுவிடுகிறது. அதாவது அவர்களின் ஜாதகத்தில் ஏழாம் இடமாகிய களத்திர பாவம், தோஷங்களுடன் இருப்பதை வைத்து இதை அறியலாம். 'அப்பாவிப் பெண்களை ஏமாற்றுவது. கற்பழிப்பது, அவர்கள் பேரில் பழிபோடுவது, அவர்களுக்குத் துரோகம் இழைப்பது, நல்ல

குடும்பத்தை சதி செய்து உடைப்பது. கணவன்-மனைவியைப் பிரிப்பது. பிறன் மனைவியை இச்சிப்பது' என்று இவ்வகையில் புரியப்படும் பாவங்களே களத்திர பாவம் கெடுவதற்குக் காரணம் இவற்றுடன் சில நாகதோஷங்களும் உடன் சேர்கின்றன.

இந்த கெட்ட களத்திர பாவம் சீராவதற்கு மேலே செய்த பாவங்களுக்கு நேர் எதிரான நற்செயல்களைச் செய்வதே உகந்த பரிகாரமாகும். அதற்கு வாய்ப்பளிக்கும் விதமாகவும் ஆலயத்தில் இப்படிப்பட்ட திருக்கல்யாண வைபவங்கள் நிகழ்த்தப்படுகின்றன என்பதே நிதர்சனமான உண்மை.

இறைவன்-இறைவி திருமணத்தையே காணும் பேற்றினை ஒருவர் பெறுகிறார் என்றால் அவர்கள் எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்!

அதுவே அவர்களின் களத்திர தோஷங்களை நீக்குவதற்கும் அடுத்தடுத்த பரிகாரங்களைச் செய்வதற்கும் இட்டுச் செல்கிறது.

''அன்னையின் திருமணக் கோலத்தை பன்னிரு முறை காணும் பேறு பெற்றவர்கள் தங்கள் தலைமுறைக்கே தோஷ நிவர்த்தியைத் தேடித் தந்துவிடுகிறார்கள்'' என்பது இதனுள் ஒளிந்திருக்கும் உண்மை.

காலத்திற்கு ஐந்து அங்கங்கள் எனும் பஞ்சாங்கங்களால் அடையாளம் ஏற்படுத்தி தான் கடக்கும் ஒரு காலப் புள்ளியை திரும்பவும் தொடத் தெரிந்த ஒரே மேலான இனம் சனாதனமான இந்து இனம் ஒன்றுதான். காலம் என்று வந்துவிட்டாலே நேற்று, இன்று, நாளை என்கிற மூன்று நிலைகள் மனதில் ஏற்பட்டு விடுகின்றன.

போனால் வரவே வராத காலத்துக்குள் நாம் புரியும் வினைகளோ வளர்ந்து நம்மை திரும்ப வந்து அடைகின்றன.

இதை நுட்பமாகக் கண்டறிந்து மானுடம் தழைக்க எழுதி வைக்கப்பட்டதே தர்ம நெறி சாஸ்த்திரங்கள். அந்த சாஸ்த்திரங்களின் தர்மத்தில் திருவிழாக் கொண்டாட்டங்கள் ஒட்டு மொத்த மனித சமுதாயத்திற்குள் ஏற்படுத்தும் மாற்றங்கள் அற்புதமானவை. எண்ணிப் பார்க்கையில் பிரமிப்பை மூட்டுபவை.

அதில் ஒன்று இத்திருக்கல்யாண வைபவம்! நேரில் செல்ல முடியாதவர்கள் மீடியா வாயிலாக பார்த்து அதே பரவசத்தை அடையலாம். எங்கிருந்து பார்க்கிறோம் என்பது விஷயமேயில்லை. எப்படிப் பார்க்கிறோம் என்பதில்தான் எல்லாமே உள்ளது.

திருக்கல்யாணத்தை தொடர்ந்து திருத்தேர் இழுக்கும் உற்சவம் மறுநாள் வருகிறது. 'ஊர் கூடினால், மனித சக்தி ஒன்று பட்டால் ஊரே கோயிலாகும், தெய்வம் தேடி வரும்' என்கிற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது இத்தேர்த் திருவிழா வைபவம்.

இதில் பங்கு கொண்டு வடம் பிடிப்பவர்கள் இறைவனின் திருத்தேரை மட்டும் இழுக்கவில்லை. அசைக்க மாட்டாத தங்கள் கர்ம வினையில் ஒன்றையும் அசைத்து சமுதாயத்தின் துணையுடன் அதைத் தாண்டிக் கடப்பவர்கள் ஆகிறார்கள்.

நீண்ட கால வழக்கு ஒன்று முடிவு பெறாமல் நீண்டு கொண்டே இருந்தது ஒரு வணிகருக்கு... காஞ்சி பரமாச்சார்யாரை அவர் தரிசனம் செய்தபோது உட் பொதியோடு, 'ஏதாவது ஒரு ஊருக்குப் போய் தேர் இழு...' என்று மட்டுமே அவரும் அருளினார். அந்த வணிகரும் சென்று தேர் இழுத்தார். அடுத்த மாதமே அவர் வழக்கு முடிவுக்கு வந்து நல்ல தீர்ப்பும் கிட்டியது.

தேர்த்திருவிழா இப்படி மறைமுகமாக மனித வாழ்வின் கர்மம் தீர துணை நிற்கிறது.

சித்திரை திருவிழாவின் உச்சபட்ச நிகழ்வுதான் கருணை மிகுந்த கள்ளழகனின் ஆற்றுப் பிரவேசம். தங்கக் குதிரை வாகனத்தில் அந்தப் பரந்தாமன் அமர்ந்து வரும் அழகே அழகு!

மண்டூகமாகிப் போன மகிரிஷிக்கு சாபவிமோசனம் அளித்திட ஆற்றில் இறங்கும் கள்ளழகர் தனது பத்து அவதாரங்களையும் ஆற்றோரமாக உள்ள ராமராயர் மண்டபப் படியில் எடுத்துக்காட்டி அருள்வது திருவிழாவின் செம்மாந்த அம்சம்!

இந்த அழகனை எதிர்பார்த்து காத்திருப்போரில், உழவர் குடிமக்களின் பக்திச் சிறப்பை வார்த்தை கொண்டெல்லாம் விவரிக்க முடியாது.

'அழகர் தரிசனம்' என்பது அவர்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்குமே ஆனந்த தரிசனமாகும். நான் இருக்கிறேன் என்கிற உணர்வுடன் குதிரைமேல் வந்து காத்திட எங்கள் இறைவன் இருக்கும்போது, எங்களுக்கு ஒரு குறை யாரால் வந்திட முடியும்? என்கிற கேள்வியுடன் ஜனக்கூட்டமும் அழகரை தரிசித்து அருள் திரளுடன் ஊருக்குத் திரும்பும்.

ஒவ்வொரு ஆண்டும் நிகழும் மனச்சலவை நிகழ்வுகள் இவை... எண்ண எண்ண இனிப்பதால் எண்ணியவாறே இருப்போம். ஓம் நமோ நாராயணா...! நம சிவாய!

25. மதுரை அரசி

இந்தத் தலைப்பைப் படித்த மாத்திரத்தில் 'மதுரை அரசி' யார் என்பது அனைவருக்கும் விளங்கியிருக்கும். சக்தி

மாதமான ஆடி மாதத்தில், சக்திக் கடலான அந்த உமையரசி மீனாட்சி பற்றி சற்று சிந்திப்போம்...!

'மீனாட்சியைப் பற்றி சிந்திக்காத பொழுதுகளும் ஒரு பொழுதா? என்று கேட்கிறார் குமரகுருபரர்! பொல்லா வினை காரணமாக பேச்சுத் திறனற்றிருந்த குழந்தை அவர்! பின் மலையத்துவசன் பெற்ற பெருவாழ்வாகிய மீனாட்சி தயவாலே பெரும் புலமை பெற்றவர்.

மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ் பாடிய இந்த அருட் கவிஞர் பாடிய வரிகள் எல்லாமே பொன் வரிகள்தாம். அதில் வைரப் பொன் வரியும் ஒன்று உண்டு. 'கொக்கு பறக்கும் அந்தக் குளக்கரையில்...' என்று அன்னை அருளை நெகிழ்ந்து பாடும் இக்கவி, படிப்படியாக முன்னேறி, 'ஆண்டாண்டு காலமாய் அழுகின்ற ஏழைக்கு அறுசுவை உணவு வேண்டும். ஆணவக்காரர்கள் நெஞ்சிலே நான் என்ற அறியாமை நீங்க வேண்டும். வேண்டாத குணங்களை விட்டு விட்டு என்றும் உனை வேண்டிடும் உள்ளம் வேண்டும். அதை நீ விரைந்தோடி வந்து தரவும் வேண்டும்' என்று அம்மையைப் பார்த்து இறுதியாகச் சொன்னதுதான் அந்த வைர வரி!' என் பொன் மகளே! நீ நினைத்தால் ஏதும் நடக்கும்!' என்பார்.

ஆம்! அங்கயற்கண்ணி நினைத்தால் எதுவும் நடக்கும். அதனால்தான் அந்த ஈசனே அவள் கணவன் ஆனான்.

அதனால்தானோ என்னவோ, சர்க்கரை என்றவுடன் தித்திப்பு நினைவுக்கு வருதல்போல மீனாட்சி என்றவுடனேயே நமக்கும் கல்யாண நினைப்பும் கூடவே வந்து விடுகிறது. அதிலும் நல்ல கணவன் வேண்டும் என்று எண்ணும் கன்னியருக்கெல்லாம் அன்னை அருளே உற்ற துணை.

கையில் விழுந்த மாங்கல்யச் சரடு

அன்னையின் அந்தச் செழுங்கருணைக்குச் சான்றாக ஒரு சம்பவம்!

தாயை இழந்துவிட்ட சகோதரிகள் இருவர் அதில் மூத்தவளுக்குத் திருமணமாகிவிட்டது. இளையவளுக்கு ஆக வேண்டும். மூத்தவள் வாழ்க்கைப்பட்ட இடம் அன்னை அரசாளும் மதுரை! அவளின் ஆதர்ச தேவியும் மீனாட்சிதான்... அந்த மூத்த சகோதரி, தன் இளைய சகோதரியுடன் அன்னையிடம் வந்து முறையிட்டாள். முறையிடும் போது மூத்தவளிடம் கண்ணீர் துளிர்த்துவிட்டது. அதைக் காணச்சகியாத மீனாட்சியும் இளையவளுக்கு உதவத் தீர்மானித்தாள்.

பிரசாதமாக பட்டர் குங்குமம் தரும்போது யாரோ அவளது திருவடியில் வைத்துத் தொழுத தாலிச்சரடும் சேர்ந்து அந்த இளையவள் கையில் சென்று விழுந்தது.

மூத்தவளுக்குப் புரிந்துவிட்டது 'அவள் பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட்டாள்' என்பது... அதன்பின் வழி இல்லாத இடங்களிலும் வழித் தடங்கள் தோன்றி, உரிய ஒருவன் அந்த இளையவளைத் தானே தேடி வந்து கரம் பிடித்தான். எல்லாம் மந்திரம் போட்டதுபோல் நடந்ததுதான் ஆச்சரியம்!

விதியை மாற்றும் தேவதை

அம்மைக்குத் தேவையெல்லாம் சரணாகதி ஒன்றுதான். அப்படி அடைந்துவிட்டவர்களை அவள் கைவிட்டதேயில்லை. அடையாதவர்களையும் சரணாகதி அடையும் வழி முறைகளை முதலில் காட்டி அருளுகிறாள். அதன்பின் அவர்கள் விதி எப்படிப்பட்டதாக இருப்பினும் மாற்றி எழுத முன் வருகிறாள். கோள்களும்கூட அவள்

முன் செயலற்றுப் போகின்றன. 'அம்மாப் பிள்ளைகள் இவர்கள். இனி இங்கே நமக்கு வேலை இல்லை' என்று விலகிச் செல்கின்றன நவக்கிரஹங்கள்.

இந்திர விமானம்

அன்னை அரசாளும் மதுரைத் தலம், பிற தலங்கள் எதிலும் இல்லாத பல சிறப்புகளைக் கொண்டது. தவத்தால் சிறந்தால் தேவன் ஆகலாம். எவ்வளவு சிறப்பிருந்தால் அந்தத் தேவர்க்கெல்லாம் ஒருவன் தலைவனாக முடியும் என்று எண்ணிப் பாருங்கள். அப்படி ஒருவன் தான் தேவர்களின் தலைவனான இந்திரன்! தவத்தில் சிறந்த தலைவன் இவனையும் மாயை விடவில்லை. ஒரு தவறு செய்துவிடுகிறான். தப்பு செய்தால் தண்டனை! ஆனால் தவறு செய்தாலோ பரிகாரம் துணைக்கு வந்து காப்பாற்றுகிறது. அவனுக்கான பரிகாரம் பூவுலகில் அவன் கடம்ப மரங்கள் சூழ்ந்த வனப் பகுதி ஒன்றில் சுயம்புவாய் காணும் ஈசனை மனமுருக வழிபடுவது ஒன்றுதான். விண்ணுலகில்கூட விமோசனம் இன்றி மண்ணுலகுக்கு வருகிறான் இந்திரன். ஈசனை கடம்ப வனத்தில் தேடிக் கண்டடைகிறான். பூஜித்து மகிழ்கிறான். பாவ விமோசனமும் பெறுகிறான்.

தன்னையே கடைத்தேற்றிய அந்த அண்ணலுக்கு அவனே ஆலயமும் கட்டுகிறான். உருவாகிறது முதலில் இந்திர விமானம். இதை அவனது ஐராவதம் உள்ளிட்ட அஷ்ட திக்கு கஜங்களே தூண்களாக நின்று தாங்கிப் பிடிக்கின்றன. இந்த உலகத்தில் உள்ள பிற ஆலயங்கள் எதற்கும் இல்லாத சிறப்பு இது. மாந்தரும், வேந்தரும் தங்கள் உய்வுக்கு கட்டும் லயாமிகு ஆனந்த லயம் தரும் ஆலயங்களுக்கு நடுவில் தேவாதி தேவன் ஒருவன் கட்டிய

கோயில் இது. அவன் பிணிக்கே மருந்தளித்த இக்கோயில், வேறு எவர் பிணிக்கு மருந்தளிக்காது போகும்?

அமுதம் சிந்தப்பட்ட வனம்

இந்தச் சிறப்பெல்லாம் போதாது என்று அந்த ஈசன் தன் சிரத்தில் இருக்கும் அமிர்தமாகிய மதுரத்தை எடுத்து இம் மண் மீது தெளிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தமும் பின்னர் ஏற்பட்டது. அமுதம் கடையும்போது பீறிட்ட விஷம். புவனமெங்கும் பட்டுத் தெறித்தது. கடம்ப வனக் காடும் அதனிடையே தப்பவில்லை. அந்த விஷயத்தை நீக்கிட ஈசனும் திரு உள்ளம் கொண்டு, தன் சிரத்தின் மீதுள்ள அமிர்தமாகிய மதுரத்தை எடுத்து இந்த வனம் மீது தெளித்தான். இதனால் மதுரம் பெற்று மதுரையாகியது.

இதனால் இன்றும் இம்மண்ணில் பிறப்பெடுப்பதை ஒரு அருட் கொடையாகவே அனைவரும் கருதுகின்றனர். இம்மண்ணில் பிறக்காவிடினும் இங்கேயே முற்று பெற்றிட வேண்டும் என்று கருதுகின்றவர்களும் ஏராளம்! ஏனென்றால் இது **'அமர காசி'** என்கிற சிறப்பையும் கொண்டது.

குளம்! ஆறு! கடல்!

அந்தக் காசியில் கூட ஒரு கங்கைதான் பாய்கிறது. ஆனால் இம்மதுராபுரியில் ஏழுவிதத் தீர்த்தச் சிறப்புகள் உள்ளன. அதில் முதலானது பொற்றாமரைக் குளம். இறைவனின் சூலாயுதமே தோண்டித் தந்த குளம் இது. இந்திரனின் பூஜைக்கான பொற்றாமரை மலர்கள் இதில் பூத்ததால் இது **பொற்றாமரைக் குளம்** என்றானது. இதற்கு ஆதி தீர்த்தம், ஞான தீர்த்தம், முக்தி தீர்த்தம் என்றெல்லாமும் பெயர்கள் உண்டு. இக்குளத்தின் உன்னதச் சிறப்பிற்கு எவ்வளவோ சாட்சிகள் இருக்கின்றன. இது தான்

திருக்குறளை தன்னுள் விழுங்கிடாமல் சங்கப் பலகையில் ஏந்தி வந்து உலகுக்குத் தந்தது.

இப்படி இது நீராடுபவர்க்கு மட்டும் முக்தியளிக்கவில்லை... நீங்காத நூல்களுக்கும் முக்தி (காலப்பேறு) அளித்தது.

அடுத்து இந்த மதுரையம்பதியில்தான் ஏழு கடல்களும் வந்து சென்றன. அடுத்து குண்டோதரனின் நீர் வேட்கையைத் தணிக்க இறைவனால் கை வைக்கப்பெற்று உருவான வைகை நதி! இந்த நதியின் கிளை நதிதான் கிருதமாலை நதி... இது நான்காவது தீர்த்தம். ஐந்தாவதாக மாபெரும் தெப்பக்குளம்! நாயக்கரால் உருவாக்கப்பட்டது இது. மாரியம்மன் தெப்பக்குளம் என்பார்கள். ஆறாவது தீர்த்தம். வலைவீசிய தெப்பக்குளம்! ஏழாவது புறத்தொட்டி நின் மாலிய தீர்த்தம். இது கோயிலுக்குள்ளேயே சுவாமி சந்நிதியின் இரண்டாம் பிரகாரத்தில் உள்ளது.

இப்படி ஒன்றுக்கு ஏழு தீர்த்தச் சிறப்பு. அதில் ஆறு, குளம், கடல் என்கிற ஓடுகிற தேங்குகிற கூடிக்கிடக்கிற மூன்று அம்சங்களும் அமைந்துருப்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

வசித்தால் வீடு பேறு

இதனால்தானோ என்னவோ, திருவிளையாடற் புராணத்தில் பரஞ்ஜோதி முனிவரும் மாமதுரை குறித்து வியந்து போற்றி பல பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று, **'திருவாலவாயென்று கேட்டவரே அறம் பெறுவர், செல்வம் ஓங்கும், திருவாலவா யென்று நினைத்தவரே பொருளடைவர், தேவதேவைத் திருவாலவாயிடத்து கண்டவரே இன்ப நலஞ்சேர்வர்; என்றும் திருவாலவாயிடத்து வதிந்தவரே வீட்டு நெறி சேர்வர் அன்றே!** என்று கூறுகின்றது.

அதாவது கேட்க முக்தி தரும் தலம் இது. சிவத்தலங்கள் நான்கு வெகுவான சிறப்பினை உடையவை. அவை **சிதம்பரம், காசி, திருக்காளத்தி, திருவாலவாய்** எனப்படும் மதுரை இவைகளே, இந்நான்கில் திருவாலவாயே சிறந்தது என்பது பல ஆன்றோர்களின் கருத்து.

சிதம்பரம் தரிசிப்பவர்க்கும், காசி தன்னிடம் வந்து இறப்பவர்க்கும், திருக்காளத்தி அன்புடன் வழிபாடு செய்பவர்க்கும் முக்தியை தரவல்லவை. ஆனால், திருவாலவாயைப் பற்றி காதால் கேட்டாலே அறத்தை அடைந்து விடுவோமாம். நினைத்தவரோ பொருளை அடைவார். கண்டவரோ அனைத்து இன்பமும் அடைவார். திருவாலவாயில் வசிப்பவரோ வீடு பேற்றினையே பெற்றிடுவாராம்...!

இல்லையா பின்னே?

ஒருபுறம் அப்பன்-மறுபுறம் அன்னை... ஒருவருக்கு இருவர் மண்ணில் அரசாண்ட இடமல்லவா மதுரை? எங்கும் நிறைந்த அந்த ஈசன், தோண்டிய இடத்தில் வெளிப்படும் நீரினைப்போல இம்மதுரையம்பதியில்தானே 64 திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளார்?

சக்திக்கோட்டை

என்னதான் சிவபெருமான் ஆடல் புரிந்தாலும் இம்மண் ஒரு சக்திக் கோட்டை என்பதே இதன் தனிச்சிறப்பு.

'ஆண், பெண் இங்கே சரி நிகர் சமம்' என்கிற வாதங்களுக்கோ நிரூபணங்களுக்கோ இடமின்றி அன்றே அன்னை இங்கு அரசாட்சியே புரிந்திருக்கிறாள். அதுவும் எப்படி? தன் கண்களாலேயே! அதனால்தான் அருளுகின்ற கரத்தில் கிளியைப் பற்றியுள்ளார். 'கிழி' பொருளுடையது. 'கிளி'யோ மந்திரமொழி அருளுடையது. அருட்பறவையை

கையில் கொண்டு, கண்ணாலேயே ஆட்சி செய்கிறாள். அவள் கண்ணிரண்டும் கூட கயல்போலவே இருப்பதால் 'கயற்கண்ணி' என்கிற காரணப் பெயரும் அவளுக்கு உண்டாகிவிட்டது. அவள் கண் மீன்கள் நம்மைப் பார்த்திருக்க மற்ற மீன்கள் எதற்கென்று கேட்பதுபோல பொற்றாமரைக் குளத்திலும் மீன்கள் இன்றுவரை இருந்ததில்லை. (ஒரு நாரைக்கு வரமளித்ததன் காரணமாக மீன்கள் இல்லாமல் போனது என்பது வரலாறு)

கடைக்கண் பார்வை

நாம் பார்க்காவிட்டாலும் நம்மை அவள் பார்த்தபடி இருக்கிறாள் என்பதே இங்கே பெருஞ்சிறப்பு... மீனுக்கு எப்படி இமை மூடிய உறக்கமில்லையோ அப்படியே அன்னையின் அருட் பார்வைக்கும் உறக்கமில்லை.

அதனாலேயே கூடல் மாநகர் இரவிலும், பகலாய் இன்றும் 'ஜே.ஜே.' என்றிருக்கிறது.

அன்னையின் கடைக்கண் பார்வைக்கு பலர் வாழ்விலும் பற்பல சான்றுகள் உண்டு. ஒருமுறை பெரும் எழுத்தாளனாய் வரும் விருப்பத்தில், 'குருபரனுக்குத்தான் உன் அருளா...? எனக்கில்லையா?' என்று கேட்டு பிரார்த்தனை செய்து கொண்டார் ஒரு எழுத்தாளர்.

'அப்படியோர் வாய்ப்பு அமைந்தால் எழுத்தால் வரும் புகழ் எனக்கு! கிடைக்கும் சன்மானம் உனக்கு' என்று அன்னையிடமே அவர் நிபந்தனையிட்டார். அதன்படியே பெரும் வாய்ப்பு ஒன்றும் வந்தது. பெரும் சன்மானமும் கிடைத்தது. ஆனால் ஒரு திடீர் திருப்பம். அந்தப்பெரும் தொகையை அன்னைக்கு காணிக்கையாகச் செலுத்த அவருக்கு மனம் வரவில்லை.

'கடுமையாக உழைத்துப் பெற்றதை உண்டியலில் போடுவதா?' இப்படிப் புத்திக்குள் சாதுரியமாக (?) ஒரு

பெரும் பட்டிமன்றம்! குரங்கு புத்திதானே...? இதனிடையே இடையில் புகுந்த அந்த எழுத்தாளரின் மனைவி. வெடுக்கென்று முழுத் தொகையையும் பிடுங்கி உண்டியலில் போட்டுவிட்டு, 'சொல்லில் நில்லுங்கள். அன்னைக்குத் தேவை பொருள் அல்ல... சொல்! நீங்கள் ஒன்று தந்தால் அவள் திரும்ப மூன்று தருவாள்!' என்றாள். என்ன ஆச்சரியம்! மூன்றாம் நாளே உண்டியலில் இடப்பட்ட தொகைபோல மும்மடங்கு. அவர் எழுதிய அதே கதைக்காக முன் பணமாகக் கிட்டியது. அந்தப் படைப்பாளிக்கும் பெரும் புகழ் சேர்த்தது.

இன்றும் அவள் அருளாட்சிக்கு இதுபோல் எத்தனையோ சான்றுகள்! சரணாகதி அடைந்தவர்களை அவளும் சரி, ஐயனும் சரி... கைவிட்டதேயில்லை.

26. கண்ணன் எங்கள் காதலன்!

விசிஷ்டாத்வைத சித்தாந்தப்படி ஸ்ரீமன் நாராயணனே பரம்பொருள். மன்னுயிர்களான நாமெல்லோருமே ஜீவாத்மாக்கள். ஜீவாத்மாவானது அந்தப் பரமாத்மாவை சென்று சேர்ந்திட வேண்டும். ஜீவாத்மாவுக்கு ஆண், பெண் என்கிற அடையாளங்கள் எல்லாம் பூமியில் வாழ்கிற நாளில் மட்டும்தான்! அவனை அடைய முயல்கிற போது அவன் ஆணாகத் தோற்றம் சாதிப்பதால் நாமெல்லோருமே பெண்கள் தான். அம்மட்டில் பக்தியால் அவன் மேலே காதல் கொண்டால் நாம் அவனோடு கலந்து உய்வு பெற முடியும்.

நமக்கெல்லாம் கண் என்ற ஒரு உறுப்பிருப்பது எதற்கு? ஒளியைக் காண்பதற்கு மட்டும்தானா? உலகில் ஒளி என்கிற ஒன்றே இல்லை என்றால் இந்தக் கண்கள் இரண்டும் இருந்தால்தான் என்ன... இல்லாமல் போனால்தான் என்ன?

இந்த ஒளி இருக்கிறதே இது நிரந்தரமானதா? இல்லை இருட்டுதான் நிரந்தரமானதா? கேள்விக்குள் நுழைந்து பார்க்கும் போது இருட்டு என்பது நிரந்தரமானதாகவும், ஒளி என்பது அதனுள் வந்து செல்வதாகவும் இருப்பதை உணரலாம். கொஞ்சம் மாற்றி எங்கெல்லாம் ஒளி இல்லையோ அங்கெல்லாம் இருட்டு எனலாம். இன்னும் ஒருபடி மேலே போய் இருட்டில்லாத நிலையில் ஒளி எப்படி தேவைப்படுகிறது? இது ஒரு கட்டாயம். இந்த இரண்டாகவும் ஒன்று இருக்க முடியுமா? விஞ்ஞான புத்தியோடு பார்த்தால் சாத்யமே இல்லை என்கிற பதில்தான் வரும். 'அது எப்படி ஒரு ஒளி சிந்தும் விளக்கே ஒரே சமயத்தில் இருளாகவும் இருக்க முடியும். இதுவேறு... அது வேறு தான்..' இப்படிப் பதில்கள் வரும்.

இந்தப் பதிலைக் கேட்டால் நம் கண்ணன் சிரிப்பான். அந்தச் சிரிப்பே, 'நான் யாராம்? இருளாய் இருந்து விளக்காய் ஒளிர்பவன்தானே...?' என்று சொல்கிறார் போல் இருக்கிறது. அது எப்படி? என்று பார்க்கத் தொடங்கினால் வியப்பூட்டும் விடைகளும் அணி வகுக்க ஆரம்பிக்கின்றன.

நமக்கான வருடங்கள் தட்சிணாயணமாய், உத்தராயணமாய் பிரிக்கப்பட்டுள்ளன. நமக்கான வருடம் தேவர்களுக்கு ஒருநாள் என்றால் அந்த ஒரு நாளில் தட்சிணாயணம் என்பது அவர்களின் இரவுக்காலம். இருளின் காலம்தானே இரவுக்காலம்? இந்த இரவுக் காலத்தில் ஆவணி மாத அஷ்டமி என்பது கிட்டத்தட்ட நள்ளிரவுப் பொழுது. அந்த அஷ்டமி நாளின் நள்ளிரவில் நடுநிசியில் இருண்ட ஒரு பிரபஞ்சச் சிறைக்குள் வசிக்கும் ஒரு தாயின் கர்ப்பச்சிறைக்குள் இருந்து (எல்லாமே இருள்) ஒரு உயிர் வெளிவரத் தொடங்குகிறது. தோற்றமும் கூரிய

தோற்றம்! பிறந்த உடனேயே அது தாய்ப்பால்கூட அருந்தாதபடி இடம் மாற்றப்படுகிறது. (அப்போது அந்தப் பாலை தவிர்த்த காரணத்தாலேயே பின்னாளில் அது பாலின் பரிணாம வெண்ணெயை தேடித் தேடி மட்டுமா, திருடித் திருடியும் விழுங்கியது!)

அந்தக் கருப்பனை கூடையில் சுமந்தார் வசுதேவர். உயிரற்றது பாடையிலும், உயிரானதெல்லாம் கூடையிலும் என்பது என்ன கணக்கோ? அந்தக் கருப்பனை முதலில் நானே முற்றாய் அணைப்பேன் என்று பெய்யத் தொடங்கியது மழை! நாரமாகிய நீரை அணைந்து கிடப்பதால் நாரணன் ஆனவனை ஒரு காரணம் கருதியே கிருஷ்ண (கரிய) பிறப்பெடுத்தவனை நாரமாகிய நீரே முதலில் அணைய வந்ததில் ஆச்சரியமென்ன? எங்கே அந்த நீரே அந்த தெய்வப் பிஞ்சை முற்றாய் எடுத்துக் கொண்டுவிடுமோ என அஞ்சி எனக்குப் பங்குண்டு என்பதுபோல வாசுகிப் பாம்பு தன் சிரக்குடையை விரித்துப் பிடித்து சிறிது தூரம் அதுவும் துணை வந்தது. சின்னஞ்சிறு துளிகள் எல்லாம் பெருகிச் சேர்ந்திட துள்ளி ஓடுவதுதான் அதன் நோக்கு... கடலே ஒரு கூடைக்குள் சயனித்து வரும்போது அதுவும் பூரித்துப் போய் வழி விடுகிறது.

இதை எல்லாம் புறக்கண்கள், மாயா ஜாலங்களாகத்தான் பார்க்கும். அகக்கண்களுக்கே அவ்வளவிற்குப் பின்னாலும் ஒன்றைத் தொட்டு ஒன்று, அதைத்தொட்டு இன்னொன்று என்கிற அரிய தொடர்புகள் தெரியும்.

இப்படி நாளிருள், நள்ளிருள், சிறையிருள், உருவிருள் என மொத்த இருளுக்குள்ளுமிருந்து எட்டாவதாய் எட்டிப் பார்த்த அந்த கிருஷ்ணனின் எட்டாம் பேறுக்குக் கூட ஒரு பொருள் இருக்கிறது. நாம் எட்ட வேண்டியவன் அவனே...

அவனை எட்டு... அவனே எட்டு... ஆஹா! என்ன ஒரு உட்பொதி!

இப்படி இருளில் இருந்து இருள் வடிவாகவே வந்தவன் அள்ளித் தந்ததெல்லாம் ஒளி... ஒளி... ஒளி...! ஒளியன்றி வேறில்லை. அவன் தந்த ஒளியை உணர்வது தேகத்தில் ஊனக் கண்; யோகத்தில் ஞானக்கண்!

இந்த இரண்டு கண்ணைத் தந்தவன் என்பதால் கண் அவன் கண்ணன் ஆனான்!

இருளில் இருந்து வந்த இந்த ஒளி, ஆகாய சூரியனாக கிரணங்களை அனுப்பிவிட்டு அங்கேயே நின்றுவிடவில்லை. ஜீவாத்மாக்களைக் கடைத்தேற்ற அந்த பரமாத்மா தன்னையே ஒரு ஜீவாத்மாவாக ஆக்கிக் கொள்கிறான். ஆக பரமாத்மா - ஜீவாத்மாவாகிவிட்டான். திரும்ப பரமாத்மாவாகப் போகிறான். எப்படி? அவன் வழி நடந்தால் நாமும் பரமாத்வாகிவிடலாம் என்பதை வேறு எப்படி உணர்த்தமுடியும்? காஞ்சிப் பெரியவரின் கண்களின் வழியாகவும், கருத்தின் வழியாகவுமே அதை நாம் பார்க்கலாமே!

'ஸ்ரீகிருஷ்ணன் ஒரே அவதாரத்தில் அனேக விதமான லீலைகளைச் செய்து நடித்திருக்கிறான். மிகவும் சேஷ்டை செய்யும் குழந்தை, மாடு மேய்க்கும் பையன், குழலூதிக் கூத்தாடும் கலைஞன், இவற்றை அனுபவிக்கும் ரசிகன்! சாணூரன், முஷ்டிகன் போன்ற மல்லர்களை ஜெயித்ததால் மகாமல்லன்! ஸத்யையை மணம் புரிவதற்காக ஏழு காளைகளை அடக்கியதாலே மாடு பிடித்தவன். தூது போனவன், ராஜதந்திரன், அர்ஜுனன் தேருக்கு சாரதி, கோபியர்களின் உடைகளைக் களவாடியபோது கள்ளன், திரௌபதிக்கு வஸ்திராபரணம் பொழிந்தபோது

ஆபத்பாந்தவன், குசேலனுக்கு அவல் கொடுத்து ஆஸ்தி கொடுத்தபோது வள்ளல், பீஷ்மருக்கு முக்தி அளித்தபோது கடவுள், துரியோதனன் முன் விசுவரூபம் எடுத்தபோது மாயாவி.

அடேயப்பா...! உலகில் உள்ள கோடானு கோடி ஜீவாத்மாக்களின் எல்லாவித குணநலங்களையும் பிரதிபலிக்கிறான் கண்ணன்.'

மகா பெரியவரின் கருத்துப்படியே பார்த்தால், ''பலவிதமான மனநிலையை உடையவர்கள் உலகில் இருக்கிறார்கள். இவர்களில் தீய அம்சம் உள்ளவர்களை முற்றிலும் நல்ல அம்சங்களைக் கொண்ட ஒரு மகாத்மா அல்லது தெய்வ அவதாரத்தால் ஆகர்ஷிக்க முடியாமல் போகலாம். ஒரு திருடனுக்கு இன்னொரு திருடனைப் பற்றிய கதையே ரசமாயிருக்கும். ஒரு உல்லாச புருஷனுக்கு இன்னொரு உல்லாச புருஷரின் கேளிக்கைகளே சுவாரஸ்யமாக இருக்கும்.

கண்ணனோ எல்லாமுமாகக் காட்சி தருகிறான். பற்பல போக்குகொண்ட மக்கள் எல்லோரையும் தனது வகை வகையான லீலைகளால் தனித்தனியே ஆகர்ஷித்துக் கொண்டு முதலில் தன் கருணைக்கும் பின்னர் ஞானத்துக்கும் பாத்திரமாக்கிக் கடைத்தேற்ற வைத்த கிருஷ்ணாவதாரமே பரிபூரண அவதாரம்!'' என்கிறார் மகா பெரியவர். அவரே தொடர்கிறார்.

''சிவராத்திரிக்கும் கிருஷ்ணன் அவதரித்த அஷ்டமி ராத்திரிக்கும் நடுவிலே நூல் பிடித்த மாதிரி 180 நாள் என்று ஒரு கணக்கு வருகிறது. சிவராத்திரியில் ஜோதியான லிங்கம் உதித்தது. கிருஷ்ண ராத்திரியில் கருப்பான அங்கம் உதித்தது. அது உள்ளடக்கம், கிருஷ்ணன் அதன் செயலடக்கம்!'' என்கிறார்.

கிருஷ்ணனே பரிபூர்ண அவதாரி என்கிற பெரியவர் வார்த்தைகளை அனுபவித்து நோக்க வேண்டும். ராமாவதாரமும் மனித அவதாரம்தான். ஆனால், அதில் ராமன் சில கோடுகளைத் தாண்டவே மாட்டேன் என்று உறுதியோடு இருந்தான். கண்ணன்போல் இடைச்சிகளிடம் அடிபடவில்லை. ராஜசூய யாகம் புரிய வந்த வேத விற்பன்னர்களின் கால்களைத் தொட்டு கழுவி விடவில்லை. ராமன், மனிதரில் தெய்வமாகத் தன்னை உயர்த்திக் காட்டினான் என்றால் கிருஷ்ணன் தெய்வத்தில் மனித குணங்களை இறக்கிக்காட்டினான்.

மண்ணில் விழும் மழைத்துளி விழுகிற இடத்தின் நிறம், மணத்தை அப்படியே தனக்குள் வாங்கிக் கொள்வதைப் போல கண்ணன் யாரை எல்லாம் கண்டானோ அவர்களை எல்லாம் அப்படியே பிரதிபலித்தான். இறுதியில் கீதையை எல்லோருக்கும் பொதுவாக அளித்தான். யாராக இருப்பினும் எம் மதத்தவராக இருப்பினும் கண்களை மூடிக்கொண்டு காதைக் கொடுப்போம். ஒரு சத்யமான உண்மை முன் கரையப் போகிறது பாருங்கள் நம் உள்ளம்.

''நீ என்ன கொண்டு வந்தாய்? எதைத்தான் உன்னால் கொண்டு போக முடியும்?''

'இன்று உன்னுடையது... நாளை வேறு ஒருவருடையது...!' என்கிறான். வாழ்வின் நிலையாமையை இதைவிடச் சிறப்பாகவும், எளிமையாகவும் யாரால் கூற முடியும்?

அதனால்தானோ பரம அத்வைதியான சங்கர பகவத்பாதரே, 'பஜ கோவிந்தம்... பஜகோவிந்தம், பஜ கோவிந்தம் மூடமதே' என்றாரோ?

காசி...

அங்கே ஒரு பண்டிதர். காடு 'வா வா' என்றழைக்கும் முதுமையில் வியாகரண சூத்திரம் ஒன்றை முக்கல் முனங்கலோடு படித்தபடி இருக்கிறார். ஆதிசங்கரரின் கண்கள் அவரை காண்கின்றன. உதடிரண்டும் பிளந்து சிரிக்கத் தொடங்கி விடுகின்றன. அந்தப் பண்டிதருக்கு சிரிப்பின் ரகசியம் புரியவில்லை. காரணம் கேட்கிறார். ஆதிசங்கரரும் கூறுகிறார்.

'இன்றோ, நாளையோ என்று வாழ்நாள் முடிவுக்குக் காத்திருக்கும் உங்களுக்கு எதற்கு வியாகரண சூத்திரம்? இதுவா உங்களோடு வரப்போகிறது? ஆட்டுக்கும், மாட்டுக்கும் கூட ஸ்னேக சகாயம் புரிந்த கோவாகிய பசுக்களோடு கூடித் திரிந்த அந்த கோவிந்தனின் நாமத்தை ஜெபியுங்கள். கோவிந்த நாமமும், கோபால நாமமும்தான் சுகமான ஆத்ம அதிர்வு. சொல்லச் சொல்ல உதிருமே பாவப்பதிவு!'' என்கிறார்.

அன்று அவர் அப்படிச் சொல்லப் போய் வந்ததுதான் நமது சத்சபைகளிலே எழுப்பப்படும் 'கோபிகா ஜீவன ஸ்மரணம்' எனும் கோஷத்திற்கு உபகோஷமான 'கோவிந்தா... கோவிந்தா' என்கிற கோஷம்!

நாமும் சொல்வோம். கோகுலாஷ்டமியன்று மட்டுமல்ல. நம் ஒவ்வொரு நாளுமே ஜெயமாக 'கோவிந்தா... கோபாலா பாண்டுரங்கா, பண்டரிநாதா... கோவிந்தா... கோபாலா... கோபாலா... கோவிந்தா...!' என்று கண்ணனாகிய காதலனைப் போற்றுவோம்.



திருமகள் நிலையம்